# வெகு தூரத்தில

## - மனம்

ஸ்டெல்லா புரூஸ்

கலைஞன் பதிப்பகம்
10, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

: சமர்ப்பணம் :

1984 ஜூலை 6-ம் தேதி காலம் சென்ற என் அருமை நண்பர் ஆத்மாராம் என்ற மதுவிற்கு......

15384

3173307

PRICE Rs. 30-00

VEGU THOORATTHIL - MANAM

by

Stella bruce (C)

First Edition : April 1988

Second Print December 1992

Published by

KALAIGNAAN PATHIPAGAM

10, Kannadhasan Salai,

T. Nagar, Madras-600 017.

Printed at

Sri Gomathi Achagam

41, Soorappa Mndali St

Triplicane.

Madras-600 005,

## ஒரு வாசகா கணிப்பு

• வேகு தூரத்தில் மனம்—தமிழ்க் கதையுலகுக்கு ஒரு மைல்கல் ஆகும். அவ்வப்போது இது மாதிரி புதுவிதமாய் வெளிவரும் நாவல்கள் ஆராய்ச்சி உணர்வோடு அலசப்பட்டு, எண்ணிக்கையில் ஒன்று கூடச் சேர்ந்து போகும். 'ஒரு மைல்கல்'— என்பதைவிட இந்த நாவல் தமிழ்க் கதை உலகில் ஒரு திருப்பம் என்பதுதான் பொருந்தும்.

மனித மனசின் மெல்லிய உணர்வுகளை இத்தனை தூரம் போய் யாரும் தொட்டதில்லை. உண்மையில் இச் சமூகத்தில் காதம்பரிகள் தான் அதிகம். ஆயினும் சாவித்திரி பற்றிய கதைகளையே அதிகம் படிப்பிக்கப் படுகிறோம்.

காலங்காலமாய் வரையறுக்கப் பட்டுவிட்ட கதா நாயகக் கேரக்டர்கள் பற்றிய உணர்ச்சிகள் மனித மனங்களைக் களிம்பாக மூடிக் கொண்டு விட்டிருக்கிறது. இதன் பொருக்கைக் கீறி உள்ளுக்குள் புரையோடிப் போயிருக்கும் மன ரணத்தை இனம் பிரித்து காதம்பரி களைத் தன்னை உணரவைத்த பெருமை உங்கள் காதம் பரிக்கே சேரும்.

பெண் மனசின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு சொன்னவர்கள் கூட இதுவரை பொதுவாகவும், மொத்த மாகவும் அதனாலேயே ஓரளவுக்கு மட்டுமேயும் மேலோட் டமாகவே சொல்லியிருக்கிறார்களே தவிர, இத்தனை துல்லியமாகத் தமிழில் யாரும் சொன்னதில்லை... என்ற கருத்து இந்தக் கதை பற்றி நிலவுமேயானால் அது ஒரு சராசரி வாசக மட்டத்தின் சிந்தனை வெளிப்பாடுதான்.

ஏனெனின் மனசின் இயல்பை அது வெளிப்படுத்தும் நுண்ணிய உணர்வுகளை, அடி மட்டத்தில் உறைந்து கிடக்கும் அழுத்தம் மிக்க ஆசாபாசங்களைச் சொல்ல வரும்போது ஆண்—பெண், ஏழை—பணக்காரன், முட் டாள்—அறிவுஜீவி என்றெல்லாம் இனம் பிரிக்க இயலாது. தேவையும் இல்லை. எனவே அதைச் சொல்வதற்காய் தாங்கள் எடுத்துக் கொண்ட காதம்பரி என்ற பெண் கேரக்டர், அனுதாபத்துடன் புரிந்து கொள்ளப் பட வேண்டிய நுட்பமான ஜீவன் என்பதே உண்மை. சிறு வயதில் அவளுக்கு நேர்ந்து போன விபத்தின் காரணமாக, அவள் மனசுக்குள் ஏற்பட்டு விடுகிற ஊசி வெள்ளச் சிலிர்ப்புகள் (Jrigidity) அவள் வாழ்க்கைக்கு இழைக்கும் கொடுமையாகவும் அதே சமயம் அவளை வாழ்வின்

கொண்டு செலுத்தும் வரமாகவும்
உச்சாணிக் கிளையில் இந்த நாவலின் குண விசேஷமே.
நேர்ந்து போனதுதான் உள்ளது உள்ளபடி
வாழ்க்கையை அதன் போக்கில் 'காளிதாஸ்' இன்
வாழ்ந்துகாட்டும் இந்த நாவலில்
னொரு சிறப்பம்சம்.

உண்மையில் அந்த மாதிரி யாராவது இருக்க முடியுமா
என்று என்னிடமே நிறையப் பேர் கேட்டார்கள். இருக்க
முடியும் என்பதை விட இருக்கிறோம் என்பதே நிஜம்.
எல்லாருமே காளிதாஸ்தான். மனசு பூர்வமாக இதயம்
முழுதும் அன்பும் கருணையும் பரிவும் கொண்ட காளி
தாஸ்தான் எல்லோரும். ஆனால் 'தான்' என்ற Egoவும்
எதிர்பார்த்தல்களும் ஒப்பு நோக்கல்களும் மூடுபனியாக
இங்கே எல்லார்மீதும் கவிந்து கொண்டு விட்டிருக்கிறது.
இதை மிகச் சரியானதொரு காலகட்டத்தில் உடைத்துக்
காட்டி உண்மையை உணர வைத்ததற்காக மற்றொரு
முறை நன்றி கூறுகிறேன். சாதாரணமாக முக்கிய
கதாபாத்திரங்களாய் மூவர் சித்திரிக்கப்படும் நாவல்களில்
ஏதாவது ஒரு கதாபாத்திரத்தை—சாவு—மூலமேனும்
முடிக்க நேரிட்டு விடுவதுண்டு. சிறு வயதில் விபத்தினால்
மன உணர்வுகள் பாதிக்கப்பட்டு ஒரு மன நோயாளி
போலாகிப் போன காதம்பரிக்கு வாழ்வில் பற்றுதல் மிக்க
ஒரு திருப்பு முனை (காளிதாஸுடன் திருமணம்) எத்தனை
அவசியமோ, கணவனை இழந்து பாதுகாப்புக்கும்
பாசத்துக்கும் ஏங்கும் ஒரு விதவையின் (வசந்தாவின்)
மறுமணமும் அத்தனை அவசியம் என்று என் நண்பர்கள்
வாதிட்டார்கள். அதிலும் சமூகத்தின் பல மட்டங்களில்
பெரும்பான்மை வாசகர்களால் படிக்கப்படும் இது
போன்ற நாவல்களுக்கு விதவை விவாகம் போன்ற சமூகப்
பிரக்ஞை மிகவும் அவசியம் என்பது அவர்களின் வாதம்.

அந்த விதமான வாதங்களையும் இந்த நாவல் பூர்த்தி
செய்கிறது. வாழ்வில் கிடைக்கவே கிடைக்காது என்றிருந்த
அரவணைப்பும் பாதுகாப்பும் வசந்தாவுக்கும் திருமணம்
மூலம் கிடைத்து, எதிர்பாராது இழக்க நேர்ந்து
முன்பைவிட அதிகமான துக்கத்தில் மனம் ஒடிந்துபோகும்
நிலையில் காளிதாஸ் அதை அளிக்க முன் வருவதும்
பிறக்கப் போகும் தன் குழந்தையின் மூலமே கூட வாழ்
வில் இழந்த ஒளியைத் திரும்பப் பெறப்போகும் நம்பிக்கை
யில் அவள் காளிதாஸை மறுப்பதும் இந்தக் கதையின்
வெற்றியின் சூட்சுமம் ஆகும்.

அன்புடன்,
**ஹேமா**

30-12-87

15384
3173307

# வெகு தூரத்தில்--மனம்

ஜனவரி மாத வெயில் நைலான் துணியின் நிழல் போல் மிக மெலிதாகப் படிந்திருந்தது. பத்து மணி ஆகியும்கூட, காற்றில் சன்னமாகப் பனிப்பதம் கலந்திருந்தது. அடையாறிலிருந்து கொட்டிவாக்கத்தில் இருக்கும் காதம்பரியின் வீட்டுக்கு நடந்தே போய்விடுவது என்று தீர்மானித்தான் காளிதாஸ்.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலைத் தாண்டிய போது வெண்மணல் பூமியும், ஒரே வீச்சாக விரிந்திருந்த விண்வெளியும், நீர்நிலை எல்லையாகப் பளபளத்த சமுத்திரமும் வெவ்வேறாகத் தெரியாமல், எங்கோ ஓர் இழையில் ஒன்று கலந்து உயிர்க் கலவையாகத் தோன்றியதில் பரவசமுற்று நின்றுவிட்ட காளிதாஸை ஒட்டி அவனுக்கு மிகவும் பரிச்சயமான கருப்பு வண்ண ஃபியட் கார் ஓசையுடன் வந்து நின்றது.

டிரைவிங் ஸீட்டிலிருந்து இடதுபுறமாகச் சரிந்து அவனை எட்டிப் பார்த்த காதம்பரி, ''குட்மார்னிங்?'' என்றாள்.

''குட்மார்னிங்! எங்கே இப்படி ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா காலையிலேயே வெளியில் போயிட்டு வர்றீங்க?'' —காளிதாஸ், காதம்பரியைக் கேட்டான்.

''உங்களைப் பார்க்கிறத்துக்காக உங்க விட்டுக்குத் தான் போனேன். ஆனா, நீங்க எங்க விட்டுக்குத்தான் கிளம்பிப் போனதா உங்க அம்மா சொன்னாங்க...அதான் நேரா ரொம்ப வேகமா வர்றேன்...'' என்று சொல்லியபடி. காதம்பரி, காரின் கதவைத் திறந்து விட்டாள். 'நன்றி' சொல்லியவாறு காளிதாஸ் காரில் ஏறி அமர்ந்துகொள்ள, கார் மிக நிதானமாக ஊர்ந்தது.

''காதம்பரி, எங்க வீட்டுக்கு நீங்க முதல் தடவையா போயிருக்கிங்க. ஆனா, இப்படி நீங்க வரப் போறதா ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லியிருக்கக் கூடாதா? நான் வீட்டிலேயே இருந்திருப்பேனே...!''—காளிதாஸ் உண்மையான ஆதங்கத்துடன் கேட்டான்.

''ஸாரி மிஸ்டர் காளிதாஸ்! என்னமோ திடீர்னு உங்களைப் பார்க்கணும்னு தோணிச்சு. அதனாலே என்ன? அடுத்த தடவை சொல்லிட்டே வர்றேன்...''

'காம்தபரி விலாஸ்' என்று பெயரிடப்பட்ட சிறிய அழகான வீட்டின் முன்னால் கார் நின்றது. காம்பவுண்ட் சுவரெல்லாம் செம்பருத்திப் பூக்கள் தெரிந்த அந்த விட்டுக்குள், காதம்பரியும் காளிதாஸும் இறங்கி நுழைந் தார்கள். அவர்கள் வரும் சத்தம் கேட்டு, சமையல் அறையிலிருந்து காதம்பரியின் அத்தைபத்மாவதி விரைந்து வந்தாள்.

''அத்தை, காளிதாஸ் வந்திருக்காங்க...''

''வாங்க...!''

''எங்க ரெண்டு பேருக்கும் நல்ல காபி தாங்களேன் அத்தை. உக்காருங்க காளிதாஸ். நின்னுட்டே இருக்கீங் களே...!''

''ரெண்டு பேருமே உக்காருங்க. ஒரு நிமிஷத்துல காபி கலந்து எடுத்துட்டு வர்றேன்''—பத்மாவதி வேக மாக உள்ளே போக, காளிதாஸும் காதம்பரியும் ஆளுக் கொரு சோபாவில் எதிர் எதிராக உட்கார்ந்து கொண் டார்கள்.



''ஸோ, இன்னிக்குக் காலங்கார்த்தாலேயே எங்க வீட்டுக்கு — அதுவும் நான் இல்லாத நேரம் பார்த்து— போயிட்டு வந்துட்டீங்க. எங்க அம்மா எப்படி இருந் தாங்க ?''

''நைஸ்...''

''நீங்கதான் காதம்பரின்னு தெரிஞ்சதும், அம்மா அசந்து போயிருப்பாங்களே...?''

''ஐயோ, அதை ஏன் கேக்கறீங்க! ஒரே பரபரப்பு அவங்களுக்கு. நாற்காலியை எடுத்துப் போட்டாங்க, 'காபி வேணுமா?'னு கேட்டாங்க... 'பால் சாப்பிடறீங் களா?'னு கேட்டாங்க. காலும் ஓடலை? கையும் ஓடலை; பாவம், அவங்களுக்கு! என்னைப் பத்தி அம்மாகிட்டே ரொம்பத்தான் சொல்லி வெச்சிருக்கீங்க போலிருக்கு...''

உள்ளதைத்தான் சொல்லி வெச்சிருக்கேன்...''

''அதுக்காக இப்படியா—அந்த அளவுக்கு நானென்ன அவ்வளவு பெரிய மனுஷியா...?''

''நீங்க பெரிய மனுஷியா இல்லையானு எனக்குத் தெரியாது. ஆனா, நீங்க என்னோட க்ளோஸ் ஃப்ரெண்ட் என்ற ஒரே ஒரு தகுதி போதுமே எங்க அம்மாவுக்கு...''

''அது சரிதான்'' - காதம்பரியின் முகம் உவகையால் சிவந்தது.

காபியுடன் வந்தாள் பத்மாவதி. காதம்பரியும் காளிதாஸும் மௌனமாக காபி அருந்தினார்கள்.

பத்மாவதி கேட்டாள்: ''ஏம்மா காதம்பரி, விஷயத் தைக் காளிதாஸ்கிட்டே சொல்லிட்டியா?

''இன்னும் சொல்லலை அத்தை, நான் இவரைத் தேடி இவர் வீட்டுக்குப் போனேன். இவர் என்னடான்னா நம்ம வீட்டுக்குப் பாதயாத்திரை வந்திட்டு இருக்கார்.''

''ஓ! அப்ப ஏதோ ஒரு முக்கியமான விஷயமாத்தான் என்னைப் பார்க்கிறதுக்கு எங்க வீட்டுக்குப் போயிருக்கீங்க...'' — காளிதாஸ் ஆர்வத்துடன் கேட்டான். காதம்பரி பதில் சொல்லாமல் இருந்தாள். பத்மாவதிதான் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''காளிதாஸ், காதம்பரியோட அப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப் போறார்...''

சட்டெனக் காதம்பரி காளிதாஸைப் பார்க்க, காளிதாஸ் காதம்பரியைப் பார்த்தான்.

அவள் கண்களில் தாழ்வுணர்ச்சி வந்திருக்க, காளிதாஸின் கண்களில் ஆச்சரியமும், நம்பிக்கையின்மையும் ஏற்பட்டிருந்தன.

''நிஜமாவா காதம்பரி?''—வியப்புடன் கேட்டான்.

அவள் வெட்கமடைந்து விரல் நகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அத்தை பத்மாவதி சிரித்தபடி தலையில் அடித்துக் கொண்டே சமையல் அறைக்குப் போனாள். சில நிமிஷங்களுக்கு யாரும் பேசாமல் அங்கு அமைதி நிலவியது.

''அப்பாவே சொன்னாரா காதம்பரி?''—காளிதாஸ் நம்பிக்கை வராமல் கேட்டான்.

''ஆமா...''

''என்ன திடீர்னு இப்படி...?''

''தெரியலையே...!''

''உங்ககிட்டேயே சொன்னாரா...''

''முதல்ல அத்தைகிட்டேதான் சொன்னாங்க...நாலு நாள் முன்னாடி என்கிட்டே சொன்னாங்க...''

''ஆச்சரியமாயிருக்கு...''

சில நிமிஷங்கள் கழித்துக் காதம்பரி கேட்டாள்: ''உங்ககிட்டே என்னிக்காவது அப்பா இதைப் பத்திப் பேசியிருக்காங்களா மிஸ்டர் காளிதாஸ்...''

''இல்லையே, ஏன் கேக்கறீங்க...?''

''தன்னை மாதிரியே மனைவியை இழந்து தனியா வாழற உங்க மேலே அப்பாவுக்கு ஒரு அபிமானம் உண்டு. உங்களையும் தன்னுடன் ஒப்பிட்டுப் பார்த்தே இந்த அபிமானம். அதனால் உங்ககிட்டே இதைப் பத்தி ஏதாவது பேசி இருப்பாங்களோன்னு சந்தேகம் எனக்கு...''

''புரியுது...! எட்டு வருஷத்துக்கு முன்னாடி என் மனைவி இறந்து போன பிறகு, நான் கல்யாணமே பண்ணிக்கிறது இல்லேங்கறதைப் பத்தி அடிக்கடி சொல்லிச் சொல்லி ஆச்சரியப்படுவார். போன மாசம் கூட ஒரு நாள் என் வயசைக் கேட்டார். 'முப்பத்தெட்டு'னு சொன்னேன், 'எப்படி மறுபடியும் கல்யாணம் பண்ணிக்காம இருக்க முடியுது?'னு திரும்பத் திரும்பக் கேட்டுக்கிட்டே இருந்தார். என்னை அவர் சும்மா அந்தக் கேள்வியைக் கேட்டது பிடிக்கலைதான். ஆனால், என்ன செய்ய முடியும்...?''

''நீங்களும் அப்பாவும் அன்னிக்குப் பேசிட்டிருந்ததை நானும் கொஞ்சம் கொஞ்சம் என் ரூம்ல இருந்து கேட்டுட்டுத்தான் இருந்தேன்.''

''ஏன், முப்பத்தெட்டு வயசில மனைவி இல்லாம ஒருத்தனால் இருக்க முடியாதா...?''

''ஐம்பது வயசில் அவங்களாலே இருக்க முடியலைங்கறதைச் சொல்லிக்கறதுக்காக அப்பா உங்களை அப்படிக் கேட்டாங்களோ என்னவோ...?''

''அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு பெண் கூட வாழறதுங்கற

விஷயத்துல, என்னோட வாழ்க்கை நிறைவடைஞ்சுடுச்சு. அப்படி ஒரு முழுமை வராதவங்களுக்கு வேணும்னா, இன்னொரு மனைவி தேவையா இருக்கலாம். அது அவங்க அவங்க மண வாழ்க்கையைப் பொறுத்த விஷயம். வயசையும் உடற் தேவையையும் முக்கியமா வெச்சு அவர் பேசினாரே...அதுதான் என்னை டிஸ்டர்ப் பண்ணிடுச்சி.''

''ஸாரி! அப்பா உங்களை அப்படிக் கேட்டதுக்கு நான் உங்கிட்டே மன்னிப்பு கேட்டுக்கறேன்...''

காதம்பரி மன்னிப்பு கேட்டதும், காளிதாஸ் மனம் கனிந்து போனான்.

''என்ன காதம்பரி, இதுக்குப் போய் நீங்க மன்னிப்பு கேக்கறீங்க... உங்க அப்பாவுக்கு ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணிச்சுன்னா, தாராளமா பண்ணிக்க வேண்டியதுதானே... இதில் இன்னொருத்தரோட அபிப்பிராயம் என்னத்துக்கு அவருக்கு...?''

காதம்பரி இதற்கு வருத்தத்துடன் பதில் சொன்னாள். ''ஆனா, அப்பா என்னோட சம்மதத்தைக் கேக்கறாங்க. நான் சம்மதிக்கலேன்னா, ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்களாம்...''

காளிதாஸ் இதற்குச் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''என்னங்க பண்றது...? உங்க அக்கா கல்யாணமாகி ஸ்டேட்ஸ்ல இருக்காங்க. இப்ப அவர்கூட இருக்கிறது நீங்க மட்டும்தான்... அதனால் உங்க சம்மதத்தைக் கேக்கறார்.''

காதம்பரியின் தந்தை ராஜரத்னம் அவருடைய மனைவி இறந்து போய் ஆறு வருடங்கள் கழித்து மறுமணம் புரிந்து கொள்ள விரும்புகிறார் என்ற செய்தி இன்னமும் அவனுக்கு விநோதமாக இருந்தது. காதம்பரியையே பார்த்தான். அவள் ஆழ்ந்த சிந்தனையில் விரல் நகங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



''சரி, அப்பாவுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க...?''

காதம்பரி மௌனமாக இருந்தாள்.

''காதம்பரி, என்னிக்குமே ஒரு விஷயத்தை ஞாபகம் வெச்சுக்குங்க... எந்தவொரு விஷயத்திலும் சரி—உன்னும் புறமும் ஒண்ணா இருந்துடறதுதான் வாழ்க்கைல சந்தோஷமா இருக்கிறதுக்கான ஒரே வழி. இல்லேன்னா பிரச்னைதான்...''

''ஸாரி மிஸ்டர் காளிதாஸ்! அதுக்காக 'எனக்குச் சம்மதம் இல்லே'ன்னு நான் எப்படிச் சொல்ல முடியும்? அப்படிச் சொல்லிட்டு அப்புறம் அவங்களை நேருக்கு நேர் பார்த்துப்பேச முடியாது. அவரோட சந்தோஷத்துக்குக் குறுக்கே நான் நின்னுட்டதா என்னோட குற்ற உணர்வே என்னை வாட்டி எடுத்திடும். ஆனா, இதனால் எனக்கும் என் அப்பாவுக்கும் இடையே இருக்கிற அருமையான உறவு கெட்டுடும்... எதைத் தாங்கினாலும் என்னால் அதை மட்டும் தாங்கிக்கவே முடியாது காளிதாஸ். உங்களுக்கே தெரியும், எனக்கு உலகமே எங்க அப்பாதான்!''

சட்டென்று காதம்பரியின் கண்கள் கலங்கிச் சில நீர்த்துளிகள் அவளின் கன்னங்களில் உதிர்ந்தன. காளிதாஸ் இரக்கத்துடன் கண்களை மூடிக் கொண்டான். இருவரும் சிறிது நேரத்துக்கு அவரவர் எண்ணங்களில் ஆழ்ந்து போயிருந்தார்கள்.

'ஸாரி!' என்றபடியே காதம்பரி கண்ணீரைத் துடைத்தபடி காளிதாஸைப் பார்த்துப் புன்னகை செய்தாள். ''புதுசா நீங்க நாவல் ஒண்ணும் எழுதலையா...?'' —வலிந்து பேச்சை மாற்றுவது போலக் கேட்டாள்.

''ஒண்ணும் எழுதலை... எழுதறதாவும் இல்லை. என்னத்தை எழுதறது...?''

"ஏன், எழுதறதுக்கு விஷயமா இல்லை?"

"காதம்பரி, எனக்கு ஒரு நாவல் எழுதறதுங்கறது—கடல்லே மூழ்கி முத்தெடுப்பது மாதிரி. எல்லா கடல்லேயும் முத்து கிடைச்சிடாது. அதே மாதிரி, எல்லா காலத்திலேயும் முத்து கிடைச்சிடாது. அதற்கென்று ஒரு கடலும் அதற்கென ஒரு காலமும் உண்டு."

"ஓகே...புரியுது...!"

"அப்போ ரொம்ப சீக்கிரத்துல உங்க வீட்ல ஒரு கல்யாணச் சாப்பாடு இருக்கு!"—காளிதாஸ் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"உங்களுக்குச் சிரிப்பா இருக்கு..."

"இல்லை காதம்பரி, நீங்களும் ஒரு தடவை தலையில் அடிச்சிட்டாவது சிரிச்சிடுங்க... பிரச்னை தீர்ந்துடும்..."

காதம்பரியின் முகத்தில் ஆழமாக வருத்த ரேகைகள் படர்ந்தன.

"இல்லை மிஸ்டர் காளிதாஸ்...அவ்வளவு சுலபமா என்னால் சிரிச்சிட்டுப்போற விஷயமில்லை இது. உள்ளுக்குள் என் மனசு ரொம்பவும் குழம்புது. இந்த விஷயத்தை அப்பா என்கிட்டே சொன்னதிலிருந்தே எனக்கு சரியாகத் தூக்கம் கிடையாது. ஏன் எங்க அப்பாவுக்குத் திடீர்னு இந்த ஆசை வந்ததுன்னு என்னாலே புரிஞ்சுக்கவே முடியலை. உங்களுக்குத் தெரியும்... அப்பான்னா எனக்கு எவ்வளவு உயிர்னு...எனக்கு எல்லாமே அவங்க தான்... அம்மாகிட்டே கூட எனக்கு இவ்வளவு ஈடுபாடு இருந்தது கிடையாது. எங்க அக்காவுக்குக் கல்யாணமாகி அவ ஸ்டேட்ஸ் போனப்ப எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருந்தது. இனிமே அப்பாகூட இருக்கப் போறது நான் மட்டும்தான்னு. சொல்ல முடியாத சந்தோஷம் எனக்கு. நீங்களே சொல்லுங்க, எங்க அக்கா இந்த வீட்டை விட்டுப் போனப்பவே, அத்தனை சந்தோஷப்பட்ட நான், எப்படி இன்னொரு புது மனுஷியை-அதுவும் என்னோட அப்பாவோட மனைவியா-இந்த வீட்டுக்குள்ளே வர அனுமதிக்க முடியும்! சத்தியமா என்னால் முடியாது. அவ்வளவு சென்ஸிடிவ் நான். அத்தனை காம்ப்ளெக்ஸ் பெண் நான்..."

—அதற்கு மேல் பேச முடியாமல் காதம்பரி வெடித்து அழுது எழுந்து வேகமாகத் தனது அறைக்குள் ஓடி, கதவைப் பூட்டிக் கொண்டாள்.

உச்சந்தலையில் கைகளைக் கோத்தபடி காளிதாஸ் அமைதியாக உட்கார்ந்திருந்தான். அழுகைச் சத்தம் கேட்டு, பத்மாவதி சமையல் அறையிலிருந்து வேகமாக வந்தவள் பூட்டியிருந்த காதம்பரியின் அறைக் கதவைத் தட்டப் போனாள். காளிதாஸ் ஜாடை காட்டி 'தட்ட வேண்டாம்' என்றான்.

"நீங்களாவது அவளோட அப்பாகிட்ட சொல்லிடுங்களேன்—அவர் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கிறதில் காதம்பரிக்கு இஷ்டமில்லேனு..." காளிதாஸிடம் சொன்னாள் பத்மாவதி.

"இல்லீங்க அவ்வளவு சுலபமா அவர்கிட்டே நான் போய்ச் சொல்லிடற விஷயம் இல்லை. இது சொல்லணும்னா, காதம்பரியேதான் சொல்லணும் இதை... வேற யாரும் இதைச் சொல்லிட முடியாது. சொன்னா போச்சு, அவரோட தன்மானம் பயங்கரமா ஹர்ட் ஆயிடும்..."

"அப்ப இவகிட்டேயாவது சொல்லுங்க. 'இந்த வருஷம் படிப்பு முடிஞ்சதும், பேசாம நீயும் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு புருஷன் வீட்டுக்குப் போ'னு சொல்லுங்க. இந்த மாதிரி கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்றதெல்லாம் நம்ம பொம்பளைப் பிள்ளைகளுக்கு சரிப்பட்டு வராதுன்னு சொல்லுங்க, நீங்க எடுத்துச் சொன்னா கேப்பா..."

காளிதாஸ் ஆற்றாமையுடன் சிரித்துக் கொண்டான். பத்மாவதி தனக்குள் இன்னும் ஏதேதோ புலம்பியபடி உள்ளே சென்றாள். காளிதாஸ் எழுந்து தோட்டத்துக்கு வந்தான். 'காதம்பரி விலாஸ்' என்ற அந்த வீட்டை நின்ற இடத்திலிருந்தே கவனித்துப் பார்த்தான்.

—இந்த வீடு, காதம்பரியின் பிரத்யேக வீடு, அடையாறிலிருந்த பழைய பங்களாவை விற்றுவிட்டு, ராஜரத்னம் தன் மகளுக்காக உருவாக்கித் தந்திருக்கும் உலகம் இந்த வீடு. இந்த உலகத்தின் வண்ணங்கள் காதம்பரி தேர்ந்தெடுத்தவை. இந்த உலகத்தின் நவீனப் பொருட்கள் அவள் சேகரித்தவை. அதன் உள் அலங்காரங்கள் அவள் திட்டமிட்டவை. தரை விரிப்புகள் அவள் கவனித்து வாங்கியவை. இந்த வீடே அவளுடையது. இங்கிருந்து காணும் கடலும் வானும்கூடக் காதம்பரியுடையவை இத்தனை ஆழமான அடிப்படைகளில் இந்த வீட்டோடு, இவ்வீட்டின் தலைவராகிய தன் அப்பாவோடு ஒன்றிப் போயிருக்கும் காதம்பரி, இத்தனையையும் பகிர்ந்து கொள்ள அல்லது கவர்ந்து கொள்ள அப்பாவின் இரண்டாவது மனைவி என்ற உறவில் புதியதாக ஒருத்தி இந்த வீட்டுக்குள் வாழ வரப்போவதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாதவளாக அஞ்சுவது காளிதாஸுக்கு ஆச்சரியம் இல்லைதான். ஆனாலும், காதம்பரியின் இந்த சுபாவம் அவனுக்கு, அதீதமாகவே தெரிந்தது. திருமணமே செய்து கொள்ளாமல்அப்பாவுடன் இந்த வீட்டிலேயே வாழ்வது என்ற அவளது தீர்மானம்—சிக்கலான படிமங்களை உள்ளடக்கிக்கொண்டிருப்பதாகக் காளிதாஸுக்குத் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் ஜன்னல் பக்கம் திரும்பிய காளிதாஸ், ஒரு புஷ்பத்தால் தாக்கப்பட்ட இனிமை உணர்வை அடைந்தான்—கண்ணீரின் கறை சுடுகளவும் தெரியாமல், காதம்பரியின் மஞ்சள் முகம் ஜன்னலில் தெரிந்தது. ஓர் அர்த்தமுள்ள சிரிப்பை மலர்த்திய காதம்பரி, தன் ஆள்காட்டி விரலால் எதிர் வானத்தைக் காட்டினாள். காளிதாஸ் அவள் காட்டிய திசையில் பார்த்தான். மிக நீண்ட வரிசையில் வெண்ணிறக் கொக்குகள் ஓர் அழகிய அணிவகுப்பு என அழகாகப் பறந்து வந்து கொண்டிருந்தன...

## 2

"பத்து நாள் முன்னாடி சொன்னேனே ஒரு விஷயம் அந்த விஷயமா இன்னிக்குப் பேசி முடிவெடுக்கலாம்னு பார்க்கறேன்..." —பேச்சோடு பேச்சாகக் காதம்பரியைப் பாாத்துக் கேட்டார் ராஜரத்னம்.

காதம்பரி எச்சிலை விழுங்கியபடி கேட்டாள்:

"எந்த விஷயம்ப்பா..?"

"என்னோட கல்யாண விஷயம்தான்..அது விஷயமா நீ நல்லா யோசிச்சுப் பார்த்தியா.?"

"இதுல நான் யோசிக்கறத்துக்கு என்னப்பா இருக்கு..!"

இதைச் சொன்னபோதே காதம்பரிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. வாழ்க்கையில், பெரிய பொய்யை முதல் முறையாக மனம் அறியச் சொல்கிறாள். உள்ளே ஒன்றும், வெளியில் ஒன்றுமாக நடிக்கிறாள். இந்தப் பொய்யின் நடிப்பின் அவமானம் தாங்காமல் அவள் தலைகுனிந்தும் விட்டாள்.

"அப்படி இல்லேம்மா . ஏன் உன்னை நான் திருப்பித் திருப்பிக் கேக்கறேன்னா, இது வரைக்கும் உன்னோட சம்மதமில்லாம நான் எந்தக் காரியமும் செஞ்சது

கிடையாது. இந்த விஷயத்திலும் உன்னோட சம்மதம் எனக்குத் தேவை.. என் சந்தோஷத்துக்காக உனக்கு இஷ்டம் இல்லாத ஒரு காரியத்தை நான் செய்திடக் கூடாது அது முக்கியம்..''

காதம்பரி சிறிதும் மனம் ஒவ்வாமல் மெல்லிய குரலில் சொன்னாள்: ''எனக்கு இஷ்டம் இல்லேன்னா சொல்லிட மாட்டேனப்பா..!''

''அப்ப உனக்கும் பரிபூரண சம்மதம்தானே..?''

''சம்மதம்தான் அப்பா..!''

அப்போது டெலிபோன் ஒலித்தது. காதம்பரி எழுந்து போய் ரிஸீவரை எடுத்தாள். மறுமுனையில் அவளின் வகுப்புத் தோழி சாவித்திரி.. காதம்பரி சிறு மகிழ்ச்சியுடன் தோழியை விசாரித்தாள்.

''ஏய், எங்கே ரெண்டு நாளா நீ காலேஜுக்கே வரலை..''

சட்டென்று பதில் வராமல் எதிர் முனையில் நிசப்தம்.

''ஏய், நான் கேக்கறது காதில்விழுதா இல்லையா...?''

''கேட்டுட்டுத்தான் இருக்கேன்... சொல்லு...'' —சாவித்திரியின் குரல் சிறிது தளும்பினாற் போலிருந்தது.

''சாவித்திரி ஏன் உன்னோட குரலெல்லாம் ஒரு மாதிரி இருக்கு... உடம்பு ஏதுவும் சரியில்லையா ..?''

சிறிது நேரத்துக்குப் பின் பதில் வந்தது. ''மனசு சரியில்லை.''

இப்போது காதம்பரிக்கு நிச்சயமாகத் தெரிந்தது—சாவித்திரியின் குரலில் லேசாக அழுகை கலந்திருந்தது. அதனால் தயக்கத்துடன் கேட்டாள்:

''சாவித்திரி, ஏய் அழறியா...?''

''அழாம வேற என்ன பண்றது? இனிமே நான் காலேஜுக்கு வரமாட்டேன்.''

''ப்ளீஸ்! என்ன நடந்துச்சுன்னு சொல்லேன்..?''

''எங்கப்பா பண்ற அழிச்சாட்டியத்தை என்னால் தாங்க முடியலை... ரொம்ப ரொம்ப அக்கிரமமா பேசறார்.''

''உங்கப்பா அக்கிரமமா பேசறதெல்லாம் புதுசு இல்லையே...''

''அதுக்காக ..? ஒரு எல்லை வேணாமா...? வெறுத்துப் போயிடுத்து எனக்கு. பெத்த மனுஷனே இப்படியெல்லாம் கொஞ்சங்கூட நாக்கில் நரம்பே இல்லாம...''

''தயவுசெஞ்சு விவரமா சொல்லேன்...''

''போன வாரம் நம்ம கிளாஸ்மேட் ஹரி, அவனுக்கு பர்த்டேன்னு நம்மையெல்லாம் மெரினா ரெஸ்டாரண்டுக்கு அழைச்சிட்டுப் போனான் இல்லையா?''

''ஆமா...''

''அதை எங்க அப்பா பார்த்திருக்கார். யப்பா..! என்னை என்னென்ன கேள்வியெல்லாம் கேட்டார் தெரியுமா..? 'காபி ஹோட்டலுக்குக் கூப்பிட்டா போற நாய், நாளைக்கு லாட்ஜுக்குக் கூப்பிட்டாலும் போகுமே'னு நெஞ்சில் கொஞ்சங்கூட ஈரமே இல்லாம பேசறார்...என்னால் தாங்கவே முடியலை.''

காதம்பரி என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மௌனமாக இருந்தாள்.

''அன்னிக்கு ஒரு நாள் ஜன்னல் வழியா தெருவைப் பார்த்திட்டு நிக்கறேன்...சத்தமே இல்லாம என் பின்னாடி வந்து நின்னு, என் பார்வை எந்தப் பக்கம் போறது;

எவனைப் பார்க்கிறதுன்னு என்னை வாட்ச் பண்றார் காதம்பரி. நெனச்சா செத்துடலாம் போல இருக்கு.''

''சரி, அதுக்காக காலேஜுக்கே வராம வீட்டிலே இருந்து என்ன பண்ணுவே...? இன்னும்தான் தொல்லை அதிகமா இருக்கும்.''

''இல்லை காதம்பரி...என்னாலே பொறுத்துக்க முடியாத அளவுக்குப் போயிடுத்து. நான்தான் வீட்டு விஷயத்தை அதிகமா வெளியில் சொல்ல வேண்டாம்னு மனசிலேயே போட்டு அடைச்சு வெச்சிருக்கேன். காலேஜ்ல நான் சேர்ந்தப்போ எத்தனை நாள் மறைஞ்சு நின்னு என்னை வாட்ச் பண்ணியிருக்கார் தெரியுமா? நல்ல புடவை கட்டிண்டா சந்தேகம்... மாடியில் போய் நின்னா சந்தேகம்... எத்தனை நாள் அழுதிருக்கேன் தெரியுமா? நித்திக்கும் இம்சைப் பட்டுண்டு என்னால் இனிமேலும் காலேஜுக்கு வந்து போயிண்டிருக்க முடியாது. இதை உனக்கு மட்டுமாவது போன் பண்ணிச் சொல்லிடணும்கிறதுக்காகவே அம்மாகிட்டே பர்மிஷன் வாங்கிண்டு அக்கா வீட்டுக்கு வந்தேன்.''

''எக்ஸாம்ஸ்...?''

''அது எழுதிடுவேன்.''

''அக்கா வீட்டிலே ரெண்டு நாள் இருப்பியா...?''

''இல்லை இல்லை... சாயங்காலமே போயிடுவேன். இல்லேன்னா அதுக்கு வேறு சந்தேகப்படுவார்.''

''அப்போ உன்னை எப்பத்தான் பார்க்கிறது?''
—காதம்பரி வருத்தத்துடன் கேட்டாள்.

''இப்போ சொல்லிக்க முடியாது எதையும். ஆனா, எப்படியும் உனக்கு வாரம் ஒரு தடவை போன் பண்ணுவேன். அப்புறம் ஒரு விஷயம்—உன்னோட ஃப்ரெண்ட் மிஸ்டர் காளிதாஸ் சமீபத்தில் உங்க வீட்டுக்கு வந்தாரா...?'



''என்ன விஷயம்...?''

''நான் அவரை ஒரு தடவை சந்திக்கணுமே..''

''சொல்றேன் அவர் கிட்டே!''

''என்னிக்காவது நான் அம்மாகிட்டே பர்மிஷன் வாங்கிண்டு உங்க வீட்டுக்கு வரேன். அப்போ அவரும் அங்கே வந்தா தேவலை.''

''ஓயெஸ்... அதுக்கு நான் ஏற்பாடு செய்யறேன்...''

''உங்கப்பா எப்படி இருக்கார்...?''

''நல்லா இருக்கார்!''

''அவரை ரொம்ப கேட்டதா சொல். அப்போ வெச்சிடட்டுமா...?''

''சரி...''

—காதம்பரி பெருமூச்சுடன் ரிஸீவரை வைத்தாள். வெளியில் கிளம்புவதற்காகக் காத்திருந்த ராஜரத்னம் கேட்டார்: ''சாவித்திரியா...?''

''ஆமாம்ப்பா...!''

''அப்ப உனக்கு என் கல்யாணத்துலே எதுவும் ஆட்சேபணை கிடையாதேம்மா?''

''இல்லேப்பா...''

''தாங்க்யூ வெரி மச்! அப்ப நான் கிளம்பட்டுமா? லயன்ஸ் கிளப் வேலை கொஞ்சம் இருக்கு. அத்தைகிட்டே சொல்லிடு.''

''சரிப்பா...!''

ராஜரத்னம் காரை நோக்கி நடந்தார். காதம்பரி தனக்கே விருப்பமான தனிமையில் விடப்பட்ட நிம்மதியில் சோபாவில் சாய்ந்தாள். எப்போதும் போல் வீடு அமைதி

கொண்டிருந்தது. சன்னமான கடலோசை, மெலிதான பின்னணி இசைச் சேர்க்கையாக ஒலித்துக் கொண்டிருந்தது. வீட்டின் ஹாலைக் காதம்பரி ஓர் இறுமாப்புடன் பார்த்தாள். தெளிவான நிலா வெளிச்சம் போன்ற இந்த அமைதியைத்தான் ராஜரத்னத்தின் மறுமணம் சலனப்படுத்தப் போகிறது. அவரிடமிருந்து காதம்பரியைச் சற்று நகர்த்தப் போகிறது. ஐம்பது வயதில் அவர் மறுமணம் புரிய முனைந்து விட்டதையும், முப்பத்தெட்டு வயதிலும் இறந்துவிட்ட மனைவியின் நினைவிலேயே வாழும் காளிதாஸையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். காளிதாஸ் என்ற அருமையான எழுத்தாளன் நல்ல நண்பனாகக் கிடைத்திருப்பது அவளுக்குப் பெருமையாகவே இருந்தது. அவனுடன் தனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பை மனம் உகந்து காதம்பரி நினைத்துப் பார்த்தாள்.

அடையாறில் உள்ள 'காதம்பரி எலெக்ட்ரிகல்ஸ்' என்ற பெயரில் பற்பல மின்சாதனங்களை விநியோகம் செய்கிற ராஜரத்னத்தின் நிறுவனத்தில், அந்தத் தினத்தில் காலை 11 மணிக்கு ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல், காதம்பரி எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழ் எழுத்தாளன் காளிதாஸ், ஒல்லியாகவும் மிக உயரமாகவும் சந்தன நிறத்தில் அவளை வணங்கியபடியே நுழைந்தான். முப்பத்தெட்டு வயதில் இன்னும் கொஞ்சம் முதிர்ந்த தோற்றத்தில் உள்ளவனாக எதிர்பார்த்திருந்தவள் முப்பது வயதுகூட மதிக்க முடியாத உருவத்தில் தன்னைப் பணிவுடன் வணங்கி நின்ற காளிதாஸை, ஆண்களிடம் தனக்குள்ள அகந்தையைச் சிறிது இழந்து வணங்கினாள்.

''வணக்கம்.''

''வணக்கம்! வாங்க, என் அப்பாவோட ரூமுக்குப் போயிடலாம்.''

''ஓயெஸ்.''



ராஜரத்னம் எழுந்து நின்றே காளிதாஸை வரவேற்றார்.

''உட்காருங்கள் மிஸ்டர் காளிதாஸ்.''

காளிதாஸ் அமர்ந்து கொண்டதும் காதம்பரி தன் அப்பாவுக்கு அருகில் வேறொரு நாற்காலியில் தன்னுடைய அபிமான எழுத்தாளனுக்கு எதிரில் இருக்கிறோம் என்ற பரவசத்தோடு அமர்ந்து, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான் உங்களுக்கு என்ன தரலாம் மிஸ்டர் காளிதாஸ்—காபி அல்லது..?''—ராஜரத்னம் கேட்டார்.

''காபியே தாருங்கள். எனக்கு காபின்னா ரொம்ப பிடிக்கும்...''

''என்னைப் போலத்தானா நீங்களும்! எனக்கும் காபி என்றால் ரொம்ப இஷ்டம்'' என்று பணியாளை அழைத்து மூன்று காபி கொண்டு வரச் சொன்னார்.

''உங்களை மீட் பண்ணியே ஆகணும்னு காதம்பரி பத்து நாளா என்னை ரொம்பத்தான் தொந்தரவு பண்ணிட்டா. கேளுங்க அவளை!''

காதம்பரி சங்கோஜத்துடன் தலை குனிந்து கொண்டாள்.

''நீங்க இப்போ எழுதிக்கிட்டிருக்கும் 'அது வேறு வாழ்க்கை' நாவல் படிச்சிட்டு வார்த்தையால் சொல்ல முடியாத அளவுக்கு ரொம்ப பிடிச்சுடுச்சு...''

காளிதாஸ் சிரித்துக்கொண்டே சொன்னான்:''அவங்க தான் லெட்டர்ல எழுதி இருந்தாங்களே!''

''இருபத்து நாலு மணி நேரமும் அவளுக்கு அதைப் பத்தியேதான் பேச்சு... கேட்டுக் கேட்டு போரடிச்சுப் போச்சு எனக்கு...''

காபி வந்தது. மூவரும் மௌனமாக அருந்தினார்கள்.

''நீங்க எங்கே வேலை பார்க்கறீங்க மிஸ்டர் காளிதாஸ்...?''

''எங்கேயும் இல்லே சார்...!''

''பின் சொந்தமாகத் தொழில் எதுவும் செய்யறீங்களா...?''

''அதுவும் இல்லை...''

''அப்புறம்...?''

''சும்மாதான் இருக்கேன். எனக்குப் பிரச்னை எதுவும் இல்லை. கொஞ்சம் சொத்து இருக்கு... அதை வெச்சுக்கிட்டு என்னுடைய எளிய செலவுகளைச் சமாளிச்சுக்கிறேன்...''

''உங்களுக்குக் குழந்தைகள்..?''

''ஸாரி, எனக்குக் குழந்தைகள் கிடையாது. என் மனைவி இறந்து எட்டு வருடங்களாகின்றன..'' சட்டென அந்தச் சூழலில் ஒரு நிசப்தம் படர்ந்தது. ஆனால், காளிதாஸின் முகத்தில் அந்தப் புன்னகை மாறாமல்தான் இருந்தது.

''ஓ, நீங்களும் என்னைப் போலத்தானா? என் மனைவி இறந்து ஆறு வருடங்களாகின்றன'' என்றார் ராஜரத்னம்.

மனைவி இறந்த விஷயத்தில் காளிதாஸுடன் ராஜரத்னம் தன்னையும் அடையாளப்படுத்திக் கொண்ட வெளிப்பாடு, காதம்பரிக்கு நாகரிகக் குறைவாகத் தெரிந்தது.

''நீங்க சிகரெட் புகைப்பீங்களா காளிதாஸ்?''— ராஜரத்னம் சிகரெட் பாக்கெட்டை எடுத்துக் கொண்டே கேட்டார்.



''நோ சார். பழக்கமில்லை!''

ராஜரத்னம் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

''கல்யாணமாகி எத்தனை வருடத்தில் உங்க மனைவி இறந்தாங்க...?''

''மூன்றே வருடம்தான்.''

''பெரிய துக்கமான விஷயம்தான். எப்படித் தாங்கிக் கொண்டீர்கள்?''

''தாங்கிக் கொள்ளத்தானே வேண்டும்...?'' காளிதாஸ் சிரித்தவாறே சொன்னான்.

தன் ஆதர்ஸ எழுத்தாளனின் வாழ்க்கையில் படிந்திருக்கும் சோகம், காதம்பரியைக் கொஞ்சம் திகைக்க வைத்தது. மௌனமாகத் தலை குனிந்தவாறே அப்பாவுக்கும் காளிதாஸுக்கும் இடையே நிகழும் உரையாடலைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''மிஸ்டர் காளிதாஸ், இதுவரை நீங்கள் பேசியதிலிருந்து பார்த்தால்—உங்களுக்கு நிறைய டைம் இருக்க வேண்டுமே...அப்படியானால் நீங்கள் இன்னும் நிறையவே எழுதலாமே...?''

''நீங்கள் சொல்வது சரிதான்... எனக்கு அதிகமாகவே நேரம் இருக்கிறது. அதனால் நான் நிறையவே எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால், நான் எழுதுபவை ஏதோ ஒரு தருணத்தில்தான் கதையாகவோ, நாவலாகவோ வடிவம் கொள்கிறது. என்னுடைய அன்றாட எண்ணங்கள் அல்லது சம்பவங்கள் அனைத்துமே அருமையான கடிதங்கள் ஆகின்றன. வேறு சில விஷயங்கள் கவிதையாகக் கூட வெளியாகின்றன. ஸோ... நாவல், சிறுகதை, கவிதை அல்லது கட்டுரை எனவும், கடிதங்களாகவும் ஏதேனும் ஒரு வடிவத்தில் எதையேனும் நான் தினம் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். 'மது' என்ற

பெயரில் எனக்கொரு நண்பன் இருக்கிறான். கடந்த இருபது வருடங்களில் அவனுக்கு மட்டும் ஆயிரம் கடிதங்கள் எழுதியிருப்பேன்...''

காதம்பரியின் கண்கள் வியப்பால் விரிந்து விட்டன!

''அந்தக் கடிதங்களைக்கூடத் தொகுத்து நீங்கள் புத்தகமாக வெளியிடலாமே...?''

''கொஞ்ச காலம் போகட்டுமே...''

''அந்தத் தொகுப்பு நிச்சயமாக வித்தியாசமாக இருக்கும்...''

''யெஸ்... ஆனால், தத்துவம் கொஞ்சம் தூக்கலாக இருக்கும்...?''

''தத்துவம்னா...?''

''எந்த ஒன்றையும் பற்றிய உண்மைகளைக் காணுதல் தத்துவஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தி பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள் என நினைக்கிறேன்...''

''போன வருடம் இறந்து போய் விட்டார், இல்லை...?''

''யெஸ்...!''

''அவருடன் உங்களுக்குப் பரிச்சயம் உண்டா மிஸ்டர் காளிதாஸ்...?

''பரிச்சயம் உண்டு. பத்து வருடங்களுக்கு முன்பு அவரைச் சந்தித்திருக்கிறேன். என் வாழ்க்கையின் உன்னதமான சம்பவம் என அந்த சந்திப்பைக் குறிப்பிடலாம்... என் மனைவியின் மரணத்தை எதிர்நோக்கும் உணர்வு வளத்துக்கான மலர்ச்சிக்கு முகமனாக அவருடைய சந்திப்பையே சொல்லாம்...''

—இந்த இழையில் காதம்பரியின் மனம் அந்த ஞாபகத் தொடர்ச்சியிலிருந்து அறுந்து கொண்டது.



எழுத்தாளன் காளிதாஸின் அறிமுகமே காதம்பரிக்கு வேறொரு வாழ்வின் சோகமான உள்ளடக்கங்களை நெகிழ்த்துக் காட்டியது. நேரிலும், பற்பல கடிதங்களிலும் காளிதாஸ் அவனுடைய மனைவி சரஸ்வதி குறித்துப் பேசியிருக்கிற விஷயங்களை யெல்லாம் காதம்பரி நினைத்துப் பார்த்தாள். நாவல்களில் போலவே, கடிதங்களிலும் காளிதாஸின் தனித்தன்மை காதம்பரி அறிந்தது தான். அவளுக்கு அவன் எழுதும் கடிதங்களை வரிசை எண் கொடுத்துக் கோப்பு ஒன்றில் ஒழுங்கு செய்து, நினைத்த நேரமெல்லாம் அவற்றை எடுத்துச் சலிப்பில்லாமல் திரும்பத் திரும்பப் படித்துப் பார்ப்பாள் காதம்பரி.

## 3

தன்னைத் தேடி தன்னுடைய வீட்டுக்கே ராஜரத்னம் அவருடைய காரில் சற்றும் எதிர்பாராமல் வந்து விட்டபோது காளிதாஸ் சிறிது பரபரப்பாகி விட்டான். வெறும் லுங்கியில் இருந்தவன், ஷர்ட்டை எடுத்து அணிந்து கொண்டு அவரை வரவேற்பதற்காக வாசலுக்கு வேகமாக விரைந்தான். ராஜரத்னம் டிரைவிங் ஸீட்டிலிருந்து இறங்காமலேயே காரில் அமர்ந்திருந்தார்.

''யார்கிட்டேயாவது சொல்லி அனுப்பியிருந்தா நானே உங்க ஆபீஸுக்கு வந்திருப்பேனே... வாங்க, உள்ளே வாங்க!''

''பரவாயில்லை மிஸ்டர் காளிதாஸ்! உங்க வீட்டுக்கு நான் இன்னொரு சமயம் வரேன். இப்ப உங்களால் என்கூட வெளியில் வர முடியுமா?''

''உங்க வீட்டுக்கா?''

''இல்லை, இப்ப நான் காதம்பரிக்குத் தெரியாம வந்திருக்கேன். அதனால் வீட்டுக்கு வேண்டாம். வேற எங்கேயாவது போகலாம், வாங்க..''

''இருங்க, ஒரு நிமிஷத்துல வந்துடறேன்''—சொல்லி விட்டு, காளிதாஸ் வேகமாக வீட்டுக்குள் ஓடினான். பாண்ட் அணிந்து, தலையை லேசாக வாரிவிட்டுக் கொண்டு ஓடி வந்து காரில் ஏறினான். அவனுள் சிறிது பதட்டம் ஏற்பட்டிருந்தது. பயந்தபடியே கேட்டான்: ''ஏதாவது பிரச்னையா சார்..?''

''உடனே பயந்துடாதீங்க. ஒண்ணும் இல்லே.. என் மகள் காதம்பரி பற்றி முக்கியமான சில விஷயங்கள் பேசணும்.''

'எங்கே போகலாம்' என்ற யோசனையில், ராஜரத்னம் காரை மிகக் குறைந்த வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தார். காளிதாஸ் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

''காளிதாஸ், என்னோட மகள் காதம்பரிக்கு என் மேல் இருக்கிற அளவு கடந்த அன்பு பற்றி உங்களுக்குத் தெரியும்..''

''நல்லாவே தெரியும்!''

''அவளோட அம்மா இருந்தப்பவே காதம்பரிக்கு என்கிட்டே தான் ஒட்டுதல் அதிகம்.''

ராஜரத்னம் காரை ஹோட்டல் பிரசிடெண்ட்டில் மெதுவாகச் செலுத்தி நிறுத்தினார். கண்ணாடிச் சுவர்களால் சூழப்பட்ட சாப்பாட்டுக் கூடத்தில் இருவரும் அமர்ந்து இரண்டு திராட்சை ரசம் மட்டும் ஆர்டர் கொடுத்தார்கள்.

''மிஸ்டர் காளிதாஸ், இன்னிக்கு நான் உங்களைச் சந்திக்க வந்ததே காதம்பரி பற்றிச் சில முக்கியமான விஷயங்களை உங்ககிட்டே பேசத்தான். ஸோ உங்களுக்கு அவளைப் பற்றி என்ன தோணுதோ அதை நீங்க என்கிட்டே தயங்காம சொல்லலாம்...''

உயரமான கண்ணாடி டம்ளர்களில் திராட்சை ரசம் வந்தது.

''இப்ப கொஞ்ச நாளாகவே எனக்குத் தோணுது—என் மகள் காதம்பரிக்கு என்கிட்டே இருக்கிற இந்த ஒட்டுதல் அளவுக்கு மீறி அதிகம்னு...''

''யெஸ் சார். இந்த விஷயத்துல காதம்பரி கொஞ்சம் அசாதாரணமான பெண்தான்...''

''இப்ப கொஞ்ச நாளா அவள் என்ன சொல்லிட்டு இருக்கா தெரியுமா? அவள் கல்யாணமே செய்துக்கப் போறதில்லையாம். வாழ்க்கை பூரா என்னோடயே இந்த வீட்டிலேயே இருக்கப் போறாளாம்!''

—ராஜரத்னம் இதைச் சிரித்துக் கொண்டே சொன்னாலும், அவருடைய உள் மனத்தில் கவலைபடிந்திருப்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

''ஒரு அப்பா என்கிற முறையில் என்னோட மகள் நல்லபடியா கல்யாணம் பண்ணிக்கிட்டு அவளோட கணவன் வீட்டுக்குப் போறதுதானே எனக்கு சந்தோஷத்தைத் தரக்கூடிய விஷயம்...?''

''ஆமா... ஆமா...''

''வயசு அவளுக்கு இப்ப இருபது ஆகுது. படிப்பும் இந்த வருஷம் முடியுது.''

''மேலே படிக்கிற எண்ணம் இருக்கா அவங்களுக்கு?''

''கிடையாது. அதனாலே இப்ப இருந்தே வரன் பார்க்க ஆரம்பிச்சாத்தானே அடுத்த வருஷத்துக்குள் முடியும். ஆறு மாசமா இதைப் பற்றி அவகிட்டே ஆயிரம் தடவை பேசிப் பார்த்துட்டேன். 'கல்யாணம் பண்ணிக்க முடியவே முடியாது'னு சொல்லிட்டா...''

காளிதாஸ் மெலிதான குழப்பத்தில் ஆழ்ந்தான்: ராஜரத்னம் மறுமணம் செய்து கொள்ள முடிவு செய்திருப்பதைச் சில வாரங்களுக்கு முன்புதான் காதம்பரி அவனிடம் வெளியிட்டிருந்தாள். ஆனால், இவர் அதைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், காதம்பரிக்குத் திருமணம் செய்வது குறித்த அவருடைய கவலையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

"இவபாட்டுக்குக்கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு முட்டாள்தனமா சொல்லிட்டு, என் காலத்துக்கு அப்புறம் என்ன பண்ணுவா? வயசாக வயசாக அந்தத் தனிமை தாங்க முடியாததா இருக்குமே, அப்போ கிடந்து கஷ்டப் படப்போறது யார்... இவதானே...?"

"அதையெல்லாம் அவங்ககிட்டே சொன்னீங்களா?"

"நூறு தடவை பேசியாச்சு...ஒரு பயனுமில்லே..."

"நான் பேசிப் பார்க்கட்டுமா?"

"நீங்க என்ன பேசினாலும் கேட்க மாட்டா. அவகிட்டே அதுதான் பெரிய பிரச்னை. என்னைத் தவிர வேற யாரும் அவளோட இஷ்டத்துக்கு விரோதமா சின்ன வார்த்தைகூடப் பேசிட முடியாது. அப்படி நீங்க ஏதாவது பேசினா, உங்ககூடப் பேசறதையே நிறுத்திடுவா. அப்படிப்பட்ட பெண் அவ..."

—பின் எதற்காக ராஜரத்னம் தன்னைத் தேடி வந்து இத்தனை பேசிக் கொண்டிருக்கிறார் என்ற ஆச்சரியம் தோன்றியது காளிதாஸுக்கு! ஆயினும், இந்த உரையாடல் என்ற அமைப்பில், அவனுக்கும் ராஜரத்னத்துக்கும் இடையே ஒரு திரை இன்னமும் தூக்கப் படாமல் இருக்கிறது என்பதைக் காளிதாஸால் உணர முடிந்தது-

"எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், காதம்பரி கல்யாணம் செய்து கொள்ளவே மாட்டேன்னு சொல்றதுக்குக்



காரணம், அவளுக்கு என்கிட்டே இருக்கிற அசாதாரணமான அன்பும் ஈடுபாடும் தானே தவிர வேறு எந்தக் காரணமும் கிடையாது." — ராஜரத்னம் தீர்மானமான குரலில் சொன்னார்.

"அதாவது, அவங்க அறிவுபூர்வமா செயல்படறதை விட உணர்ச்சிபூர்வமா செயல்படறாங்க..."

"ஆமாம் அதனால், காதம்பரி ஒரு அறிவார்ந்த ரீதியில் சிந்திக்கிற மாதிரியான ஒரு கட்டாய நிலையை அவளுக்கு ஏற்படுத்தித் தரணும்னு நான் நினைக்கிறேன். அதாவது, என் மகளுக்கு என் மேலே இருக்கிற அன்பு எனக்குத் தரும் சந்தோஷத்தைவிட, என்கிட்டே அவளுக்கு இருக்கும் அன்பும் ஈடுபாடும் குறைஞ்சு அவள் ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சா அது தருகிற சந்தோஷம் ரொம்பவும் பெரிசு இல்லையா?"

"நிச்சயமா!"

"அதற்காக நான் என்ன செய்யப் போறேன்னு தெரியுமா மிஸ்டர் காளிதாஸ்? எனக்கும் அவளுக்கும் இடையே ஒரு இடைவெளி ஏற்படற மாதிரியான சந்தர்ப்பங்களை உருவாக்கி, இந்த வீடும் நானும்தான் அவளோட உலகம்னு இருக்கிறதை உடைத்து, அவளாகவே ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, என்னையும் வீட்டையும் விட்டுப் போயிடணும்கிற முடிவுக்கு வருகிற மாதிரியான சில காரியங்களைச் செய்யப் போறேன்..."

காளிதாஸ் மனத்துக்குள் மெலிதாக அதிர்ச்சியடைந்தான். ராஜரத்னத்தின் அணுகுமுறை சிறிது கோணலாகப் பட்டது அவனுக்கு. எனினும், அவர் முழுவதுமாகப் பேசி முடிக்கும் வரை குறுக்கிட விரும்பாமல் மௌனமாக இருந்தான்.

"மறுபடியும் நான் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் "மறுபடியும் நான் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்
கொள்வதன் மூலமாக அதை ஆரம்பிச்சு வைக்கப்
போறேன்..."

— முகத்தில் வந்து பரவிய சங்கோஜத்தை முற்றிலு
மாகத் தவிர்க்க முடியாத நாணத்துடன் ராஜரத்னம்
சொன்னார்.

காளிதாஸ் ராஜரத்னத்தையே பார்த்துக் கொண்டி
ருந்தாலும், அவர் அவனைப் பார்க்காமல் கண்ணாடிச்
சுவருக்கப்பால் பார்த்துக் கொண்டிருந்தார். காளிதாஸின்
அறிவில் ஒரு சந்தேகம் வந்தது. ராஜரத்னத்தின் இரண்
டாம் திருமணம் என்ற தீர்மானம் உண்மையில் அவர்
சொன்ன அணுகுமுறையை மட்டும்தான் அடிப்படை
யாகக் கொண்டதா என்பதை அவனால் நிச்சயம் செய்து
கொள்ள முடியவில்லை.

ராஜரத்னம் கேட்டார்: "நான் இன்னொரு
கல்யாணம் பண்ணிக்கிற விஷயம் பற்றிக் காதம்பரி உங்க
கிட்ட பேசினாளா மிஸ்டர் காளிதாஸ்?"

காளிதாஸ் சிறிது உணர்ச்சி வசப்பட்டான். மனம்
லேசாகக் கனத்தது. பெருமூச்சு விட்டபடி சொன்னான்.

"ஒரு நியூஸ் என்கிற அளவில் சொன்னாங்க."

"அதைப் பற்றி அவள் என்ன நினைக்கறா....?"

காளிதாஸ் பதில் சொல்லச் சிறிது யோசித்தான்.
காதம்பரியின் உள்மன நிலையை இப்போதே அவரிடம்
காட்டிக் கொடுக்க அவனுக்கு இஷ்டமில்லை. ராஜரத்னத்
தின் திருமண எண்ணத்தின் உண்மையான காரணத்தைத்
தெரிந்து கொள்ள நினைத்தான்.

"நான் ஒண்ணு தெரிஞ்சுக்கலாமா?"

"கேளுங்க காளிதாஸ்..."



"நீங்க ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கப்
போறது நீங்க இப்ப சொன்ன அந்த ஒரே காரணத்துக்
குத்தானா...?"

"யெஸ், என்னுடைய நோக்கம் அது ஒண்ணுதான்.
சத்தியமா வேற எந்தக் காரணமும் கிடையாது..."

"அப்படின்னா, அது தப்புன்னுதான் எனக்குத்
தோணுது — அது வெறும் 'சினிமாடிக்' அணுகுமுறையா
தோணுது எனக்கு..."

"நீங்க நினைக்கிறது எனக்குப் புரியுது காளிதாஸ்.
ஆனா, எனக்கு வேற வழி கிடையாது. காதம்பரி விஷயத்
தில் நான் இப்படி ஏதாவது டிராமட்டிக்கா செய்தால்
தான் அவகிட்டே பலன் கிடைக்கும்... இதில் வேற ஆபத்து
எதுவும் கிடையாதே?"

"கிடையாதுன்னு நமக்கு எப்படி சார் தெரியும்?"

"அப்படித்தான் நான் எதிர் பார்க்கிறேன்..."

"அதாவது அந்த மாதிரி நீங்க ஆசைப்படறீங்க?"

"அப்படித்தான் வெச்சுக்கோங்களேன்!"

மீண்டும் அவர்களிடையே மௌனம் நிலவியது.
ராஜரத்னத்தின் அணுகல் ஒரு பிழையின் துவக்கமாகக்
காளிதாஸுக்குத் தோன்றியது.

தன் மகளுக்குத் தன்னிடம் இருக்கும் அதீதப்
பிணைப்பை வெட்டிவிடுவதற்கான ஆயுதமாக மட்டும்
இரண்டாம் திருமணத்தை ராஜரத்னம் மேற்கொள்வது
மனோதர்ம மற்ற நடத்தையாகவே அவனுக்குத் தோன்றி
யது. சில வாரங்களுக்கு முன்பு காதம்பரி, ராஜரத்னத்தின்
மறுமண எண்ணத்தை அவனிடம் வெளியிட்டுப்
பொருமியது காளிதாஸின் நினைவில் சுழன்றது.
காதம்பரியின் அந்தப் பொருமல், ராஜரத்னம் எதிர்
பார்க்கிற மனத்திருப்பத்தின் முதல் நிலைதானா என்ப

தையும் அவனால் நிச்சயிக்க முடியவில்லை. தன் மறு மணத்தை மகன், வாழ்க்கையோடு மட்டும் சார்புப் படுத்திப் பார்க்கிற ராஜரத்னம், அவர் மணந்துகொள்ளப் போகும் பெண்ணை இந்தச் சித்திரத்தில் வரைந்து பார்க்காதது ஒரு குழப்பமான வரைபடத்தையே அவனுள் பரப்பியது. அதனால், சிறிது தயக்கமான தொனியில் ராஜரத்னத்தைக் கேட்டான்.

''எனக்கு இந்த விஷயத்தில் தோணறதைச் சொல்லட்டுமா..?''

''சொல்லுங்க காளிதாஸ்...''

''உங்க முடிவு எனக்குச் சரியானதா படலை சார். இதை இன்னும் ஒரு தடவை நீங்க நல்லா யோசிச்சுப் பார்க்கிறது நல்லது.''

''பல நாள் இதைப் பத்தி நான் நல்லா யோசிச்சுப் பார்த்திட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். நான் மறுபடியும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிறதன் மூலமாத்தான் அவளை என்கிட்டே இருந்து பிரிக்க முடியுமே தவிர, வேற எதனாலும் முடியாது. காதம்பரியைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்...!''

''காதம்பரியை உங்ககிட்டேருந்து பிரிக்க முடியுமா, முடியாதா என்கிறது என்னோட கேள்வி இல்லை சார், அதன் மூலம் காதம்பரி அவங்களோட கல்யாணத்துக்குச் சம்மதிக்கிற நிலைமைக்கு மாறுவாங்களா என்பதுதான் என்னோட கேள்வி...''

'அப்படியொரு நிலைக்கு அவள் மாறுவாள் என நாம் நம்புவோம்.''

ராஜரத்னம் உரையாடலை அவருக்குச் சாதகமான இழையில் முற்றுப்புள்ளியிட விழைகிறார் என்பது காளிதாஸுக்குத் தெரிந்து போனதில், மேற்கொண்டு எதுவும் பேச முற்படாமல் சட்டெனச் சுருங்கிக் கொண்டான்.

தான் ஆசைப்படுவது நடக்க வேண்டும் என ராஜரத்னம் ஆசைப்படுகிறார். மனிதர்களின் தன்மை இது. தான் என்ன நடக்க இருக்கிறது என்பதைக் காண முடிகிற தொலைநோக்கு அற்றுப்போவது—இந்த ஆசை என்னும் எண்ணம் சுவராக எழும் தடையால்தான். தொலைநோக்கு எட்ட இயலாதநிலை இல்லை. ஆசை, நம்பிக்கை என்ற சுவர்கள் உதிர்க்கிற கணமே தொலைநோக்கு மலர்கிறது...

''ஸோ?''—கனத்த பெருமூச்சுடன் காளிதாஸ் ராஜரத்னத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

''மறுபடியும் உங்களை வீட்டில் கொண்டு போய் டிராப் பண்ணிடட்டுமா?''

''இல்லை சார், நான் இப்படியே நடந்து அமெரிக்கன் லைப்ரரி போய் விடுகிறேன்.''

''ரொம்ப வெயிலா இருக்கே?''

''பரவாயில்லை. எனக்கு நடந்து போகணும்...''

''எப்போ வீட்டுக்கு வர்றீங்க?''

''அடுத்த வாரம் வரேன்.''

''காளிதாஸ், ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். காதம்பரி என் கல்யாணத்துக்கு அவளோட சம்மதத்தைச் சொல்லிட்டா. ஆனா, அவளோட உள் மனசு எப்படி ரீயாக்ட் பண்ணுதுன்னு தெரியலை எனக்கு. ஒருவேளை அவள் அதைப் பத்தி உங்ககிட்டே எப்பவாவது பேசினாலும் பேசலாம். அப்படி அவள் ஏதாவது உங்ககிட்டே பேசினா தயவுசெஞ்சு அதை நீங்க மறைக்காம என்கிட்டே வந்து சொல்லிடணும்...''

காளிதாஸ் யோசித்தான். அவருடைய இந்த நடவடிக்கையில் அவனையும் ஒரு மறைமுகமான இழையில் பயன்படுத்தப் பார்க்கிறார் என்பது புரிந்தது. அவரின் அணுகுமுறையே சரியானதா, தவறானதா என்ற தீர்

மானத்துக்கு அவனால் வரமுடியாமல் இருக்கும்போது, அவசரப்பட்டுக் காதம்பரியின் உள்மன எதிர் விளைவுகளை ராஜரத்னத்திடம் வெளியிடுவது சரியில்லை எனத் தோன்றியது. அதுவுமல்லாமல், காதம்பரியிடம் இந்தக் கணம் பீறிட்டு இருக்கும் உணர்வுகள் ஓர் ஆரம்பப் பிரவாகத்தின் இரைச்சலாக இருக்கலாம். நாள் செல்லச் செல்ல அதன் ஓசையும் வேகமும் இயல்பாகவே தணிந்து விடலாம். அப்போது காதம்பரியே ஓர் அறிவார்ந்த சுய தீர்ப்புக்கு வந்து விடலாம். எனவே, தனிப்பட்ட முறையில் எவர் பக்கமும் சார்ந்து நிற்காமல், இருவர் புறமும் நன்மைகள் நிகழும்படி நிலைமையை எதிர்நோக்குவது தான் சரியானதாகக் காளிதாஸுக்குத் தோன்றியது.

''பார்க்கலாம் சார்'' என்றான்.

''தாங்க்யூ காளிதாஸ்...!''

ஹோட்டல் பிரசிடெண்ட்டில் இருந்து ராஜரத்னத்தின் கார் கிழக்குத் திசையில் வேகமாக விரைய, காளிதாஸ் மெதுவாக அமெரிக்கன் லைப்ரரி நோக்கி நடக்கத் தொடங்கினான்.

## 4

திருமணத்தை நோக்கி காதம்பரியின் மனநிலையைச் செலுத்தத் தான் வரைந்திருக்கும் திட்டம் பழுதற்ற நன்மையை விளைவிக்கக் கூடியதுதானா என்பதை எவ்வாறு ஊர்ஜிதம் செய்து கொள்வதென்று புலப்படாமல் மனம் புழுங்கினார் ராஜரத்னம். அவரால் தாங்கிக் கொள்ள முடியாதது—காதம்பரி திருமணம் புரிந்து கொள்ளாமல் வாழ நினைக்கிற அபூர்வ வாழ்க்கையைத்தான். யாராக இருந்தாலும் பரவாயில்லை, ஓர் ஆடவனைக் காதம்பரி மணந்து கொள்ள வேண்டும்.



அந்தக் காதலை எதைச் செய்ய வேண்டுமென்று மனோ தர்மத்துக்கு உகந்ததாகத் தோன்றுகிறதோ அதைத் தயங்காமல் செய்துவிட வேண்டும். ஆகையால் மறுமணம் பற்றிய மறுபரிசீலனை தேவையில்லை என்ற தீர்மானம் ராஜரத்னத்திடம் உறுதியாகியது. ஆபீஸில், அவரின் அறையிலிருந்து நண்பர் குமாரசாமிக்கும் போன் பண்ணினார்:

''குமாரசாமியா?''

''என்னப்பா ராஜரத்னம்...?''

''அன்றைக்குச் சொன்னேனே என் கல்யாண விஷயம்...''

''ஆமா...''

''என் மகள் அதுக்கு சம்மதம் சொல்லிட்டா!''

''வெரிகுட்! அப்போ பெண் தேட ஆரம்பிக்கலாமா?''

''ஆரம்பிக்க வேண்டியதுதான்...''

''அன்னிக்குச் சொன்னேனே...மூன்று பெண்கள். அதிலேயே ஒரு பெண்ணைப் பார்த்துடலாமா?''

''உனக்கு அதில் எந்தப் பெண் பரவாயில்லேனு தோணுது?''

''எனக்குப் பரவாயில்லேனு தோணறது–அந்த மேற்கு மாம்பலம் பெண் தான்!''

''ஏதோ ஒரு நர்ஸரி ஸ்கூல்ல டீச்சரா இருக்குன்னு சொன்னியே?''

''ஆமாம்...அந்தப் பெண்ணோட அண்ணன்கூட நேத்திக்கு வந்திருந்தான். நாளைக்கு நானே போய் அவனைப் பார்த்துப் பேசறேன். பொண்ணோட பேர் வசந்தா. வயசு முப்பத்திரண்டு. ஆனாலும் பார்த்தா

அந்த வயசு தெரியாது. பெண்ணும் லட்சணமா இருப்பா...''

''இதோ பார் குமாரசாமி. அழகைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலை கிடையாது. பெண், எனக்கும் என்னோட குடும்பத்துக்கும் பொருத்தமா, கௌரவமா இருந்தா போதும்.''

''வர்ற வெள்ளிக்கிழமை அந்தப் பெண்ணையே பார்க்கிறதுக்கு ஏற்பாடு செய்திடட்டுமா?''

''சரி...''

—ராஜரத்னம் திருப்தியுடன் ரிஸீவரை வைத்தார். அப்போது பணியாள் கதவைத் திறந்து உள்ளே வந்தான்.

''உங்க தங்கை மகன் உங்களைப் பார்க்கிறதுக்கு வந்திருக்கார் சார்!''

''வரச் சொல்லு''—கொஞ்சம் எரிச்சலுடன் சொன்னார்.

பணியாள் போய்ச் சொன்னதும் ராஜரத்னத்தின் சகோதரி பத்மாவதியின் மகன் சிவராஜ், அறைக்குள் நுழைந்தான். சற்றுச் சுத்தம் குறைவான உடைகள், தோள்வரை புரளும் தலைமுடி, மண்டி வளர்ந்திருந்த தாடி, சில புத்தகங்களை உள்ளடக்கிய ஜோல்னா பை. ஆபிஸ் வாசல்வரை புகைத்துக் கொண்டு வந்த சிகரெட்டின் வாசனை மெலிதாகப் பரவ,—சிவராஜ் ராஜ ரத்னத்தை வணங்கியபடி வந்து அமர்ந்தான்.

''எங்கே வந்தே?''

''சும்மா உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன் மாமா!''

''ஏண்டா பொய் சொல்றே...நீ சும்மா வருவியாக்கும்?''

சிவராஜ் பேசாமல் இருந்தான்.



''ஏதோ ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்ல படிக்க ஆசைப் பட்டே. சேர்த்து விட்டேன். படிச்சு முடிச்சு அஞ்சு வருஷமாச்சு... இன்னிவரைக்கும் ஒரு பைசா பிரயோஜனம் கிடையாது. 'இதோ படம் பண்ணப் போறேன். இதோ படம் பண்ணப் போறேன்'னு நீயும் சொல்லிட்டே தான் இருக்கே நானும் கேட்டுட்டே தான் இருக்கேன்...!''

''என்ன மாமா பண்ணச் சொல்றீங்க? ஃபீல்டுல இன்ஸ்டிட்யூட் பசங்கனு சொன்னாலே பயப்படறாங்க...!''

''பயப்படத்தாண்டா செய்வான்! என்னமோ நீங்கள்லாம் இன்ஸ்டிட்யூட்ல ரெண்டு வருஷம் படிச்சிட்டதால பெரிய இவனுங்கன்னு நினைச்சுக்கிறீங்களே! பி. ஏ., எம். ஏ., மாதிரி இதுவும் ஒரு படிப்பு, அவ்வளவு தானே! நீங்க மட்டும் ஏன் இப்படி அலட்டிக்கிறீங்க?'' —ராஜரத்னம் அளவற்ற வெறுப்புடன் கேட்டார்.

சிவராஜ் மனத்துக்குள் பொங்கினான். ஆனாலும் அவனின் குமுறலைக் காட்டுகிற இடம் இல்லை இது. பொங்கி வெடிக்க இது சரியான தருணமும் இல்லை. இப்போதைய அவனுடைய தேவை—பணம். அதற்காக இப்போது அவமதிப்பை அவன் தாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் நகம் கடித்தபடி மௌனமாக இருந்தான்.

''சரி, எதுக்கு வந்தே? பணம் வாங்கிப் போகத் தானே?''

ஒரு பைசா சம்பாதிக்க முடியாதவனுக்கு என்ன பெரிய அகந்தை என்று ராஜரத்னம் சிவராஜ் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார். இவரிடம் உள்ள பணத்தையெல்லாம் கழித்துவிட்டால் இவருக்கென்ன மதிப்பு என்று சிவராஜ் நினைத்துக் கொண்டிருந்தான்.

''போன வருஷமே எப்படியும் சான்ஸ் கிடைச்சிடும்னு சொல்லிச் சொல்லி என்கிட்டே பணம் வாங்கிட்டுப்

போனே. இப்ப ஒரு வருஷம் ஆயிடுச்சு... எவ்வளவு நாளைக்குத்தான் நான் உனக்குப் பணம் குடுத்திட்டே இருப்பேன், சொல்லு? உன் அப்பன், உன் அம்மாவை விட்டுட்டு ஓடிப்போய் இருபது வருஷமாச்சு. என்னோட தங்கை என்ற முறையில் அவளைக் காப்பாற்ற வேண்டியது என் கடமைதான். இத்தனை வருஷம் அவளைக் காப்பாத்தி, உன்னையும் உனக்கு இஷ்டமான படிப்பைப் படிக்க வெச்சு ஆளாக்கி இருக்கேன். இனிமே நீயாக சம்பாரிச்சு உன் அம்மாவைக் காப்பாத்த வேண்டாமா?''

சிவராஜ் தணிந்த குரலில் பதில் சொன்னான்: ''போன வாரம்தான் ஒரு தயாரிப்பாளருக்கு கதை சொல்லியிருக்கேன் மாமா. கதை அவருக்கு ரொம்ப பிடிச்சுப் போயிடுச்சு. பணம் ஏற்பாடு பண்ணிட்டு வரேன்னு சொல்லிட்டு ஊருக்குப் போயிருக்கார்.''

''எந்த ஊருக்கு?''

''சேலத்துக்கு மாமா!''

''பெரிய பணக்காரனா?''

''ஆமா மாமா. மெட்ராஸ் வந்தா ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லேதான் தங்குவார்!''

''கதை பிடிச்சுப் போச்சுன்னா, ஏதாவது அட்வான்ஸ் கேட்க வேண்டியதுதானே?''

''உடனே அட்வான்ஸ்னு கேட்டா தப்பா நினைப்பார் மாமா.''

''சும்மா கதையைக் கேட்டுட்டு ஏமாத்திட்டுப் போகமாட்டானே?''

''இல்லை மாமா. ஆள் ரொம்ப நல்லவர்! என்னை வெச்சுப் புதுமையா ஏதாவது செய்யணும்னு ஆசைப் படறார்!''



''உருப்படியா ஏதாவது செய்தா சரி!''

''கண்டிப்பா செஞ்சுடுவேன் மாமா!''

''சரி போ. காஷியர்கிட்டே நான் சொன்னேன்னு முந்நூறு ரூபா வாங்கிக்க...''

''ரொம்ப தாங்க்ஸ் மாமா.''—சிவராஜ் சந்தோஷத்துடன் எழுந்தான். அப்போது கதவைத் திறந்து காதம்பரி உள்ளே நுழைந்தாள்.

''ஹலோ காதம்பரி...!'' என்றான் சிவராஜ்.

''ஹலோ...! எப்படி இருக்கீங்க அத்தான்? வீட்டுக்கு ரொம்ப நாளா நீங்க வரவே இல்லையே. அத்தை உங்களைக் காணோம்னு சொல்லிட்டே இருக்காங்க...''

''கொஞ்சம் பிஸியா இருக்கேன் காதம்பரி. அம்மாகிட்டே சொல்லு—பத்து நாள் கழிச்சி அம்மாவைப் பார்க்க வரேன்...''

''இப்போ எங்கே தங்கியிருக்கீங்க?''

''நாதமுனி தெருவிலேதான் இருக்கேன்!''

''இந்த வருஷமாவது உங்க படம் வருமா?''

''கண்டிப்பா வரும். தீபாவளிக்கு எல்லா பெரிய டைரக்டரோட படங்களோட மோதப் போறேன் பார். அவனவன் தோளைக் காணோம் துண்டைக் காணோம்னு கதறப் போறான், அவ்வளவு அருமையான சப்ஜெக்ட்!''

''ஆல் த பெஸ்ட்!''

''தாங்க்யூ, வரேன்.''

சிவராஜ் வெளியேறிப் போனதும், காதம்பரி களைப்புடன் நாற்காலியில் சாய்ந்தாள்.

''என்னம்மா, கிளாஸ் இல்லையா?''

"இல்லேப்பா. அதான் அவசர அவசரமா வரேன்—நீங்க லஞ்சுக்கு வீட்டுக்குப் புறப்பட்டுப் போயிருப்பீங்களோன்னு... அத்தான் எப்ப வந்தார்?"

"இப்பத்தான் வந்தான். வானத்தை வில்லா வளைக்கிறவன் மாதிரித்தான். பேசறான். பார்த்தா இருபத்துநாலு மணி நேரமும் பாண்டி பஜார் முனையில் தான் நிக்கறான். என்ன பண்ணப்போறானோ?"

"எனக்கு நம்பிக்கை இருக்கு—அத்தான் ரொம்ப பெரிய ஆளா வருவார்."

"ரொம்ப எக்ஸெண்ட்ரிக்கா இருக்கான்."

"ஜீனியஸா இருக்கிறவங்கல்லாம் கொஞ்சம் அப்படித்தான் இருப்பாங்க! மிஸ்டர் காளிதாஸ்கூடக் கொஞ்சம் எக்ஸெண்ட்ரிக்தான்!"

காதம்பரி, காளிதாஸை இப்படிச் சொன்னது ராஜரத்னத்துக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது.

"என்னம்மா, திடீர்னு இப்படிச் சொல்லிட்டே அவரை?"

"ஏன், என்னோட அபிமான எழுத்தாளர் என்கிறதால் அவரை ஒண்ணுமே சொல்லக்கூடாதா?"

"எதை வெச்சு அப்படிச் சொல்றே?"

"அவரோட மனைவி இறந்து போய் மறுபடியும் அவர் கல்யாணம் பண்ணிக்காம, அவங்க நினைப்பாலே வாழறதை ஒரு பெரிய 'தகுதி' மாதிரி நிலைநிறுத்திக்கப் பார்க்கிறார்!"

உண்மையாகவே ராஜரத்னம் மனத்துக்குள் சந்தோஷப்பட்டார். தாட்சண்யம் இல்லாமல் காளிதாஸ் பற்றிக் காதம்பரி சிந்தித்திருப்பது மிகவும் ஆரோக்கியமான தடமாக அவருக்குத் தோன்றியது. அவளுடைய



அபிப்பிராயம் தவறாகக்கூட இருக்கலாம். ஆயினும், எதிலுமே உணர்வு பூர்வமாக மட்டும் எதிர் விளைவு காட்டும் காதம்பரியின் இந்த அறிவு இழை ராஜரத்னத்தைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானது.

"சரி, வீட்டுக்குக் கிளம்பலாமா?"

"போகலாம்ப்பா."

இருவரும் வெளியில் வந்து காரில் ஏறிக் கொண்டார்கள். ராஜரத்னம் மெதுவாகக் காரைக் கிளப்பினார்

சில நிமிடங்கள் மௌனமாக இருந்தபின் ராஜரத்னம் சொன்னார்: "காதம்பரி. நீ வர்றதுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என் ஃப்ரெண்ட் குமாரசாமி போன் பண்ணினான்."

"எதுக்குப்பா?"

"என் கல்யாண விஷயமாகத்தான்!"

சுய பிரக்ஞையற்ற இலகுத் தன்மையில் காரின் முன்ஸீட்டில் சிறிது உல்லாசமாகச் சாய்ந்திருந்த காதம்பரி, கனத்த பிரக்ஞை வசமானாள். உடனே காரின் மறுமூலையில் போய்ப் பதுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது. இது காதம்பரியும் நேரடியாகச் சம்பந்தப்படுகிற விஷயம். இங்கு அறிவுபூர்வ அணுகல் பின்வாங்கி, உணர்வுகளின் பதட்டம் மட்டுமே தலைதூக்குகிறது. மனத்துக்குச் சிறிதும் விருப்பமில்லாத விஷயத்துக்குச் செவி சாய்க்க வேண்டியிருக்கிற குற்றத்தன்மையுடன் காதம்பரி நிசப்தமாக இருந்தாள்.

"குமாரசாமி ஒரு பொண் சொன்னான்... சின்ன நர்ஸரி ஸ்கூல்ல டீச்சரா இருக்காளாம். அப்பா, அம்மா கிடையாதாம். ஒரே ஒரு அண்ணன் மட்டுந்தான். ரொம்ப நல்ல குடும்பம்னு குமாரசாமி சொல்றான். அந்தப் பொண்ணோட பேர்கூட ஏந்தா வசந்தாவாம்!

வர்ற வெள்ளிக்கிழமை அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்திட்டு வரலாம்னு நினைக்கிறேன். நீயும் என்கூட அந்தப் பெண்ணைப் பார்க்கிறதுக்கு வரணும்மா...''

ஒரு பொறியில் சிக்கிக் கொண்டாற் போலிருந்தது காதம்பரிக்கு. வசந்தாவாம்...!

அந்தப் பெயரே ஓர் ஒவ்வாத உணர்வை அவளுள் ஏற்படுத்தியது. எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல் பல்லைக் கடித்துக் கொண்டு பதில் சொன்னாள்:

''ஸாரிப்பா! என்னையெல்லாம் கூப்பிடாதீங்க. என்னவோ போல இருக்கு எனக்கு...''

''நோ, நோ...இதிலே என்ன இருக்கு? நீயும் கண்டிப்பா என்கூட வந்துதான் ஆகணும். குமாரசாமி கிட்டேகூடச் சொல்லிட்டேன்—நீயும் என் கூட வர்தா...''

சின்னஞ்சிறு சுதந்திரம் மறுக்கப்பட்டபோதும்கூடத் தாங்க முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டு விடுகிற காதம்பரி திகைத்துப் போய்விட்டாள். பெண்ணைப் பார்க்க அவள் வரவில்லை என்கிறாள். வந்துதான் ஆக வேண்டுமென்று ராஜரத்னம் சொல்கிறார். யாரோ வசந்தா என்ற பெண்ணைப் பார்க்கப் போகிற ஆரம்ப சம்பவமே காதம்பரியை ஒரு நிர்ப்பந்தத்துக்குள்ளாக்குகிறது. முகம் தெரியாத அந்த வசந்தா என்பவளைக் கோபத்துடன் நினைத்துப் பார்த்தாள் காதம்பரி. இருபது வயதில் இன்னும் ஒரு மகள் இருக்கிற வயோதிகர் ஒருவரை, ஒருத்தி மணக்க முன் வருகிற மனத்தன்மையை அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. பணத்துக்காகத்தான் முன்வருகிறாள் என நினைத்துக் கொண்ட மாத்திரத்தில், காதம்பரிக்கு அந்தப் பெண் மீது அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டது.

'அந்த வசந்தாவும் இப்படித்தான் ஒரு நாள் இந்த காரில் சொந்தத்துடன் முன்ஸீட்டில் சாய்ந்து கொண்டு



வருவாளோ?' காதம்பரிக்கு, காரில் இருந்து வெளியில் குதித்து விடலாம் போலிருந்தது. காரின் முன்ஸீட் எப்போதும் காதம்பரி உட்காரும் ஸீட்! திடீரென்று வசந்தா என்ற ஒருத்தி வந்து இந்த முன்ஸீட்டில் உட்கார நினைத்தால் காதம்பரி விட்டு விடுவாளோ? 'வரட்டும் அவள், பார்க்கலாம்!' என்ற இறுமாப்புடன் கைகளைக் கட்டிக் கொண்டு காரின் முன்ஸீட்டில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்...!

## 5

சென்னை நகரின் புறக் கிராமமாகிய கொட்டிவாக்கத்திலிருந்து மகாபலிபுரம் செல்கிற தென்திசை நெடுஞ்சாலையில் மற்றுமொரு மணல் கிராமம்—உத்தண்டி. அந்த உத்தண்டியின் பிரதான சாலையில் காரை நிறுத்திவிட்டு காளிதாஸ், காதம்பரி, அவளின் தோழி சாவித்திரி மூவரும் தூரத்துக் கடலை நோக்கி மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

''காதம்பரி, அதோ தூரத்துல கடலுக்குக் கொஞ்ச தூரம் முன்னாடி ஒரு சின்ன மணல் குன்று மாதிரிஇருக்கு பாருங்க...''—சுட்டிக் காட்டினான் காளிதாஸ்.

''ஆமா!''

''அங்கே போய் உட்கார்ந்து கொள்ளலாம்.''

''ஓயெஸ்!''

கால்கள் புதைந்து போகிற மாதிரியான மணல் வெளியில் காதம்பரி மிகவும் உற்சாகமாக நடந்தாள்.

''கொறிக்கறதுக்கு ஏதாவது வாங்கி வந்திருந்தா நல்லா இருந்திருக்கும்'' என்றாள் சாவித்திரி.

''கடையில் போய் ஏதாவது வாங்கிட்டு வந்துட்டாமா?''—காளிதாஸ் கேட்டான்.

''ஒன்னும் வேண்டாம், பேசாம வாங்க. இன்னும் ரெண்டு நாளைக்கு எனக்குப் பசிக்கவே பசிக்காது''—காதம்பரி குதூகலத்துடன் சொன்னாள்.

''ஆனாலும் நீ ரொம்பத்தான் மோசம் காதம்பரி. பாவம் உங்கப்பா வெளியே சிரிச்சுப் பேசிண்டிருந்தாலும் உள்ளுக்குள் ரொம்ப ஹர்ட் ஆகியிருக்கார்னு தோண்றது. நீங்க என்ன சொல்றீங்க சார்?''

''யெஸ் யெஸ்! அவர் நினைச்சே பார்த்திருக்க மாட்டாரே—இந்தப் பெண் அப்படி எழுந்து உள்ளே ஓடிப்போயிடும்னு! பேசாம பெண் பார்க்கிற வேலை யெல்லாம் வெச்சுக்காம, பேசி முடிச்சுக் கல்யாணத்தை வைப்பாரா—வெட்டி வேலை பண்றார்!''

காதம்பரி சிரிப்பை அடக்க முடியாமல் சொன்னாள்: ''என்னையும் அப்பாவையும் பார்த்ததும் அந்த டீச்சரம்மா உள்ளே ஒரே ஓட்டமா ஓடிப் போயிட்டாங்க. எனக்கு சிரிப்புச் சிரிப்பா வருது! ஆனா, அப்பாவைப் பார்த்தா பாவமா இருக்கு. அந்த டீச்சரம்மாவோட அண்ணன் போய் அந்த அம்மாவை வெளியில் வரச் சொல்லிக் கூப்பிடறார். இங்கே அப்பாவோ முணங்கறார். ஆனா, அந்த அம்மா வெளியில் வரவேமாட்டேங்கறாங்க அவ்வளவுதான். அப்பா சடார்னு எழுந்து வெளியில் வந்துட்டார். நான் குடிச்சிட்டிருந்த காபியை மிச்சம் வைக்கக்கூடாதுன்னு அவசர அவசரமா குடிச்சிட்டு எழுந்து ஓடியே வந்துட்டேன்! நல்ல வேளை. என் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு. இனிமே அப்பா அவரோட கல்யாணப் பேச்சை எடுக்கவே மாட்டார். ஜாலி..!''

—காதம்பரி உற்சாகத்துடன் ஒரு சுற்றுச் சுற்றினாள்.



''அப்படி மட்டும் நினைக்காதீங்க காதம்பரி. உங்கப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிக்காம விடவே மாட்டார் நீங்க வேணா பாருங்க!''

''எனக்கென்னவோ நம்பிக்கை இல்லை. மனசுக்குள் ரொம்பவும் நொந்து போயிட்டார். சும்மா இருந்திருக்க வேண்டியதுதானே! என்னத்துக்கு திடீர்னு இத்தனை வருஷம் கழிச்சு அவருக்கு இந்தக் கல்யாண ஆசை...''

''உங்க அப்பாவைப் பத்தி உங்களுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்.''

''நோ நோ. இந்தச் சம்பவம் அவரை ரொம்பவும் பாதிச்சிடுச்சு. இத்தனை வருஷம் கழிச்சுத் தனக்குக் கல்யாண ஆசை வந்ததுக்கு இது சரியான தண்டனைன்னு அப்பாவே என்கிட்டே சொன்னாங்க, போதுமா?''

காளிதாஸுக்கு இந்த ஒரு சொல் போதும். தனக்கு இந்தச் சம்பவம் ஒரு தண்டனையென்ற இரங்கத்தக்க வாக்குமூலம்கூட ராஜரத்னத்தின் எதிர்மறை அனுகூலமாக இருக்கலாம்!

மூவரும் அந்தச் சிறிய மணல் மேட்டை அடைந்தார்கள். காதம்பரிக்கு அந்த இடம் ரம்மியமில்லாது தோன்றியது.

''ஸாரி காளிதாஸ்! இந்த இடம் எனக்குப் பிடிக்கலை'' என்றாள்.

''பரவாயில்லை. பிடிக்காததையும் வாழ்ந்து பார்க்கணும்!''

''நீங்க சொல்றதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. பிடிக்காத ஒரு விஷயத்தோடு எதுக்கு வாழணும்?''

''சரி, சரி... உட்கார்ந்து பேசுவோம். ஏன் நின்னுண்டே இருக்கணும்?'' என்றாள் சாவித்திரி.

காலணிகளை உதறிவிட்டு மூன்று பேரும் முக்கோண வடிவில் தள்ளித் தள்ளி உட்கார்ந்தார்கள். காதம்பரி நான்கு பக்கமும் பார்த்தாள். சுற்றிலும் நிறைவாக இருந்த அருள், அம்மணல் மேட்டில் சூனியமாக இருந்தது. காதம்பரியின் மனநிலையைப் புரிந்து கொண்டு காளிதாஸ் கேட்டான் :

''இந்த இடத்தில் மட்டும் ஓர் இணக்கம் இல்லை—இல்லே?''

''ஏன் அப்படி? பாருங்க, சுத்தி எல்லா இடமும் அழகா இருக்கிறப்ப இங்கே மட்டும் ஏன் என்னமோ போல் இருக்கு?

''ஒரு மாதிரியான வாசனை?''

''யா. இந்த இடம் மட்டும ஒரு மாதிரியாத்தான் இருக்கு. ஏதோ சுடுகாடு மாதிரி ..''

—சாவித்திரி இப்படிச் சொன்னதும் காதம்பரி அரண்டுபோய் எழுந்து நின்றாள்.

''வாங்க காளிதாஸ்! வேறே எங்கேயாவது போய் உட்காரலாம். எனக்குப் பயமா இருக்கு இங்கே உட்கார...''

''சுடுகாடுன்னு சொன்னதும் பயமாயிடுத்தா?''—சாவித்திரியும் எழுந்து கொண்டே கேட்டாள்.

''ஐயோ! சுடுகாட்டை நினைச்சாலே எனக்குப் பயம்!''

''அப்போ, சாவுன்னு சொன்னாக்கூட பயப்படுவீங்களா?''—காளிதாஸ் கேட்டான்.

''செத்தேன். தெருவில் போகிறபோதுகூட சாவு ஊர்வலம் வந்தா கண்ணை இறுக மூடிப்பேன்...''

மூவரும் சிறிது தூரம் நடந்து போனார்கள்.



''இங்கே உட்கார்ந்து கொள்ளலாம்.''

''அப்பாடி! இந்த இடம் எவ்வளவோ பரவாயில்லை....''

''காளிதாஸ்! நீங்க அடிக்கடி இந்தப் பக்கமெல்லாம் வந்து உக்காந்துப்பீங்களா?''

''என் மனைவி இறந்துபோன சமயம் அந்த மணல் மேடே கதின்னு எத்தனையோ நாள் கிடந்திருக்கேன்..''

''அப்போ அந்த மணல்மேட்டைச் சுடுகாடு மாதிரி இருக்குன்னு சொன்னதும் ஒரு விதத்தில் கரெக்ட்தான்'' என்றாள் சாவித்திரி.

''உங்களுக்கு சாவைப் பற்றிப் பயம் உண்டா சாவித்திரி?''

''சாவு வந்தா தேவலைன்னு இருக்கு எனக்கு...''

காளிதாஸ் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவன்போல் அமர்ந்திருந்தான்.

''உங்க மனைவி ஞாபகம் வந்திருச்சா?''

''அவளை எப்பவாவது மறந்தால்தானே ஞாபகம் வர்றதுக்கு!''

சாவித்திரிக்கு வருத்தம் வந்தது. ஒரு பிரபல எழுத்தாளனின் மனத்தில், அழியாமல் இருக்கும் இழப்பின் சோகம் அவளை உருக வைத்தது. கொஞ்சம் தயங்கிய படியே கேட்டாள்:

''எதையும் மறக்கறதுதானே நல்லது!''

''அப்படி அர்த்தமில்லை சாவித்திரி. என்னோட முழு நினைவுமே அவள்தான்னு ஆயிட்டப்புறம் அவளைப் பற்றின நினைப்பு வேற, நான் வேறே இல்லை.''

தோழிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். காளிதாஸ் தூரத்துக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தான். கடல் என்பது கண்ணில்

படுகிற நீரின் மேற்பரப்பு மட்டுமல்ல, கடலின் உள்ளே ஒவ்வொரு மட்டத்திலும் ஒவ்வொரு வண்ணம், ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு ஜீவராசிகள். சில ஜீவராசிகள் ரம்மியமானவை. பல ஜீவராசிகள் அபாய மானவை. மனித மனத்தைக் காளிதாஸ் கடலுக்கு ஒப்பா கக் கண்டான். அக் காட்சிகளைக் கண்டபடி வெகு நேரம் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தான்.

அவனின் நீண்ட மௌனம் காதம்பரிக்குக் கவலையை ஏற்படுத்தியது.

''உங்களுக்கு மனசு சரியில்லேன்னா வீட்டுக்குப் போயிடலாமா?''

''சேசே! அதெல்லாம் ஒண்ணுமில்லை... நீங்க பேசுங்க...''

''சாவித்திரிதான் இன்னிக்கு உங்ககிட்டே பேசறதுக் காகவே வந்திருக்கா.''

''எனக்குப் பேசவே தோணலை காதம்பரி. உங்கப்பா விஷயம் கேள்விப் பட்டதும் எங்கப்பா விஷயம் மறந்தே போச்சு...''

காளிதாஸ் காதம்பரியைக் கேட்டான்:

''நான் உங்களை ஒரு கேள்வி கேக்கறேன் இஷ்ட மிருந்தா பதில் சொல்லுங்க. இல்லேன்ன வேண்டாம்!''

''கேளுங்க!''

''நீங்க முன்னே ஒரு தடவை — கல்யாணமே செய் துக்கப் போறதில்லேனு சொன்னீங்க. ஆனா அதற்கான காரணத்தை நீங்க சொல்லலை. அந்தக் காரணத்தை இப்ப நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஸாரி காளிதாஸ்! அந்த விஷயத்துல எனக்கு நிறைய காம்ப்ளெக்ஸ் இருக்கு. இப்போ அதைப் பற்றி எதையும் என்னால பேச முடியாது. ஆனா ஒண்ணை

மட்டும் இப்போ சொல்லிடறேன். எனக்கு எங்க அப்பா மட்டும்தான் வேணும் போல இருக்கு. வேற யாருமே எனக்கு வேண்டியதில்லேனு தோணுது.''

''அதாவது, வேறெ ஆள் துணையே வேண்டாம்னு சொல்றீங்களா...?''

''ஆமாம்... அப்பாகிட்டே தவிர, வேற எந்த ஆம்பளைகிட்டேயும் என்னால எந்த உறவும் வெச்சுக்க முடியலை.''

''முடியலையா.... இல்லே ஈடுபாடு ஏற்படுத்திருக்க முடியாதுன்னு நீங்களாலே நினைச்சுக்கிறீங்களா?''

''நிஜமாவே முடியலை!''

''அப்ப என்கூட இருக்கிற இந்த நட்பு?''

''இந்த உறவு காளிதாஸ் என்கிற எழுத்தாளர்கூடத் தான். அந்த எழுத்தாளரை நான் அட்மைர் பண்றேன்...''

''அந்த எழுத்தாளர் ஆம்பிளை தானே?''

''உங்களுக்குத் தோணலாம் அப்படி. நான் உங்களை ஒரு எழுத்தாளரா மட்டும்தான் பார்க்கறேன்...''

''விசித்திரமான காம்ப்ளெக்ஸ் உங்களுக்கு...!''

''ஸாரி! யாருக்குத்தான் இல்லை காம்ப்ளெக்ஸ்?''

சிறிது நேரம்வரை காளிதாஸ் மௌனமாக இருந்த பின் கேட்டான்:

''அப்போ நீங்க கல்யாணம் பண்ணிக்கிறதாலே இல்லையா...?''

''இல்லை... ஏன் கல்யாணம் பண்ணிக்காம இருக்க முடியாதா?''

''ஸாரி! அது எனக்குத் தெரியாது.''

எல்லாருமே சிறிது நேரத்திற்கு மௌனமாக இருந்தார்கள்.

''சாவித்திரிதான் நிறைய இன்னிக்கு உங்ககிட்டே பேசணும்னு வந்தா...''

''இன்னும் டைம் நிறைய இருக்கே...''

''என்ன சாவித்திரி, பேசேன்!''

''திடீர்னு எங்க அப்பாவைப் பத்திப் பேசறதுக்கு போரடிக்குது. ஸாரி! இன்னொரு நாள் பேசறேன்.''

''மறுபடியும் நீ எப்ப வந்து எப்ப பேசறது?''—காதம்பரி கேட்டாள்.

''இவ்வளவு அழகான இடத்தில் உட்கார்ந்துண்டு அந்த மோசமான மனுஷனைப் பத்திப் பேசணுமா?''

அப்போது மணல்வெளியில் தூரத்தில் லுங்கியும் பனியனும் அணிந்த ஒருவன். வேகமாகவும் சற்றுத் தள்ளாடியவாறும் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். ஏதோ அசம்பாவிதம் நடக்கலாம் என்ற உள்ளுணர்வு அந்த விநாடியே அவர்களுள் ஏற்பட்டு விட்டது. இரண்டு பெண்களுடன் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் மனித நடமாட்டமே இல்லாத மணல் வெளியில் வந்து அமர்ந்து விட்டதன் அறியாமையை எண்ணி அந்த நிமிஷமே மிகுந்த வருத்தத்துக்கு உள்ளாகி விட்ட காளிதாஸ், நடக்கப் போகிற ஏதோ ஒன்றை எதிர்பார்க்கும் அச்சத்துடன் அமர்ந்திருந்தான்.

லுங்கியும், அரசியல் கட்சித் தலைவனின் படத்தை நெஞ்சில் கொண்டிருந்த பனியனும் அணிந்த அந்த முரட்டு ஆள், பாதங்களால் மணலை உதைத்து உதைத்து வேகமாக நடந்து நெருங்கி வரவர, காதம்பரியின் உடல் வெடவெடவென்று நடுங்கியது.

3173307

அந்த ஆள் அருகில் வந்துவிட்டான். அவனையும் முறைத்துக் கொண்டு சாராய [illegible] இடுப்பில் கைகளை ஊன்றியபடி [illegible] அலட்சியமாகப்பார்த்து, காளிதாஸை நோக்கிக் கேட்டான்:

''இன்னாப்பா, பொட்டப் பசங்களைத் தள்ளிக்கினு வந்திருக்கியா?''

காளிதாஸ் மௌனமாக அந்த ஆளையே பார்த்தான்.

''எங்கே புடிச்சே? அடையாறுலேயா? இங்கே ஏன்டா இட்டுக்கினு வந்தே? எங்கியாவது லாட்ஜ் கிட்ஜ் பார்த்து தள்ளிக்குனு போயிருக்கக்கூடாது? இதுவும் சரிதான்! துட்டு மிச்சம்! சரி, பர்ஸ்ல காசு எவ்னோ வெச்சிருக்கே?''

காளிதாஸ் பதில் சொல்லவில்லை. அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் காதம்பரியின் மனம் கூனிக் குறுகியது.

''பர்ஸை எடுடா பாப்போம்.''

காளிதாஸ் பர்ஸை எடுத்து நீட்டினான். அதை அந்த ஆள் வெடுக்கென்று பறித்தான். அவசரமாக பர்ஸின் உள் பகுதிகளை நெகிழ்த்துத் துழாவினான், இருபது ரூபாயும் சில்லறைகளும் இருந்தன.

''பிஸ்தா! இருபது ருபாயை வெச்சிக்கினு ரெண்டு குட்டிங்களைத் தள்ளிட்டு வந்துட்டே. பெரிய ஆள்தா நீ! ஜல்தியா பசங்களைக் கூட்டிக்கினு இடத்தைக் காலி பண்ணு. வேறே எவனாவது பாத்தாக்க—குட்டிங்க மேல கை வெச்சிருவான். ஓடு இந்த இடத்தைவிட்டு...''

—என்றபடி காலி பர்ஸை மணலில் வீசியெறிந்து விட்டு பணத்துடன் அந்த ஆள் கடலை நோக்கி வேகமாக நடக்கலானான்.

அவமானம் தாங்காமல் கண்களில் இருந்து உதிர்ந்து விட்ட நீர்த்துளியுடன் காதம்பரி எழுந்து வேகமாக நடந்தாள். அவள் பின்னால் சாவித்திரியும் மனக்கலக்கத்துடன் விரைந்து நடக்க, காளிதாஸ் மணலில் கிடந்த பர்ஸை எடுத்துக்கொண்டு தலை குனிந்தபடி மிகமிக மெதுவாக நடக்கலானான். மிகச் சில நிமிடங்களில் காரை அடைந்துவிட்ட காதம்பரி சாவித்திரியும் வந்து காரில் ஏறிக் கொண்டதும் இன்னும் தூரத்தில் தலை குனிந்து மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்த காளிதாஸுக்காகக் காத்திருக்க முடியாதவெறுப்புடன் சாவித்திரியின் வார்த்தைகளை மீறி வெறி கொண்டவளாக காரை மிக வேகத்தில் கிளப்பி, கொட்டிவாக்கம் நோக்கிப் பறந்தாள். தன்னை ஏற்றிக் கொள்ளாமல் கார் விரைந்து செல்வதைக் கண்ட காளிதாஸ் திகைத்து நின்றுவிட்டான்.

## 6

அன்றிரவு நெடுநேரத்துக்குத் தன்னுடைய நாட்குறிப்பில் காளிதாஸ் எழுதிக் கொண்டிருந்தான்.

...காதம்பரியின் குணத்தில் இன்னொரு புதிய கோணத்தைக் கண்டுகொள்ள நேர்ந்தது. இன்றைய சம்பவம் விசனம் மிக்கதுதான்; இளம் பெண்ணொருத்தியின் மென்மையான உணர்வுகளைக் கடுமையாகக் காயப்படுத்துவதுதான். ஆனால், என்னை அப்படி நடு மணலில் புறக்கணித்துவிட்டு, ஒரு வார்த்தையை நட்புக்காகக் கூடச் சொல்லாமல் காரில் கூறிச் சென்று விட்டதை மனம் இன்னும் நம்ப மறுக்கிறது. அப்பெண்ணின் எதிர்பாராத இந்தச் செயலின் மன மையம் எதுவென்றும் அறிய



முடியவில்லை. இனி அவள் என்னைச் சந்திக்கவே மாட்டாளா? முட்டுத்தருக்கு ஒப்பான குடிகாரனின் உடையில் வரையப்பட்டிருந்த அரசியல்வாதியின் உருவம் இன்றைய மனிதர்களின் ஒரு நிலையில் கிரஹணமாகவே படிந்திருக்கிறது போலும். அரசியல் சாயம் இங்கு அழகிய மணல் வெளியைக்கூட ஆபாசமாக்குகிறது. அந்த ஆபாசம் ஒரு மேன்மைமிக்க நட்பையும்கூடப் பிளந்து விடுமா? எனக்கும் காதம்பரிக்கும் இடையே நிகழ்ந்திருப்பது பிளவு தான் என்றால்—இது யாரோ தனி மனிதர்களுக்கு நிகழ்ந்திருக்கும் ஆபத்து இல்லை. இது ஒரு சமூக ஆபத்து. மானிட நாகரிகத்துக்கான ஆபத்து.

இதற்கு மேல் என்ன எழுதுவது என்று தோன்றாமல், மேஜையிலிருந்த மனைவி சரஸ்வதியின் போட்டோவைச் சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்து—அதையொட்டி சங்கிலித் தொடராய் பின்னி வந்த நினைவுகளில் சிறிது ஆழ்ந்திருந்தான்.

கொட்டிவாக்கத்தில் காதம்பரியும் சினம் தணியாமல் பொங்கிப் பொங்கிக் குமுறிக் கொண்டிருந்தாள்.

''போகும்போது எவ்வளவு குஷியாப் போனேன் தெரியுமா?''—திரும்பத் திரும்பச் சாவித்திரியிடம் அரற்றினாள்.

''ப்ளீஸ், அதை மறந்திடு காதம்பரி.''

''ஸாரி!···என்னால இதை மறக்கலே முடியாது. ஐ'ம் ஹர்ட்.''

''எவனோ ஒருத்தன் என்னமோ சொல்லிட்டுப் போயிட்டான். என்ன பண்ண முடியும் அவனை?''

''எவ்வளவு கேவலமா பேசிட்டான் அவன்...''

''அதுக்குக் காளிதாஸ் என்ன பண்ணுவார்? அவரை என்னத்துக்கு அப்படி விட்டுட்டு ஓடி வரணும்?''

''பின்னே! ஒரு பொறுக்கி ராஸ்கல் வந்து அத்தனை கேவலமா பேசினா நம்ம காளிதாஸ் அவனை ஏன் சும்மா விடணும்? செருப்பைக் கழட்டி அவனை அடிச்சிருக்க வேண்டாமா அவர்? எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசாம உட்கார்ந்திருந்தாரே...''

''இங்கேதான் நீ தப்புப் பண்றே...காளிதாஸ் மட்டும் எதிர்த்து ஏதாவது பேசியிருந்தா, அந்த ஆள் பயங்கர வன்முறையிலே இறங்கியிருப்பான். கோவம் வந்து கத்தியை எடுத்துக் குத்தியிருந்தா என்ன ஆகியிருக்கும்?''

காதம்பரி பதில் சொல்லாமல் இருந்தாள். அவள் மேல் ஏதோ அருவருப்பான எச்சம் விழுந்து விட்டாற் போலிருந்தது. நினைக்க நினைக்க மனம் கூசிச் சிலிர்த்தது. இம்மாதிரி சிலிர்ப்புகள் ஏற்படுகிற தருணங்களில் மிகத் தொலைவில் புள்ளியாய் மறைகிறாற்போல மின்னும் ஒரு நினைவுப் படிமம் பளீரென நெருப்புக் கோளமாய் விரிந்து—அவளின் விழிகளின் கூடப் பிரதி பலிக்கிறது.

சில விநாடிகள் கண்களை மூடிக்கொண்ட காதம்பரி சற்றுத் தள்ளிப்படுத்திருந்த சாவித்திரியின் கையுடன் தன்னுடைய கையைக் கோத்துக் கொண்டாள். வெறும் கையைப் பற்றிக் கொண்டதில் ஆறுதல் போதாமல் காதம்பரி, சாவித்திரியை மிகவும் நெருங்கிப் படுத்தாள். இரக்கத்துடன் தோழியின் பக்கம் புரண்டு படுத்து அவளின் தலையை வருடிக் கொடுத்தாள் சாவித்திரி. வெகு நேரத்துக்குச் சிநேகிதிகள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமல் படுத்திருந்தார்கள்.

''என்ன திடீர்னு கம்னு ஆயிட்டே?''—சாவித்திரி கேட்டாள்.

''ஒன்னுமில்லே...சும்மா எதையோ நினைச்சுப் பார்த்திட்டு இருந்தேன்.''

''இன்னமும் காளிதாஸ் மேல கோவமா இருக்கியா?''



''கொஞ்சம் குறைஞ்சிட்ட மாதிரி இருக்கு!''

''நாளைக்கு அவருக்கு ஒரு லெட்டர் போடு. அப்படி விட்டுட்டு வந்ததுக்கு மன்னிப்பு கேட்டு எழுது!''

''பார்க்கலாம்!''

''பார்க்கலாம்னு சொல்லாதே சரின்னு சொல்லு.''

''ரெண்டு மூணு நாள் போகட்டுமே...''

''ரொம்ப வருத்தமா இருந்தாலும் இருப்பார்.''

''அதென்னமோ... கொஞ்சமாவது அவர் ரீயாக்ட் பண்ணி இருக்கணும். அப்புறம், நமக்கும் அவருக்கும் என்ன வித்தியாசம் இருக்கு?''

''ஒரு ரௌடிக்குப் பயப்படறதில் என்ன வித்தியாசம் மனுஷாளுக்குள்?''

''வித்தியாசம் இல்லையா?''

''இல்லவே இல்லை.''

''எனக்கு இருக்கு.''

''உனக்கு இருக்கத்தான் செய்யும். நீதான் தனி ரகமாச்சே...''

''நாளைக்கு நான் காலேஜுக்குப் போகப் போறதில்ல.''

''ஏன்?''

''சும்மாதான்...''

''வீட்டில் இருந்து என்ன பண்ணப் போறே?''

''என் ரூமையெல்லாம் க்ளீன் பண்ணியாகணும். தோட்டத்திலும் கொஞ்சம் வேலை இருக்கு.''

''வேலைக்காரங்களைச் சொன்னால் செய்யறாங்க.''

"இது என் வீடு... அதனாலே நானே செய்தால்தான் எனக்குத் திருப்தி!"

"தூங்கலாமா? எனக்குத் தூக்கம் வருது..."

"ஓயெஸ். குட் நைட்!"

"குட் நைட்!"

சில நிமிடங்களில் சாவித்திரி தூங்கிப் போனாள். பல நிமிஷங்களுக்குக் காதம்பரி தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள். சாவித்திரியை உத்தண்டி மணல்வெளியில் விட்டுவிட்டு வந்தது பிழையாகத் தோன்றியது. உண்மையாகவே அவர் கோபித்துக் கொண்டால் என்ன செய்வது என்ற பயம் வந்தது. பின், கோபித்துக் கொண்டால் கோபித்துக் கொள்ளட்டும் என்ற செருக்கும் வந்தது. அவர் கோபம் அவருக்கு; தன் கோபம் தனக்கு என்ற இறுமாப்பில் சாவித்திரியின் கையை எடுத்துத் தன் நெஞ்சின்மேல் வைத்து கொண்டபடி அவள் தூங்குவதற்கு முயற்சி செய்தாள். தூக்கம் வந்து கொண்டிருந்த நிலையிலும், அப்பாவுடன் பெண் பார்க்கப் போன சம்பவத்தை எண்ணி, காதம்பரி மெலிதாகப் புன்னகை செய்து கொண்டாள். அந்தப் புன்முறுவல்—தூங்கும் குழந்தை ஒன்றின் கனவுப் புன்னகைத் தெரிந்தது. அத்தனை சந்தோஷம் அந்த இருபது வயதுக் குழந்தைக்கு. ஆனால், அந்த சந்தோஷம் காலை பத்து மணியளவில் கனவு போலவே கலைந்து போனது.

காலையில் சாவித்திரியை பஸ்ஸில் ஏற்றி அனுப்பி விட்டுக் காதம்பரி வீட்டுக்கு வந்து சில நிமிடங்களில் ராஜரத்தினத்தின் நண்பர் குமாரசாமி அவருடைய காரில் மிகவும் வேகமாக வந்தார். அவரைப் பார்த்ததுமே காதம்பரிக்கு எரிச்சல் வந்தது. உபசாரத்துக்காகக்கூட அவரை வரவேற்காமல் வேகமாகத் தன் அறைக்குள் போய்விட்டாள்.



"வாப்பா குமாரசாமி... என்னது, காலங்கார்த்தாலேயே தேடி வந்திட்டே..."

—ராஜரத்னம் சுரத்தில்லாமல் வரவேற்றார்.

"எல்லாம் உன் விஷயமாகத்தான்!"

காதம்பரி கதவையொட்டி நின்றபடி கவனித்துக் கொண்டிருந்தாள்.

"அந்த நர்ஸரி ஸ்கூல் டீச்சர்..."

"அதான் முடிஞ்சு போச்சே... அப்புறமென்ன? அந்த வசந்தா பொண்ணு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு சம்மதிச்சிடுத்து. நேத்திக்கு ராத்திரியே வந்து சொல்லணும்னு பார்த்தேன். எதிர்பாராம என் மச்சினன் ஒரு முக்கியமான விஷயமா என்னைப் பார்க்கிறதுக்கு வந்தான். பேசிண்டே இருந்ததில் டயமாயிடுத்து அதான் குளிச்சு, சாப்பிட்டதும் ஓடி வர்றேன்."

காதம்பரிக்கு வீட்டை விட்டு ஓடிப் போகலாம் போலிருந்தது! குமாரசாமியுடன் இந்த ஜென்மத்தில் பேசக் கூடாதென்று நினைத்தாள்.

"ஆளை விடு... எனக்குக் கல்யாணமே வேணாம்."—ராஜரத்னம் சலிப்புடன் சொன்னார்.

"அதுக்குள்ளே சலிப்பா? நீதானே அடிச்சிண்டே கல்யாணம் கல்யாணம்னு..."

"அதுக்காக எந்தப் பொண்ணையும் வற்புறுத்தி, கட்டாயப்படுத்திக் கல்யாணம் செஞ்சுக்க நான் தயாரில்லை!"

"இப்போ யார் அந்தப் பொண்ணைப் போய் வற்புறுத்தினா...?"

"அன்னிக்கி எதுக்காக ஒரே ஓட்டமா உள்ளே ஓடிப் போச்சு? பிடிக்காததினால்தானே..."

''யார் சொன்னது அப்படி?''

''ஒருத்தி சும்மா எழுந்து ஓடுவானாக்கும்! இல்லே... அவனென்ன ரொம்ப சின்னப் பெண்ணா? எனக்குத் தெரியும்...அவனுக்கு இந்தக் கல்யாணத்திலே இஷ்டம் கிடையாது.''

''இங்கேதான் நீ தப்புப் பண்றே? நீயும் நானும் தான் வரப் போறோம்னு அந்தப் பெண் நினைச்சிட்டு இருந்திருக்கு. உன் மகளும் வரப் போறான்ங்கிற விஷயத்தைச் சொல்ல நான் மறந்துட்டதால் வந்த வினை இது. காதம்பரியை அவன் எதிர்பார்க்கவே இல்லை, திடீர்னு அவளும் வந்து நிக்கறதைப் பார்த்ததும் அந்தப் பெண்ணுக்கு என்னமோ ஒரு சங்கடமான காம்ப்ளெக்ஸ். எழுந்து ஓடிப் போயிடுத்து...''

''என்ன பெரிய காம்ப்ளெக்ஸ் வேண்டிக் கிடக்கு?''

''அதைச் சொல்றதுக்கு நாம யார்? யாருக்குத்தான் இல்லை, காம்ப்ளெக்ஸ்? எனக்குத் தெரியும்—எனக்கு என்னென்ன காம்ப்ளெக்ஸ் இருக்குனு...''

''அப்ப நாளைக்குக் கல்யாணமாகி இங்கே வந்தாலும் அந்தப் பெண்ணுக்கு அந்த காம்ப்ளெக்ஸ் இருக்குமே. காதம்பரியைப் பார்த்து அப்பவும் உள்ளே எழுந்து ஓடுவானா...?''

அறைக்குள் நின்று பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த காதம்பரிக்கு ஆத்திரத்தில் மூச்சின் வேகம் அதிகரித்திருந்தது. அந்த வசந்தா மட்டும் வரட்டும் ஓட ஓட விரட்டுகிறேனென்று சபதமிட்டுக் கொண்டாள்.

குமாரசாமி கண்டிப்பான குரலில் பேசத் துவங்கினார்: ''ராஜரத்னம், அந்தப் பெண்ணுக்கு இந்தக் கல்யாணத்திலே பரிபூரண சம்மதம். சின்னப் பெண் இல்லை அவளும். என்னென்ன கஷ்டம் இருக்கோ அத்தனையும் வாழ்க்கையில் அனுபவிச்சவள். வாழ்க்



கைன்னா என்னன்னு புரிஞ்ச பெண். ஏதோ ஒரு காம்ப்ளெக்ஸ் அந்த மாதிரி நடந்துடுத்து. நிச்சயமா உன் குடும்பத்துக்கு ஏற்ற பெண். தெரியாம நான் பேச மாட்டேன். அப்புறம் உன் இஷ்டம்.''

ராஜரத்னம் ஆழ்ந்த நிசப்தத்தில் இருந்தார். அறைக்குள் காதம்பரி அவரையும்விட கனமான நிசப்தத்தில் நின்றாள்.

''எல்லா விஷயத்தையுமே நல்லா பேசியாச்சு இல்லையா...?''—பணிந்துவிட்ட குரலில் ராஜரத்னம் கேட்டார்.

''அதைப்பத்தி நீ யோசிக்கவே வேண்டாம். எல்லாத்தையும் பேசியாச்சு...''

''பணம் இருபதாயிரம் கொடுக்கணும்... இல்லியா?''

''அந்தப் பணம் தானே அவ அண்ணனுக்கு நஷ்டஈடு மாதிரி. ஒரு வாரத்துல குடுத்திடலாமா பணத்தை?''

''நாளைக்கே வேணுமானாலும் தர்றேன். கொண்டு போய்க் குடுத்திடு.''

இருபதாயிரம் ரூபாய் கொடுத்து வசந்தாவை வாங்குகிறார்கள். இந்தக் கோணத்தில் பணத்தின் அர்த்தம் காதம்பரிக்கு அருவருப்பாகத் தெரிந்தது. வாழ்க்கையில் அவளுக்கு மிக மிகக் கசப்பானது—ஏழ்மை! வறுமையைக் கடவுளின் தண்டனையாகவே அவள் கருதினாள்.

கதவின் பின்னால் நின்று மேலும் அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த அவளுக்குப் பொறுமை இல்லை. தேவையே இல்லாமல் பாத்ரூமுக்குள் போய் வந்தாள். இந்த பாத்ரூம்கூடக் காதம்பரிக்கு மட்டும் தான். இதையும் அந்த வசந்தா வந்து உபயோகிப்பாளோ? நாளைக்கே பாத்ரூமுக்கு ஒரு பூட்டுப் போட்டு விட வேண்டும் என்று நினைத்தாள்.

சாப்பிடும் அறைக்குப் போய் ஃப்ரிஜ்ஜைத் திறந்து குளிர்ந்த நீரை இரண்டு க்ளாஸ் அருந்திவிட்டு, தன்னுடைய அறைக்குள் போய்க் கதவைப் படாரென்று சாத்திக் கொண்டாள்.

ஜன்னலில் நின்று வெளியில் பார்த்தாள். நெருங்கி வந்து கொண்டிருக்கும் கோடைக்கலாம் அவளுடைய வாழ்விலும் வருவதாகத் தோன்றியது. தோட்டத்தில் இனி செடிகளையெல்லாம் தான் கவனிக்கக்கூடாது என்ற வைராக்கியம் ஏற்பட்டது. தோட்டக்காரனிடம் கூட இனி தோட்டத்தை நன்றாகக் கவனிக்காதே என்று சொல்லிவிட வேண்டும். எல்லாம் இனி வரப்போகிற சீமாட்டி வந்து பார்த்துக் கொள்ளட்டும்! வீட்டு வேலை எதற்கும் ஆள் வைக்கக் கூடாது. வசந்தா டீச்சர் வந்து செய்வாள். அவளுக்கு நிறைய வேலை செய்து பழக்கம் இருக்கும்! காதம்பரியில் வன்மமே உருவாகிக் கொண்டிருந்தது வசந்தாவைச் சின்னம்மா என்று அழைக்க வேண்டியிருக்குமோ என்ற நினைப்பு வந்தபோது அவளின் மன உலகம் சற்றே கண்கலங்கியது! திடீரெனத் தன் உலகம் ஏன் இப்படிச் சுருங்கி உருமாறுகிறது என எண்ணியதும் காதம்பரியின் மனம் விம்மியது. அப்பாவிடம் போய், அவருடைய திருமணத்தில் தனக்கு இஷ்டமில்லை என்று சொல்லி விடலாமா என்று நினைத்தாள். ஆனால், அதற்கும் துணிவு வரவில்லை.

இதையெல்லாம் காளிதாஸுக்கு எழுதலாமா என்று நினைத்தபோது, வெளியில் ஒரு பிரைவேட் டாக்ஸியில் சிவராஜ் வந்து இறங்கினான். அவனின் முகம் குதூகலத்தில் மலர்ந்திருந்தது. உற்சாகமாக வீட்டில் நுழைந்தான். ஏதோ விஷயம் இருப்பதை ஊகித்துக் கொண்ட காதம்பரி மீண்டும் வேகமாகக் கதவின் பின்னால் போய் நின்று கவனமாகச் செவிமடுத்தாள்.

''குட்மார்னிங் மாமா!'' —சிவராஜ் குரல் வழக்கத்துக்கு மாறாக உரக்க ஒலித்தது.



''என்ன, ரொம்ப குஷியோட வர்றே?''—ராஜரத்னம் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஒரு படத்துக்கு அட்வான்ஸ் வாங்கிட்டேன் மாமா.''

ராஜரத்னம் மெலிதாக உணர்ச்சி வசப்பட்டார். சமையலறையில் இருந்த பத்மாவதி, மாங்காடு நோக்கிப் பரவசத்துடன் கைகூப்பினாள்.

''ரொம்ப சந்தோஷம். அன்னிக்கு சொன்னியே... அந்த புரொட்யூஸர் தானா?''

''அவர்தான் மாமா! வர புதன்கிழமை ஸாங் கம்போஸிங் வெச்சிருக்கோம்.''

''டைரக்ஷன் நீதானா?''

''கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன்... எல்லாமே நான் தான் மாமா!''

''எவ்வளவு பணம் தருவான்?''

''ஒப்பந்தப்படி முப்பதாயிரம் மாமா. ஆனா, புரொட்யூஸர் ஜாஸ்தியாவே தருவார்...''

''எப்படியோ நல்லபடியா இருந்தா சரி.''

''நல்லதா வீடு பார்த்து அம்மாவையும் சீக்கிரமா அழைச்சிட்டுப் போயிடலாம்னு இருக்கேன் மாமா.''

''அதுக்கு இப்ப என்னப்பா அவசரம்?''

''இல்லை மாமா. இனிமே எனக்கு எந்தப் பிரச்னையும் கிடையாது. அதனால், எங்கம்மாவை உடனே நான் வீடு பார்த்து அழைச்சிட்டுப் போயிடறதுதான் நியாயம்''

''உன் இஷ்டம்...''

''அம்மாவைப் பார்த்துச் சொல்லிட்டு வந்துடறேன் மாமா...''

சிவராஜ் வேகமாகச் சமையலறையை நோக்கிச் சென்றான். அத்தை பத்மாவதியை சிவராஜ் சீக்கிரமே வீடு பார்த்து அழைத்துச் சென்றுவிடப் போகிறான் என்ற செய்தி காதம்பரியைப் பலமாகத் தாக்கியது. அந்தக் கணமே அவளின் அக உலகத்தில் தன்னந்தனிமையில் நிற்பது போலிருந்தது. இனி ராஜரத்னமும் வெளியில் சென்றுவிடப் போகிற எதிர்காலத் தருணங்களில் இந்த வீட்டில் தனித்திருக்கப் போவது காதம்பரியும் வசந்தாவும் தான். இவர்களில் யார் யாரை ஆளப் போவது? யாரிடம் யார் வீழ்ச்சி அடையப் போகிறது? இதற்கான விடை அப்பெண்கள் இருவருக்குமே வெவ்வேறாக இருந்தாலும் — உண்மையான விடை அவர்களின் விடைகளாக இருக்கப் போவதில்லை. அது வேறு விடை...

## 7

விடைபெற்றுக் கொள்வதற்காக நர்ஸரி பள்ளி உரிமையாளரின் எதிரில் வந்து நின்றாள் வசந்தா.

''நல்லதும்மா... நீயும் இத்தனை வருஷம் நல்லபடியா நம்ம ஸ்கூல்ல வேலை பார்த்தே. இப்போ ஒரு நல்ல வாழ்க்கை உன்னைத் தேடி வந்திருக்கு. கேக்கறதுக்கே ரொம்ப சந்தோஷமா இருக்கு... ஆமா, அவரோட பேர் என்னம்மா சொன்னே?''

''மிஸ்டர் ராஜரத்னம்.''

''அவருக்கு வீடு அடையாறுல தானே?''

''அடையாறுலே முன்னே இருந்தாங்க... இப்ப கொட்டிவாக்கத்துல இருக்காங்க.''

''அவ்வளவு தொலைவிலே போய் வீட்டைக் கட்டியிருக்காரே... கார் வெச்சிருக்காரா?''



''வெச்சிருக்காங்க.''

''ஆமா ஆமா... நானும் அவரைப் பார்த்திருக்கேன். ஒரு தடவை ஆர். டி. ஓ. ஆபீஸுக்கு வந்திருந்தார். கொஞ்சம் வயசானவர் தான்... அதனால் ஒண்ணும் இல்லேம்மா. ஆபீஸ் விட்டா மனுஷன் 'டாண்'னு வீட்ல வந்து நிற்பார். நீ பாட்டுக்கு கார், பங்களான்னு நிம்மதியா இருக்கலாம். வேற என்ன வேணும் வாழ்க்கையில்? ஏதோ கடவுள் கிருபை... திடீர்னு பணக்காரி ஆயிட்டே நீ. எங்களையெல்லாம் மறக்காம இருந்தா சரி...''

வசந்தா உதடுகளை இறுகக் கடித்தபடி கைகூப்பி விட்டு அந்த அறையிலிருந்து வெளியில் வந்தாள். இதற்கு முன் இதே மனிதர் அவளை அலட்சியமாகவும் இரக்கமற்றும் நடத்தியிருக்கும் பல சம்பவங்கள் அவளின் ஞாபகத்தில் வந்து சென்றன. இன்று மனிதர் குழைகிறார். மறக்காமல் இருக்க வேண்டுமென்று பற்களைக் காட்டுகிறார். சுற்றுப்புற மனிதர்களின் பார்வையும் தொனியும் ஒரு சூரிய அஸ்தமன உதய காலத்துக்குள் முழுமையாக மாறிவிட்டன. வாழ்வில் இது வேறொரு பக்கம். இந்தப் பக்கம் பணத்தால் வரையப்பட்டது. பணம் அத்தனை மனிதர்களின் அபிப்பிராயங்களையும் உருமாற்றுகிறது. கவனத்தை ஈர்க்கிறது.

வசந்தாவுக்குப் பணம் இல்லாத தனது ஏழ்மை குறித்து இளமையில் கனத்த விசனம் இருந்தது. ஒரு ரிஸ்ட் வாட்ச்கூடத் தனக்கு வாங்க முடியாத வறுமை — ஒரு சாபம் என்ற ஏக்கம் அவளின் பதினெட்டாம் வயதிலேயே பச்சை குத்தப்பட்டது போல் அவளின் மனத்தில் படிந்துவிட்டிருந்தது. ஆனால் வயது செல்லச் செல்ல, தன் குடும்பத்தின் வறுமைச் சூழலின் கனம் அதிகமாக அதிகமாக, அந்த ஏக்கமும் விசனமும் மரத்துப் போய் விட்டன. ஒரு வருடம் ஆசிரியையாகப் பணியாற்றிய பின் ரிஸ்ட் வாட்ச் வாங்கிக் கொள்ள முடிந்தபோது வசந்தா

விடம் எந்த மன மகிழ்வும் ஏற்படவில்லை. மனம் என்ற ஒன்று இருந்தால் தானே மகிழ்வும் குதூகலமும் ஏற்பட!

குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரை இழந்து அண்ணனின் நிழலில், அவனுடைய பணத்துச் சார்பில் வளர்ந்து இன்று பிரதியுபகாரமாக அவளின் சொற்பப் பண வருகையில் அவர்கள் இவளைச் சார்ந்து நிற்கிற நிலையில், பணம் என்பது ஒருவரையொருவர் சார்ந்து கொள்ளத்தக்க பண்டமாற்றுத்தான் என்ற உண்மையில் வசந்தாவின் நெஞ்சிலிருந்து பணம் பற்றற்று உதிர்ந்து போயிருந்தது.

ஆனால், இன்று வசந்தாவின் முப்பத்திரண்டாவது வயதில், கொஞ்சங்கூட எதிர்பாராதவகையில் கோடையில் மழை கொட்டினாற்போலத்தான் அவள் வாழ்விலும் திடீரெனப் பணவரவு மொத்தமாகக் குறுக்கிட்டிருக்கிறது. முதலில் அவள் பயத்தினாலேயே மறந்து விட்டாள்.

''வேண்டாம் அண்ணா! நான் இப்படியே இருந்துட்டுப் போயிடறேன்... எனக்குப் பணத்தையும் பணக்காரர்களையும் பார்த்தாலே பயமாயிருக்கு. அதுவும் இல்லாம இனிமே என்னால் உங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிஞ்சு இருக்க முடியுமா என்பதும் சந்தேகம்''

''அதெப்படிம்மா தங்கச்சி, என்னோட கடமையை இத்தனை வருஷம் கழிச்சாலும் நான் செய்ய வேண்டாமா? உனக்கு ஒரு கல்யாணம் செஞ்சு வைக்க முடியாம போனதுக்கு நான் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பேன்னு எனக்குத்தான் தெரியும். ஏதோ குமாரசாமி ஐயா உருவத்துல கடவுள் வந்து நமக்கு ஒரு வழியைக் காட்டினார். ஆனா, நாங்க யாரும் உன்னைக் கட்டாயப் படுத்தலை. யதார்த்தமாவே யோசித்துப் பார்... நீயும் நல்லபடியா இருந்துக்கலாம். நாங்களும் ஒரு நம்பிக்கையோட புள்ளைங்களை வளர்க்கலாம்...''



அன்றைக்கு இரவு வசந்தா தூங்கவில்லை. மணவாழ்க்கை என்ற கவர்ச்சியெல்லாம் அவளுள் எங்கோ புதைந்து, தேய்ந்துபோன பின்பு குறுக்கிடும் இந்தச் சந்தர்ப்பம் அவளுக்கு ஓர் இம்சையாகவே தோன்றியது. பெரும் செல்வத்தை எதிர்நோக்க அவளின் மனம் கொஞ்சமும் தயாராகவில்லை. அவள் பின்வாங்கத்தான் முற்பட்டாள். குறுக்கிடும் வரன் வயோதிகராக இருக்கிறார் என்ற தயக்கம் உள்ளூர இருந்தாலும், அதையே முதல் காரணமாக முன்வைத்துவிட முடியவில்லை. எந்தப் பணம் இளமைப்பொழுதில் அவளை நெருங்கக் கூடச் செய்யாமல் தூரத்துக் கானலாக ஆடி அலைத்ததோ, அந்தப் பணம் இன்று கண்களைக் கூசச் செய்யும் ஒளியாக அவள்மேல் வந்து விழும்போது உடலாலும்கூட வசந்தாவால் கூசத்தான் முடிந்தது. கடந்த காலத்தில் மொத்தமாக அவளால் பணத்தை வாங்க முடியவில்லை. இன்று மொத்தமாக அது அவளை வாங்க முடியவில்லை; இன்று மொத்தமாக அது அவளை வாங்க முனைந்து விநோதமான தாழ்வுணர்ச்சிக்கு அவளை உள்ளாக்கி விசித்திரக் கோபத்தையும் ஏற்படுத்தியது. பணக்காரர்கள் என்றாலே வெறுப்படைந்திருந்த அவளுக்குத் தானே ஒரு பணக்காரியாவது அவமானமாகக்கூட இருந்தது. ஆனால், வசந்தா ரகசியமாக அழுதது, தான் இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்தால், குழியில் விழுந்து கிடக்கும் தன் அண்ணனுடைய குடும்பத்தை மீட்டு விடலாம் என்ற பண்டமாற்று ஒப்பந்தத்தின் அவலத்தை நினைத்துத்தான்.

அந்த அவலத்தின் திடீர் எதிர் விளைவுதான், அவளைப் பெண் பார்க்க ராஜரத்னத்துடன் காதம்பரியும் வந்ததைப் பார்த்ததும் வசந்தா எழுந்து உள்ளே ஓடிப் போனது. தன்னை விலை கொடுத்து வாங்க வந்திருக்கும் மனிதரின் இருபது வயது மகளை அத்தருணத்தில் வசந்தாவால் நேருக்கு நேர் பார்த்துக் கொள்ளக்கூட முடியவில்லை,

''வேண்டவே வேண்டாம் இந்தக் கல்யாணம்...'' —கண்ணீர் விட்டு அழுதாள்.

''நீ தானேம்மா சரின்னு சொன்னே... இப்ப என்ன திடீர்னு?''

''என்னமோ அந்தப் பொண்ணைப் பார்த்தா எனக்கே வெட்கமா இருக்கு!''

''காலேஜுல அந்தப் பெண் கடைசி வருஷம் படிக்குது. கொஞ்ச நாள்ல அதுவும் கல்யாணமாகிப் போயிடும். அப்புறம் நீ மட்டும் தானே அந்த வீட்டில் இருக்கப் போறே!''

குமாரசாமியும் எத்தனையோ வழிகளில் வசந்தாவின் தாழ்வுணர்ச்சியை மாற்ற முயன்றார். எத்தனை வழிகளில் சொன்னாலும், சொல்லத் தெரியாத இம்சை மட்டும் வசந்தாவை அரித்தெடுத்தது. ஆனால், அண்ணன் குடும்பத்துக்கு அவளின் நான்கு வருடச் சம்பளத்துக்கு ஒப்பான பணம் மொத்தமாகக் கிடைக்கப் போகிறது என்ற உண்மையையும் புறக்கணிக்க முடியாமல் திருமணத்துக்குச் சம்மதித்தாள்.

ராஜரத்னத்திடம் பேசிவிட்டு நேராக வசந்தாவின் வீட்டுக்கு வந்தார் குமாரசாமி. அவருடைய வருகைக்காக வசந்தாவின் அண்ணன் சகாதேவன் கவலையுடன் காத்திருந்தான்.

''என் ஃப்ரெண்ட் சம்மதிச்சுட்டான் சகாதேவா!''

''ஏன் எங்க வசந்தா அப்படி எழுந்து ஓடிப் போச்சுன்னு கேட்டாரா?''

''கேக்காம இருப்பானா? தெளிவா சொல்லிட்டேன். இனி பிரச்னை கிடையாது...''

''கல்யாணத்தை எப்ப வெச்சிக்கலாம்னு சொன்னாரா?''



''இந்தச் சித்திரை முடியறதுக்குள்ளயே வெச்சிடலாம். நான் அதை ரெண்டு நாள்ல முடிவு பண்ணிச் சொல்லிடறேன். இருபதாயிரத்தை அடுத்த வாரம் கொண்டு வந்து தந்துடறேன். நல்லபடியா அதை வெச்சுப் பிழைச்சுக்கோ... ராஜரத்னத்தோட இறந்து போன மனைவியின் ஐம்பது சவரன் நகை இருக்கு. எல்லாம் உன் தங்கச்சிக்குத்தான் சரிதானா சகாதேவா?''

''நீங்க எப்படிச் சொன்னாலும் சரிதான் ஐயா...'' —குரல் தழும்ப சகாதேவன் அவரை வணங்கினான்.

வெளியில் சென்றிருந்த வசந்தா வீட்டை நெருங்கிய போதே வீட்டில் ஏதோ புதுமை நிகழ்ந்திருப்பதை உணர்த்துவது போன்று வசந்தாவின் அண்ணன் குழந்தைகள் அவளுடைய வருகையை எதிர்பார்த்து வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். அவளைப் பார்த்ததும் அவ்வளவு குழந்தைகளும், அம்மா அம்மா, அத்தை வர்றாங்க'' என்று கத்தியபடியே உள்ளே ஓடினார்கள்; வசந்தாவும் சிறிது பரபரப்புடன் வீட்டுக்குள் நுழைந்தாள். கூடத்து ஸ்டூலில் உறைகள் அகற்றப்பட்டு, புத்தம் புதிய புடவைகள் பல வண்ணங்களில் காத்திருந்தன.

''இதெல்லாம் யாருக்கு அண்ணி?''— படபடப்புடன் கேட்டாள்.

''யாருக்கா? நல்லா கேட்டே... எல்லாம் உனக்குத் தான். அவங்கதான் வாங்கி அனுப்பியிருக்காங்க.''

''யார் கொண்டு வந்தாங்க?''

''அன்னிக்கு வந்துச்சே... அந்தப் பொண்ணும், அந்தப் பொண்ணோட அத்தையும் வந்திருந்தாங்க. அந்த அம்மாவுக்கு உன்னைப் பார்த்துட்டுப் போயிட ணும்னு ஆசை. ஆனா நீ எப்ப வருவேன்னு தெரியலை. அதனால் கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போயிட்டாங்க.

அந்த அம்மா மட்டும் நாளைக்குச் சாயந்தரம் வரேன்னு சொன்னாங்க. இந்தச் சேலையெல்லாம் பிடிச்சிருக்கானு பாரு...''

வசந்தா பிரமிப்புடன் ஒவ்வொரு புடவையாக எடுத்துப் பார்த்தாள். வாழ்க்கையில் இதுவரை இம் மாதிரிப் புடவைகளை அவள் தொட்டுக்கூடப் பார்த்த தில்லை.

''வந்தவங்க வேற எதுவும் கேட்டாங்களா அண்ணி?''

''அந்த அம்மாதான் உன்னைப் பத்தி அது இதுன்னு கேட்டுண்டே இருந்தாங்க... அந்தப் பொண்ணு எதுவுமே கேக்கலை. நான் கேட்டதுக்குக்கூடச் சரியா பதில் சொல்லலை. ரொம்ப கர்வம் பிடிச்சவ போல... முகத்தைப் பார்த்தாலே தெரியுது.''

''பேர் என்னவாம் அந்தப் பொண்ணுக்கு?''

''காதம்பரியாம். அப்பான்னா ரொம்ப உயிராம் அதுக்கு!''

''அம்மா இல்லாததாலே இருக்கும்.''

அவளுக்கு இனி நான்தான் அம்மாவா? நினைக்கவே வசந்தாவுக்கு தர்மசங்கடமாக இருந்தது.

''அந்தப் பெண் என்ன டிரஸ் பண்ணியிருந்தது அண்ணி?''

''என்னமோ மிடியாமே— அதுதான் போட்டிருந்தது. எனக்கென்னமோ அந்தப் பொண்ணுக்கும் உனக்கும் சரிப்பட்டு வராதுன்னு தோணுது. ரொம்ப அழுத்தமான பெண் மாதிரி தெரியுது!''

''அழுத்தமானவளா இருந்தா எனக்கென்ன?''

வசந்தா இதை மெல்லிய குரலில் சொன்னாலும் அவளுக்குள் துளிர் விட்டிருக்கும் வாழ்க்கை பற்றிய புதிய நம்பிக்கை உறுதியாக ஒலித்தது. ராஜரத்னத்தின் மீது முதல் நன்றி அவளுள் கசிந்தது. வலிந்து அவரின் முகத்தை நினைவில் கொண்டு வந்தாள். அவருடைய கையை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

''சேலையெல்லாம் ரொம்ப நல்லாயிருக்கு இல்லே அண்ணி?''

''எல்லாமே, அந்தப் பொண்ணோட அப்பா செலக்ஷன்தானாமே!''

''ஜோரா செலக்ட் பண்ணியிருக்காங்க!''

வசந்தாவின் அண்ணி சமையலறைக்குப் போய்ப் பெரிய பார்சலை எடுத்து வந்து வசந்தாவிடம் தரவும், அவளின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்து விட்டன.

''இதென்ன அண்ணி?''

''எல்லாம் ஸ்வீட்ஸாம். முதல்ல நீதான் சாப்பிட ணும்னு சொல்லிக் குடுத்தாங்க. நீ முதல்ல கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுட்டு. அப்புறம் பிள்ளைங்களுக்குக் குடு.''

பாலிலும் நெய்யிலும் தயாரிக்கப்பட்ட பல்வேறு தின்பண்டங்கள் அட்டைப் பெட்டிகளில் நிறைந்திருந் தன. கோதுமை அல்வாவைக் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். இனிப்பும் நெய்யும் கரைந்து நெஞ்சில் பாலாக இறங்கியது. ஒரு கணத்தில் குழந்தை யாகவும் பட்ட மகிஷியாகவும் ஆகிவிட்டாற் போலிருந் தது.

''வேற எதுவும் சொன்னாங்களா அண்ணி?''

''அந்த அம்மா இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் அங்கே இருப்பாங்களாம். அவங்களோட மகன் ஏதோ சினிமால்லாம் எடுக்கிறாராம். உன் கல்யாணம் முடிந்த தும் மகன் கூடப் போய் இருந்துடுவாங்களாம்.''

என்னதான் அண்ணன் குடும்பத்தோடு இரண்டறக் கலந்து போயிருந்தாலும், தனக்கென்று பிரத்யேக உறவு இல்லாதிருந்த அடிமன ஏக்கம் வசந்தாவினுள் அந்த புதுப் புடவைகளால் தொடப்பட்டு விட்டது. இனி ஏழை ஆசிரியை இல்லை; பெரிய பணக்காரரின் மனைவி என்ற இறுமாப்பு ஏற்பட்டது. வெகுநேரத்துக்குத் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்த வசந்தாவின் நினைப்பில் காதம்பரியின் உருவம் தெரிந்தது! அவளின் அறிவில் காதம்பரி ஒரு நெருடலாகத் தெரிந்தாள். எவ்வளவு சீக்கிரம் அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி அனுப்புவிட வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் அனுப்பிவிட வேண்டும் என்ற சங்கற்பத்துடன் வசந்தா தூங்கிப் போனாள்.

## 8

காளிதாஸைச் சுற்றி அவனுடைய நண்பர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

காளிதாஸ் மௌனமாக இருந்தான். உத்தண்டி சம்பவத்தைப் பற்றி நண்பர்களிடம் சொன்ன பிறகும் மனம் எரிந்து கொண்டேயிருந்தது. வாழ்க்கையில் திடீரெனத் திசையற்றுப் போய்விட்டாற் போலிருந்தது.

''அது சரி... இனிமே அந்தப் பெண்ணைச் சந்திப்பியா, மாட்டியா?''

''நானாகப் போய்ச் சந்திக்கமாட்டேன். என்னை விட்டுட்டு காரில் ஏறிப் போனது அந்தப் பெண்தானே... அதனால அவதான் என்னை வந்து சந்திக்கணும்.''

''ஒருவேளை அந்தப் பெண் உன்னை வந்து சந்திக்கலேன்னா...?''

''மறந்துட வேண்டியதுதான்.''

''மறந்துட முடியுமா?''

''முடியும். முடியும்.''

''நிஜமாகவேதானா?''

''நிஜமாகவேதான். காதம்பரி ஒரு நல்ல சிநேகிதி... அவ்வளவுதான்!''

''வேறே ஒண்ணும் கிடையாதா உனக்கு அந்தப் பெண்கிட்டே...?''

''சத்தியமா வேற ஒண்ணும் கிடையாது.''

''நிச்சயமா... ஆனா, எங்களுக்கு ஒரு சந்தேகம். நீ காதம்பரியைக் காதலிக்கிறியோன்னு!''

காளிதாஸிடம் ஒரு கோபம் எழுந்து அமுங்கியது. எந்த ஆண் பெண் உறவையும் காதலாகத் திரிக்க இச்சைப்படுகிறது மனித மனம். பெண்ணை, காதலுக்கும் காமத்துக்கும் மட்டும் உட்பட்ட பொருளாக எண்ணுகிறது அறிவு. பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தான் காளிதாஸ்.

''என்ன, ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறே?''

''சொல்ல வேண்டியதைத்தான் சொல்லிட்டேனே...''

''அப்ப நீ காதம்பரியைக் காதலிக்கலியா?''

''நிச்சயமா இல்லே...''

''அப்புறம் ஏன் இவ்வளவு பதட்டமா இருக்கே நீ?''

''அது இயற்கை...''

''அந்தப் பெண் அப்படி விட்டுட்டுப் போனதில் மனசு வேதனையடைஞ்சுட்டே இல்லை...?''

''வேதனையடையலே... அதிர்ச்சியாயிட்டேன்... அதனாலே அந்த வலி மனசில் கிடந்து வலிக்குது. வேற

ஒண்ணும் இல்லை. ஏன்னா, அந்தப் பொண்ணும் அந்தச் சம்பவத்தில் எவ்வளவு அதிர்ச்சி அடைந்திருப்பான்னு எனக்குத் தெரியும். அதனால்தான் ரொம்ப கஷ்டமா இருக்கு.''

அப்போது காளிதாஸின் அம்மா கையில ஒரு கவருடன் படியேறி, மாடிக்கு வந்தாள்.

''உனக்கொரு கடுதாசி வந்திருக்குப்பா.''

காளிதாஸ் எழுந்து போய் கவரை வாங்கினான் முகவரியிலிருந்த எழுத்துக்களைப் பார்த்ததுமே யார் எழுதியிருப்பதென்று தெரிந்து விட்டது. 'காதம்பரி!' காளிதாஸ் அவசரமாகக் கவரைக் கிழித்து லெட்டரை வாசித்தான்.

''அபிமான எழுத்தாளர் காளிதாஸ் அவர்களுக்கு,

காதம்பரி எழுதுவது... உத்தண்டியில் உங்களை அவ்விதம் விட்டுவிட்டு வந்தமைக்கு ரொம்பவும் நான் வருந்துகிறேன். அந்தச் செயலை நான் என்னையே அறியாமல்தான் செய்துள்ளேன். ரௌடி ஒருவன் வந்து அசிங்கமாகப் பேசிய விதத்தில் ரொம்பவும் நான் அப்செட்டாகி விட்டேன். ஒரு நிமிஷம் அழுகையும் அவமானமும் எனக்கு எவ்வளவு ஏற்பட்டதென்று எனக்குத் தான் தெரியும். அதனால்தான் அவ்விதம் நடந்து கொண்டேன். ஸாரி! அதற்காக என்னை மன்னிப்பீர்களா?

சில நேரங்களில் நான் இவ்விதமெல்லாம் நடந்து கொள்கிறேன். இந்தக் குணத்தை உடனடியாக என்னால் மாற்ற முடியாது. ஆனால், எப்படியும் படிப்படியாக மாற்றிக் கொள்ள முடியும் என எண்ணுகிறேன். நிற்க, இங்கு எங்கள் அப்பாவின் கல்யாணம் நிச்சயமாகி விட்டது. பெண், அந்த நர்ஸரி ஸ்கூல் டீச்சரேதான். இன்னும் பதினைந்து நாட்களில் வடபழனி கோயிலில் கல்யாணம். ரொம்ப சிம்பிளாகத்தான் நடக்கும். அப்பா உங்களுக்கு இன்விடேஷன் அனுப்புவார் என்று நினைக்கிறேன். இந்த விஷயத்தில் உங்களுக்கு என் வேண்டுகோள் ஒன்று... தயவுசெய்து அப்பாவின் கல்யாணத்துக்கு நீங்கள் வராமலிருந்தால் நல்லது! எனக்கும் அந்தக் கல்யாணத்தில் கலந்து கொள்ள இஷ்டமேயில்லை. ஆனால், என்னை விடமாட்டார்கள். அதனால் தான் உங்களைக் கேட்கிறேன். எனக்காக நீங்கள் இந்தக் கல்யாணத்துக்கு வரக் கூடாது. சரியா! என்னுடைய இந்த வேண்டுகோளை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். உங்களுக்குக் கோபமில்லையே என் மேல்? வருகிற சனிக்கிழமை வீட்டுக்கு வருகிறீர்களா?

உங்கள் அம்மாவை நான் ரொம்பவும் கேட்டதாகச் சொல்லுங்கள்.

அன்புடன்
காதம்பரி.'

ஒவ்வொரு வரியாகப் படிக்கப் படிக்கக் காளிதாஸின் மனம், இறுக்கம் தளர்ந்து இலகுவாகி விட்டது. தன் அப்பாவின் திருமணத்துக்கு வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிற காதம்பரியிடம் அவனின் மனம் இளகியது.

''காதம்பரிதான் எழுதியிருக்கு'' என்றான், அவனையே பார்த்துக் கொண்டிருந்த நண்பர்களிடம்.

''என்னவாம்?''

''தப்பை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு எழுதியிருக்கு.''

''இனிமே சரியாயிடுவே...!''

பதில் சொல்ல ஆர்வம் காட்டாமல், காளிதாஸ் மறுபடியும் காதம்பரியின் கடிதத்தைப் படிப்பதில் கவனமாக இருந்ததைக் கண்ட அவன் நண்பர்கள்,

விடைபெற்றுக் கொண்டார்கள். கடிதத்தை இருமுறை வாசித்த காளிதாஸ் மனநிறைவுடன் பிடரியில் கைகளைக் கோத்தபடி கட்டிலில் சாய்ந்தான். ஒரு நட்பில் பிளவு வந்தால்கூட மனம் எப்படிக் கலங்கிப் போகிறது! எதிர் மேஜையில் காலஞ்சென்ற மனைவியின் போட்டோ வசீகரமாகக் காட்சியளித்தது. அவள் சம்பந்தப்பட்ட அவலமான சம்பவங்கள் நீரில் மிதக்கும் பனித் துணுக்குகளாகக் காளிதாஸின் மன நிலையில் தளும்பிச் சஞ்சலித்தன. பனித் துணுக்குகள் சட்டென்று கனத்த பாறைகளாயின.

"யாருய்யா கடுதாசி எழுதியிருக்கிறது?" — காளிதாஸின் அம்மா மறுபடியும் மாடியேறி வந்து கேட்டாள்.

"அந்தக் காதம்பரிப் பொண்ணுதாம்மா எழுதியிருக்கு. நான் சொன்னேன் இல்லியா அன்னிக்கு அவ அப்பா மறுபடியும் கல்யாணம் செய்துக்கப் போறார்னு... இன்னும் பதினைஞ்சு நாள்ல வடபழனி கோயில்ல கல்யாணமாம். அந்தப் பொண்ணு எழுதியிருக்கு!"

"அவ்வளவு வயசான மனுஷர்கூடக் கல்யாணம் பண்ணிக்கிறாரு. நீ தான் இன்னும் செத்துப் போனவளையே நினைச்சுக்கிட்டு உன் வாழ்க்கையையே கெடுத்துக்கறே... ஏன் நீ மட்டும் இப்படியே இருக்கணும்? சொல்லுய்யா. உனக்குச் சொத்து இல்லையா? வயசு இல்லையா? பார்த்துக்கிட்டிருந்த வேலையையும் விட்டாச்சு. எவ்வளவு நாளைக்குத்தான் இப்படியே இருப்பே?"

— காளிதாஸின் அம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

"மறுபடியும் நீ ஒரு பெண்ணைக் கட்டிக்கிட்டு, குடியும் குடித்தனமுமா இருக்கணும்."

காளிதாஸ் மௌனமாகக் கண்களை மூடியபடி இருந்தான்.

"இப்ப தெரியாது சாமி... கடைசிக் காலத்துல ஒண்டியா கிடந்து அல்லாடணும். பக்கத்துல யாரு இருந்தாலும் கட்டின பொஞ்சாதிக்கு ஈடாகாது. வேணாம்ய்யா. இப்படியே நீ பட்டுப் போயிடக்கூடாது. வாழைக் கொழுந்தா துளிர்க்கணும். பெத்தவ சொல்றதைக் கேளு. சரின்னு சொல்லு. கருப்போ, சிவப்போ... பொங்கிப் போட தாதியிருந்தா போதும். என்ன சாமீ சொல்றே?"

காளிதாஸ் பெருமூச்சு விட்டான்.

"ஸாரிம்மா...! மறுபடியும் ஒரு பொண்ணைக் கைப்பிடிக்க என் மனசால் சத்தியமா முடியாது. இதை நான் ஏதோ செண்டிமென்ட்ல சொல்லலை! அது அவ்வளவுதான். என்னால முடியாது... அதை உங்களுக்குப் புரியற மாதிரி எனக்குச் சொல்லத் தெரியலை... ஸாரி...!"

"யாருக்கு சாமீ புரியலை... உனக்குப் புரியலையா, எனக்குப் புரியலையா? அவனவன் ஒண்ணு இருக்கறப்பவே மூணைக் கட்டிக்கிட்டு கூத்தடிச்சிட்டுத் திரியறான்..."

"ஒவ்வொருத்தனுக்கும் ஒவ்வொரு மாதிரி மனசு தாயி..."

"என் மனசுதான் பேயா அலையுது."

"அதே மாதிரி என்னோட மனசையும் நீங்க பார்க்கணும் இல்லையா?"

"புரிஞ்சுதான்ய்யா என் மனசு கிடந்து தவிக்குது. அம்மா மனசு புரியாத புள்ளையா இருக்கியே நீ!"

"புரியுதும்மா எனக்கு. ஆனா, புரிந்து போயிட்டதால் மட்டும் அதுக்கேத்தபடி நான் ஒரு காரியம் பண்ணிடணுமா சொல்லுங்க...?"

"போசத் தெரியாதுய்யா எனக்கு. நான் மட்டும் அழுது என்ன செய்ய? பெத்த மனசு பஞ்சா பத்திக்கிட்டு எரியுது.... உனக்கு அது புரிஞ்சா சரி!"

காளிதாஸின் அன்றாட வாழ்க்கையில், அவனுடைய அம்மாவுடன் இம்மாதிரி உரையாடல்கள் பல சமயங்களில் நிகழ்ந்து வருகின்றன. அம்மா கண்ணீர் வடிப்பதும், அவன் இறுகிப் போவதும், சொல்லிச் சொல்லி அம்மா புலம்புவதும், அவன் பதிலே சொல்லாமல் உறைந்து விடுவதும்...

சனிக்கிழமை காதம்பரியைச் சந்தித்த போது, கவனமின்றி அம்மாவின் இந்த ஆசையைக் காளிதாஸ், அவளிடம் வெளியிட்டு விட்டான்.

"அம்மா சொல்றதும் நியாயம் தானே காளிதாஸ்?"

"அவங்களுக்கு நியாயமா இருக்கலாம்."

"என்னிக்கோ இறந்துட்டவங்களை நினைச்சிட்டே இருக்கறதுதான் நியாயமோ?"

"யார் சொன்னது... நினைச்சுக்கிட்டே இருக்கிறதா?"

"அப்போ இப்படியே இருக்கறதுக்குக் காரணம் என்ன?"

"அதான் நான் முன்னமே சொல்லியிருக்கேனே—ஒரு பொண்ணோட வாழறதுங்கறதெல்லாம் என்னைப் பொறுத்தவரைக்கும் முடிஞ்சு போயிடுச்சுன்னு..."

"எனக்கு வேற மாதிரி தோணுது."

"சொல்லுங்க."

"சரஸ்வதிகூட நீங்க வாழ்ந்த வாழ்க்கை முடிஞ்சுடலே மிஸ்டர் காளிதாஸ். அது ஒரு அரைகுறை



வாழ்க்கை! அதான் அவங்களையே நினைச்சு நினைச்சு மனசாலயே அவங்ககூட வாழ்ந்திட்டிருக்கீங்க. முழுமை பெறாத ஒரு வாழ்க்கைக்கு மனசால் முழுமை தரப் பார்க்கறீங்க! கரெக்ட்டா நான் சொல்றது..."

காளிதாஸ் ஒரு விநாடி பிரமித்தான். ஆனால் மறுகணமே சந்தேகம் ஏற்பட்டது. துல்லியமான கவனம் மிக்க தொலைநோக்கின் குறிப்பீடா அல்லது வெறும் அறிவார்ந்த எண்ணங்களின் தந்திரப் பேச்சா என அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

"என்னங்க, ஒண்ணுமே சொல்லாம இருக்கீங்க!"—காதம்பரி சிறிது கர்வமான குரலில் கேட்டாள்.

"யோசிச்சுத்தான் சொல்லணும் பதில்!"

"அதையெல்லாம் இப்ப யோசிக்கறதுக்கு அவசியமில்லை காளிதாஸ். இனிமே நீங்க யோசிக்க வேண்டியது இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தித்தான்... அம்மா பாவம், இல்லையா?"

"அப்படிப் பார்த்தா உங்க அப்பாவும் கூடத்தான் பாவம். நீங்க கல்யாணமே செய்துக்கப் போறதில்லேன்னு சொல்லிட்டிருக்கிறதில் அவர் மனசுக்குள் எவ்வளவு கஷ்டப்பட்டுட்டு இருக்கார்னு யாருக்குத் தெரியும்?"—காளிதாஸ் மிகவும் எச்சரிக்கையோடு பேசினான்.

காதம்பரியின் உதடுகளில் அழகிய புன்னகை இழைந்தது.

"பதிலுக்குப் பதிலா? வெல்! அப்படி உண்மையிலேயே கஷ்டப்பட்டுட்டிருக்கிறவரா இருந்தா, ஜாலியா இந்த வயசில் கல்யாணம் செய்துப்பாரா எங்கப்பா. நீங்களே சொல்லுங்க...?"

காதம்பரியின் இந்தக் கேள்வியில் காளிதாஸ் திகைத்துப் போனான். எந்த நோக்கத்தில் ராஜரத்னம் மறுமணம்

புரிந்து கொள்கிறார் என்ற உண்மை அவனுக்குத் தெரியும். உண்மையை விண்டு சொல்லிவிடலாமா என்றுகூட ஒரு கணம் தயாராகி விட்டான்.

எனினும், அவன் அறிவு பின்வாங்கிக் கொண்டது. காளிதாஸ் அறிவின் முன்னிலையில், ராஜரத்னத்தின் கணிதம் பிழையான விடை நோக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. காதம்பரி, ராஜரத்னத்தின் மறு மணத்தையே இகழ்கிறாள். இவளின் இகழ்ச்சிக்கும், ராஜரத்னத்தின் மனமுயற்சிக்கும் இடையே அந்த வீட்டில் வந்து வாழப் போகும் பெண்மணியை நினைத்துப் பார்த்தான் காளிதாஸ். அந்தக் குடும்பத்தில் விநோதச் சிக்கல் விழுந்து கொண்டிருப்பதாகத் தெரிந்தது.

''உங்களுக்கு நான் சொன்னது தப்பா தோணுதா?''

—காதம்பரி கேட்டாள்.

''தப்பா கூட இருக்கலாமே!''

''நான் அப்படி நினைக்கலே!''

''காதம்பரி, ஏற்கெனவே நான் கேட்ட கேள்விதான். இருந்தாலும் மறுபடியும் கேக்கறேன். நீங்க ஏன் கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு சொல்றீங்க?''

'முன்னமேயே நான் சொல்லியிருக்கேன். நான் ஒரு பயங்கரமான காம்ப்ளெக்ஸ் கேர்ள். என்னால் ஒரு ஆடவனுடன் வாழறதைப் பத்திக் கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியாது காளிதாஸ்.''

''அதான் ஏன்னு கேக்கறேன்...''

''அந்த வாழ்க்கைக்கு நான் தகுதியானவ இல்லே... எல்லா ஆம்பளைகிட்டேயும் பயலாஜிக்கலாகவே எனக்கு ஒரு வெறுப்பு இருக்கு!''

''இல்லை காதம்பரி, வெறுப்புங்கறது சைகலாஜிக்கலான விஷயம்தானே தவிர, பயலாஜிக்கலான விஷயமில்லை...''



''நீங்க என்ன சொல்றீங்க காளிதாஸ்...?''

''உண்மையா உங்களுக்கு இந்த வெறுப்பு உணர்ச்சியெல்லாம் இல்லவே இல்லை. உங்களுக்கு இருக்கிற தற்பெருமையும் கர்வமும், அப்படி உங்களைச் சொல்லி உங்களையே ஏமாத்திக்க வைக்குது.''

''ஸாரி...! என்னையே நான் ஏன் ஏமாத்திக்கணும்...?''

''அதான் உங்களோட பர்சனாலிடி...!''

காளிதாஸின் கண்கள் கலங்கப் பார்த்தன. இப்படியொரு விநோதமான காம்ப்ளெக்ஸை அறிவில் உறைய வைத்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் எதிர்கால மன வளம், அவனில் ஒரு கேள்விக்குறியாக உயர்ந்து நின்றது. வேண்டாத எல்லைக்குக் காதம்பரி நீந்திக் கொண்டிருப்பது போலிருந்தது. சரியான கரையின் பக்கம் காதம்பரியைச் சேர்த்துவிடக் காளிதாஸின் மனம் தயாராகவே இருந்தது.

கரம் நீட்டிப் பற்றியிழுத்துவிடப் பரிவு காத்துக் கொண்டிருந்தது. ஆனால், அந்தப் பெண் தயாராக இல்லை. கரை வரும் நோக்கம் இல்லை அவளுக்கு. நீந்திக் கொண்டே இருக்கும் நூதன இறுமாப்பு... நீச்சலில்... கரை சேர்வதே இயல்பு. அந்த இயல்பு மீறிப் போனால்...?

காதம்பரியைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்த காளிதாஸின் அறிவில் புதிய கேள்வி ஒன்று தலை உயர்த்தியது.

''இன்னொரு கேள்வி எனக்குள் வருது காதம்பரி..!''

''என்ன கேள்வி...?''

''ஃப்ரிஜிடிடி என்பது ஆண்களிடம் பெண்களுக்கு இருக்கும் ஓர் உணர்ச்சி... ஆனா, இது உங்களுக்குப் பெண் விஷயத்திலும் இருக்கும் போலிருக்கே...?''

''எதை வெச்சு சொல்றீங்க...?''

''உங்க அப்பா கல்யாணம் பண்ணிக்கப் போற பெண்கிட்டே இப்பவே மோசமான ஓர் ஒவ்வாத உணர்வு உங்ககிட்டே இருக்கே...?''

அந்த காம்ப்ளெக்ஸும் என்கிட்டே இருக்கு. ஆனா, அது பெண்களையே வெறுக்கிற உணர்வு இல்லை. எங்கப்பா கல்யாணம் பண்ணிக்கப் போற பெண்ணை மட்டும்தான் எனக்குப் பிடிக்க மாட்டேங்குது...!''

''அந்தப் பெண் யாராக இருந்தாலும் பிடிக்காதா...?''

''யாராக இருந்தாலும் பிடிக்காது.''

''வர்ற பெண் ரொம்ப ரொம்ப நல்லவளா இருந்தா...?''

''ரொம்ப ரொம்ப பிடிக்காது...''

''ஏன் அப்படி...''

''எங்கப்பாவோட புது மனைவினு ஒருத்தியை நினைச்சாலே எனக்கு அருவருப்பா இருக்கு. அன்னிக்கு அப்பா அந்த வசந்தா டீச்சருக்குப் பதினெட்டு புடவைகள் வாங்கிட்டு வந்திருந்தார். அதைப் பார்த்ததும் எனக்குள்ளே பொறாமை அப்படியே தீ மாதிரி பத்திக்கிட்டு எரியுது. ஒரு நாள்கூட எனக்கு அப்படி அவர் ஒரே சமயத்திலே பதினெட்டு டிரஸ் வாங்கிட்டு வந்ததே இல்லை. இதை என்னால எப்படித் தாங்கிக்க முடியும்...?''

''இதை நீங்க சரியான கோணத்திலே புரிஞ்சுக்கலாம்னு தோணுது எனக்கு...?''

''எப்படினு சொல்லணும்...?''



''அந்தப் பெண் ரொம்ப ஏழை இல்லையா? நல்ல புடவைகள் அவங்ககிட்டே இல்லாம இருக்கலாம். அதனால் இப்பவே நல்ல புடவைகள் நிறைய வாங்கிக் குடுத்திடலாம்னு உங்க அப்பா நினைச்சிருக்கலாம் இல்லையா...?''

''அப்பா என்ன நினைச்சு வாங்கிக் கொடுத்தாரோ, அதைப் பத்தி எனக்குக் கவலையில்லை, ஆனா, அப்படிப் பதினெட்டு புடவை வாங்கிக் கொடுத்தது எனக்குப் பிடிக்கலை...''

ராஜரத்னம் மறுமணம் புரிந்து கொள்வதன் உண்மை நோக்கத்தை விளக்கிச் சொல்லி விடலாம் போலிருந்தது. ஆனால், இந்த வேளையில் அதை இவளிடம் வெளியிடுவது சில விரும்பத்தகாத திருப்பங்களை ஏற்படுத்தி விடலாம்.

''கல்யாணத்துக்கு முன்னாடியே பதினெட்டு புடவைகள் வாங்கித் தர்றவர், கல்யாணத்துக்கு அப்புறம் எத்தனை புடவைகள் வாங்கித் தருவார் அந்தப் பொம்பளைக்கு?''

''அவர் கல்யாணம் பண்ணிக்கப்போற பெண்ணுக்கு வாங்கிக் கொடுக்கக் கூடாதா...?''

''அவர் கல்யாணமே பண்ணிக்கக் கூடாதுன்னு நான் சொல்றேன் காளிதாஸ்!''

''இதை உங்கப்பாகிட்டே சொல்லுங்க... அது தான் முறை...''

''ஸாரி! அதை என்னால அவர்கிட்டே சொல்ல முடியலை என்பதுதான் என்னோட பிரச்னை...''

''அப்போ நான் ஒண்ணு சொல்றேன். நீங்களும் பேசாம கல்யாணம் பண்ணிக்குங்க!'' —காளிதாஸ் சாமர்த்தியமாக விதையை ஊன்றினான்.

"ஸாரி...! அதுவும் என்னால முடியாத விஷயம்."

"அப்போ நீங்க உங்களோட பிரச்னையை சந்திக்கிறதைத் தவிர வேற வழி கிடையாது."

"நான் என்னோட வழியிலே என் பிரச்னைகளைச் சந்திக்கத்தான் போறேன்... பொறுத்திருந்து பாருங்க..."

"தாராளமா... ஆனா, விஷயத்தை ரொம்ப சிக்கல் ஆக்கிடாதீங்க..."

"நோ! விஷயத்தை எவ்வளவுக்கு எவ்வளவு சிக்கல் பண்ணணுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு பண்றேன் பாருங்க. அதான் என்னோட ஸ்டைல்!"

"என்னை உங்க அப்பாவோட கல்யாணத்துக்கு வரக் கூடாதுன்னு நீங்க எனக்கு லெட்டர்ல எழுதினது அந்த ஸ்டைல்ல தானா..."

"ஆமாம்...!"

"ஆனா, நான் உங்க அப்பாவுக்கும் நண்பர்தானே...! அவர் என்னை அழைக்கும்போது எப்படி அவரோட கல்யாணத்துக்கு நான் வராம இருக்கிறது...?"

"என்னோட விருப்பத்தைச் சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்..."

எந்தக் கோணத்திலும் அந்தப் பெண் பிடிகொடுக்காமல் நழுவுகிறாள். காளிதாஸ் அவளையே பார்த்தபடி நிற்க, காதம்பரி தூரத்தில் பார்த்துக் கொண்டிருந்தாள். காதம்பரிக்குக் காளிதாஸிடம் கசப்புணர்வு வந்தது. யாராக இருந்தாலும் அவளின் மொத்த இஷ்டத்துக்கும் இணங்கி நடந்துகொள்ள வேண்டும்! அவ்விதம் நடந்து கொள்ளாதவர்களிடம் நட்புணர்வு அறுந்து விடத் துடிக்கிறது...

"இன்வைட் பண்ணியும் நான் வரலேன்னா அப்பா வருத்தப்பட மாட்டாரா...?"

"ஓஹோ...! அப்ப நான் மட்டும் வருத்தப்படலாம்... அப்படித்தானே...!"

காளிதாஸ் வருத்தத்துடன் சிரித்தான்.

"இதப் பாருங்க காளிதாஸ்... நீங்க எனக்கு மட்டும் தான் நண்பரா இருக்கணும்- இனிமே எனக்கு நண்பரா இருக்கிறவங்க, என்னோட அப்பாவுக்கு நண்பரா இருக்கக் கூடாது! அதே மாதிரி, அவரோட நண்பரா இருக்கிறவங்க எனக்கு நண்பரா இருக்கக் கூடாது..."

"கடைசியில் நீங்க இவ்வளவுதானா காதம்பரி...? அப்பா அப்பான்னு உயிரை விட்ட பெண், இன்னிக்கு ஒரேயடியா மாறிப் போயிட்டீங்களே...?"

"அவர் மாறிட்டார்... ஸோ, நானும் மாறிட்டேன்..."

"அப்போ, நான் உங்க அப்பாவோட கல்யாணத்துக்கு வரக்கூடாது என்கிற உங்களோட முடிவை மறு பரிசீலனை பண்றதா இல்லையா நீங்க...?"

"இல்லை இதுதான் முடிவானது..."

"ஓகே... ஸீ யூ..."

"உங்களோட முடிவைச் சொல்லாம போறீங்களே...?"

"இன்னும் நான் எந்த முடிவுக்கும் வரலை...!"

திங்கட்கிழமை காலை காளிதாஸ், அடையாறில் ராஜரத்னத்தின் ஆபீஸ் அறையில், அவரின் எதிரில் அமர்ந்திருந்தான்.

"இப்பதான் உங்களுக்கு இன்விடேஷன் போஸ்ட் பண்ணச் சொல்லி அனுப்பிச்சேன். ரெண்டு மூணு நாளாவே வீட்டுப் பக்கம் நீங்க வருவீங்கன்னு எதிர் பார்த்தேன்."

''சனிக்கிழமை வந்திருந்தேனே சார்...!''

''கேட்டதுக்கு நீங்க வரவே இல்லைனு காதம்பரி சொன்னாளே...!''

''மூணு மணி நேரத்துக்கும் மேல அவங்க கூடப் பேசிட்டிருந்தேனே...!''

''அப்போ. ஏன் என்கிட்டே பொய் சொன்னா...?''—ராஜரத்னம் ஆச்சரியத்துடன் கேட்டார். காளிதாஸ் ஆச்சரியப்படாமல் சொன்னான் : ''உங்க பெண் உங்களோட கல்யாண விஷயமா ரொம்ப தீவிரமா ரீயாக்ட் பண்ண ஆரம்பிச்சிட்டாங்க சார்...''

ராஜரத்னம் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''குட்! அப்ப நான் எதிர்பார்க்கிற ரிசல்ட்டை ரொம்ப சீக்கிரமாவே எதிர் பார்க்கலாமா காளிதாஸ்...?''

''நோ சார். இப்ப சொல்லிட முடியாது அதைப் பத்தி... காதம்பரிகிட்டே இன்னும் வேறு சில காம்ப்ளெக்ஸ்ம் நிறைய இருக்கு நீங்க நினைக்கிற மாதிரி உங்களோட கல்யாணம், காதம்பரியை அவங்களோட கல்யாணம் நோக்கி அவ்வளவு சுலபமா அழைச்சுட்டுப் போயிடாது...!''

காளிதாஸ், சனிக்கிழமை காதம்பரிக்கும் அவனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் முழுவதையும் ராஜரத்னத்திடம் விவரித்துச் சொன்னதும், அவரின் முகத்தில் கவலையின் நிழல் படிந்தது. சிகரெட் புகைத்தவாறு யோசித்துக் கொண்டே இருந்தார்.

''ரொம்ப நெகட்டிவா அவங்களோட மனசு வேலை செய்யுது...''

''எப்பவுமே அவ அப்படித்தான் காளிதாஸ், ஆனா, இந்த ஃபிரிஜிடிடி என்கிற பெரிய பெரிய வார்த்தையெல்லாம் ஒரு நாளும் அவள் என்கிட்டே சொன்னது கிடையாது.''



'''ஆபத்தான வார்த்தை...இல்லையா?''

''யெஸ்! காதம்பரி அப்படியெல்லாம் நினைக்கக் கூடாதுன்னுதான் எனக்கும் தோணுது...''

''என்கிட்டே அவளுக்கு இருக்கிற தீவிரமான நெருக்கத்தை வெச்சு — அவளை ஒரு குழந்தையா நான் நெனைச்சிட்டு இருந்துட்டேன்.''

''ஒரு சமயம் பார்த்தா ரொம்ப மென்மையான—எதுக்கும் வளைஞ்சு கொடுக்கிற குழந்தையா இருக்கப் பார்க்கிறாங்க. இன்னொரு சமயம் ரொம்ப கடுமையா டாமினேட் பண்ற முதிர்ச்சியோட இருக்கப் பார்க்கிறாங்க...''

''அப்போ நான் என்னோட கல்யாணத்தை ட்ராப் பண்ணிடட்டுமா?''

காளிதாஸ் அதிர்ச்சியுடன் ராஜரத்னத்தைப் பார்த்தான்.

''என் கல்யாணத்தின் மூலமா என்மேல்தான் அவளுக்குக் கோபம் வரணும்னு நான் ஆசைப்பட்டேன். ஆனா, அந்த வசந்தா மேலேயும் அவளுக்குக் கோபமும் பகைமை உணர்ச்சியும் வர்றது அவ்வளவு சரியானதா தோணலை எனக்கு...''

''அதுக்குத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன், நல்லா யோசனை பண்ணிக்குங்கனு...''

''இப்பவும் கல்யாணம் நடந்திடலையே!''

''ஸாரி! நீங்க இப்படிப் பேசக்கூடாது. கல்யாணம் என்கிற சடங்குதான் நடக்கலை. ஆனா, சும்மா இருந்த ஒரு ஏழைப் பெண்மணியோட மனசில் நீங்க கல்யாணம் நடத்தியாச்சு. இனிமே கல்யாணத்தை நிறுத்தினா அதை விடப் பெரிய பாவம் வேறே எதுவும் கிடையாது.''

''காதம்பரியை நினைச்சா இப்ப எனக்கு ரொம்ப பயமா இருக்கு காளிதாஸ்.''

''ஒப்புக்கறேன் சார். ஆனா, அந்த வசந்தா என்கிற பெண்ணை நினைச்சும் நீங்க பயப்படணும். அந்த நார் மிகப் பொறுப்பும் உங்களுக்கு இருக்கு...''

''நான் அவசரப்பட்டுட்டேன்னு தோணுது...''—ராஜரத்னத்தின் குரல் கலங்கிப் போய் ஒலித்தது.

''இனி நீங்க அதனோட விளைவுகளைச் சந்திச்சுதான் ஆகணும். வேற வழி கிடையாது''

ராஜரத்னம் கைக்குட்டையால் கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டார். அவரின் அறிவில் ஒரு சிந்தனை பளிச்சிட்டது.

''அப்போ நான் ஒரு காரியம் செய்யட்டுமா? காளிதாஸ்...?''

''என்ன காரியம் சார்...?''

''காதம்பரிகிட்டே போய், 'யாரையாவது நீ நல்லபடியா கல்யாணம் பண்ணிக்கிற முடிவுக்கு வரணும்கிறதுக்காகத்தான் நான் வசந்தாவைக் கல்யாணம் செய்துக்கிற முடியாவுக்கு வந்தேன்' என்கிற உண்மையைச் சொல்லிடட்டுமா...?''

''இனிமே சொல்றதால எந்தப் பிரயோஜனமும் கிடையாது சார்! காதம்பரி உங்களை நம்பமாட்டாங்க...''

''நீங்க சொன்னாலும் கூடவா...?''

'யார் சொன்னாலும் நம்பமாட்டாங்க. சும்மா அவங்களைச் சமாதானம் பண்ணறதுக்கு நாம் பிளான் பண்ணிப் போய் சொல்றதா நினைச்சு, இன்னும் மோசமா ரீயாக்ட் பண்ணுவாங்க...ஒரு வேளை உங்க மேல இருக்கிற கோபம் மட்டும் வேணா மாறினாலும் மாறலாம். ஆனா, அந்த வசந்தா என்கிற பெண்ணோட நிலைமை, வீட்ல இன்னும் மோசமாயிடலாம். காதம்பரி அந்தப் பெண்ணை ரொம்ப கேவலமாவும் நடத்தலாம்...''

''என்னோட முதல் கவலை— என்னோட பெண்தான்...''

காளிதாஸ் பதில் சொல்லவில்லை. ராஜரத்னத்தின் முதலாளித்துவ அலட்சிய பாவனை அந்த அறையில் கரைந்து விட்டிருந்தது. முகம் தெரியாத வசந்தா என்ற ஏழைப் பெண்ணை நினைத்துப் பார்த்தான். ஏழைகளின் வாழ்க்கை சதுரங்கத்தின் காய்கள், செல்வந்தர்களால்நகர்த்தப்படுகிற நிர்ப்பந்தம் அவனின் மனத்தில் கசந்தது.

''ஏதாவது சொல்லுங்க காளிதாஸ்...!''

''ஸாரி சார்! இந்த விஷயத்துல இனிமே நான் சொல்றதுக்கு ஒண்ணும் கிடையாது.''

'அப்படியில்லை காளிதாஸ். இந்த விஷயத்துல எல்லாமே நான் நினைச்சதுக்கு எதிர்மாறா நடக்கும் போலிருக்கு. அதனால்தான் உங்களைக் கேக்கறேன். இடீர்னு என் தங்கையோட மகனுக்கு சினிமாவில் பெரிய பிரேக் கிடைச்சிருக்கு. உடனே அவன் வீடு பார்த்து, என் தங்கையை அழைச்சிட்டுப் போறதா இருக்கான். இதெல்லாம் கூடக் காதம்பரியைப் பெரிசா பாதிக்கற மாதிரி இருக்கு. இதை நான் எதிர்பார்க்கவேயில்லை. என்னோட ஒரிஜினல் பிளான்—அவனோட சில இமேஜ் உடையணும் என்கிறதுதான். ஆனா, அதனால் அவனோட அன்பு வாராமே உடைஞ்சு போற மாதிரி ஏதாவது ஆயிட்டா என்ன பண்றது...?''

இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி மௌனமாக இருந்தார்கள்.

''ஆனா, என்ன சார்... என்ன நடந்தாலும் இனி நீங்க உங்க கல்யாணத்தை மட்டும் நிறுத்திடலாம் என்கிற முடிவுக்கு வந்திடக்கூடாது...''—காளிதாஸ் சொன்னான்

ராஜரத்னம் மௌனமாக இருந்தார்.

''ஒருவேளை அந்த முடிவுக்கே நீங்க வந்திட நேர்ந்தா...''—காளிதாஸ் மேலே சொல்லத் தயங்கினான்.

ராஜரத்னம் அவன் சொல்லப் போவதற்காகக் காத்திருந்தார்.

''உங்க வீட்டுக்கு வர்றதை நான் நிறுத்திடுவேன்!''

பல நிமிஷங்களுக்கு அந்த அறையில் ஓர் இறுக்கம் வியாபித்திருந்தது. இருவருமே ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ராஜரத்னம் பல முறை பெருமூச்சு விட்டார்.

''சரி காளிதாஸ், நீங்க என்ன பண்ணப் போறீங்க...?'' என்னோட கல்யாணத்துக்கு வரப் போறீங்களா, இல்லை காதம்பரி இஷ்டப்படி வராம இருந்துடப் போறீங்களா...?''—ராஜரத்னம் கேட்டார்.

''வர விரும்பலை சார்...!''

''காதம்பரிக்காகவா...?''

''யெஸ்... இந்த நிமிஷம் அவங்க என்னோட நட்பை இழந்துடாம இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்...''

''நல்லது காளிதாஸ். என் பெண் மேல நீங்க வெச்சிருக்கிற இந்த நட்புக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்.''

''அவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. காதம்பரிக்கு என்மேல் இருக்கிற ரொம்ப உயர்ந்த அன்புக்கு இதைக்கூட நான் அவங்களுக்குச் செய்யலேன்னா என்னோட நட்புக்கே அர்த்தம் கிடையாது. நிறைய விஷயங்கள்ல காதம்பரி ஒரு மனமுதிர்ச்சியற்ற அடல்ட் தான். இருந்தாலும், அவங்களை நான் மதிக்கிறேன். அவங்களோட வாழ்க்கை ஆனந்தமா இருக்கணும். அவ்வளவுதான்! அதுக்காக நான் அவங்களுக்கு என்ன வேணுமானாலும் செய்வேன்... இது உறுதி...''

—மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசியதில், காளிதாஸின் கைவிரல்கள் பரவசத்தால் லேசாக நடுங்கின, கண்கள் கலங்கப் பார்த்தன.

''ரொம்ப நன்றி காளிதாஸ்...!''—ராஜரத்னம் எழுந்து நின்று அவனுடன் கைகுலுக்கினார்.

''உங்கள் திருமண வாழ்க்கைக்கு என்னுடைய வாழ்த்துக...''

''கல்யாண[illegible]க்கு நீங்கள்வராவிட்டாலும், கல்யாணம் முடிந்த இரண்டு நாட்களில் அவசியம் வீட்டுக்கு வாருங்கள்!''

''ஓயெஸ்... கண்டிப்பா வருவேன்!''

''அடிக்கடி என்னை இங்கு வந்து பாருங்கள் காளிதாஸ். காதம்பரி பற்றி எனக்கு ஒன்று விடாமல் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் நீங்கள்...!''

''ஷ்யூர்... அப்ப நான் வரட்டுமா...?''

''போய் வாருங்கள்...!''

மீண்டுமொரு முறை அவருடன் கைகுலுக்கிக் காளிதாஸ் விடைபெற்றான்.

# 10

மிகச் சில உறவினர்கள் மட்டும் சூழ்ந்திருக்க, ராஜரத்னம்—வசந்தா இவர்களின் திருமண முகூர்த்தநேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. வருகிறவர்களை வரவேற்கிற பாணியில் நின்று கொண்டிருந்தார் குமாரசாமி. உறவினர்களின் அச்சூழலில் காதம்பரி ஒரு தனிமை உணர்வில், காளிதாஸ் வருகிறானா என்றகவனத்தில் நுழைவாசலையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவளில் முடியப்பட்டிருந்த காளிதாஸ் நட்பின் இழை, முறிந்து அறுந்துவிடக்கூடிய அபாய சலனத்தில் வெடவெடத்துக் கொண்டிருந்தது. காளிதாஸின் தலை நுழைவாசலில் தெரிந்தால் அந்த இழை அக்கணமே அறுபடும்!

''வாங்கோ... வாங்கோ...,'' என்று குமாரசாமியின் குரல் ஓங்கி ஒலித்த போதெல்லாம், காளிதாஸ்தான் வந்து விட்டானோ என்ற அதிர்வில் காதம்பரியின் அடிவயிற்றில் உணர்வுகள் எழும்பி உயர்ந்து அமிழ்ந்தன.

''காதம்பரி, உடம்பு சரியில்லையா...?'' அவள் இயல்பாக இல்லாததைக் கவனித்துக் கொண்டே இருந்த சிவராஜ் காதம்பரியின் அருகில் வந்து கேட்டான்.

''ஆமாம்! சரியான தலைவலி...''

''ஏதாவது மாத்திரை சாப்பிட்டியா...''

''இல்லை அத்தான். சட்டுனு எதுக்கும்நான் மாத்திரை சாப்பிடறது கிடையாது.''

''பரவாயில்லை, நல்ல பழக்கம்தான். அது சரி, எங்கே உன் ஃப்ரெண்ட் மிஸ்டர் காளிதாஸ் வரக் காணோம்? அம்மா அவரைக் காணோமேன்னு ரெண்டு மூணு தடவை கேட்டுட்டாங்க... வருவாரா மாட்டாரா?''



''என்னைக் கேட்டா?''

அந்தக் கேள்வியில் அந்நியத் தன்மையின் உரத்த ஒலியை அந்தக் கணமே சிவராஜ் உணர்ந்தான்.

''உனக்குத்தானே அவர் நெருங்கிய நண்பர்...?''

''என்னோட நெருங்கிய நண்பரா இருந்தா, என் அப்பாவோட கல்யாணத்துக்கும் வந்து நிக்கணும்னு கட்டாயமா?''

''ஸாரி காதம்பரி! நீ ஏதோ காளிதாஸ் மேல கோவமா இருக்கிற மாதிரி தெரியுது. நான் சொல்றது சரிதானே...?''

''இல்லே... தப்பு...''

''இல்லை உன் வார்த்தையில எனக்கு நம்பிக்கை இல்லே''

''என் வார்த்தையில நம்பிக்கை இல்லாதவங்க என்கிட்டே வந்து பேசிக்கிட்டிருக்க வேண்டியதில்லை...''

''அப்போ சரி...'' — முகம் சிவக்க சிவராஜ், காதம்பரியை விட்டு நகர்ந்து போனான். மிக மிகச் செல்லம் கொடுத்து ராஜரத்னம், காதம்பரியைப் பாழ் பண்ணி விட்டார் என்பது அவனுடைய அபிப்பிராயம். அவளின் சில மென்மையான தன்மைகள் அவனையும் ஈர்த்தது உண்டு. ஆனால், உலகமே தன்னைச் சுற்றிய தாய், தனக்குச் சார்ந்ததாய் அமைந்திருக்க வேண்டும் என்ற அவளின் கர்வம் மிகுந்த பிடிவாதங்கள், சிவராஜைப் பல சமயங்களில் காயப்படுத்தியிருக்கின்றன.

தன்னைவிட்டு நகர்ந்துவிட்டவனின் முதுகுப்புறத்தைச் துச்சமாக நோக்கிவிட்டுக் காதம்பரி மீண்டும் நுழைவாசலில் கவனமானாள். விநாடிகள் கழியக் கழிய அவளில் ஒரு புதிய நட்பு கண் விழித்தது. ராஜரத்னம், வசந்தாவின் கழுத்தில் கட்டிய தாலியும் காளிதாஸ்

வருகை தராதது காதம்பரி மீது ஒரு மகுடம் சூட்டினாற் போலிருந்தது. அவனை வென்றுவிட்ட உணர்வை அவளுள் பரப்பியது. மனக்கண் எதிரே அவளின் கொடி பறந்தது. காளிதாஸ் அவளுடைய நண்பன் என்பதை ஆழமாகப் பதித்து விட்டான்.

'நன்றி நண்பா!'—காதம்பரியின் மனம் வணக்கம் சொன்னது. 'இனி இந்த வசந்தாவை வெல்வது எனக்கு எளிது. என்றும் நீ எனக்கு நண்பனாக இரு. இவ்வுலகை யும் வென்று காட்டுகிறேன்...''

திருமண வைபவம் நெடுகக் காதம்பரி தாமரை இலைத் தண்ணீராகத் தளும்பிக் கொண்டிருந்ததை ராஜரத்னம் உணர்ந்தது போலவே, வசந்தாவும் உணர்ந் தாள். ராஜரத்னத்திடம் ஒரு உணர்வு குறுகுறுத்துக் கொண்டிருந்தது வசந்தாவிடம் ஒரு குரூர மகிழ்ச்சி அவளையறியாமலே பெருகிக் கொண்டிருந்தது. தனிக் காட்டு ராணி போல் அந்த வீட்டில் வாழ்ந்து கொண் டிருக்கும் காதம்பரியின் உயர்வுணர்ச்சி நசுங்கத் துவங்கி யிருப்பதாக உணர்ந்து வசுந்தா சிறிது செருக்குற்றாள்! ஒரு முக்கோண தண்டவாளங்களாக அம்மூவரும் அவரவர் மனநிலையில் பெயர்ந்து போயிருந்தார்கள்.

எளிய நிகழ்ச்சிகள் முடிவுற்ற உடனேயே எல்லோ ரையும் ஏற்றிக் கொண்டு கொட்டிவாக்கம் விரைய கார்கள் வரிசையாக நின்றிருந்தன. மாலையணிந்த கல்யாண கோணத்திலேயே ராஜரத்னம் தன்னுடைய காரை நோக்கி விரைய, அவரின் பின்னால் காதம்பரியும், அவளின் பின்னால் வசந்தாவும் தொடர்ந்தார்கள். ராஜரத்னம் எப்போதும் போல டிரைவிங் ஸீட்டில்அமர்ந்து கொள்ள, காதம்பரி முன்ஸீட்டில் அவரின் அருகிலேயே அமர்ந்து கொள்ளும் அவசரத்தில் காரின் கதவைத் திறக்க, ஒரு கை அவளைப் பிடித்து நிறுத்தியது.

குமாரசாமி சிரித்தபடி நின்றார்.



''காதம்பரி, இன்னிக்கு உனக்கு அந்த ஸீட் கிடையாது. உங்க சின்னம்மாவுக்குத்தான்... நீ பின்னாடி உட்கார்ந் துக்கோ...''

காதம்பரியின் முகம் அவமானத்தில் கன்றிப் போய் விட்டது ''முதல்ல உங்க கையை எடுங்க...!''

குமாரசாமி காதம்பரியிடமிருந்து இந்தத் தோர ணையை எதிர்பார்க்கவில்லை. சட்டெனக் கையை எடுத்துக் கொண்டார். காதம்பரியின் கையை தான் தொட்டது சரியா, தவறா என அவரால் அநுமானிக்க முடியவில்லை.

''எந்த ஸீட்ல உட்கார்றதுன்னு எனக்குத் தெரியும்...!''—அலட்சியமாகக் காதம்பரி முன் ஸீட்டில் உட்கார்ந்து காரின் கதவைப் படாரென்று சாத்தினாள். சில கணங்கள் எல்லோருமே திகைத்து நின்றுவிட, குமாரசாமி விநாடியில் சுதாரித்துக் கொண்டு அழகாகச் சமாளித்தார்.

''பார்த்தியம்மா வசந்தா, காதம்பரிக்கு அவ அப்பா கிட்டே இருக்கிற ஒட்டுதலை... இந்த விஷத்துல மட்டும் அவ இன்னும் சின்னப் புள்ளை தான்...''

''அதெல்லாம் அவளுக்கு கல்யாணம் ஆகற வரைக்கும் தான். ஆயிட்டா மறுநாளே மாறிடுவா...'' —யாரோ கேலி பண்ணினார்கள்.

காதம்பரி ஆடாமல் அசையாமல் இறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள். மனத்துக்குள் எரிச்சல் தீயாக எரிந்து கொண்டிருந்தது. 'கல்யாணமாம்! சனியன்கள், கல்யாணம் செய்து கொள்ளாமல் ஒருத்தி இருக்க முடியாதா; இல்லை, இருக்கக்கூடாதா? கல்யாணம் செய்து கொண்டு இத்தனை சனியன்களும் எதைக் கண்டதுகள்! கல்யாணமாகிக் கொஞ்ச நாளில் வயிற்றைச்

சரிந்துக் கொண்டு பிள்ளையைப் பெற்றுக் கொண்டு ஆயுள் பூராவும் அதுகளுடன் மன்றாடிக் கொண்டு...!'

தன் அண்ணன் குழந்தைகள் சூழ காரின் பின்ஸீட்டில் ஏறிக் கொண்ட வசந்தா கொஞ்சம் அதிர்ந்துதான் போயிருந்தாள். கல்யாண தினத்தன்றே இத்தனை அழுத்தமாக நடந்து கொள்ளும் காதம்பரியை, வரப் போகும் நாட்களில் தான் எப்படி எதிர் நோக்கப் போகிறோம் என்ற அச்சத்தில் குழந்தையைப் பற்றிய படி உட்கார்ந்திருந்தாள். ராஜரத்னம் காரை மெதுவாகக் கிளப்ப, மற்ற கார்களும் உறவினர்களுடன் பின் தொடர்ந்தன.

"ஏம்மா முகமெல்லாம் ஒரு மாதிரி... உடம்பு சரியில்லையா?"—ராஜரத்னம் கனிவுடன் மகளைக் கேட்டார்.

"இல்லையே...உடம்புக்கு ஒண்ணும் இல்லையே..."

"அப்ப ஏன் என்னவோ போல் இருக்கே?"

"தெரியலை!"

"எங்கே நம்ம காளிதாஸ்—வரக்காணோம்?"

"எனக்குத் தெரியும், அவர் வரமாட்டார்னு...!"

ராஜரத்னம் எதிர்பாராத இந்தப் பதிலில் கொஞ்சம் அசடு வழிந்துவிட்டார். ஒரு வகையில் மகளின் வீரம் அவருக்குச் சந்தோஷமாகக்கூட இருந்தது. காதம்பரியைப் பொய்யாகக் கேட்டார்.

"ஏன் வரமாட்டேன்னு சொன்னாரா? உன்கிட்டே?"

"அவர் எதுவும் சொல்லலை... ஆனா எனக்குத் தெரியும்!"



எதிர்பாராமல் கிடைத்த இந்த நிலையைக் காதம்பரி வெகுவாக ரசித்தாள். 'ஒரு பிரபல எழுத்தாளனையே தன் விருப்பு வெறுப்புக்கேற்ப நடந்து கொள்ளச் செய்ய முடிகிறபோது, இந்த ஏழைப்பெண் வசந்தாவை ஒரு நாணயத்தைத உருட்டுவது போல் உருட்டி விடலாம்' என்ற நம்பிக்கையையும் அகந்தையும் வந்தன. ஆயிரம் வசந்தா வந்தாலும் இந்தக் காரின் முன் ஸீட் தன்னுடையதுதான் என்ற இறுமாப்புடன் நன்கு சாய்ந்து கொண்டாள். ராஜரத்னம் அணிந்திருந்த ரோஜா மாலையில் உரிமையுடன் ஒரு பூவைப் பிய்த்தெடுத்து அதன் இதழ்களை ஒயிலுடன் ஒவ்வொன்றாக நாக்கில் வைத்துச் சுவைத்தாள்.

"காதம்பரி, உன் சின்னம்மா கூட ஏதாவது பேசினியா?"

"ஊஹூம்."

"ஏன்?"

"என்ன பேசறதுன்னு தெரியலை!"

ராஜரத்னம் வசந்தாவையும் காதம்பரியையும் அர்த்தத்துடன் பார்த்துச் சிரித்தார். அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு பாலமாக அமைய அவருடைய மனம் விரும்பியது.

"அவங்களுக்குப் பிடிச்ச கலர் எது... பிடிச்ச பூ எது... மியூசிக் பிடிக்குமானு பொதுவா நீ கேட்டா சின்னமா பதில் சொல்றாங்க..."

சட்டென காதம்பரிக்கு ராஜரத்னத்தின் நோக்கம் புரிந்து போயிற்று. கவனக்குறைவாகத் தான் வசந்தாவுக்கு இடம் கொடுத்து விடக்கூடாதென்று நினைத்தாள். வசந்தாவை அங்கீகரிக்கவே கூடாது. அவளுக்கு என்ன பூ பிடித்தால் எனக்கென்ன? நானும் அவளும் ஒன்றா?

பணம் கொடுத்து அவளை வாங்கியிருக்கிறார்கள். வசந்தாவிடம் பணம் இருந்திருந்தால் இப்படி ஐம்பது வயதானவரை மணந்திருப்பாளா?

"வசந்தா, காதம்பரி எங்க வீட்டுல ரொம்ப ரொம்ப செல்லமா வளர்ந்த பெண்... அவளுக்கு எல்லாம் நான்தான்... இனிமே நீயும் எனக்கு ஒரு துணையா இருந்து, உன் மகளா நினைச்சு அவளை நல்லபடியா கவனிச்சுக்கணும்... என்ன?"— வசந்தாவைத் திரும்பிப் பார்த்து ராஜரத்னம் கேட்டார். வேறு எதுவும் சொல்லத் தெரியாதவளாக வெறுமே தலையை அசைத்தாள் வசந்தா.

காதம்பரிக்கு ஏனோ கண்கள் கலங்கப் பார்த்தன. பிடிவாதத்துடன் கண்களைத் தெளிவாக்கிக் கொண்டாள். மிகவும் எதிர்பாராமல் அவளுக்கு அவளுடைய அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மா இருந்திருந்தால் இந்த நிலைமையெல்லாம் வந்திருக்குமா? எப்படியெல்லாம் நினைக்கப் பார்த்தாலும் கூட வசந்தா மூன்றாம் மனுஷியாகவே தெரிந்தாள்,

"அப்பா, பின்னாடி திரும்பிப் பார்த்தது போதும்; பாதையைப் பார்த்து ஓட்டுங்க... எதிரே லாரிக்காரன் வந்திட்டிருக்கான்..."— காதம்பரி வேண்டுமென்றே ராஜரத்னத்தைக் குத்துவது போல் சொன்னாள். அவருக்கு அது புரிந்தது. பதிலுக்கு, அவரும் அவ்வப்போது அவளிடம் அதே காரியத்தைச் செய்ய வேண்டும். மறுமண நோக்கத்தின் இயக்கமே அதுதானே!

"நான் திரும்பிப் பார்க்கக்கூடாதுன்னுதான் வசந்தாவை முன்ஸீட்டில என் பக்கத்துல உட்காரச் சொன்னார் குமாரசாமி."

காதம்பரி அடித்த பந்து அவளிடமே திரும்பி விட்டது! பலமாக அவளைத் தாக்கியும் விட்டது.

"காரை நிறுத்துங்கப்பா..."



ராஜரத்னம் சிரித்தபடியே காரை ஓட்டிக் கொண்டிருந்தார்.

'நிறுத்துங்கனு சொன்னா நிறுத்திடணும்...!"

"என்னம்மா நீ... நான் ஏதோ தமாஷுக்குச் சொன்னா..."

"இதுவா தமாஷ்! என்னை இன்ஸல்ட் பண்ணிட்டீங்களேப்பா... டைரக்ட்டா அப்பவே நீங்க என்கிட்டே சொல்லியிருக்கலாமே... நான் அத்தை வர்ற கார்ல வந்திருப்பேனே...!"

"நான் விளையாட்டுக்குத்தான் சொன்னேன்னு சொல்லிட்டேன். அப்புறமும் ஏம்மா கோவமா பேசறே?"

"எது விளையாட்டு, எது விளையாட்டு இல்லேன்னு எனக்குத் தெரியும்!"

"இல்லை... உனக்குத் தெரியலை."

"சரி, எனக்குத் தெரியலைதான். காரை நிறுத்துங்க."

"காரை எதுக்கு நிறுத்தணும்? இதோ வீடு வரப் போகுது."

"நான் வீட்டுக்கு வரலை!"

"வீட்டுக்கு வராம எங்கே போகப் போறே?"

'என்னோட ஃப்ரெண்டு வீட்டுக்குப் போகப் போறேன்..."

"சாவித்திரி வீட்டுக்கா?"

"காளிதாஸ் வீட்டுக்கு!"

அக்கணத்தில் கார் சரியாகக் காதம்பரியின் வீட்டுக்கு முன் குலுங்கி நின்றது. தொடர்ந்து வந்த கார்களிலிருந்து

எல்லோரும் இறங்கி நிற்க, காதம்பரி மட்டும் இறங்க மறுத்து காரிலேயே உட்கார்ந்திருந்தாள். வசந்தா மலைத்துப் போய் நின்றாள். காதம்பரியின் இத்தன்மை அவனுக்கு நம்ப முடியாததாகவே இருந்தது. ஒரு சவாலாகவும் தெரிந்தது. பயமாகவும் இருந்தது.

வேறொரு காரிலிருந்து இறங்கி பத்மாவதி வேகமாக வந்தாள்.

''ஏன், என்ன ஆச்சி?''

''காதம்பரி வீட்டுக்குள்ளேயே வரமாட்டேங்கிறா...''

''எதுக்கு?''

''காளிதாஸைப் பார்க்கிறதுக்கு போகப் போறாளாம்...''

''இப்ப என்னத்துக்கு திடீர்னு?''

''நான் ஏதோ விளையாட்டுக்கு ஒரு வார்த்தை சொன்னேன்,''

''உங்களுக்கு விளையாட்டா இருக்கலாம்!''—காதம்பரி வெடித்தாள்.

பத்மாவதிக்கு நிலைமை புரிந்தது. ''சரி சரி, நீ அத்தைகூட வா... இந்த நேரத்துல எங்கே சாப்பிடாம வெளியில் போறது... சாப்பிட்டுட்டு காளிதாஸ் வீட்டுக்குப் போ...''

''இல்லை அத்தை, என்னை வற்புறுத்தாதீங்க... உடனே நான் காளிதாஸ் வீட்டுக்குப் போய் அவரைப் பார்த்தாகணும்...''

''உன்னைப் போக வேண்டாம்னு சொல்லலை. இறங்கி வந்து சாப்பிட்டதும் போ...''

''சாப்பாடு வேண்டாம் எனக்கு...''

காதம்பரி காரைவிட்டு இறங்கி வரமாட்டாள் என்பது ராஜரத்னத்துக்குத் தெரிந்தது.

''நீ இப்படியெல்லாம் செய்யறதைப் பார்த்தா, எல்லாரும் உன்னைத்தான் தப்பா நினைப்பாங்க.''

''நினைச்சா நினைக்கட்டும்!''

''அப்ப ஒன்னு செய்... காளிதாஸைப் பார்த்துட்டு அரை மணியில் சாப்பிடறதுக்கு அவரையும் அழைச்சிட்டு வந்துடு...''

''பார்க்கலாம்!''

உறவினர்கள் அனைவரும் சூழ்ந்து நின்று கவனிக்க, காதம்பரி தன் மனோவேகத்தை காரின் வழியாக உணர்த்திவிட்டு அசுர வேகத்தில் கிளம்பினாள்.

''வசந்தா காதம்பரி கொஞ்சம் பிரச்னைக்குரிய பெண்... ஆனா, ரொம்ப உறுதியானவ... அம்மா இல்லாத பெண். அதனால நாமதான் கொஞ்சம் அவளை அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்' —ராஜரத்னம் வசந்தாவிடம் சொன்னார்,

பத்மாவதியும் அவனைச் சமாதானம் செய்வது போலப் பேசினாள்: ''பயந்துட்டீங்களா... சில சமயத்துல, அவ இப்படி முன்னே பின்னே இருந்தாலும் ரொம்ப நல்ல பிள்ளை ஒரு சின்ன விஷயத்தைக்கூட மனசு தாங்காது அவளுக்கு.''

சில உறவின் பெண்கள் ஆரத்தி எடுக்க, ராஜரத்தனமும் வசந்தாவும் வீட்டுக்குள் நுழைந்த அதே சமயத்தில், காதம்பரி தன்னை நூலில் இருந்து அறுபட்ட காற்றாடியாக எண்ணிக் கொண்டே தன்னிரக்கச் சுமையுடன் காரை காளிதாஸ் வீட்டின் முன் நிறுத்திவிட்டு இறங்கினாள்.

''மிஸ்டர் காளி[illegible] நின்று கூப்பிட்டாள்.

15384
3173307

''யாரது?'' என்றபடி வெளியில் வந்த காளிதாஸின் அம்மா, காதம்பரியைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்து விட்டாள்.

''வாம்மா தாயி. உள்ளே வா...''—பரிவுடன் காதம்பரியின் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

''காளிதாஸ் இல்லையா?''

''காலையிலேயே வெளியே கிளம்பிப் போனான். எங்கே போனானோ?''

காதம்பரிக்குத் தாங்க முடியாத எரிச்சல் வந்தது.

''அவன் உங்கப்பா கல்யாணத்துக்கு ஏன் போகலைன்னு தெரியலை.''

''நான்தான் அவரை வரவேண்டாம்னு சொன்னேன்!''

''நீ சொன்னியா?''—காளிதாஸின் அம்மா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஆமா, சும்மா ரெண்டாம் கல்யாணம்தானே!''

''அப்படிப் பேசக்கூடாது தாயி. வயசு எத்தினி ஆனா என்ன? ஆம்பளைக்குப் பொம்பளை என்னிக்கும் பொம்பளைதான்!''

''அது சரிதாங்க. கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு, பொம்பளைக்கும் ஆம்பளைக்கும் ஒரு வயசு வேணாமா?''

''அதைச் சொல்றதுக்கு நாம யாரு தாயி... அப்போ உன் அப்பா இந்தக் கல்யாணம் பண்ணிக்கறதில் உனக்கு இஷ்டமில்லையா?''

''இல்லை. அதான் ஏதோ கடமைக்குக் கல்யாணம் முடியற வரைக்கும் அங்கே இருந்தேன். முடிஞ்சவுடனே இவரைப் பார்க்கிறதுக்குப் புறப்பட்டு வந்திட்டேன்.''

''அப்ப என் மகன் இன்னொரு கல்யாணம் செஞ்சுக்கறதா இருந்தால்கூட வாணாம்னு சொல்லுவே போலிருக்கே!''

''ஐயோ! அதெப்படி அவரைச் சொல்ல முடியும்!'' எங்கப்பாவோட பொஸிஷன் வேற; காளிதாஸோட பொஸிஷன் வேற இல்லியா?''

''நீயும் கல்யாணமாகி போயிட்ட பின்னாடி உங்கப்பாவுக்கு மட்டும் துணை வேணாமா?''

''நான் தான் கல்யாணம் பண்ணிக்காம அப்பா கூடவே இருக்கேன்னு சொல்றேனே!''

''கன்னிப் பிள்ளை நீ; இப்படியெல்லாம் பேசாம இருக்கணும்.''

''எனக்கொரு உதவி செய்யறீங்களா?''

''சொல்லு தாயி. உனக்கு இல்லாததா?''

''எனக்குப் பசிக்குது. கொஞ்சம் சாப்பாடு இருந்தா போடறீங்களா?''

''எனக்கும் சேர்த்துப் போடுங்கம்மா!''

காதம்பரி சட்டென்று திரும்பிப் பார்த்தாள். புன்சிரிப்புடன் காளிதாஸ் நின்று கொண்டிருந்தான்.

அவனுடைய நண்பன்...! அவனுடைய உணர்வுகளுக்கு உயர்வு தந்து திருமணத்துக்கு வராமல் இருந்து கொண்ட காதம்பரியின் நட்புக்கு அடிமை நின்று கொண்டிருந்தான். 'நன்றி நண்பா'- காதம்பரியின் மனம் துடித்தது. நெகிழ்ந்தது. கரைந்தது. வணங்கியது. இதுவரை உள்ளுக்குள்ளேயே சஞ்சலித்தபடி இருந்த தன்னிரக்கம் பீரிட்டுக் கொள்ள, காதம்பரி யாரும் எதிர் பாராமல் ஓவென்று கதறியபடி அழத் தொடங்கினாள்.

காதம்பரியின் இந்த அழுகையை—எதிர் வீட்டிலோ பக்கத்து வீட்டிலோ ஏதோவொரு கண்டனத்துக்கு

ஆளாகிய குழந்தை ஒன்று, தன் வீட்டுக்குள் நுழையும் வரை இறுகிப் போய் வந்துவிட்டு, தன்னுடைய தாயைப் பார்த்த நிமிஷம் பெரிய சத்தமாக அழத் தொடங்குமே—அதற்கு ஒப்பாகச் சொல்லாம்...!

## 11

"காதம்பரி செய்யறதையெல்லாம் பார்த்து பயந்துட்டியா...?"—ராஜரத்னம் வசந்தாவை இரக்கத்துடன் கேட்டார்.

"எப்பவுமே அது இப்படித்தான் இருக்குமா...?"

"இதைவிட மோசமாக்கூட இருக்கும்."

"எல்லாம் கல்யாணமானா மாறிடும்..."

"அதான் கல்யாணமே வேண்டாம்னு சொல்லுதே...?"

"கல்யாணத்துக்கு முன்னாடி எல்லா பொண்ணும் சொல்ற வார்த்தைதான் அது..."

"காதம்பரி விஷயம் வேறே வசந்தா!"

தான் உண்மையில் வசந்தாவை எதற்காக மணந்து கொண்டிருக்கிறோம் என்பதை ராஜரத்னம் நினைத்துப் பார்த்தார். வசந்தாவின் முகத்துக்கெதிராக அந்த உண்மையை உடைத்துவிட முடியுமா...? ராஜரத்னத்தின் மனத்தில் குற்ற உணர்ச்சி அரும்பியது

"அது யாருங்க காளிதாஸ்..."

"கேள்விப்பட்டதில்லையா நீ...? அவர் நல்ல எழுத்தாளர். அவரோட கதைகள்னா காதம்பரிக்கு உயிர். காதம்பரிக்கு மட்டுமில்லாம, நம்ம குடும்பத்துக்கே நல்ல நண்பர்..."

"வயசில் சின்னவர் தானா...?"

"அவருக்கு முப்பத்தெட்டு வயசு இருக்கும். ஆனா, அவரோட மனைவி இறந்துட்டாங்க... அதுக்கப்புறம் காளிதாஸ் கல்யாணம் பண்ணிக்கலை..."

"நம் கல்யாணத்துக்கு அவர் ஏன் வரலை...?"

"தெரியலை!"

ராஜரத்னத்துக்கு பேச்சின் திசையை மாற்றலாம் போலிருந்தது. ஓரக்கண்ணால் வசந்தாவைக் கவனித்தார். எதை எதையோ பேசிக் கொண்டிருந்தாலும் அவளின் மனம் எதையோ எதிர்நோக்கி ரகசிய சிலிர்ப்பில் புரண்டு கொண்டிருக்கிறது என்பதை அவர் கண்கூடாகக் கண்டார். ஒரு மாதத்துக்கு முன்பு அவளைப் பெண் பார்க்கப் போயிருந்தபோது இல்லாதிருந்த பிரகாசம், வசந்தாவின் உடலில் ஏற்பட்டிருந்தது. மனத்தில் ஏற்பட்ட நம்பிக்கையும், உடலில் மலர்ந்த இனிய கிளர்ச்சிகளும் அப்படியொரு பிரகாசத்தை ஒளியேற்றியிருந்தன. இன்று வரை ஆடைகளால் தவிர வேறு எதனாலும் ஸ்பரிசிக்கப்படாத அவளின் மார்பு ஏற்றங்களில், சுவாசத்தால் ஏற்பட்ட சலனம்கூட வசந்தாவின் கன்னி நிலையைத் துல்லியமாய்க் காட்டின. அது ராஜரத்னத்தை சற்றே அச்சுறுத்தியது. இந்தப் பெண் மயில் தோகை இல்லை. இவள் உழைத்து மெருகேறிய வெண்சங்கு

ராஜரத்னம் மெதுவாக வசந்தாவின் கையைப் பற்றி அநுதாபத்துடன் தன் நெஞ்சில் வைத்துக் கொண்டார். அந்தரங்கத்தில் எதிர்நோக்கிக் கொண்டிருந்த தருணத்தைத் தொட்டுவிட்ட மெலிதான சிலிர்ப்பு வசந்தாவின் உடலில் பரவி உணர்வுகள் பூரிக்க ராஜரத்னத்தின் நெஞ்சில் சாய்ந்தாள். அவளின் உச்சி முகர்ந்த ராஜரத்னத்தின் உணர்வுகளின் ஆழத்தில் உறைந்து போயிருந்த பாலுணர்வுக் கோசம் மெதுவாகத்

தலைவிரித்தது. வசந்தாவின் முதுகை வருடிக் கொடுத்தார். செவியோரக் கூந்தல் இழைகளைச் செம்மையாக ஒதுக்கி விட்டார். கருணையுடன் முகத்தை நிமிர்த்தி, மோகத்தில் மூடியிருந்த வசந்தாவின் கண்களை ராஜரத்னம் முத்தமிட்ட போது, மிகப் பெரிய உண்மை ஒன்று அவர் மனத்தில் திடீரெனத் திரை விலக்கியது.

வசந்தாவுக்குக் குழந்தை பாக்கியத்தைக் கொடுப்பதைப் பற்றித் துளிக்கூடச் சிந்திக்காமல் தவறிவிட்ட பிழை நிடுமென அவருடைய மனத்தில் கத்திபோல் பாய்ந்து நின்றது. முதல் மனைவி மூலம் பிறந்த இரண்டு பெண்களுக்குப் பிறகு குழந்தை வேண்டாமென்ற தீர்மானத்தில் அவர் செய்து கொண்ட அறுவைச் சிகிச்சை, வசந்தாவுடன் ஆரம்பித்திருக்கிற தாம்பத்திய வாழ்க்கைக்குத் தகுமா...? இன்னும் குழந்தை பாக்கியமே அடையாத வசந்தாவுக்கு அந்த விதி பொருந்துமா அல்லது நியாயமா...? குழப்பச் சுழல் ஒன்று ராஜரத்னத்தைச் சுழலத் துவங்கியது. வசந்தாவுக்குக் குழந்தை பாக்கியத்தை மறுப்பது நியாயமா, நியாயமில்லையா என்பதை அவரால் அநுமானிக்க முடியவில்லை. அவருள் மூண்டுகொண்டிருந்த மோகம் சட்டென்று காணாமல் போனது. வசந்தாவைப் பற்றியிருந்த அவரது பிடி தளர்ந்தது. லேசாக அவளுடைய புஜங்களைத் தட்டிக் கொடுத்தார்.

"வசந்தா..." — தணிந்த குரலில் அழைத்தார்

"உம்..."

"இன்னிக்கு உனக்கு ரொம்ப களைப்பா இருக்கும், படுத்துக்கோ... ரொம்ப நேரமாயிடுச்சு..."

வசந்தாவின் மனத்துக்குள் ஏமாற்றமாக இருந்தது. அவளுக்குக் கொஞ்சம்கூட களைப்பு இல்லை. எனினும், என்ன சொல்வது...? அகன்ற அந்த இரட்டைக் கட்டிலின் விளிம்பில் ஓரமாகப் புரண்டு படுத்தபடி கண்விழித்திருந்தாள். கட்டிலின் மறு விளிம்பில் ராஜரத்னமும் கண்விழித்தபடி படுத்திருந்தார்.

இவர்களைப் போலவே காதம்பரியும், அவளுடைய அறையில் தூக்கம் வராமல் விழித்தபடி படுத்திருந்தாள். கடந்த பல வருடங்கள் மூடப்பட்டிராத அப்பாவின் அறைக் கதவுகள் இன்று மூடப்பட்டிருந்ததே — அவளுடைய வாழ்க்கையில் ஏதோ வொன்று மூடப்பட்டிருப்பதன் குறியீடாகத் தெரிந்தது. பெரிய இம்சையாக இருந்தது. இன்னொரு முதல் இரவு! மூன்றாவது முதல் இரவும் வருமா...? காதம்பரியின் மனம் இகழ்ச்சியாக எண்ணியது. எழுந்து போய் அப்பாவின் அறைக் கதவைத் தட்டலாமா என்றுகூட இருந்தது. எதற்காக மூடவேண்டும்...? இந்தக் கதவு மூடல், அவளை அவமதிப்பதாகக்கூட இருந்தது!

சட்டென்று காதம்பரி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். என்னவோ யோசித்தாள். கதவுகளைப் பூட்டிக் கொண்டு வசந்தாவும் ராஜரத்னமும் அவளைக் கேலி செய்து பேசிக் கொண்டிருப்பது போன்ற கற்பனை எழுந்தது. அந்தக் கற்பனை உண்மை போலவே தோன்றியது. அவ்வளவுதான்... காதம்பரியின் மனம் பொங்கியது. ஆவேசப்பட்டது. கட்டிலை விட்டு இறங்கினாள். வேகமாக ராஜரத்னத்தின் அறையை நோக்கி நடந்தாள். வசந்தாவையே ஓங்கி ஓங்கி அறைவது போன்ற கற்பனையுடன் கதவைப் பலமாகத் தட்டினாள்...

"அப்பா... அப்பா..."

தூங்காமல் விழித்திருந்த ராஜரத்னம் உடனே எழுந்து உட்கார்ந்தார். கூப்பிடுவது காதம்பரிதானா என்ற மெல்லிய சந்தேகத்தில் சில விநாடிகள் தயங்கினார்.

"கதவைத் திறங்கப்பா... கதவைத் திறங்க..." — காதம்பரியின் குரல் பலமாகக் கேட்டது. சட்டென்று

ராஜரத்னம் எழுந்து போய்க் கதவைத் திறந்தார். படுத்திருந்த வசந்தாவும் எழுந்து உட்கார்ந்தாள்.

''என் ரூமுக்குப் பக்கத்துலே பாம்பு! ஜன்னல் வழியா பார்த்தேன்...'' — காதம்பரி அவருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு படபடப்புடன் சொன்னாள். அப்போது பத்மாவதியும் தூக்கம் கலைந்து எழுந்து வந்தாள்.

காதம்பரி தரதரவென்று ராஜரத்னத்தைத் தன் அறையின் ஜன்னலுக்கருகே இழுத்துச் சென்றாள்.

''இதோ, இங்கேதாம்ப்பா பார்த்தேன்...'' — சில விநாடிகள் ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருந்த ராஜரத்னம் உரக்கக் கூப்பிட்டார்.

''வாட்ச்மேன்... வாட்ச்மேன்...''

பதிலே இல்லை

''பத்மா, நீ முதல்ல வெளியில இருக்கிற விளக்குக்கான சுவிட்ச்சைப் போடு...!''

''நல்லா பார்த்தியாம்மா காதம்பரி...?''

''நல்லா பார்த்தேன், அத்தை...''

''வாட்ச்மேன்... வாட்ச்மேன்...''

பத்மாவதி தோட்டத்து விளக்குகளைப் போட, தெரு முனைவரை போயிருந்த வாட்ச்மேன் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு வேகமாக ஓடி வந்தான். அவனைப் பார்த்ததும் ராஜரத்னம் வாசல் கதவைத் திறந்து தோட்டத்துக்குச் சென்றார்.

''வாட்ச்மேன், ஏதோ பாம்பு ஜன்னல் வழியா வந்து போச்சுன்னு காதம்பரி சொல்லுது...''

''இதோ பார்க்கறேன் ஐயா...'' என்று வாட்ச்மேன் ஒரு கம்பைத் தேடிப் பின் புறம் ஓடினான். தோட்டத்துக்கு வந்த காதம்பரியை, ராஜரத்னம் உள்ளே போகச் சொன்னார்.



''நீ உள்ளே போம்மா...''

காதம்பரி மௌனமாக அவர் அருகிலேயே நின்றாள். தூரத்தில் நின்று கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வசந்தாவைக் குரூர இன்பத்துடன் கவனித்தாள் காதம்பரி. சிவபூஜையில் கரடியாகத் தான் நுழைந்து விட்ட இறுமாப்புடன் மனத்துக்குள் களிப்படைந்தாள்.

'இரு... இரு... தினமும் இதே மாதிரி ஏதாவது செய்கிறேன்!'

அந்தக் கற்பனைப் பாம்பு கிடைக்காமலே போயிற்று.

காதம்பரியின் இந்தத் தன்மைகள் வசந்தாவை மேலும் மேலும் மருளச் செய்திருந்தன. தன் மண வாழ்க்கை இப்பெண்ணால் சுமுகமாக இருக்காதோ என்ற சந்தேகம் வந்தது. தயங்கித் தயங்கிப் படுக்கச் சென்றாள்.

''அப்பா, தனியா படுக்க பயமாயிருக்குப்பா எனக்கு...!''—காதம்பரி அடுத்த பொய்யைப் பிரயோகித்தாள்.

''சரி, நானும் உன் கூடவே வந்து படுத்துக்கறேன் வா...''— பத்மாவதி காதம்பரியின் கையைப் பிடித்து அவளின் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

தோட்டத்து விளக்குகள் அணைக்கப்பட்டன.

''பயப்படாம தூங்கும்மா...''

சொல்லிவிட்டு ராஜரத்னம் அவருடைய அறைக்குப் போய்க் கதவைப் பூட்டிக் கொண்டார். பத்மாவதியும், காதம்பரியும் அருகருகில் படுத்துக் கொண்டனர்.

''தூக்கமே வரமாட்டேங்குது அத்தை...''

''நீ இன்னிக்கி சின்னம்மாகிட்டே மரியாதைக்குக்கூட ஏன் ஒரு வார்த்தை பேசலை...?''

"அவங்களைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கமாட்டேங்குது அத்தை..."

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. உனக்குப் பிடிக்குதோ இல்லையோ, நம்ம வீட்டுக்கு அவங்க வந்தாச்சு..."

"யார் வரச் சொன்னா..."

"வரச் சொன்னது உன் அப்பாதானே?"

"அதுக்குத் தண்டனை எனக்கா...?"

"தப்பு செஞ்சது நீதானே... முதல்லேயே நீ சொல்லியிருக்கணும் அப்பாகிட்டே..."

"சொல்லிருந்தா பிரச்னை வேற மாதிரி இருந்திருக்கும் அத்தை...உங்களுக்குத் தெரியாது..."

"என்னதான் இருந்தாலும் உனக்கு இத்தனை பிடிவாதம் கூடாது. மத்தியானம் வசந்தா வீட்டுக்காரங்க அத்தனை பேரும் திகைச்சுப் போய் நின்னுட்டாங்க..."

காதம்பரிக்குள் ஏனோ உணர்ச்சிகள் மூண்டன. குரல் அடைக்கப் பதில் சொன்னாள் :

"நீங்க சொல்லுங்க அத்தை, எப்பவும் கார்ல அப்பா கிட்டே நான்தானே உட்காருவேன்...திடீர்னு இன்னிக்கி அப்பா அப்படிச் சொன்னா என்னால தாங்க முடியுமா...?"

"உன்னை அதையெல்லாம் தாங்கிக்கச் சொல்லலை, அப்படி எல்லாரும் பார்க்கும் படியா நீ நடந்து கொண்டிருக்க வேண்டாம்... அந்தப் பொண்ணோட மனசையும் நீ நினைச்சுப் பார்க்க வேண்டாமா...? அதான் நான் சொல்றது...உன்னை ரொம்பப் பொல்லாத பொண்ணுனு நினைச்சிடுவாளே..."



"நல்லா நினைக்கட்டும்... அப்படி அவங்க நினைச்சாத்தான் எனக்குச் சந்தோஷம்...!"

"நான் ஒண்ணு சொல்லுவேன். அப்பாகிட்டே சொல்லிடமாட்டீங்களே..."

"யார்கிட்டேயும் சொல்லமாட்டேன்..."

"பாம்பு வந்ததுன்னு சொன்னேனே, அது நிஜமில்லை அத்தை...!"

பத்மாவதி இரண்டு கைகளாலும் வாயை மூடியபடி காதம்பரியைத் திகைப்புடன் பார்த்தாள்.

"நெஜமாவா...?"

காதம்பரி தலையை அசைத்தாள்.

"ஏம்மா காதம்பரி அப்படிப் பொய் சொன்னே...?"—பத்மாவதி தணிந்த குரலில் கேட்டாள்,

காதம்பரி பதில் சொல்லவில்லை, மங்கிய விளக்கு வெளிச்சத்திலும் அவளுடைய கண்களில் நீர் தளும்பிப் பளபளத்தது. காதம்பரி ஒன்றும் சொல்லாத நிலையிலேயே, பத்மாவதியின் நெஞ்சில் துக்கம் கவிந்தது. எதற்காக அந்தப் பெண் இப்படிப் பொய் சொன்னாள் என்ற உண்மையை அறிய அவளுடைய அறிவு அஞ்சியது. திகைப்புடன் காதம்பரியையே பார்த்துக் கொண்டிருந்தவள், அவளின் கண்களிலிருந்து உதிர்ந்த நீரை ஆதரவுடன் துடைத்து விட்டாள்.

"சில சமயத்தில் எனக்கு என்னையே பிடிக்கமாட்டேங்குது அத்தை..."—காதம்பரியின் குரல் பொருமலுடன் ஒலித்தது.

"நான் மட்டும் ஏன் எல்லார் மாதிரியும் இருக்காம வேற மாதிரி இருக்கேன்? நான் மட்டும் மனசுக்குள் ஏன் இப்படி நிம்மதியே இல்லாம இருக்கேன்...?"

"இப்படி ஒரு நல்ல தகப்பன் உனக்குக் கிடைச்சும், இந்த மாதிரி நீ இருந்தா என்னத்தைச் சொல்றது நான்...!"

"இத்தனை வருஷமா இல்லாம, இன்னிக்கு அப்பா வோட பெட்ரூம் கதவை அவரே பூட்டிக் கொண்டதை என்னால தாங்கவே முடியலை அத்தை! திடீர்னு நெனைச்சா பதினோரு மணிக்குக் கூட அப்பாகிட்டே கட்டில்ல படுத்துக்கிட்டு ஏதாவது கதை பேசிட்டிருப்பேன், ஆனா, இன்னிக்குப் பாருங்க—ஒரு சம்பிரதாயத்துக்குக்கூட என்கிட்டே ஒரு வார்த்தை பேசாம போய்க் கதவைப் பூட்டிக்கிட்டார்!"

பத்மாவதிக்கு என்ன ஆறுதல் சொல்வதென்றே தெரிய வில்லை. கேட்கக் கேட்க அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. காதம்பரியின் இந்த மனப்பின்னலெல்லாம் அவளுக்குப் புரியாததாக இருந்தது.

"அதனாலதான் பொய் சொல்லிக் கதவைத் திறக்க வெச்சேன்! வெக்கமே இல்லாம சொல்றேன் அத்தை, அப்பா கதவைத் திறந்த ஒரு நிமிஷம் எனக்கு எத்தனை சந்தோஷமா இருந்துச்சு தெரியுமா? ஆனா, இதுல நான் ஏன் சந்தோஷப்படறேன்னு எனக்கே தெரியலை அத்தை. எனக்கு ஏன் அப்பாவோட புது மனைவி மேல பொறாமை பொறாமையா வருதுன்னு என்னாலேயே புரிஞ்சுக்க முடியலை..."

பத்மாவதி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். "இதெல்லாம் தாயில்லாப் பொண்ணு என்கிறதாலே வந்த வினை...வேற என்ன சொல்றது நான்...?"

"திடீர்னு எனக்குப் பத்தொன்பது வயசு பொண்ணா இருக்கறதுக்குப் பிடிக்கவே இல்லை. வயசாக, வயசாகத் தான் வாழ்க்கையில் கவலையும் பிரச்னையும் அதிகமாகிற மாதிரியிருக்கு. சின்னப் பிள்ளையா இருந்தா கவலையே இல்லை. விளையாடறதுக்கு நாலு பொம்மையும் ரெண்டு



பலூனும் போதும்! விளையாடற நேரத்துல விளையா டிட்டு, தூங்கற நேரத்துல தூங்கிடலாம். பாருங்க படுத்தா எனக்கு தூக்கமே வர்றதில்லை... சில நாள் ஒரு மணிக்குக் கூடத் தூங்காம முழுச்சிட்டிருப்பேன்..."

—பேசிக்கொண்டே இருந்த காதம்பரி சட்டென மௌனமானாள். அவளின் புருவங்கள் சற்றே நெரிந்தன. கண்கள் வெகு தூரத்தில் லயித்தன. அவளின் மனம் அம்பின் முனை என வெகு தூரத்துக்குப் பின்னோக்கிச் சூட்சுமமாக விரைந்து, சுழன்று மீண்டது. இனி அவளால் குழந்தையாக மாற முடியாது. ஆனால், இனி இந்த வீட்டில் வேறொரு குழந்தை பிறந்து விளையாடும் சாத் தியம் இருப்பது காதம்பரிக்குத் தெரிந்தது!

இந்த நினைவு வந்த மாத்திரத்தில் அவள் அதிர்ந்து போனாள். இந்தச் சாத்தியத்தை இதுவரை அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. என்ன அநியாயமான சாத்தியம்! அதுவும் இந்த வீட்டுக்குள்!

ராஜரத்னம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக் கிற தகவலைத் தெரிந்திராத காதம்பரியின் நூதன உணர் வுகள் மலைத்தன.

"அத்தை..."

"என்னடா...?"

"நம்ம வீட்லே சரியா பத்து மாசத்துல அப்பாவோட புது மனைவிக்குக் குழந்தை பிறந்திடுமா...?"

"அதுக்குத்தான் சொல்றேன், சட்டுப்புட்டுனு நீயும் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு உங்க அக்கா மாதிரியே அமெரிக்காவுக்கோ, ஆப்பிரிக்காவுக்கோ போய்ச் சேர வழியைப் பாரு..."

—பத்மாவதியின் பதில், காதம்பரியின் பிரக்ஞையில் போய்ச் சேரவில்லை. சுழலும் காற்றாடியைக் கண்ட வாறு படுத்திருந்தாள். அவளுள் ஞாபகம் என்னும் பலூன்

எல்லைகளால் விரிந்து பெருத்தது. பலூன் பெருக்கப் பெருக்க, அதன் சித்திரங்களும் பொருந்துப் படர்ந்தன. அகன்ற திரைப்படக் காட்சியாகக் கடந்த காலச் சம்பவங்கள் மௌனமாக விரிந்தோடின

—அந்த வெகு தூரக் காட்சிகளில் கண்கள் லயித்திருக்க, காதம்பரியின் கண்களில் அனிச்சையாக நீர் பரவிக் கன்னங்களில் வழிந்தது.

## 12

காதம்பரி பிறந்த சமயத்தில் தனக்கு மேற்கொண்டு குழந்தைகள் வேண்டாம் என்று கருத்தடை ஆபரேஷன் செய்து கொண்டதை எண்ணிக் குழம்பினார் ராஜரத்னம். மறுபடியும் டாக்டரைச் சந்தித்து ஒரு சின்ன ஆபரேஷன் செய்து கொண்டால் அந்தக் குறையை நிவர்த்தி செய்து விட முடியும் என்றும் அவருக்குத் தெரியும். சீக்கிரம் செத்து விடுவோமோ என்று பயப்படும் அளவுக்கு, தனக்கு வயசாகிவிடவில்லை என்றாலும், இதன் பிறகு ஒரு குழந்தையைப் பெற்று, வளர்த்து ஆளாக்குகிற அளவுக்குத் தனக்குத் தெம்பு இருக்குமா என்பதே அவர் குழப்பத்துக்குக் காரணமாக இருந்தது.

தனக்குக் குழந்தை தேவையா, இல்லையா என்பதை விட, வசந்தாவுக்கு குழந்தை வேண்டுமா, வேண்டாமா என்பதே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார்.

'எந்த யோசனையும் இல்லாம அவளுக்குக் குழந்தை தான் வசந்தாவுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு... இன்னும் சொல்லப் போனால், குழந்தைதான் அவளுடைய எதிர் காலத்துக்குச் சரியான பாதுகாப்பு...''

தனது அலுவலக அறையில் ராஜரத்னம் சிகரெட் பற்ற வைத்தபடி சிந்தனையில் ஆழ்ந்தார். இந்தக் குழப்பத்தினால், பாலுறவுச் சேர்க்கை இல்லாமலே வசந்தாவுடன் கழித்துவிட்ட கடந்த சில இரவுகளை நினைத்தார். மனத்தால் அவருக்குள்ளும் வசந்தாவுக்குள்ளும் நிகழ்ந்துவிட்ட அந்த உறவு—ராஜரத்னத்தில் மிதக்கும் தூசுகளாக மிதந்து சஞ்சலித்துக் கொண்டிருந்தது. யதார்த்தப் பரிச்சயமற்றதால் வசந்தா அது குறித்த ஆர்வ நுனியில் ஒரு போதையுடன் காத்திருந்ததை ராஜரத்னம் உணரத்தான் செய்தார். எனினும், அவர் செயல்படாமலிருந்தார். மங்கிய வெளிச்சத்தில் படுத்தபடி நகம் கடித்து விழித்திருந்த வசந்தாவின் விழிகளில் மிதந்து கொண்டிருப்பது என்னவென்று அவருக்குத் தெரிந்தது. நீர்த் துறையில் காத்திருக்கும் ஆளற்ற படகு போல் வசந்தா! நீரின் அலைப்பில் படகு அசையாதா? வசந்தா என்னும் படகு அசைந்தது, ஆடியது, நீரில் விரைய வேட்கை கொண்டது. ஆனால், படகுக்காரர் கரையில் நிற்கிறார்...! படகில் அமரத் தயக்கம் காட்டுகிறார்...!

டெலிபோன் மணி ஒலிக்கவும் ராஜரத்னம் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...!''

''குட்மார்னிங் அங்கிள்...நான்தான் சாவித்திரி பேசறேன்...''

''என்னம்மா... எப்படியிருக்கே? ரொம்ப நாளா வீட்டுப் பக்கம் வரவே இல்லையே நீ?''

''உங்களுக்குத் தெரியாதா அங்கிள் எங்கப்பாவைப் பத்தி... ரொம்ப நாள் கழிச்சு இன்னிக்குத்தான் எங்க அக்கா வீட்டுக்கு வந்திருக்கேன்... அதுக்கே ஆயிரத்தெட்டு

கேள்வி...என்ன அங்க்கிள், உங்க வீட்டு போன் வேலை செய்யலையா...?''

''ஆமாம்மா... வீட்டுக்கு போன் பண்ணியா?''

''ஆமா, அரை மணி நேரமா ட்ரை பண்ணிட்டே இருக்கேன், கிடைக்கலை.''

''காதம்பரிகிட்டே எதுவும் சொல்லணுமாம்மா ?''

''நான் அவளுக்கு லெட்டர் எழுதிக்கறேன் அங்க்கிள்...''

''வீட்டுக்கு வாயேன்...''

''உங்க கல்யாணம் எல்லாம் நல்லபடியா நடந்ததா அங்க்கிள் ?''

''வெரி சிம்ப்பிள்...உனக்கு எக்ஸாம்ஸ் நெருங்கிடுச்சே.... நல்லா தயார் பண்ணியிருக்கியாம்மா ?''

''ஏதோ பண்ணியிருக்கேன். காதம்பரி எப்படி அங்க்கிள்...?''

''அவளுக்கு எக்ஸாம் ஞாபகம் இருக்கான்னே சந்தேகமாயிருக்கு எனக்கு, புத்தகத்தைத் தொடறதே கிடையாது...''

''அது சரி... சும்மா டிகிரி வாங்கி என்ன செய்யப் போறா அவ ?''

''மூணு வருஷம் படிச்சதுக்கு ஒரு அர்த்தம் வேண்டாமா ? வரவர அவளை விளையாட்டுக்குக்கூட எதுவும் சொல்லவோ, கேக்கவோ முடியலை சாவித்திரி... தொட்டதுக்கெல்லாம் விவாதம் பண்றா.''

''எப்பவுமே அவ அப்படித்தானே அங்க்கிள்...''

''இப்ப ரொம்ப அதிகம்- எப்படா கல்யாணம் பண்ணி அவளை ஒருத்தன் கையில் கொடுப்போம்னு இருக்கும்மா... நீயெல்லாம் சொல்லக்கூடாதா ?''



''யார் சொன்னாலும் கேட்கமாட்டா... உங்களுக்குத் தெரியாதா அவளைப் பத்தி?''

''தெரியறதாலேதானே கவலையா இருக்கு.''

''என்ன வேடிக்கை பாருங்க— நான் எப்போடா எங்கப்பாவை விட்டுத் தொலைஞ்சு போவேன்னு அலைமோதிண்டிருக்கேன். காதம்பரியோ, எப்பவும் அப்பாவோடயே இருக்கணும்னு ஏங்கிண்டிருக்கா...''

''என் கூடவே இருக்கறது நடக்கக்கூடிய காரியமா?''

''ஏன்... ஒருத்தி கல்யாணம் பண்ணிக்காம இருக்கக் கூடாதான்னு கேக்குறா...''

''சாவித்திரி— அவ ஒவ்வொருத்தர் கிட்டேயும் ஒவ்வொரு மாதிரி பேசறா. சில சமயத்துல அதான் எனக்குப் பிரச்னையா இருக்கு...''

''சரி அங்க்கிள்... எங்க அத்திம்பேர் போன் பண்றதுக்காகக் காத்துக்கிட்டிருக்கார். நீங்க காதம்பரிகிட்டே சொல்லுங்க. நான் அவளுக்கு விவரமா லெட்டர் எழுதறேன்... வெச்சிரட்டுமா?''

''ஓயெஸ்...!''

ராஜரத்னம் ரிஸீவரை வைத்த மறு நிமிஷம், மறுபடியும் டெலிபோன் ஒலித்தது.

''ஹலோ...!''

''குட்மார்னிங் மாமா. நான் சிவராஜ் பேசறேன்... அம்மாவை அழைச்சுட்டுப் போறதுக்கு வீடு பார்த்து அட்வான்ஸ் குடுத்துட்டேன்.''

''எந்த ஏரியாவிலே பார்த்திருக்கே?''

''இங்கே டி. நகர்லதான் மாமா. நடேசன் தெருவில் பார்த்திருக்கேன். ஞாயிற்றுக்கிழமை அம்மாவைக் கூட்டிட்டு வந்து பால் காய்ச்சிடலாம்னு இருக்கேன்...''

"உன் படத்தோட ஷூட்டிங் எப்ப ஆரம்பிக்கிறே?"

"மே 23—ல் மாமா... ஆகஸ்ட் 15—ல் ரிலீஸ்..."

"கேரி ஆன்... அப்ப நான் உன் அம்மாகிட்ட சொல்லி டறேன்..."

"சொல்லுங்க. நானும் ரெண்டு நாள் கழிச்சு வரேன்..."

"சரி வா, விவரமா அப்போ பேசலாம்..."

"சரி மாமா..."

ராஜரத்னம் ரிஸீவரை வைத்துவிட்டு, தண்ணீர் குடித்தார். காதம்பரியைச் சுற்றிச் சம்பவங்கள் நிகழத் துவங்கி விட்டதை அவர் உணர்ந்தார். பத்மாவதியிடம் காதம்பரிக்குப் பிரிக்க முடியாத உறவு கிடையாது என்றாலும்கூட, சில தருணங்களில் பத்மாவதி ஒரு செவிலித் தாயாகக் காதம்பரியால் பயன்படுத்தப்படு கிறாள்? அந்தப் பற்றும் எதிர்பாராமல் அறுபடுகிறது. இனி? வீட்டில் காதம்பரி ஒருபுறம்; ராஜரத்னமும் வசந்தாவும் ஒருபுறம்.

ராஜரத்னம் திட்டமிட்டிருந்த நாடகத்தின் திரை உயர்த்தப்பட்டு விட்டது. இனி ஒவ்வொன்றாகக் காட்சி கள்... நாடகத்தின் மையம் காதம்பரியின் திருமண பாக்கியம்தான். அந்த இறுதி விளைவுக்காகத்தான் இந்த நாடகமே எழுதப்பட்டிருக்கிறது. எனினும், நடுவில் தோன்றும் காட்சிகள் கொஞ்சம் வலிவு மிக்கவை. சற்று உஷ்ணமானவை. நாற்காலியில் சரிந்து கிடந்தபடி யோசித்துக் கொண்டிருந்த ராஜரத்னத்தின் மனம் சிறிது தயங்கியது. 'இதெல்லாம் தனக்குத்தான் நாடகம். வசந்தா வுக்கு? அவளின் ஆசைக்கும் எதிர்பார்ப்புக்கும்?'

ராஜரத்னத்தின் நாடகத்தில் தோன்றியிருக்கும் எதிர் பாராத நிலை— அவரின் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன்! உடனடியாக அந்த ஆபரேஷன் நிவர்த்திக்



கப்பட்டு வசந்தாவுக்குக் குழந்தை பிறந்தால், காதம்பரியின் எதிர்விளைவு எவ்விதம் இருக்கும் என அவர் யோசித்துப் பார்த்தார். ராஜரத்னத்தால் அதை யோசிக்க இயலவில்லை அந்தக் காட்சிவரை நாடகம் விரிவடைவதில் அவருக்கு விருப்பமில்லை. ஓரங்க நாடகத்துக்குரிய துரித கதியில் இதெல்லாம் முடிய வேண்டும். இன்னொரு விஷயமும் ராஜரத்னத்துக்குத் தெளிவாகியது. இந்த நாடகத் தோற்றம் காதம்பரியிடம் மட்டும்தான். வசந்தாவிடம் அவர் உண்மையான கணவனாகத்தான் வாழ வேண்டும். தன் குறையை உடனடியாக அவர் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். அதில் தயக்கம் காட்டுவதே பிழை.

குமாரசாமிக்கு டயல் செய்வதற்காக ரிஸீவரை அவர் எடுத்தபோது, கதவைத் திறந்து கொண்டு காளிதாஸ் வந்தான்.

"குட்மார்னிங் சார்...!"

"குட்மார்னிங் காளிதாஸ். வாங்க!"—அவனை வர வேற்றபடி ராஜரத்னம் குமாரசாமியுடன் பிறகு பேசிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் ரிஸீவரை அப்படியே வைத்துவிட்டார்.

"எப்படி இருக்கீங்க சார்?"— காளிதாஸ், ராஜ ரத்னத்தின் புதிய தாம்பத்திய வாழ்க்கையை விசாரிக்கிற தன்மையில் கேட்டபடி அமர்ந்தான்.

"ஃபைன்!" —கண்களைச் சிமிட்டியபடி ராஜரத்னம் பதில் சொன்னார். "என் கல்யாணத்து அன்னிக்கே காதம்பரி முறைச்சிகிட்டு உங்க வீட்டுக்கு வந்ததும் ஒரு மாதிரி ஆயிட்டிருப்பீங்களே?"

"திரும்பி வந்து என்ன சொன்னாங்க?"

"ஒண்ணும் சொல்லமாட்டேனுட்டா. நானும் அவளை ஒரு மரியாதைக்காகத்தானே கேட்டேன்.

அதனால் அவளை அதிகமா எதுவும் கேட்காம விட்டுட் டேன்...''

''பார்த்தா பாவமா இருக்கு சார். 'நேரமாச்சு, அப்பா காணோம்னு நினைப்பார்; வீட்டுக்குப் போங்க'னு சொன்னா, யார் வீட்டுக்கோ போகச் சொன்ன மாதிரி பயந்து நடுங்கினாங்க. 'வீட்டுக்குப் போகாம எங்கேயாவது ஓடிடலாம் போல இருக்கு'னு அவங்க சொன்னப்ப எனக்கே கூடக் கண் கலங்கிடுச்சு...''

காளிதாஸ் சொன்னது ராஜரத்னத்துக்கு சந்தோஷமாக இருந்தது.

''அப்ப அவ சரியான டைரக்ஷன்ல தான் போகப் போறாங்கிறதுக்கு அறிகுறியா இதை எடுத்துக்கலாமா மிஸ்டர் காளிதாஸ்?''

''அப்படிக்கூட இருக்கலாம். ஆனா, காதம்பரி மனசில் படற வேதனையைப் பார்க்கத்தான் ரொம்ப கஷ்டமா இருக்கு சார். வெரி வெரி சென்ஸிடிவ்...''

''ரொம்ப இளகியவ. இல்லையா?''

''இவங்க கல்யாணம் செய்துட்டாக்கூட கணவனுக்குப் பெரிய சவாலாத்தான் இருப்பாங்க...''

''யெஸ் யெஸ்... எனக்கு அது தெரியும்... சில விஷயங் களால் என்னிக்குமே அவ பிரச்னைக்குரியபெண்ணாத்தான் இருப்பா...''

''லேசா தொட்டாக்கூடச் சிணுங்கறதுதான் காதம்பரி யோட பர்சனாலிடி. இதை அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறவன் புரிஞ்சுக்கிட்டுப் பழகினா பிரச்னை இல்லை. 'என்னடா, இந்தப் பொண்ணு இப்படித் தொட்டாச்சுருங்கியா இருக்குது'னு நெனைச்சிட்டா போச்சு; பிரச்னைதான். ஆனா, ரொம்ப நேரம் அன்னிக்கு அவங்க பேசிட்டு இருந்ததுக்கப்புறம் சொன்ன ஒரு விஷயம் கொஞ்சம் முக்கியமானதாப் பட்டுது...''



''ஒரு நிமிஷம் காளிதாஸ்! நீங்க என் மகளை விடக் கிட்டத்தட்ட பதினெட்டு வருஷம் மூத்தவர். ஏன் நீங்க இன்னும் அவளை வாங்க போங்கன்னே சொல்லிட்டிருக் கீங்க? இப்போ அவளுக்கு நீங்க நெருங்கிய நண்பராகவும் ஆயிட்டீங்க... ஒருமையிலே பேசலாமே அவளை?''

காளிதாஸ் லேசாகச் சிரித்துக் கொண்டான். ''நான் கூட அப்படி நெனைச்சு ஒரு நாள் காதம்பரியை நீன்னு சொன்னேன். ஆனா, அப்படி நான் அவங்களைக் கூப் பிடறது அவங்களுக்குப் பிடிக்கலை. அப்படிப் பேச வேண்டாம்னு சொல்லிட்டாங்க! ஸோ. நானும் இனி அந்த மாதிரி பேசிடக்கூடாதுன்னு ஜாக்கிரதையா ஆயிட்டேன்.''

''காதம்பரியின் இந்த ஆளுமை ராஜரத்னத்துக்குச் சந்தோஷமாக இருந்தது. தன்னுடைய அபிமான எழுத் தாளனில் கூட தன்னுடைய பலம்மிக்க ஆளுமையைச் சாத்தியிருக்கும் காதம்பரியின் இந்தக் கோணம் மிகவும் ஆரோக்கியமாகவே தெரிந்தது. எனினும், அவளுடைய இந்தப் பலமே சமயங்களில் பலவீனமாகவும் நீர்த்து, சதா சஞ்சலிக்கிற திரவத் தன்மையையும் காதம்பரியில் ராஜரத்னத்தால் காண முடிந்தது.

''சரி! ஏதோ காதம்பரி சொன்ன விஷயம் முக்கிய மானதாப்பட்டதா சொன்னீங்களே... என்ன அது?''

காளிதாஸ் சில விநாடிகள் நிர்மலமாக இருந்தான். அவன் பேசிக் கொண்டிருந்த தொடர்ச்சி, ராஜரத்னத்தின் சிறு குறுக்கீட்டில் அறுந்து போயிருந்தது. தான் சொல்ல வந்த விஷயம் என்னவென்று ஞாபகத்தில் கொண்டு வரக் கண்களை மூடியவாறு யோசித்துக் கொண்டே இருந்தும் முடியவில்லை. அந்த விஷயம் அவனுடைய பிரக்ஞையில் எங்கோ மூழ்கிவிட்டிருந்தது.

''ஸாரி சார்! உங்ககிட்டே நான் என்ன சொல்ல வந்தேன்ங்கறதை மறந்துட்டேன்!''

''ஞாபகப்படுத்திப் பாருங்க.''

''ஞாபகப்படுத்திப் பார்த்தால்லாம் வராது சார். இனிமே அது தானாக திடீர்னுதான் வரும...''

''நீங்க கல்யாணத்துக்கு வராததில் காதம்பரிக்கு ரொம்ப சந்தோஷமா?''

''அளவுக்கு மீறின சந்தோஷம்... உண்மையைச் சொல்லப் போனா இந்த நிகழ்ச்சி காதம்பரிக்கு என்கிட்டே இருக்கிற நட்புல ஒரு முக்கியமான 'மார்க்'. இது வரைக்கும் இல்லாத ஒரு நெருக்கம் என்கிட்ட வர ஆரம்பிச்சிருக்கு அவங்களுக்கு...''

''இதுக்குக் காரணம், என்கிட்டே இருக்கிற நெருக்கம் துண்டுபடற மாதிரியான ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறதைக் காரணமா சொல்லலாமா காளிதாஸ்?''

''சொல்லலாம் சார்... அது இயற்கை.''

''இப்ப எனக்குள்ளே ஒரு கேள்வி வருது. என்கிட்டே அவளுக்கிருக்கிற அன்பும் நெருக்கமும் கத்திரிக்கப்பட்டு, வீட்டில் அவளுக்கொரு தனிமை உணர்வு வந்து அதனால் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டு, கல்யாணத்துக்கு ஆசைப்பட்டு விடற சூழ்நிலையை ஏற்படுத்தற என்னோட நோக்கம்— திடீர்னு காதம்பரிக்கு உங்ககிட்டே ஏற்படற புதிய நெருக்கம் காரணமாகச் செயல் வடிவம் பெற முடியாமல் போறதுக்கு வாய்ப்பு உண்டா?''

காளிதாஸ் பதில் சொல்ல யோசித்தான்.

''அதாவது காளிதாஸ், என் மகளுக்கு என்னை இழந்துட்ட பயமும் வருத்தமும் வந்தாத்தான் நான் எதிர்பார்க்கிற திருப்பம் அவளோட மனசில் வரும். ஆனா, எனக்கு ஒரு சின்ன பயம் என்னன்னு கேட்டீங்கன்னா, காதம்பரிக்கு என்கிட்டே கோபம் வந்திருக்கிற மாதிரி தெரியுது!''



''ஆமாமா. காதம்பரிக்கு உங்க மேல கோபம் தான்...''

''அவளோட அந்தக் கோபத்தை, புதுசா அவளுக்கு உங்ககிட்டே ஏற்பட்டிருக்கிற நெருக்கம் சமனப்படுத்திடக் கூடாது! அதுதான் என்னோட கவலை...'' — ராஜரத்னம் சுட்டிக்காட்டிய கோணத்தில் காளிதாஸ் காதம்பரியைப் பொருத்திப் பார்த்தான்.

''அப்ப காதம்பரிக்கு என்கிட்டே ஏற்படற இந்த நெருக்கத்தையும் நான் தவிர்க்கணும்னு சொல்றீங்களா?'' — காளிதாஸ் கொஞ்சம் விசனத்துடன் கேட்டான்.

''நோ... நோ... அப்படி நான் சொல்லலை. ஆனா, அதுக்கு வாய்ப்பு இருக்கானு உங்களைக் கேக்கறேன்...''

''வாய்ப்பு இருக்கவும் செய்யலாம், இல்லாமலும் போகலாம். ஆனா, நாம் எல்லா விஷயத்தையுமே அனுமானிச் சுடக்கூடாது. காதம்பரி ஒரு பையனைக் கல்யாணம் பண்ணிக்கிற முடிவுக்கு வர்றது ரொம்ப சந்தோஷமான விஷயம்தான். ஆனா, அதுதான் இறுதி என்கிற தீர்மானத்துக்கு நாம் வந்திடக்கூடாது சார். அதை மட்டுமே குறிக்கோளா வெச்சுக்கிட்டு அதுக்காக — ஸாரி, நான் அதை வளரவிடமாட்டேன். எதை வேணுமானாலும் செய்து பார்க்கிறது என்கிறதால காதம்பரியோட எதிர்கால மனவளமே பாதிக்கப்பட்டா என்ன பண்றது, சொல்லுங்க?''

''அதுவும் முக்கியமானதுதான், இல்லேனு சொல்லலை. ஆனா, என்கிட்டே அவளுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை மொத்தமா ஈடுகட்டற மாதிரியான அன்பும் ஆதரவும் உங்ககிட்டே காதம்பரிக்குக் கிடைச்சுடக் கூடாது! அது, அவளை நான் எதிர்பார்க்கிற விஷயத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போகாம எதிர்விடையாவே இயங்கற நிலைமை ஏற்பட்டுடலாம்...''

''மன்னிக்கணும் சார்... இதுக்கு நான் எதுவும் செய்ய முடியாது. மனுஷ மனசு ஒரு குழந்தை. தன்னை அம்மா கோவிச்சுக்கிட்டா அப்பாகிட்டே போய் ஒட்டிக்கும் அப்பா கோவிச்சுக்கிட்டா அம்மாகிட்டே போய் ஒட்டிக்கும். அப்பா, அம்மா ரெண்டு பேருமே கோவிச்சுக்கிட்டா என்ன செய்யும்? கைக்குக் கிடைச்ச பொருளை எடுத்து ரெண்டு பேர் மேலேயும் வீசும் — அதாவது — வன்முறை... நானும் உங்க திட்டத்துக்காகக் காதம்பரியோட அன்பை உதாசீனப்படுத்தற மாதிரி நடந்துக்கிட்டா அவங்களோட நிலையும் அந்தக் குழந்தையோட நிலைதான். அந்த மாதிரி நிலைக்கு அவங்களைத் தள்ள நான் சம்மதிக்கமாட்டேன். ஸார்...!''

அதற்கு மேல் பேசத் தோன்றாமல் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மௌனமாக இருந்தார்கள்.

## 13

கூடிகாரத்தில் மணி ஒன்பதரை ஆகியிருந்தது. சாப்பாட்டு அறையில் பத்மாவதியுடன் சிறு சிறு வேலைகளில் ஈடுபட்டிருந்தாள் வசந்தா. காதம்பரி அவளுடைய அறையில் காஸெட் ரிக்கார்டரை உரக்க ஒலிக்கவிட்டு, தன் மனநிலையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தாள். எப்போதும் இரவுச் சாப்பாட்டைக் காதம்பரியுடன் உண்ணும் ராஜரத்னம், வேண்டுமென்றே சில நாட்களாக அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொண்டிருந்தார் தேவை இல்லாமலே வசந்தாவிடம் சிரித்துச் சிரித்துப் பேசியபடி காதம்பரியைக் கவனிக்காமல் இருந்தார். இது போதாதா காதம்பரிக்கு? காஸெட் ரிக்கார்டரை நள்ளிரவுவரை உரக்க ஒலிக்க விடுகிறாள்!



"''நீங்க போங்க அண்ணி, இந்த வேலையெல்லாம் நான் பார்த்துக்க மாட்டேனா? அண்ணா உங்களுக்காக உள்ளே காத்திட்டிருக்கிற மாதிரி இருக்கு''—வசந்தா தன்னுடன் வேலைகள் செய்வதைத் தடுத்தாள் பத்மாவதி.

''ஞாயிற்றுக்கிழமை நீங்க போயிட்ட பிறகு நான் தானே இந்த வேலையெல்லாம் செய்யப் போகிறேன்!''

''அதனாலதான் இப்ப செய்ய வேண்டாம்னு சொல்றேன், போங்க.''

''மதினி, நான் ஒண்ணு சொல்றேன். அதைக் காதம்பரிகிட்டே சொல்றீங்களா?''

''என்ன அண்ணி? உங்க பொண்ணு அது. என்ன வேணுமானாலும் நீங்களே போய்ச் சொல்லிடலாமே...''

''நான் சொன்னா அது தப்பா நினைச்சுக்குமோனு பயமா இருக்கு...''

''என்ன சொல்லணும்?''

''பாட்டைக் கொஞ்சம் சின்னதா வைக்கச் சொல்லணும்... அவ்வளவு சத்தமா கேட்டா உடனே எனக்குத் தலைவலி வந்துடும்...''

''இருங்க, இதோ சொல்லிட்டு வர்றேன்.''

—பத்மாவதி வேகமாகக் காதம்பரி அறைக்குப் போனாள்.

'காதம்பரி பாட்டைக் கொஞ்சம் சத்தம் கம்மியா வெச்சுக் கேக்கறியா? உங்க சின்னம்மாவுக்குத் தலையை வலிக்குதாம்...'

இதைப் பத்மாவதி சொன்னதுதான் தாமதம்... காதம்பரி பட்டென்று ரிக்கார்டரை நிறுத்தினாள்.

''இந்த வீட்ல எனக்குப் பாட்டு கேட்கக்கூட சுதந்திரம் இல்லாம போயிடுச்சு!''

சாப்பாடு அறையில் மேஜையைத் துடைத்துக் கொண்டிருந்த வசந்தாவின் செவிகளில், காதம்பரியின் இந்தக் கோபமான குரல்கேட்டது. வசந்தா உதடுகளை இறுகக் கடித்துக் கொண்டாள். காதம்பரி அவளுக்கு மகள் போல் இருந்தாள்! வசந்தாவின் மனத்தில் துக்கம் கவிந்தது. உள்ளூர அவளுடைய மனம் காதம்பரியைமிகவும் நேசித்தது. தனக்கு வாழ்க்கை தந்திருக்கிற உயர்ந்தவனின் மகள் என்ற நன்றிக் கனிவு அவளுள் கசிந்து கொண்டுதான் இருந்தது. காதம்பரிக்கு நல்ல சிநேகிதியாக இருக்க அவள் மனமும் இப்போது ஏங்கத்தான் செய்கிறது. கல்யாணத்துக்கு முன் வசந்தா, காதம்பரிக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்ணி இந்த வீட்டைவிட்டு அனுப்பிவிட வேண்டுமென்று நினைத்தவள் ஆனால், ராஜரத்னம் அவள் கழுத்தில் தாலி கட்டிய மறு நிமிஷமே அவளின் அந்தநினைப்பு மாறிவிட்டது. கணவனின குடும்பம் உடனே அவளில் இணைந்து கொண்டது. பெண்மையின் தனிப் பண்பு இது. என் வீடு. என் கணவன். என் குடும்பம்...காதம்பரி தன்னைச் சின்னம்மா என்றழைக்காமல், அம்மா என்று அழைத்தால்கூட அதற்குச் சம்மதிக்கக் காத்திருந்தாள் வசந்தா. அவளின் மார்புக்கூட்டில் அந்த ஆசை பூப் போலப் பூத்திருந்தது.

''வசந்தா, கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் எடுத்திட்டு வர்றியா?''—ராஜரத்னத்தின் குரல் கேட்டது.

பத்மாவதி வசந்தாவைப் பார்த்து அர்த்தத்துடன் சிரித்தாள்: ''அதான் நான் அப்பவே சொன்னேன். போங்க, அண்ணா காத்திட்டிருக்கார்னு...''

காதம்பரியால் ஏற்பட்ட துக்கம் மறைந்து, வசந்தாவின் முகத்தில் நாணம் பரவியது.



''இன்னுமா வேலை முடியலை?''

''முடிஞ்சிருச்சே...''

''காதம்பரி என்னமோ கோவமா கத்திச்சே எதுக்கு?''

''எனக்குத் தலையை வலிக்குதுன்னு பாட்டைக் கொஞ்சம் மெதுவா வைக்கச் சொன்னேன். உடனே அதை ஆஃப் பண்ணிட்டு கோவமா பேசுது...''

''உனக்குத் தலையா வலிக்குது?''

''லேசா!''

''ஏதாவது தைலத்தை எடுத்துத் தடவிக்க!''

''இல்லைங்க. எனக்குத் தைலம் தடவிக்கறது பிடிக்காது.''

''உன்கிட்டே முக்கியமான ஒரு விஷயம் பேசணும் வசந்தா. போய்க் கதவைப் பூட்டிட்டு வா...''

''உங்க தங்கை இன்னும் டைனிங் ஹால்ல இருக்காங்க...''

''அவ பதினோரு மணிவரைகூட அங்கே எதையாவது உருட்டிட்டே இருப்பா. நீ போய்க் கதவைப் பூட்டிட்டு வாயேன்!''

வசந்தா எழுந்து போய்க் கதவைப் பூட்டிவிட்டு வந்தாள். கட்டிலில் சாய்ந்திருந்த ராஜரத்னம், அவளின் கையைப் பற்றி அருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

''கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி நான் யோசிக்க மறந்துட்டேன் வசந்தா. அது விஷயமா இன்னிக்கு டாக்டரை கன்ஸல்ட் பண்ணிட்டு வந்திருக்கேன். நாளைக்குக் காலையில எட்டு மணிக்கு என்னை வரச் சொல்லியிருக்கார். சின்ன ஆபரேஷன் ஒண்ணு எனக்குச் செய்ய வேண்டியிருக்கு!''

வசந்தாவுக்கு லேசாகத் 'திக்'கென்றிருந்தது. 'ராஜரத்னத்தைப் பயத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

''உடனே பயந்திடாதே. எல்லாம் உனக்குக் குழந்தை பிறக்கணும்னுதான். வாஸக்டமி ஆபரேஷன்னு கேள்விப் பட்டிருக்கியா?''

வசந்தா பதில் சொல்லாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அதாவது, குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் காதம்பரி பிறந்ததும், இனிமே குழந்தைகள் வேண்டாம்னு நான் அந்த ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன். இதை நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே நான் யோசிச்சிருக்கணும்—எப்படியோ அது என்னோட ஞாபகத்தில் வரலை. அதனால் மறுபடியும் குழந்தை பிறக்கிற மாதிரி உடனே சரி பண்ணியாகணும். நாளைக்குக் காலையில நீயும் என்னோட வா. டாக்டரிடம் போயிட்டு சீக்கிரமாகவே வீடு திரும்பிடலாம்... விட்டல்ராவ் நம்ம டாக்டர்தான்...''

என்ன சொல்வதென்று தெரியாமல் வசந்தா மௌனமாகவே இருந்தாள்.

''உனக்குக் குழந்தை வேணும் இல்லையா?''

ராஜரத்னம் கனிவுடன் கேட்டதும் வசந்தாவின் முகத்தில் மெல்லிய வெட்கம் பரவியது. 'வேண்டும்' என்று தலையை அசைத்தாள்.

''காலையில ஏழு மணிக்கே கிளம்பிடலாம்...''

''மதினிகிட்டே எப்படிச் சொல்ல...?''

''நான் பத்மாவதிகிட்டே சொல்லிக்கறேன்...''

''எதுவும் பிரச்னை கிடையாதே?''

''ஒரு பிரச்னையும் கிடையாது... ரொம்ப ரொம்ப சாதாரண ஆபரேஷன் வசந்தா. 'அது என்னன்னு கேட்டா...?''

ராஜரத்னம் வசந்தாவின் ஏழ்மை அறிவுக்குப் புரியும் விதத்தில் சுருக்கமாக விளக்கினார். வசந்தா தலை குனிந்தவாறு அதேசமயம் மிகுந்த கவனத்துடன் அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுள் இன்னும் முடிச்சு அவிழாத ஆண்-பெண் உறவின் மையத்தைச் சார்ந்த ஆபரேஷன் பற்றிய செய்திகளை, ரகசியமான நுகர்ச்சியுடன் செவிமடுத்துக் கொண்டிருந்தாள். அந்நுகர்ச்சியின் சலனம் வசந்தாவின் உடல் பூராவும் ததும்பித் தெரிந்தது. ராஜரத்னமும் அதை உணர்ந்தார். இரக்கத்தோடும் காதலோடும் வசந்தாவின் முகத்தை உயர்த்தினார். மூடிக்கொண்ட அவளின் கண்களில் முத்தமிட்டார். கன்னத்தில் முத்தமிட்டார். உதடுகளில் முத்தமிட்டார். வசந்தா தன்னுள் பால் பொங்குவதுபோல ஏதோ பொங்கி உயர்வதைக் கண்டாள்.

அதிகாலையில் மிக சீக்கிரமே தூக்கம் கலைந்து எழுந்துவிட்ட காதம்பரி, ஜன்னல் வழியாகத் தூரத்து கடலையும் ஒளிக்கீற்று விரித்து கொண்டிருந்த அடிவானத்தையும் பார்த்தபடி நின்றாள். பத்து நாட்களாகக் காலணி இல்லாமல் கடற்கரையில் அப்பாவுடன் வாக்கிங் போகிற பழக்கம் நின்று போயிருந்ததை நினைத்தாள். தினமும் காலையில் எப்போதும்போல் அப்பா வந்து தன்னை வாக்கிங் போகக் கூப்பிடுவாரா என எதிர்பார்த்துக் காத்திருந்தாள். எத்தனை நாள்தான் பேசாமல் இருப்பது! இனியும் பேசாமல் படுத்துக் கொண்டிருக்கக் கூடாதென்று தோன்றியது அவளுக்கு.

காதம்பரி உடை மாற்றிக்கொண்டு வேகமாக ராஜரத்னத்தின் அறையை நோக்கிப் போனாள். பூட்டப்பட்டிருந்த அறைக் கதவைச் சில விநாடிகள் வெறுப்புடன் பார்த்திருந்துவிட்டு, கதவைத் தட்டிக் கூப்பிட்டாள்.

''அப்பா... அப்பா...''

பதில் இல்லை.

"வாக்கிங் போகலாம்ப்பா...எந்திரிங்க..."

சில நிமிடம் கழிந்து ராஜரத்னம் கதவைத் திறந்தார். "என்னம்மா?"

"இன்னுமா தூக்கம்...மணி அஞ்சரை... வாங்க, வாக்கிங் போயிட்டு வரலாம்... வெதர் பிரமாதமா இருக்கு..."

"இன்னொரு நாள் போவோமே..."

"நோ, இப்ப நீங்க வந்தே ஆகணும்."

"நானும் உன் சின்னம்மாவும் அர்ஜெண்டா டாக்டரைப் பார்க்கிறதுக்குக் கிளம்பணும்..."

"இப்பவே கிளம்பணுமா?"

"ஆமா..."

"உங்கள்ல யாருக்கு உடம்பு சரியில்லை. எதுக்காக டாக்டரைப் பார்க்கிறதுக்குப் போறீங்க?"

"அதை அத்தை சொல்லுவாங்க. அப்புறமா அவங்களைக் கேட்டுக்கம்மா."

"என்கூட வாக்கிங் வர உங்களுக்கு இஷ்டமில்லை!"

—சொல்லிவிட்டு, காதம்பரி விடுவிடுவென்று கதவைத் திறந்து வெளியில் சென்றாள்.

கடற்கரையில் நடக்கும்போதுதான் வாழ்க்கையில் தான் தனித்து நடக்க துவங்கி இருப்பதாகத் தோன்றியது. அதிகாலையில் எழுந்ததும் டாக்டரிடம் போக அப்பாவுக்கு அப்படியென்ன அவசியம் என்ற கேள்வி வந்தது. உண்மையிலேயே டாக்டரிடம்தான் போகிறார்களா என்ற சந்தேகமும் ஏற்பட்டது.



ஆனால், அப்பா அப்படியெல்லாம் பொய் பேசமாட்டார் என்ற நம்பிக்கை ஏற்பட்டாலும், காதம்பரியின் மனம் நிச்சயமின்மையில் சஞ்சலித்துக் கொண்டிருந்தது. யாருக்கு உடம்பு சரியில்லை என்பதை அத்தையிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமாமே? நான் ஏன் அத்தையிடம் போய்க் கேட்கணும்? ஏன், இவர் சொல்லக்கூடாதோ? சொல்லமாட்டாரோ? சொன்னால் வாய் முத்து உதிர்ந்து போகுமோ? ஒரு வேளை, சொல்லக்கூடாதென்று அவரின் புதுப் பெண்டாட்டி தலையணை மந்திரம் போட்டு விட்டாளோ?! நினைக்க நினைக்கக் காதம்பரியின் மனம் பொருமியது. வசந்தாவிடம் தான் தோற்றுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. இந்தத் தோல்வி இப்படியே தொடருமானால், இந்த வீட்டில் தன்னுடைய நிலைமை என்ன ஆகும் என்று நினைத்துப் பார்க்க அவளுள் சுய இரக்கம் ஏற்பட்டது. இதனால் மனம் மேலும் மேலும் கனத்துப் போக, காதம்பரி நடக்க முடியாமல் நின்று விட்டாள். அப்போது காதம்பரியின் தோளை ஒரு கை தொட்டது. அப்பாவா என்ற பரவசத்துடன் காதம்பரி திரும்பினாள். அவளின் அத்தை பத்மாவதி நின்று கொண்டிருந்தாள்.

"நீ தனியா வாக்கிங் போறேன்னு அப்பா என்னை உன் கூடப் போகச் சொன்னாங்க அதான் பின்னாடியே வந்தேன். ஆனாலும் என்னால் உன்னோட வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியுதா? குடுகுடுன்னு ஓடி வரேன்..."

காதம்பரியின் மன நிலை புரியாமல் பத்மாவதி பேசிக் கொண்டிருந்தாள். "அத்தை, அப்பா எதுக்காக டாக்டரைப் பார்க்கப் போறாங்க?"

"வா, நடந்துக்கிட்டே பேசுவோம்."

அருகருகில் இருவரும் நடந்தபடி மௌனமாகச் சிறிது தூரம் சென்றபின், பத்மாவதி காரணத்தைத் தயங்கித் தயங்கி வெளியிட்டாள். காதம்பரியிடம் எல்லோருக்குமே

ஒரு பிரச்னை உண்டு. அதாவது, அவள் சில சமயங்களில் குழந்தை போலவும், சில சமயங்களில் மனம் முதிர்ந்த பெண் போலவும் நடந்து கொள்கிற நிச்சயமற்ற தன்மை தான். இவ்விதம் நினைத்து அணுகினால் அவ்விதமாகவும், அவ்விதமாக நினைத்து அணுகினால் இவ்விதமாகவும் எதிர்விளைவுகளைக் காட்டுவது அவளின் சுபாவம்.

பத்மாவதி சொன்னதையெல்லாம் கேட்டுக் காதம்பரியின் மனம் குழம்பி முகம் சிவந்து போயிற்று. பாலுறவு சார்ந்த அவ்விஷயங்கள் சற்றுப் பூடகமாகத்தான் அவளுக்குப் புரிந்தன. நடைபெறும் அத்தனையும் அவளுக்கு எதிராகவே தெரிந்தன.

''அப்பா என்னைச் சுத்தமாவே மறந்துட்டாரா அத்தை?'' — கேட்கும் போதே காதம்பரியின் குரல் அடைத்துப் போயிற்று.

பத்மாவதிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

''நீ வா. இன்னும் கொஞ்ச தூரம் நடந்துட்டு வருவோம்...''

காதம்பரி மௌனமாகப் பத்மாவதியுடன் நடந்தாள்

''நாளைக்கு உனக்கு எக்ஸாம் ஆரம்பிக்குது தானே?'' 'ஆமாம்' என்று தலையசைத்த காதம்பரி யோசித்து விட்டுச் சொன்னாள் :

''நான் பரீட்சை எழுதப் போறதில்லை அத்தை!''

பத்மாவதிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''பைத்தியம் மாதிரி பேசாதே...''

''ஸாரி அத்தை! கண்டிப்பா நான் எக்ஸாம் எழுதப் போறதில்லை.''

''இத்தனை வருஷம் படிச்சதுக்கு ஒரு பிரயோஜனம் வேண்டாமா?''



''இத்தனை வருஷம் 'அப்பா, அப்பா'னு இருந்ததுக்கு எனக்கென்ன கிடைச்சுது?''

''கல்யாணம் செய்துக்காதீங்க அப்பானு சொல்லியிருந்தா, உன் அப்பா இந்தக் கல்யாணத்தைப் பண்ணியிருக்கவே மாட்டார். சொல்லாதது உன் தப்பு!''

''அது அவருக்கே தெரிஞ்சிருக்கணும் அத்தை.''

''அதுக்காக இப்ப நீ பரீட்சை எழுதாம விடணுமா?''

''அப்படி விட்டாத்தான் தெரியும்...''

''உன் இஷ்டம்...''

''அப்பா வந்ததும் சொல்லிடுங்க—நான் பரீட்சை எழுதப் போறதில்லேனு!''

''நான் சொல்லமாட்டேன். நீயே சொல்லிடு.''

''அப்பா மட்டும் எதுக்காக டாக்டர் கிட்டே போறோம்ங்கிற விஷயத்தை எங்கிட்டே சொல்லாம உங்ககிட்டே சொன்னாங்க?''

பத்மாவதி திகைத்துப் போனாள். பூவினும் மென்மையான இந்தப் பெண்ணின் மனம் எப்படி முள்ளாகவும் உருமாறிப் போகிறது என்ற துக்கத்துக்கு ஆளாகிப் போனாள்.

''எனக்குக் கொஞ்சம் தனியா நடந்து போயிட்டு வரணும் போலிருக்கு. நீங்க வீட்டுக்குப்போங்க அத்தை...''

பத்மாவதி சற்றுத் தயங்கினாள்.

''பயப்படாம போங்க. நான் ஒண்ணும் சமுத்திரத்தில் இறங்கிடமாட்டேன்...'' என்று இகழ்ச்சியாகச் சொல்லியவாறு காதம்பரி, பத்மாவதியை எதிர்பாராமல் வேகமாகக் கடற்கரை மண்ணில் நடக்கத் துவங்கினாள். காலை நேரத்துக் கடல் வீரியமின்றி அலை பாய்ந்து கொண்டிருந்தது...

## 14

காளிதாஸும் சிவராஜும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

''எப்படி இருக்கீங்க மிஸ்டர் காளிதாஸ்...?''

''நல்லா இருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்க... புதுசா நீங்க படம் பண்றதா நியூஸ் பார்த்தேன். காதம்பரியும் சொன்னாங்க...''

''ஆமா...''

''ஷூட்டிங் ஆரம்பிச்சாச்சா...''

''இன்னும் இல்லை, மே முதல் வாரம் ஆரம்பிக்கிறோம்.''

''குட்... விஷ் யூ குட்லக்!''

''தாங்யூ!... உங்களுடைய எழுத்துக்கள் எல்லாம் எப்படி இருக்கு?''

''ஏதோ போயிக்கிட்டிருக்கு...''

''புதுசா நாவல் எதுவும் எழுதலையா?''

''ஐடியா இருக்கு. ஆனா, எப்ப எழுதுவேனோ...!''

''அருமையா எழுதறீங்க. ஆனா, நெறைய எழுத மாட்டேங்கறீங்களே?''

''நெறைய எழுதாததாலேதான் அருமையா இருக்கு!''

''அப்படியா சொல்றீங்க...?''

''அப்போ அருமையா இருக்கணும் என்கிறதுக்காகத் தான் நிறைய எழுதக்கூடாதுன்னு உங்களை கண்ட்ரோல் பண்ணிக்கிட்டு இருக்கீங்களா நீங்க...?''— காதம்பரி குறுக்கே புகுந்து கேட்டாள்.



''எனக்குத் தெரியும்— இப்படி நீங்க கேப்பீங்கன்னு!'' காளிதாஸ்.

''இப்படிக் கேக்கறதுதான் காதம்பரியோட பர்சனாலிடி!''—சிவராஜ்.

''காதம்பரி வக்கீலா போனாக்க பிச்சு உதறிடுவாங்க!''

''காளிதாஸ், இன்னிக்கு நான் எங்க அம்மாவை அழைச்சிட்டுப் போயிடறேன்?'' என்றான் சிவராஜ்.

''உங்க அம்மா இங்கே காதம்பரிக்கு நல்ல துணையா இருந்தாங்க...''

''அதனாலே என்ன? அதான் காதாம்பரிக்கு சின்னம்மா வந்தாச்சே!''

''அது சரி, வந்திருக்கிறது என் சின்னம்மாதானே... அம்மா இல்லையே!'' என்றாள், காதம்பரி சட்டென்று.

ஆபரேஷனுக்குப் பின் சில தினங்கள் வீட்டில் ஓய்வாக இருக்க டாக்டர் சொல்லியிருந்தபடியால் தன்னுடைய அறையில் கட்டிலில் சாய்தபடியால் ஹாலில் நடந்து கொண்டிருந்த இந்த உரையாடலைக் கேட்ட ராஜரத்னம், அருகில் அமர்ந்திருந்த வசந்தாவை ஏறிட்டுப் பார்த்தார். ஏதோ அவமதிப்பு நிகழ்ந்தாற்போல் வசந்தாவின் முகம் கன்றிப் போயிருந்தது.

''பாத்தீங்களா காதம்பரி பேசறதை...''

ராஜரத்னம் பரிவுடன் வசந்தாவின் கையைப் பற்றிக் கொண்டார். அவருக்குக் காதம்பரியின் உள் மனம் தெரியும். ஆனாலும், வசந்தாவைச் சமாதானம் செய்வது அவருக்குத் தேவையாக இருந்தது.

''இல்லை வசந்தா, காதம்பரியைச் சில சமயத்துல கொஞ்சம் 'குட்-ஸ்பிரிட்'தான் நாம புரிஞ்சுக்கப்

பார்க்கணும். தனக்கு அம்மா இல்லேங்கறதை அந்த மாதிரி வெளிப்படுத்திக்கறா...இவ்வளவுதான்."

"அப்படித் தோணலை எனக்கு. எதிலேயும் என்னை வேசா இன்ஸல்ட் பண்ற மாதிரியேதான் பேசுது."

"ஆனா, அவளோட உண்மையான நோக்கம் உன்னை இன்ஸல்ட் பண்ணணுங்கிறதில்லே...!"

"வேற அதுக்கு என்ன நோக்கம்னு சொல்றீங்க...?"

"சமயம் வரும்போது சொல்றேன்."

ஏனோ வசந்தாவின் கண்களில் சட்டென நீர் தளும்பிக் கன்னங்களில் வழிந்தது.

துக்கம் தாளாமல் வசந்தா அவரின் தோளில் சாய்ந்து கொள்ள, ராஜரத்னம் அவளின் முதுகைத் தடவிக் கொடுத்தார். சிறிது நேரம் கழித்துக் கேட்டார்.

"பத்மாவதி எத்தனை மணிக்குக் கிளம்பப் போறாளாம்?"

"பதினோரு மணிக்கு..."

"நீயும் வேணும்னா கார்ல போயிட்டு வந்திடு..."

"இல்லீங்க. நான் இன்னொரு நாள் போறேன்."

"காதம்பரி போறாளா?"

"தெரியலை..."

"கூப்பிடு அவளை!"

வசந்தா கண்களைத் துடைத்துவிட்டுக் கதவைத் திறந்து ஹாலுக்குச் சென்றாள்.

"காதம்பரி, உன்னை அப்பா கூப்பிடறாங்க..."

"இருங்க காளிதாஸ், அப்பா என்னைக் கூப்பிடறாங்களாம்... என்னன்னு கேட்டுட்டு வந்திடறேன்."



காதம்பரி ராஜரத்னத்தின் அறைக்குள் வேகமாகச் சென்றாள்.

"என்னப்பா?"

"அத்தை வீட்டுக்கு நீயும் போறியாம்மா?"

"இல்லேப்பா. காளிதாஸ் வந்திருக்கார். அவரோடு பேசிட்டிருக்கேன்."

"பரவாயில்லை... காளிதாஸ் இருக்கட்டும். நீயும் அத்தை கூடப் போயிட்டு வந்திடு..."

"ஸாரி, நான் போகலை. எனக்கு இன்டரெஸ்ட் இல்லை..."

"ஒரு மரியாதைக்குப் போய் வந்திடு..."

"அப்ப அவங்களைப் போகச் சொல்லுங்களேன்..."

"எவங்களை?"

ராஜரத்னம் குரலை உயர்த்திக் கேட்டார். காதம்பரி வெறுமனே அவரை வெறித்துப் பார்த்தபடி மௌனமாக நின்றாள்.

"ஏம்மா, உன் சின்னம்மாவை 'சின்னம்மா'னு சொல்ல மாட்டியா?"— ராஜரத்னம் சற்றுக் கோபத்துடன் கேட்டார். காதம்பரி ஒன்றும் சொல்லாமலேயே நின்றாள். ராஜரத்னமும் மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டார். அப்பாவும் பெண்ணும் விசித்திர தருணத்தில் ஒருவரையொருவர் எதிர்கொண்டிருந்தார்கள்.

"வசந்தாகிட்டே உனக்கு என்ன காம்ப்ளெக்ஸ்னு தெரியலை எனக்கு!"

"நீங்க என்னோட நிலைமையில இருந்திருந்தா தெரியும்!"—காதம்பரியிடமிருந்து சட்டெனப் பதில் வந்தது.

"இருக்கலாம். இருந்தாலும் உறவு முறையிலே நாமெல்லோருமே ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுத் துத்தான் போகணும்...!"

"நானும் விட்டுக் கொடுத்துத்தான் போறேன்!"

"எனக்கு அப்படித் தோணலே...!"

"ஸாரி, அதுக்கு நான் எதுவும் செய்ய முடியாது...!"

மீண்டும் இருவரிடையே மௌனம் நிலவியது.

"அவ்வளவுதானேப்பா, நான் போகலாம் இல்லையா?"

"என்னமோ வர வர உன்னைப் பிடிக்கலை எனக்கு..."

கூரிய அம்பாக எண்ணித்தான் ராஜரத்னம் இந்த வார்த்தைகளைப் பிரயோகித்தார். வார்த்தைகளும் கூரிய அம்பு முனையாகத்தான் காதம்பரியின் மனத்தில் பாய்ந்தன.

தந்தை தன்னுடைய மனத்தில் உருவாக்கிய பொய் யுத்தம், மகளின் மனத்தில் உண்மையான யுத்தத்தையே மூளச் செய்கிறது! யுத்தம் எத்தகையதாக இருந்தாலும் வெற்றி ஒருவருக்குத்தான்! ஆனால், இங்கு நிகழ்வது காதம்பரியின் மானசீக யுத்தம். மானசீக யுத்தமே அடிப் படையில் தோல்வி மனப்பான்மையின் வெளிப்பாடுதான்! அந்தக்கோணத்தில் பார்க்கையில் இந்த யுத்தத்தின் முடிவும் இலகுவாக ஊகிக்கக்கூடியதுதான்...

அறைக் கதவை படாரென்று சாத்திவிட்டுக் காதம்பரி ஹாலுக்குத் திரும்பினாள்.

"உங்க அப்பா என்ன சொல்றாங்க காதம்பரி?"—காளி தாஸ் கேட்டான்.



"கரைக்காய்க்கு உப்பு இல்லையாம்! அதைச் சொல்றதுக்குத்தான் கூப்பிட்டாங்க. வேற ஒண்ணு மில்லை!"

யுத்த முனையில் வெடிகுண்டு வெடிக்கிறது! வெடி குண்டின் சத்தம் ராஜரத்னத்தின் செவிகளையும் எட்டியது. தன்னுடைய வெற்றிப் பாதையைக் கற்பனை செய்தபடி தனக்குள் அவர் சிரித்துக் கொண்டார்.

"ஸோ, உங்க படம் ஆகஸ்ட் ரிலீஸா அத்தான்?" —காதம்பரி பேச்சைத் திருப்பக் கேட்டாள் சிவராஜிடம்.

"அப்படித்தான் ப்ளான் செய்திருக்கோம்... காதம்பரி, எங்கம்மா ரெடியாயிட்டாங்களானு பாரு..."

"நீங்க இன்னும் கொஞ்ச நாள் இங்கே இருந்துட்டுப் போனா எனக்கு நல்லா இருக்கும்"—சமையலறையில் வசந்தா தணிந்த குரலில் சொன்னாள்.

"எனக்கும் அப்படித்தான் இருக்கு. ஆனா, மகன் இத்தனை வருஷம் கழிச்சு வந்து கூப்பிடறப்ப, இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு வரேன்னு சொல்ல முடியலை..."

"காதம்பரி என்கிட்டே முகம் கொடுத்தே பேச மாட்டேங்குது. அதான் மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு..."

"அவ கொஞ்சம் ஒரு மாதிரியான பொண்ணுதான். நாமதான் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்..."

அப்போது காதம்பரி வந்தாள்.

"அத்தான் நீங்க ரெடியானு கேட்கச் சொன்னாரு... ஓகே அத்தை! நீங்க போயிட்டு வாங்க... நான் இன்னொரு நாள் வர்றேன் உங்க வீட்டுக்கு..."

"இப்ப எங்கே கிளம்பிட்டே...?"

''என்னமோ மனசே சரியில்லை எனக்கு. அதனால காளிதாஸைக் கூட்டிக்கிட்டு பீச் ஓரமா அப்படியே ஒரு வாக்கிங் போயிட்டு வரப் போறேன்...''

''இந்த வெயில்லேயா...?''

''எனக்குத்தான் வெயில்னா ரொம்ப பிடிக்குமே...''

''சரிம்மா... போயிட்டு வா. நாங்களும் இப்ப கிளம்பிடுவோம்.''

''ஓகே... பை...''

வெயிலின் வெண்மை நிறத்தில் கடல் அலைகளின் வெள்ளை நுரை, கடற்கரை பூராவும் கண்களைக் கூசச் செய்தது. சித்திரை மாத வானம் மேகமற்று அடர்ந்த நீலத்தில் விரித்து கிடந்தது.

''உங்க அத்தை கிளம்பிப் போனப்புறம் நாம் வாக்கிங் வந்திருக்கலாம் காதம்பரி...''

''அத்தை கிளம்பிப் போறதை என்னால் பார்த்திட்டு இருக்க முடியாது. சத்தியமா அழுதிடுவேன்... அதனால் தான் சட்டுனு வாக்கிங் கிளம்பிட்டேன்...''

''அழுறதில் இன்னிக்குத் திடீர்னு என்ன வெட்கம்...?''

''எங்க சின்னம்மா எதிர்ல அழுறதுக்கு எனக்குப் பிடிக்கலை...! என்னை ரொம்ப வீக்கா நெனைச்சிடுவாங்க!''

''இப்ப உங்களுக்குக் கல்நெஞ்சனு நினைப்பாங்க... தெரியுமா...!''

''நல்லா நினைக்கட்டும். அதான் எனக்கு வசதி!''— சொல்லி விட்டுக் காதம்பரி சிரித்தாள்.

''நான் ரொம்ப மோசமான பொண்ணா இருக்கேன் இல்லே....?''



''இல்லை. ரொம்பப் பரிதாபத்துக்குரிய பெண்ணா இருக்கீங்க...!''

''சரியாச் சொன்னீங்க...''

''ஏன் திடீர்னு பரீட்சை எழுதமாட்டேன்னு சொல்லிட்டிங்க...?''

''எங்க அப்பாவைப் பழி வாங்கறதுக்குத் தான்! பாஸ் பண்ணி நானென்ன வேலைக்கா போகப் போறேன்...?''

''உண்மையில நீங்க உங்களைத்தான் பழிவாங்கிகிறீங்க காதம்பரி...''

''யாரையாவது எனக்குப் பழி வாங்கினால் சரி!''

சிறிது தூரத்துக்கு மௌனமாக நடந்தார்கள்.

''ரெண்டு நாளா எனக்கு ஒரு சந்தேகம் காளிதாஸ்...''

''கேளுங்க...''

''மார்கழி மாசம் கோயில்ல ஆண்டாளோட திருப்பாவைப் பாட்டு போடறாங்க இல்லையா...?''

''ஆமா...''

''அந்த ஆண்டாள் என்கிறது நெஜமாவே வாழ்ந்த பெண் தானா, இல்லை சும்மா ஒரு கற்பனை காரெக்டரா...?''

''என்ன திடீர்னு...?''

''எனக்கென்னமோ ஆண்டாள் கதை ஒரு தத்துவக் கற்பனை மாதிரி தெரியுது...''

''வடக்கிலே மீரா கதை... இங்கே ஆண்டாள் கதை.''

''மீரா கதையில் ஓர் ஒப்பற்ற காதல் இருக்கு. ஆனா, இந்த ஆண்டாள் மத அபிமானம் அதிகம் உள்ளவ மாதிரில்லே நடந்துக்கறா...''

''நீங்க இப்படிச் சொல்ற போது ஒரு மீட்டிங்கில (God Intoxicated-னு ஜே கிருஷ்ணமூர்த்தி பேசினது எனக்கு ஞாபகத்துல வருது...''

''சரியான வார்த்தைதான் யூஸ் பண்ணியிருக்கார்! ஆண்டாள் அந்த மாதிரிப் பொண்ணுதான்...''

''ஆனா ஒண்ணு. திருப்பாவை என்கிறது ஒரு அற்புதமான பீஸ்... ஆமா, என்ன திடுதிப்னு ஆண்டாளைப் பத்திப் பேச ஆரம்பிச்சிட்டீங்க...?''

''நாலு நாள் முன்னாடி அத்தையோட ஷெல்ப்லே திருப்பாவை இருந்தது. எடுத்துப் படிச்சப்ப சில ஐடியா வெல்லாம் வந்திச்சு. அதான் கேட்டேன்...''

''நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே...?''

''கோபம் வந்தா அதுபாட்டுக்கு வரும் போகும்... நீங்க சொல்லுங்க?''

''நீங்க மத்தவங்களைப் பத்தி யோசிக்கறப்ப, ரொம்ப அறிவுபூர்வமா யோசனை பண்றீங்க...''

''சரி...''

''ஆனா, உங்க விஷயமா வர்றபோது மட்டும் உணர்ச்சிபூர்வமா ரீயாக்ட் பண்ணிடறீங்க!''

''இந்த பலவீனம் எல்லார்கிட்டேயுமே இருக்குன்னு நினைக்கிறேன.''

' உங்ககிட்டே ரொம்ப இருக்கு''

ஒப்புக்கொள்ள காதம்பரிக்குத் தயக்கமாக இருந்தது. ஒன்றும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தாள்.



''என்ன, பதில் சொல்லமாட்டேங்கறீங்க...?''

''பதில் சொல்ல பிடிக்கலைன்னு வெச்சுக்குங்க!''

காளிதாஸ் காதம்பரியை ஏறிட்டுப் பார்த்தான். அவளின் முகம் அகந்தையுடன் நிமிர்ந்திருந்தது கண்களில் கர்வம் சுடர்விட்டது. உரிமையுடன் அவளுடைய கன்னத்தில் ஓங்கி ஓர் அறை வைக்கலாம் போலிருந்தது காளிதாஸுக்கு!

''என்னடா இந்தப் பொண்ணு இப்படிப் பேசறாளே...இவ கன்னத்துல ரெண்டு அறை குடுக்கலாமானு இருக்கா...?''

காதம்பரி இவ்விதம் கேட்டதும், காளிதாஸ் நெகிழ்ந்து உருகிப் போனான். கண்களில் நீர் தளும்பிற்று அவனுக்கு.

''என்னால ரொம்பவும் இம்சையா இருக்கா...?'' —காதம்பரி மெல்லிய குரலில் கேட்டாள்.

''யெஸ்...''—சட்டென அவனின் கண்களிலிருந்து நீர் உதிர்ந்தது.

''ஆனா, நான் யாரை எவ்வளவு இம்சை பண்ணினாலும், என்னை யாரும் மோசமான பொண்ணுன்னு வெறுத்திடறது இல்லை... ஒப்புக்கொள்றீங்களா அதை...?''

''ஒப்புக்கொள்கிறேன் காதம்பரி...''

''அதான் என்னோட சக்ஸஸ்! வாங்க, வீட்டுக்குத் திரும்பலாம். அத்தை புறப்பட்டுப் போயிருப்பாங்க...''

ஈரம் பளபளத்த நீண்ட கடற்கரையில் உக்கிரமான வெயிலின் கீழ் இருவரும் வீட்டை நோக்கி விரைந்து நடந்தார்கள்.

# 15

15.3.84
3173307

'பிரியமுள்ள காத[illegible]

சாவித்திரி எழுதிக் [illegible] இந்த லெட்டர் கிடைத்ததும் தயவு செய்து எனக்குப் பதில் எழுதவும்' என் வாழ்க்கையில் அதிமுக்கியமான விஷயம் ஒன்று நடைபெற்றுள்ளது. எங்கள் வீட்டு மாடியில் புதிதாகக் குடிவந்திருக்கும் குடும்பத்தில் கோபால கிருஷ்ணன் என்ற இன்ஜினீயர் இருக்கிறார். அவரும் நானும் ஒருவரையொருவர் மிகவும் நேசிக்கிறோம். வேற்று ஜாதிக்காரராக இருந்தும்கூட என்னை அவர் திருமணம் செய்து கொள்ளச் சித்தமாக இருக்கிறார். ஆனால் எனக்குத்தான் மிகவும் தயக்கமாகவும் பயமாகவும் இருந்தது. என்னுடைய தயக்கத்தையும் பயத்தையும் அவருடைய உறுதியான அன்பு கரைத்து விட்டது. அவருக்கு டில்லியில் வேலை கிடைத்திருக்கிறது. அடுத்த வாரம் புறப்பட்டுப் போகிறார். அங்கு போய், தங்கிக் கொள்ள வசதியான இடம் கிடைத்ததும் எனக்கு லெட்டர் எழுதுவார். நான் புறப்பட்டுச் சென்று விடுவேன். அங்கு நாங்கள் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம்.

இந்த விஷயம் அவருடைய குடும்பத்தில் எல்லோருக்கும் தெரியும். எங்கள் வீட்டில் அம்மாவுக்கு மட்டும்தான் தெரியும். அம்மாவின் ஆசி இருப்பதால்தான் நான் தைரியமாக இருக்கிறேன். வாழ்க்கையில் யாரையும் காதலிக்க வேண்டுமென்றோ, இப்படி வீட்டை விட்டு ஓடிப் போக வேண்டுமென்றோ நான் கற்பனைகூடச் செய்தது கிடையாது. ஆனால், அப்படியொரு நிலைமைக்கு நான் தள்ளப்பட்டு விட்டேன். இதற்கெல்லாம் காரணம் என் அப்பாதான் என்று எண்ணுகிறேன். என்



னுடைய உள்மனத்தில் அவரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வெறி எப்படி வெள்ளமாகப் பெருகி வழிகிறது என்பது எனக்கு மட்டுந்தான் தெரியும்.

இந்தக் கடிதம் கிடைத்ததும் ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வந்து என்னை நீ பார்த்தால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். டில்லி போய் விட்டால் இந்த ஊருக்கு நான் எப்போது வருவேனென்று தெரியாது. எனவே, உன்னை ஒரு முறை பார்க்கத் துடிக்கும்.

—உன் சாவித்திரி

கடிதத்தை ஒன்றுக்கு மூன்று முறை வாசித்த காதம்பரியின் மனம் கனத்துப் போயிற்று. இப்படி ஒருவரிடம் காதல் வயப்பட்டு சாவித்திரி வீட்டை விட்டு வெளியேறும் முடிவுக்கு வருவாள் என அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இந்த எதிர்பாராத திருப்பம் காதம்பரியைத் திகைக்க வைத்தது. மூடிக்கிடந்த சாவித்திரியின் உலகில் ஒரு புதிய கதவு திறந்திருக்கிறது. ஆனால், காதம்பரியின் உலகில் ஒரு முக்கியமான கதவு மூடிக்கொண்டது. காதம்பரியைப் பொறுத்த வரையில் அவளின் ஒரே உலகம் அப்பாதான். அந்த உலகம் அந்நியமாகிப் போனதில் அவளின் மொத்த உலகமும் காணாமல் போயிருக்கிறது. அவளுக்கு இனி உலகம் இல்லை. உலகமே இல்லாமல் இவ்வுலகில் எப்படி வாழ்வது? எத்தனை காலம் வாழ்வது?

வெகுநேரம் இதே கேள்வியிலும் பிரமையிலும் உறைந்து போயிருந்த காதம்பரியின் உடல் வெடவெடவென்று நடுங்கியது வியர்வை பெருகி ஓடியது. சட்டென நாக்கு உலர்ந்து போனது. பயத்தில் எழுந்து நிற்கப் பார்த்தவள் மயக்கமுற்று அப்படியே அறுபட்ட தாவரம்போல் தரையில் விழுந்தாள்.

ஏதோ விழுந்த சத்தம் கேட்டுச் சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த வசந்தா, காதம்பரி தரையில் விழுந்து

கிடந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டாள். பரபரப்புடன் அருகில் ஓடினாள். காதம்பரி பேச்சுமூச்சற்று மயங்கிப் போயிருந்தாள். வசந்தா, காதம்பரியை இரண்டு மூன்று முறை கூப்பிட்டாள். தொட்டுக் கூப்பிடச் சில விநாடிகள் மனம் அஞ்சியது. ஓடிப்போய் தம்ளரில் குளிர்ந்த நீரை எடுத்து வந்து முகத்தில் தெளித்தாள்...காதம்பரியிடம் எந்தச் சலனமும் இல்லை. ரிஸீவரை எடுத்து ராஜரத்னத்துக்கு போன் செய்தாள் வசந்தா.

''ஹலோ!''

''நான்தாங்க வசந்தா பேசறேன்...''

''என்ன வசந்தா?''

''நம்ம காதம்பரி அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி மயக்கமா விழுந்து பேச்சுமூச்சு இல்லாம கிடக்குங்க...''

ராஜரத்னத்தின் உச்சந்தலையில் ரத்தம் குபீரெனப் பாய்ந்தது.

''கிட்டே இருந்து பார்த்துக்க. அரை மணிக்குள்ளே டாக்டரோட வர்றேன்...''

ரிஸீவரை வைத்த வசந்தா ஒரு தலையணையை எடுத்து வந்து காதம்பரியின் தலைக்கு வைத்தாள். காதம்பரியின் மூச்சு மெல்லிய இழையாக ஓடிக்கொண்டிருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் கவலையுடன் வசந்தா அருகில் உட்கார்ந்து காதம்பரியின் முகத்தைப் பார்த்தாள். வசந்தாவின் உள்மன புத்திர ஏக்கம் எதிர் பாராமல் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தில் கசிந்தது. காதம்பரியின் நெற்றிக் கூந்தலைத் தாயுணர்வுடன் ஒதுக்கி விட்டாள். அவளை மகளாக அள்ளிக் கொள்ள அவளின் உணர்வுகள் மேலோங்கின. லேசாகக்காதம்பரியின் முகத்தை அணைத்து, கன்னத்தில் முத்தமிட்டாள். அப்படி முத்தமிட்ட கணத்திலேயே வசந்தாவுக்கு விசித்திரமான போட்டி உணர்வும் தலை உயர்த்தியது. காதம்பரிக்கு நிகராக இந்த



வீட்டில் தன்னுடைய பெண் பிள்ளையும் ஓங்கி வளர வேண்டும் என்ற ஆசை அவளின் அடி வயிற்றில் சுழன்றது. காதம்பரியை ஒருமுறை கிள்ளி வைக்கலாம் போலக் கூட இருந்தது!

அப்போதுதான் சற்றுத் தள்ளி மடிந்து கிடந்த சாவித்திரியின் கடிதத்தை வசந்தா கவனித்து, கையில் எடுத்துப் பிரித்துப் பார்த்து, படிக்க ஆரம்பித்தாள். காதம்பரியின் கரகரப்பான குரல் கேட்டது.

''எனக்கு வந்த லெட்டரையா படிச்சுப் பார்த்திட்டு இருக்கீங்க?''

—மயக்கம் தெளிந்து வெறுமே படுத்தபடி காதம்பரி கேட்டாள். திடுக்கிட்டுப் போன வசந்தா பதில் சொல்லத் தெரியாமல் பயத்துடன் பார்த்தாள்.

''வெட்கமா இல்லே... இன்னொருத்திக்கு வந்த லெட்டரைப் படிக்கறத்துக்கு?''

''இல்லை காதம்பரி...என்ன காகிதம்னு எடுத்துப் பார்த்தேன்.''—வசந்தா தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

''சும்மா பார்த்த மாதிரி தெரியலையே!''—காதம்பரி மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

''இந்தா...''—லெட்டரை நீட்டினாள் வசந்தா.

''எங்கே கிடந்ததோ அங்கேயே போடுங்க. நான் எடுப்பேன்!''

காதம்பரியின் கண்களில் அகங்காரம் கொடி கட்டிப் பறந்தது வசந்தாவின் கண்கள் மறுகணமே அவமானத்தில் தாழ்ந்து விட்டன. கடிதத்தைத் தரையில் விசியெறிந்து விட்டு தன்னுடைய அறைக்குள் ஓடி, கட்டிலில் படுத்து விம்மி விம்மி அழுதாள்.

கடிதத்தை உறையிலிட்டுக் காதம்பரி எழுந்து நின்ற போது, வெளியில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

ராஜரத்னமும் அவர் பின்னால் டாக்டரும் 'இறங்கி வேகமாக வீட்டுக்குள் வந்தார்கள். காதம்பரி நின்று கொண்டிருந்ததைப் பார்த்த ராஜரத்னத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னம்மா, நீ பேச்சுமூச்சு இல்லாம மயங்கிக் கிடக்கறதா உன் சின்னம்மா போன் பண்ணினா எனக்கு...?''

''அதுவா? ஒரு மாதிரி திடீர்னு ரொம்ப நெர்வஸா இருந்தது தலை சுத்திக் கீழே விழுந்துட்டேன். வேற ஒண்ணு மில்லேப்பா. அது சரி, இதுக்காகவா டாக்டரைக் கூட்டிட்டு வந்தீங்க?''

''நீங்க செக்கப் பண்ணிடுங்க ராவ்...''

''நோ டாக்டர். இப்ப எனக்கு சரியாயிடுச்சு...''

''இவ்வளவு தூரம் வந்திருக்கார். செக்கப் பண்ணிடறதில் உனக்கு என்னம்மா கஷ்டம்?''

''அப்படின்னா பாருங்க...''

காதம்பரியை டாக்டர் நிதானமாகச் சோதித்துப் பார்த்தார்.

''கொஞ்சம் ப்ரஷர் இருக்கு... வேற ஒண்ணுமில்லே...''

''ப்ரஷரா?''—ராஜரத்னம் அதிர்ச்சியுடன் கேட்டார்.

''கவலைப்படற மாதிரி எதுவும் இடையாது. சில மாத்திரைகள் எழுதித் தர்றேன். அதை மட்டுமே சாப்பிடட்டும். அடுத்த வாரம் பார்ப்போம...''

டாக்டர் எப்போது போவாரென்று காதம்பரி காத்துக் கொண்டிருந்தாள். அவர் போனதும் ஆரம்பித்து விட்டாள்.



''அப்பா, நீங்க வந்ததும் கம்ப்ளெயிண்ட் பண்றேன்னு நினைக்காதீங்க! அவங்க செஞ்ச காரியம் கொஞ்சங்கூடச் சரியில்லை!''

''வசந்தாவையா சொல்றே?''

''வேற யார் இருக்கா என்னைத் தவிர இந்த வீட்டுல?''

''என்ன செஞ்சா?''

''என் ஃப்ரெண்ட் சாவித்திரி எனக்கு எழுதின லெட்டரை எடுத்துப் பிரிச்சுப் படிச்சாங்க...''

''நெஜமாவா?''

''அதுவும் சாவித்திரியைப் பத்தின ரொம்ப ரொம்ப பர்ஸனலான விஷயமுள்ள லெட்டர்.''

''என்னிக்கி?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான்.''

''இரு கேட்டுப் பார்க்கறேன்.''

ராஜரத்னம் வசந்தாவைத் தேடிச் செல்ல, காதம்பரி திருப்தியுடன் தன்னுடைய அறைக்குள் சென்றாள். உடல் களைத்திருந்தாலும் மனம் சிறிது உவகையுடன் குதூகலமடைந்திருந்தது. இதே மாதிரி இன்னொரு சந்தர்ப்பமும் கிடைத்து விட்டால் போதும் என்ற புளகாங்கிதம் தோன்றியபோது, ராஜரத்னம் அவளுடைய அறைக்குள் வந்தார்.

''கேட்டீங்களா...?'' — காதம்பரி இறுமாப்புடன் கேட்டாள்.

''கேட்டேன், ஆனா, ஒரு இக்கட்டான நிலையில, அதுவும் மயங்கிக் கிடந்த உன் பக்கத்துல ஒரு பேப்பர் மாதிரி கிடந்ததாலேதான் அது என்னன்னு எடுத்துப்

பார்த்திருக்கா. அவ்வளவுதான்! அந்த நேரத்துல நான் இருந்திருந்தாக் கூட அதைத்தான் செய்திருப்பேன்!''

''நானாக இருந்தா அதைச் செய்திருக்க மாட்டேன்! ஆல்ரைட்... அப்ப அவங்க செஞ்சது தப்பு இல்லேனு சொல்றீங்களா?''

''யெஸ்... எப்படி நீ மயங்கி விழுந்ததும் எனக்கு போன் பண்ணினாளோ, அதே மாதிரிதான் உன் பக்கத்துல கிடந்த லெட்டரை வசந்தா எடுத்துப் படிச்சதும். ரெண்டுமே இயற்கைதானே!''

''கடைசியில் கம்ப்ளெயிண்ட். பண்ணின நான்தான் முட்டாள் ஆயிட்டேன். வெல்! தாங்க்யூ வெரி மச்.''

''ஒரு விஷயம் காதம்பரி... நீ உன் சின்னம்மா பத்தி கம்ப்ளெயிண்ட் பண்ணினதுக்காக நான் கவலைப் படலே. ஆனா, உனக்குக் காரணமே இல்லாம அவமேல இருக்கிற பொறாமைதான் எனக்குப் பிடிக்கலை...''

— சந்தர்ப்பத்தைத் தானும் பயன்படுத்திக் கொள்கிற முனைப்பில் ராஜரத்னம் காதம்பரியை எதிர் கொண்டு நின்றார்.

''காரணமில்லாம யாருக்கும் யார் மேலேயும் பொறாமை வராது.''

''அப்ப காரணத்தைச் சொல்லு.''

''ஸாரி, காரணத்தை உங்ககிட்டே சொல்றதா இல்லை.''

''அப்ப உன் காரணத்தை உனக்குள்ளேயே நீ வைத்துக் கொள்ள வேண்டியதுதான். காரணமில்லாம வசந்தாவின் மனசைப் புண்படுத்த உனக்கு உரிமை கிடையாது!''

மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியாமல் இருவரும் மௌனமாக நின்றார்கள்.



''சரி, இப்ப நான் உங்களை ஒண்ணு கேட்கப் போறேன். 'வாங்கித் தரேன்'னு சொல்லுங்க. என்னனு சொல்றேன்.''

''நீ கேட்டு இதுவரை நான் எதையும் வாங்கித் தராம விட்டது கிடையாது.''

''அதெல்லாம் பழைய கதை! இப்ப நீங்க முதல்ல, 'சரி, வாங்கித் தரேன்'னு சொல்லுங்க. நான் சொல்றேன்.''

''நீ முதல்ல என்னனு கேள்!''

''ரொம்ப மாறிப் போயிட்டீங்க டாடி!''— சொல்லும்போதே காதம்பரிக்கு உணர்வு மேலிட்டால் குரல் அடைத்துப் போயிற்று. காதம்பரியை வீழ்த்தி விடலாம் என்று மெல்லிய பரவசம் ராஜரத்னத்திடம் அரும்பியது.

''உனக்குத்தான் என் மேல் இருந்த நம்பிக்கை போயிடுச்சு...'' – தன்னுடைய நிலையை இறுகப் பற்றிக் கொண்டு ராஜரத்னம் பேசினார். ஆனால், அவர் வீசிய கழியையே காதம்பரி பற்றிக் கொண்டாள். உடனே கழி ராஜரத்னத்தின் பக்கம் வீசியடிக்கப்பட்டது.

''சரியா சொன்னீங்க! உங்க மேல எனக்கு நம்பிக்கை கிடையாதுதான் அப்பா. உங்களுக்குத் தெரியுமா? ஏற்கெனவே ஒரு விஷயத்துல என்னை நீங்க ஏமாத்தி யிருக்கீங்க.''

''நானா?''

''நீங்களேதான்!''

''என்னன்னு சொல்லு பார்க்கலாம்?''

''இறந்துபோன நம்ம அம்மாவுடைய ஏராளமான நகைகள் எல்லாமே எனக்குத்தான்னு நீங்க ரொம்ப நாள் முன்னாடியே சொல்லியிருந்தீங்க... ஆனா, கடைசியில்

என்ன செஞ்சீங்கன்னு உங்களுக்கே தெரியும்... ' ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிற முடிவுக்கு வந்ததும், அத்தனை நகையையும் தூக்கி அவங்களுக்குக் கொடுத்துட்டீங்க! உண்டா இல்லையான்னு இப்ப சொல்லுங்கப்பா...''

ராஜரத்னத்தின் முகம் அவமானத்தில் சிவந்து விட்டது. பதில் சொல்லாமல் தலைகுனிந்து நின்றார்.

''அந்த நகைகள் எல்லாம் எனக்கு வேணும்னு நான் சொல்லலே. உங்களுக்குத் தெரியும்—நகைகளை நான் எவ்வளவு தூரத்துக்கு வெறுக்கிறவள்னு... ஆனா, நான் கேக்கறது—சொன்ன வார்த்தையை நீங்க காப்பாத்தினீங்களான்னுதான்! அதனாலதான் சொல்றேன். உங்க மேல இருந்த நம்பிக்கை எனக்குப் போயிடுச்சுன்னு...''

பேச்சுத் தொடரில் இந்தக் கணையை ராஜரத்னம் தன்னுடைய உள்நோக்கத்துக்குச் சாதகமாகத் திருகிக் கொண்டார்.

''பரவாயில்லேம்மா... அப்பாவைப் பத்தி நீ அந்த முடிவுக்கு வந்தா நான் என்ன செய்ய முடியும்? ஆனா ஒண்ணு. இப்ப சொல்லு—நீ கல்யாணம் பண்ணிக்கறேன்னு அடுத்த நிமிஷமே அம்மாவோட அத்தனை நகைகளையும் உனக்குத் தரேன்...''

''நடக்கவே நடக்காது! கேவலம் நகைகளுக்காகப் போய் எவனையோ நான் கல்யாணம் செஞ்சுப்பேன்னு மட்டும் கனவில்கூட நினைக்காதீங்க...''

''நகைகளுக்காகப் பண்ணிக்கச் சொல்லலே உன்னை...''

''வேற எதுக்காகச் சொன்னாலும் சரி... நான் யாரையும் கல்யாணம் பண்ணிக்க முடியாது...''

''அப்போ நான் எதுவும் செய்யறதுக்கில்லே...''



''சொன்ன வார்த்தையைக் காப்பாத்த மாட்டீங்கன்னு சொல்றீங்க?!''

''யெஸ்!''

''ஓகே! ஆனா, ஒரு விஷயம் டாடி! முழுக்க முழுக்க இந்த வீடு என்னோட பேர்லதான் இருக்கு, இல்லையா?''

''பயப்படாதே. அதில் எந்த மாற்றமும் வராது. இந்த வீடு உனக்குத்தான்!''

''நான் இன்னும் உங்களுடைய பிஸினஸில் ஒரு பார்ட்னர்தானே...?''

''யெஸ்! அதிலும் எந்த மாற்றமும் கிடையாது!''

''உங்களோட பிஸினஸ் பார்ட்னர் என்கிற முறையில் கேக்கறேன்... இனிமே தினமும் நான் ஆபீஸுக்கு வரப் போறேன்! என்னால வீட்டுல அடைஞ்சு கிடக்க முடியாது. ஸோ, எனக்கும் தனியா ஒரு கார் வேணும்! அதுவும் புத்தம் புது மாருதி கார்— வித் ஏ. ஸி.!''

''வெரி ஸாரி காதம்பரி, புது ஏ. ஸி. மாருதி கார் வாங்கித் தர உடனே பணம் எடுக்க முடியாது... கொஞ்சம் பணம் டைட் இப்போ...''

சில விநாடிகள் காதம்பரி ராஜரத்னத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். 'அப்படியானால் நீங்களும் உங்களின் இரண்டாவது மனைவியும் இந்த வீட்டை விட்டு வெளியே போய் விடுங்கள்' என்கிற அந்த வார்த்தை உச்சங்களுக்குத் தாவிவிடலாமா என்று யோசித்தாள். அப்படியொரு வெற்றிவாகை சூட அவளுக்கு மனம் வரவில்லை. இந்த உச்சகட்டத்தில் அப்பாவிடம் தோற்றுப் போகிற சுய இரக்கம் வந்தது. நம் அப்பாவைப் போய் இப்படியெல்லாம் சிக்கலில் ஆழ்த்துகிறோமே என்ற வருத்தம் ஏற்பட்டது.

அவ்வளவுதான், காதம்பரிக்கு யுத்தம் மறந்து போயிற்று! உரத்த குரலில் அழத்துவங்கி ஓடிப் போய் அப்பாவின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

மகளை ராஜரத்னம் பரிவுடன் அணைத்துக் கொண்டார். கொஞ்சம் கொஞ்சமாக அவளின் அழுகை அடங்கக் காத்திருந்தார். மகளின் கண்ணீரைத் துடைத்த பின் சொன்னார் :

''உனக்கு ஏ. ஸி. மாருதி கார்தானே வேணும்? நேரே ஒரு வாரம் பொறுத்துக் கொள். வாங்கித் தர்றேன். சரியாம்மா?''

ராஜரத்னத்தின் சட்டையில் தன் கண்களைத் துடைத்துக் கொண்ட காதம்பரி, அவரின் புறங்கையில் செல்லமாகக் கிள்ளி வைத்தாள்.

உண்மையில் யார் யாரிடம் தோற்றுப் போயிருப்பது?

## 16

வீட்டு மாடியில் சாவித்திரியுடன் பேசிக் கொண்டிருந்தாள் காதம்பரி.

''சாவித்திரி, நான் உன்னை ஒண்ணு கேட்பேன். மறைக்காம பதில் சொல்லியா?''

''ஓயெஸ்...''

''நீ உன் லெட்டர்ல எழுதியிருந்த கோபாலகிருஷ்ணன் உன்னை எப்பவாவது தொட்டுப் பேசியிருக்காரா?''

''கிடையாது...''

''தப்பா நெனைச்சுக்காதே... சும்மா ஒரு சின்ன க்யூரியாஸிடி. அதனால்தான் கேட்டேன்.''



''தொட்டுப் பேசினா தப்பா ?''

''அது தெரியாது எனக்கு !''

''இப்படியே பேசிட்டுப் போ... ஆனாலும் நீ இப்படி எக்ஸாம்ஸ் எழுதாம விட்டது ரொம்ப அநியாயம் காதம்பரி...''

''நீ உன்னோட அப்பாவை ஒரு வழியில் பழிவாங்கறே. நான் என்னோட வழியில் பழிவாங்கறேன். உனக்கு தெரியுமா... இன்னும் நாலஞ்சு நாள்ல புது ஏ. ஸி. மாருதி கார் எங்கப்பா எனக்கு வாங்கித் தரப் போறார்...எனக்கு மட்டும் தான் அந்த கார்.''

''இப்போ உனக்கென்னத்துக்குத் தனி கார்?''

''அப்பாவால் புது ஏ. ஸி, கார் எனக்கு வாங்கித் தர முடியாதுன்னு நெனைச்சு ஒரு வீம்புக்காகக் கேட்டேன். முடியாதுன்னு சொல்வார், அதை வெச்சுக்கிட்டு நாலு நாள் அவர்கூடச் சண்டை போடலாம்னு பார்த்தேன்! அவரும் முதல்ல முடியாதுன்னுதான் சொன்னார். அப்புறம் என்ன நினைச்சாரோ 'சரி, வாங்கித் தரேன்'னுட்டார். எனக்கே ரொம்ப ஷேம் ஆயிடுச்சு.''

''அப்போ உங்க அப்பாகிட்டே நீ தோத்துப் போயிட்டே !''

''நோ நோ... இது ஒரு சின்ன இடைவெளிதான். என்னிக்காவது ஒரு நாள் வட்டியும் முதலுமா அப்பாவைப் பழி வாங்காம விடமாட்டேன் சாவித்திரி.''

''யம்மா ! என்னதான் காம்ப்ளெக்ஸோ... என்னதான் ஈகோவோ, சத்தியமா வாழ்க்கைல நீ சந்தோஷமா இருக்கப் போறதில்லை...''

''சொல்லிட்டுப் போ...''

"இவ்வளவு பேசற நீ முதல்லேயே உங்கப்பாவேர்ட கல்யாணத்துக்குச் சம்மதிச்சிருக்கக்கூடாது..."

"இதை மட்டும் ஒப்புக்கறேன். அது என் தப்பு தான்."

"அது சரி... இப்படியே எத்தனை நாள் இருந்துக்கிட்டிருப்பே ?"

"வாழ்க்கை முழுதும்... !"

"அப்போ பைத்தியம் புடிச்சுத்தான் நிப்பே கடைசியில் !"

"பைத்தியம் பிடிச்சா நல்லதுதான். எந்தக் கவலையும் இல்லாம இருக்கலாம்..."

"இனிமே என்ன பைத்தியம் பிடிக்கிறது. இப்பவே நீ பைத்தியம்தான் காதம்பரி..."

"ஏய் முன்னே பின்னே தெரியாத ஒருத்தன் கூட திடீர்னு வீட்டை விட்டு ஓடிப்போகப் போற நீ பைத்தியமா...இல்லே,நான் பைத்தியமா ?"

"ஒருத்தன் கிருத்தன்னு அவரை மரியாதைக் குறைவா பேசவேண்டாம்... அவர் என்னோட வுட் பி..."

சாவித்திரியின் ஆணித்தரமான பதிலின் அழுத்தம் காதம்பரியின் கர்வத்தைப் புரட்டித் தள்ளியது. காதலிப்பவனை மணந்துகொள்ளப் போகிறவளின் உறுதி, காதம்பரியின் நெஞ்சைத் தாக்கியது. இந்தத் தாக்கம் அவளுக்குப் புதிது. இந்தப் பெண்மை அவளுக்குப் புதிர். ஓர் ஆடவனுக்காக அவளின் உணர்வுகள் படபடத்ததில்லை. யாரோ ஒருவனுக்காக அவளுடைய மனம் பொங்கிச் சஞ்சலித்ததில்லை. எவனிடமோ நெகிழ அவளின் உடற்கூறு வேட்கை உற்றதில்லை. காதம்பரி, காதம்பரியாகத்தான் இருந்திருக்கிறாள் ! இயல்பான பெண்ணாக அவள் இருந்ததில்லை. இந்நிலை பிழையான நிலையா? சாவித்திரிகள் வாழும் உலகம்தான் யதார்த்தமானதா? காதம்பரிகளின் அகவுலகம் விரிசல் கொண்டதா?



ஏற்கெனவே பதிவு செய்து கொண்ட நேரத்துக்கு ஒரு நிமிடம்கூடப் பிசகாமல், காதம்பரி அந்த மனோ தத்துவ டாக்டர் தேஜஸ்வினியின் எதிரில் சற்றுத் தலை குனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

"நேற்று அபாயின்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ண வந்தவர் உன் குடும்ப நண்பர் காளிதாஸ்தானே?"— டாக்டர் தேஜஸ்வினி கேட்டாள்.

"ஆமாம். எங்கள் குடும்ப நண்பர்தான் அவர். முதலில் என்னைப் பற்றி அவர் என்ன சொன்னார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா டாக்டர்?"

"அவற்றை நான் இன்னொரு நாள் சொல்கிறேன். இப்போது உன்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்; என்ன சொல்கிறாய் என்பதுதான் முக்கியம்... அதற்கு முன் ஒரு விஷயம், நான் கேட்கிற எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லத் தயங்கக்கூடாது. எந்த உண்மையையும் மறைக்கக்கூடாது, தெரிகிறதா?"

"தெரிகிறது டாக்டர்."

"ஒரு மனோதத்துவ டாக்டராக நினைக்காமல் ஒரு தோழியுடன் மனம் விட்டுப் பேசினால் எப்படிப் பேசுவியோ — அப்படிப் பேசினால் போதும்..."

"முயற்சி பண்ணுகிறேன் டாக்டர்..."

"நீ இன்று இங்கு வந்திருப்பது காளிதாஸைத் தவிர, உன் வீட்டில் வேறு யாருக்கும் தெரியாது இல்லையா?"

"தெரியாது."

"சரி...இப்போது உன்னோட பிரச்னை என்ன...?"

காதம்பரி தலைகுனிந்தபடி பதில் சொன்னாள்: ''தெரியலை டாக்டர்!''

''பின் என்னை ஏன் சந்திக்க வேண்டுமென்று தோன்றியது உனக்கு?''

''திடீரென்று எனக்குள் ஒரு பயம் வந்து விட்டது டாக்டர்!''

''எதைப் பற்றி அல்லது யாரைப் பற்றி!''

''என்னைப் பற்றி...!''

''உனக்கு உன்னைப் பற்றி வந்திருப்பது உணர்வு குழப்பமா, இல்லை பயமா? நன்றாக யோசித்துப் பதில் சொல்.''

''குழப்பம் வந்துதான்—அது பயம் ஆகிவிட்டது!''

''வெரிகுட் அப்ஸர்வேஷன். உனக்கு வந்த குழப்பம் என்னவென்று சொல் பார்க்கலாம்?''

காதம்பரி யோசித்தாள்.

''ரொம்பவும் விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொன்னாலே போதும்.''

''அதில்லை டாக்டர். என்னுடைய குழப்பத்தை எப்படிச் சொல்வதென்றே எனக்குக் குழப்பமாக இருக்கிறது!''

''காதம்பரி, விஷயத்தை நீ குழப்பக்கூடாது.''

''அது என்னுடைய கேரக்டர் டாக்டர். யாரையாவது குழப்புவதென்றால் எனக்குச் சந்தோஷம் அதிகம். ஒரு இடத்துக்கு நேராகப் போவதற்குப் பாதை இருந்தால் கூட வேறொரு சுற்றுப் பாதையில்தான் போவேன்!''

''இந்தத் தன்மையில் ஒரு ஆபத்து இருக்கிறது காதம்பரி. இம்மாதிரி நீ நடந்து கொள்வதில் சில சமயங்



களில், பாதை மாறிப் போய்விடலாம் அல்லது எது சரியான பாதையென்ற குழப்ப நிலை வந்து விடலாம்.''

''அப்படிப்பட்ட குழப்ப நிலையில்தான் இப்போது நான் இருக்கிறேன் டாக்டர்!''

டாக்டர் தேஜஸ்வினி, காதம்பரியின் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தாள். அந்தக் கனிவு காதம்பரிக்கு இதமாக இருந்தது.

''சரி, இப்போது சொல்...உனக்கு வந்திருக்கும் பயம் எதைப் பற்றி!''

''நீங்கள் இப்போது சொன்னது மாதிரி என் வாழ்க்கைப் பாதை தவறிப் போயிருக்கிறதோ என்ற பயம்...?''

''இந்த ஒரு பயம்தானா...?''

''உதாரணத்துக்காக ஒரு பயத்தைச் சொன்னேன்...''

''எனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்ற பயமும் சில நாட்களாக அதிகம் இருக்கிறது. என்றைக்காவது நான் தற்கொலை செய்துதான் செத்துப் போவேனோ என்ற பயமும் இருக்கிறது. அதுவும் குறிப்பாக, எனக்கு என் அப்பா புது மாருதி ஏ.ஸி. கார் வாங்கித் தருவதாக ப்ராமிஸ் பண்ணிவிட்டு இரண்டு நாள் முன்பு, 'ஸாரி, திடீர்னு பண நெருக்கடி... அதனால் கார் வாங்கித் தர முடியாது' என்று கைவிரித்துவிட்டபோது இந்தப் பயம் மிக அதிகமாகி விட்டது. சில தினங்களாக இன்னொரு பயம் வந்திருக்கிறது. என்னுடைய நெருங்கிய தோழி சாவித்திரி ஒரு பையனைக் காதலித்து, அவனுடன் ஓடிப் போக இருக்கிறாள். அந்தப் பையன் அவளை ஏமாற்றித் தெருவில் விட்டு விடுவானோ என்று என் மனம் பயந்து நடுங்குகிறது...''

''இது உனக்குத் தேவையே இல்லாத பயம்!''

''ஸாரி டாக்டர்! இது தேவையான பயமா இல்லை, தேவையில்லாத பயமா என்று எனக்குத் தெரியாது...ஆனா, அந்த பயம் எனக்கு இருக்கு...''

''யெஸ், யெஸ்...புரியுது... ஆனா காதம்பரி! இத்தனை பயங்களைப் பற்றிச் சொன்னாலும்கூட, சுபாவத்தில் நீ பயந்தாங்கொள்ளிப் பெண்ணும் இல்லை. சரிதானா நான் சொல்வது...''

காதம்பரியின் கண்களில் ஒரு பிரகாசம் தோன்றியது! ''கரெக்ட் டாக்டர்... நான் யாருக்கும், எதற்கும் பயப்படவே மாட்டேன். ஒரு சின்ன விஷயத்தைக்கூட அதிகமா சிக்கல்படுத்திப் பார்ப்பதில் எனக்கு அசாத்தியமான தைரியம் உண்டு...''

''உன்னுடைய சிக்கலான பர்சனாலிடி இங்கேதான் ஆரம்பிக்கிறது...''

''என்னுடைய பிரச்னை என்னவென்றால்—இதெல்லாம் எனக்குத் தெரிந்தும் கூட அதை குரூர சந்தோஷத்துடன் காம்ப்ளிகேட் பண்ணிவிடுவதுதான்.''

''அதாவது, உன்னோட ஈகோ எல்லாத்தையும் சிக்கலாக்கிடுது...இல்லையா...?''

''எக்ஸாக்ட்லி...''

''அந்த ஈகோ முழு வீச்சுடன் இயங்கும் சமயங்களில் உன்னிடம் எந்தவிதமான பயமும் இருப்பதில்லை. சரியா...?''

''யெஸ்...''

''மிகச் சரியாக நீ விஷயங்களை வெளியிடுகிறாய் காதம்பரி. உண்மையில் உனக்கு என்னுடைய உதவி தேவையே இல்லையென்று நினைக்கிறேன்''

''என்னுடைய ஈகோ அப்படித்தான் எனக்குள் சொல்லிக் கொண்டிருக்கிறது! ஆனாலும்கூட நான் எங்கோ ஒரு மூலையில் செயலற்றுப் போய் நிற்கிறேன் டாக்டர்... எனக்கு உங்க உதவி வேணும்...''



''நேற்று வந்திருந்தாரே, உன் நண்பர் காளிதாஸ். உண்மையில் அவர் என்னைவிட உயர்வானவர்... ரொம்ப புத்திசாலியானவர். அவரிடமே நீ உன் பிரச்னைகள் பத்திப் பேசலாமே...?''

''அந்த காம்ப்ளெக்ஸ்தான் என்னில் முதன்மையானது... ஆண்களிடம் என்னை ஆழமாக வெளிப்படுத்திக் கொள்வது என்னால் முடியவே முடியாத காரியம். அதனால்தான் திருமணத்தைப் பற்றி நினைத்தால்கூட எனக்குள் ஒரு சிலிர்ப்பு, வருகிறது. ஒரு ஆணுடன் படுக்கையில் இருப்பதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது டாக்டர்... செக்ஸை நான் வெறுக்கறேன்...''

''காதம்பரி...',

''யெஸ்...?''

''பிராக்டிகலாக உனக்கு செக்ஸ் பற்றி அனுபவம் உண்டா...?''

''கிடையாது.''

''பிராக்டிகலாகத் தெரியாத ஒன்றை எப்படி வெறுக்கிறாய் என்பதை எனக்குச் சொல்வாயா...!''

''முன் அனுபவம் இல்லை என்பதற்காக ஒரு விஷயத்தைப் பத்தி எனக்கு அபிப்பிராயமே இருக்கமுடியாதா டாக்டர்?''

''நோ! எந்த ஒரு அபிப்பிராயமும் சரி—முழுக்க முழுக்கத் தெரியாத ஒன்றைப் பற்றி ஏற்படவே முடியாது!''

காதம்பரியின் இறந்த காலம் புள்ளியாகச் சுழன்றது.

"அபிப்பிராயம் என்பது—தெரிகிற ஏதோ ஒன்றைப் பற்றிய ரீயாக்ஷன்தான்... ஸோ—செக்ஸ் என்பது உனக்குத் தெரியவே தெரியாத விஷயமல்ல... புத்தகங்கள் மூலமாக, படங்கள் வழியாக அது என்னவென்று நீ பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கலாம், அல்லது..."— டாக்டர் தேஜஸ்வினி தயக்கத்துடன் நிறுத்தினாள். காதம்பரியின் முகத்தைக் கவனித்தாள். அவளின் பார்வை எங்கோ சூன்யத்தில் லயத்திருந்தது. சமுத்திரத்தில் வெகுதொலைவில் தனித்துத் தெரியும் கப்பலின் தோற்றம் அவளின் கண்களில் தெரிந்தது.

"இப்போது இது தொடர்பாக நீ எதுவும் சொல்ல நினைக்கிறாயா காதம்பரி...?"— தேஜஸ்வினி கனிவுடன் கேட்டாள்.

காதம்பரி தலையைத் தாழ்த்திக் கொண்டாள். தூரத்துக் கப்பல் லேசாகக் குலுங்கியது.

"என்றைக்கும் உண்மைகள்தான் நம்மைக் காப்பாற்றும் காதம்பரி."

காதம்பரி மௌனமாகவே இருந்தாள்.

"தயவுசெய்து நீ பதில் சொல்ல வேண்டும்."

"என்ன பதில் சொல்ல வேண்டும் என்கிறீர்கள்...?"

"செக்ஸை நீ வெறுப்பது ஏன் என்று கேட்கிறேன்...?"

"ஏனென்றால் அது மிகவும் ஆபாசமாகத் தெரிகிறது எனக்கு. அது மட்டுமில்லை. செக்ஸில் ஒரு வன்முறைகூட இருக்கிறது."

"நான் இதற்குப் பதில் சொல்கிறேன். பிறந்த ஒரு குழந்தைக்கு உணவு என்பது தாய்ப்பால்தான். மாமிசமும் உணவுதான் என்று அதை அந்தக் குழந்தைக்குக் கொடுத்தால், அது இறந்து போகக்கூட வாய்ப்பிருக்கிறது"



மிகவும் அந்நியமாகிவிட்ட குரலுடன் காதம்பரி கேட்டாள் :

"இந்த உதாரணம் எதற்காக டாக்டர்?"

"பக்குவமில்லாத வயதில் முறைகேடான, மூர்க்கத்தனமான வழியில் ஓர் இளைஞன், ஒரு சிறுமியிடம் நடக்க முயன்றால்..."

பளீரென மார்பில் ஆடை கிழிக்கப்பட்டாற் போலிருந்தது காதம்பரிக்கு. கலவரத்துடன் மிகமிக அருகில் மலங்க மலங்க விழித்தாள்.

அப்போது இன்ட்டர்காம் ஒலித்தது.

"யெஸ்..."

"மிஸ்டர் காளிதாஸ் வந்திருக்கிறார். மிகவும் சீரியஸான விஷயம் என்கிறார்"

"உடனே உள்ளே அனுப்பு..."

மறுநிமிஷமே காளிதாஸ் உள்ளே பிரவேசித்தான்.

"ஸாரி டாக்டர், காதம்பரியை நான் உடனே அழைத்துச் செல்ல வேண்டும்."

காதம்பரி மிரண்டு போய் எழுந்து நின்றாள்.

"காதம்பரி, உங்க அப்பாசீரியஸா இருக்கார். இப்போதுதான் நர்ஸிங்ஹோமில் அட்மிட் பண்ணியிருக்கிறார்கள்."

"அப்பாவுக்கு என்ன காளிதாஸ்...?"— காதம்பரி நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

"ஹார்ட் அட்டாக். கொஞ்சம் சீரியஸ்தான். வாருங்கள் போகலாம்."

'அப்பா!' என்று கதறிய காதம்பரியைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்ற காளிதாஸ் காரில் ஏறிக்கொள்ள— கார் விரைந்து கிளம்பியது.

# 17

அடையாறில் இருந்த அந்தத் தனியார் மருத்துவ மனையின் 'இன்டென்ஸிவ் கேர் யூனிட்'டில் அனுமதிக்கப்பட்டிருந்த ராஜரத்னத்தைப் பார்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. வேறோர் அறையிலும், வராந்தாவிலும், முன் தோட்டத்திலுமாகக் குடும்பத்தினரும் அலுவலகப் பணியாளர்களும் கவலையுடன் நின்றுகொண்டிருந்தார்கள். எத்தனை அடக்க முயன்றும் முடியாமல் காதம்பரி, பத்மாவதியின் தோளில் சாய்ந்து அழுதுகொண்டிருந்தாள். சற்றுத் தள்ளி தனது அண்ணன் சகாதேவனுடன் நின்ற வசந்தாவின் முகம் இருண்டு போயிருந்தது. மிகத் தாமதமாகக் கிடைத்திருக்கும் வாழ்க்கை மாற்றம் சின்னபின்னமாகிப் போய் விடுமோ என்ற பீதி அவளின் கண்களில் குவிந்திருந்தது. அவளுடைய உதடுகள் மௌனமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தன.

மணி இரவு எட்டாகியிருந்தது. முன் தோட்டத்தில் காளிதாஸ் மட்டும் தனியாக நின்றான். அவனுடைய மனம் கனத்துப் போயிருந்தது. எதிர்பாராத இந்த முடக்கம் அவனுக்குள்ளும் ஒரு பயத்தை ஏற்படுத்தியிருந்தது. முற்றிலும் புதுமையாக ஒரு மனோதத்துவ டாக்டரைச் சந்தித்துத் தனியாகப் பேச விரும்பி அதற்கு ஏற்பாடு செய்யும்படி அவனைக் காதம்பரி கேட்டுக்கொண்ட நிகழ்ச்சி முற்றுப்பெறுவதற்குள் குறுக்கிட்டுவிட்ட ராஜரத்னத்தின் சுகவீனம் ஓர் அசுபமுகமனாக அவனுக்குத் தெரிந்தது.

மனோதத்துவ டாக்டரிடம் காதம்பரியின் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதற்குச் சென்றிருந்த சமயம், அந்த டாக்டரிடம் காதம்பரி பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னவற்றைக் காளிதாஸ் நினைத்துப் பார்த்தான்.



''அதாவது டாக்டர், இத்தனை நாள் பழகின வரைக்கும் அந்தக் காதம்பரி பற்றி நான் முக்கியமா சொல்ல நினைக்கிறது இதுதான்...ஒண்ணு— தன்னோட அப்பாமேல அந்தப் பொண்ணுக்கு இருக்கிற அதீத அன்பு... ரெண்டு—தான் கல்யாணமே செஞ்சுக்கப் போறதில்லேனு அந்தப் பொண்ணு சொல்லி அதற்கு அவ சொல்ற சில காரணங்கள்... மூணு— தனக்கு ஆம்பளைகள் கிட்டே ஒரு விதமான இறுக்கம் இருக்குனு அந்தப் பொண்ணு நெனைச்சுக்கிட்டிருக்கறது... நாலு— பேசிட்டிருக்கறப்பவே எப்பவோ நடந்த ஒரு நிகழ்ச்சியை நெனைச்சுப் பார்க்கிற மாதிரி, சட்டுனு ஸைலண்டா ஆஃப் ஆயிடற மாதிரி இருந்துட்டு அப்புறமா பேசறது...''

''அதாவது, ஒரு விதமான ப்ளாக் அவுட்?''

''சரியான வார்த்தை சொன்னீங்க... அடிக்கடி அந்த மாதிரி 'ப்ளாக் அவுட்' வர்றதை நான் கவனிச்சிருக்கேன் டாக்டர்...''

''அந்தப் பெண் வரட்டும். பேசிப்பார்த்தபின் மறுபடியும் உங்களுடன் பேசுகிறேன்.''

''இதற்கு முன் அவர்கள் அடையாறில் அவர்களின் பூர்வீகமான மிகப் பழைய பங்களாவில் இருந்தார்கள். காதம்பரி பிடிவாதமாக அந்த பங்களாவை விற்றுவிடச் சொல்லவே, மகளின் வார்த்தையைத் தட்ட முடியாமல் ராஜரத்னம் அந்த வீட்டை விற்றார். வெளிப்படையாகக் காதம்பரி சொன்னதில்லை என்றாலும்கூட, அந்தப் பழைய வீட்டைக் கண்டாலே பிடிக்காது காதம்பரிக்கு...''

டாக்டரிடம் இன்னும் காதம்பரி பற்றிச் சொல்லாதவற்றையும் காளிதாஸ் நினைவில் கொணர்ந்தான். அவளைப் பற்றிய ஒவ்வொரு கோடாக விழுந்தது. அத்தனை கோடுகளுமே ஏதேனும் ஒரு புள்ளியில் சந்திக்க

வேண்டுமே என்று கணக்கிட்டான். அந்தச் சிந்தனைப் புள்ளி, பத்மாவதியின் அழைப்பில் கலைந்தது.

''எங்க அண்ணியும், அவங்க அண்ணனும் துணைக்கு ஒரு ஆபீஸ் பையனும் மட்டும் இங்கே இருக்கட்டும். நாமெல்லாம் வீட்டுக்குப் போயிட்டு காலையில் வந்தா போதும்னு டாக்டர் சொல்றார்.''

''இப்ப எப்படி இருக்காம்?''

''இருபத்திநாலு மணி நேரம் போனாத்தான் சொல்ல முடியும்னு சொல்றாங்க... ஆனா, இங்கே ராத்திரி இத்தனை பேர் இருக்கக்கூடாதாம்...''

''நான் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை போன் பண்றேன்...''— வசந்தாவின் அண்ணன் சொன்னான்.

காதம்பரி தன்னுடைய ஆத்திரத்தைக் காட்டிக் கொள்ள வழியில்லாமல் மனத்துக்குள் குமுறினாள். நேற்று சொந்தம் கொண்டாடி வந்தவர்கள் இங்கே தங்குகிறார்கள். தன்னால் தங்க முடியவில்லை. என்ன அக்கிரமம்...

''அதெல்லாம் முடியாது. நானும் இங்கே தான் தங்கப் போறேன்.''

''உஸ்... சொன்னா கேட்கணும்... பிடிவாதமெல்லாம் பிடிக்காம வீட்டுக்கு வா...''— பத்மாவதி கண்டிப்பான குரலில் சொன்னாள்.

''அப்போ காளிதாஸையும் நம்ம வீட்டுக்கு வரச் சொல்லுங்க...''

''நானும்தான் வரேன் காதம்பரி'' என்றான் காளிதாஸ்.

ராஜரத்னத்தின் வீட்டில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. இரண்டு மணி அளவில்



பத்மாவதி போய்ப் படுத்து விட்டாள். அலுவலகச் சிப்பந்திகள் இருவர் மாடியறையில் இருக்க, காதம்பரியும் காளிதாஸும் ஹாலில் டெலிபோன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

''நீங்க போய்ப் படுங்க காதம்பரி...''

''உங்களுக்கு என்னோட மனசு தெரியலையா? போய்ப் படுத்தா எனக்குத் தூக்கம் வரும்னா நெனைக்கிறீங்க...?''

''கொஞ்சம் ரெஸ்ட்டாவது எடுக்கலாமே?''

''அப்பாவுக்கு மட்டும் ஏதாவது ஆச்சன்னா— அவ்வளவுதான்... நான் உயிரோட இருக்கமாட்டேன்.''

''சரி, அந்த சைகியாட்ரிஸ்ட் தேஜஸ்வினி நல்லா பேசினாங்களா?'' — காளிதாஸ் பேச்சை மாற்றுவதற்காகக் கேட்டான்.

''ரொம்ப அழகா இருந்தாங்க!''

''நீங்க பேசணும்னு நெனைச்சுப் போன விஷயங்களைப் பேசினீங்களா?''

''இப்ப எனக்கு அது முக்கியமில்லே... அப்பா... நல்லபடியா எழுந்து உட்கார்ந்தா போதும்...''

''கொஞ்ச நாளா அப்பாவை எப்படியெல்லாம் கஷ்டப்படுத்தினீங்க?''

''அதான் கடவுள் எனக்கு நல்ல தண்டனை குடுத்திட்டார்...''

''அப்பா நல்லபடியா குணமடைஞ்சதும் நீங்க உங்களோட கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லிடுங்க. அதுவே அவருக்கு ரொம்ப பெரிய மருந்தா இருக்கும்...''

''ஸாரி காளிதாஸ்...! திரும்பத் திரும்ப அந்த விஷயத்தைப் பத்திப் பேசறதுக்கு எனக்குப் போரடிக்குது... ப்ளீஸ்!''

காளிதாஸ் வாஞ்சையுடன் காதம்பரியையே பார்த்தான். அப்போது டெலிபோன் ஒலித்தது.

''யெஸ்!''

''ஒண்ணும் பிரச்னை இல்லை. தூங்கிட்டிருக்கார்.''

''டாக்டர்ஸ் தொடர்ந்து கவனிச்சிட்டு இருக்காங்கல்லியா?''

''ஆமா... ஆமா...''

காளிதாஸ் ரிஸீவரை வைத்தான். ''அப்பா நல்லா தூங்கிட்டிருக்காராம்...''

''யப்பா! பயந்து நடுங்கிட்டேன்... அப்பா செத்துடுவாங்களோன்னு... அவங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா என்ன பண்ணுவேன் நான்... யார் இருக்காங்க எனக்கு?'' — காதம்பரியின் குரல் தளும்பியது.

'ஏன், நான் இல்லையா?' என்று கேட்கிற அளவுக்குக் காளிதாஸின் மனம் நெகிழ்ந்தது. பரிவுடன் அவளின் கூந்தலைத் தடவிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது.

''என்ன, ஒண்ணுமே சொல்லாம என் மூஞ்சியையே பார்க்கறீங்க?''

''பார்க்கணும் போல இருந்தது.''

''காளிதாஸ்... பேசாம நீங்களும் இனிமே எங்க வீட்டுக்கே வந்திடுங்களேன்... நான் அப்பாகிட்டே சொல்றேன்...''

''உங்க அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டார். ஆனா, பார்க்கிறவங்க ஏதாவது சொல்வாங்க...''

''யார் என்ன சொன்னா நமக்கென்ன? நீங்களும் எங்க வீட்டுக்கே வந்துட்டா நெஜமாவே நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். முன்னெல்லாம் எனக்கு அப்பாவோட அன்பு மட்டுமே போதும் என்கிற மாதிரி ஒரு



செக்யூரிட்டி இருந்தது. ஏனோ இப்ப அந்த செக்யூரிட்டி இல்லை... எனக்கு இன்னும் கொஞ்சம் அன்பு வேணும்... இன்னும் கொஞ்சம் பாதுகாப்பு வேணும்...''

''அதாவது, உங்கப்பாவோட இந்தக் கல்யாணத்துக்கு அப்புறம்தான் உங்களுக்கு இந்த 'பாதுகாப்பின்மை' உணர்ச்சி ஏற்பட்டிருக்கு. அப்படித்தானே?''

''அதனாலயும் இருக்கலாம்.''

காளிதாஸ் யோசித்தான். சரியான தருணம் கனிந்திருப்பதாகத் தோன்றியது. ராஜரத்னம் ஏன் மறுமணம் புரிந்தார் என்ற உண்மையை வெளிப்படுத்திவிடுகிற எண்ணம் அவனின் கண்களில் பரவியது. மறைத்து வைத்திருக்கும் பொருளைக் குழந்தைக்குத் திறந்து காட்டுகிற ஆனந்தம் உணர்வுகளில் மலர்ந்தது. உண்மையை வெளிப்படுத்தி விடுவதுதான் சரியானதாகவும் புலப்பட்டது. ராஜரத்னம் விரும்பிய இருப்பம் நிகழாமல் போனால் கூடப் பரவாயில்லை காதம்பரியின் பாதுகாப்பின்மை இப்போது களையப்பட்டால் போதும்.

''காதம்பரி, இப்ப நான் உங்களுக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தரப்போற ஒரு விஷயத்தைச் சொல்லப் போறேன்... கொஞ்சம் தயாரா இருந்துக்குங்க...''

''உங்களைப் பத்தின விஷயமா?''

''இல்லை உங்க அப்பாவைப் பத்தின விஷயம்...''

''அப்பாவைப் பத்தி இனிமே எனக்கு அதிர்ச்சி வர்ற மாதிரி என்ன இருக்கு?''

''இருக்கும்மா.''

''சொல்லுங்களேன் பார்க்கலாம்.''

''உங்கப்பா உண்மையா ரெண்டாம் கல்யாணம் ஏன் பண்ணிக்கிட்டார் தெரியுமா?''

''ஏன்?''

"சீக்கிரமே நீங்களும் யாரையாவது கல்யாணம் பண்ணிக்கணும்னுதான்!"

"புரியலை நீங்க சொல்றது."

"யாரையும் கல்யாணம் பண்ணிக்காம அப்பாகூடவே வாழ்நாள் பூரா இந்த வீட்லேயே இருக்கணும்னு நீங்க சொல்லிட்டே இருந்தீங்க இல்லியா?"

"ஆமா..."

"அப்படி நீங்க சொன்னதுக்கெல்லாம் காரணம்—உங்கப்பாகிட்டே உங்களுக்கு இருந்த அளவுகடந்த அன்பும் நெருக்கமும்தானே?"

"ஆமா."

"அந்த அன்பையும் நெருக்கத்தையும் கட் பண்ண ணும்னு நெனைச்சார்."

காதம்பரியின் முகத்தில் லேசாக அதிர்ச்சி பரவியது.

"எதுக்கு கட் பண்ணணும் காளிதாஸ்?"

"அப்பதான் இந்த வீட்டில் உங்களுக்கு ஒரு தனிமை ஏற்பட்டு, அதைத் தாங்க முடியாம நாளடைவில் யாரை யாவது கல்யாணம் பண்ணிக்கிற நிலைமைக்குச் சம்மதிப் பீங்கன்னு அவர் எதிர்பார்த்தார்..."

காதம்பரியின் முகம் அதிர்வில் வெந்து விட்டது. நெஞ்சு கனத்தது. உணர்வு மேலீட்டில் கண்கள் கலங்கின...

"உங்களுக்கு எப்படித் தெரியும் இதெல்லாம்?"—அவளுடைய குரல் நொறுங்கிப் போய் ஒலித்தது.

"கல்யாணத்துக்கு முன்பே தனியாக என்னிடம் இதையெல்லாம் சொல்லி என் அபிப்பிராயத்தைக் கேட்டார்..."

"அப்போ அப்பா உண்மையில் விரும்பி இந்தக் கல்யாணத்தைச் செய்துக்கலியா?"



"இல்லை... ஆரம்பத்துல ஒரு நாடகம் மாதிரிதான் அவரைப் பொறுத்தவரைக்கும் ப்ளான் பண்ணினார், ஆனா வசந்தா என்கிற இன்னொரு பெண்ணுக்கு இது நிஜக் கல்யாணம்தானே... அதனாலே அந்தப் பெண்ணுக்கு உரிய உரிமைகளையும் சுகங்களையும் கொடுத்தே ஆகவேண்டிய ஒரு தார்மிகப் பொறுப்பில் தன்னை ஒரு சராசரிக் கணவனாகவும் அந்தப் பெண்ணுக்கு 'கமிட்' பண்ணிக் கொண்டார்..."

காதம்பரியின் மனம் கொந்தளித்தது.

"ஆனா, அவரோட உண்மையான நோக்கம்—உங்களோட கல்யாணம்தான்."

"ஐயோ... உங்ககிட்டே வந்து அப்பா பேசினதை என்கிட்டே நீங்க பேசியிருக்கலாமே?"

"பேசினா நீங்க உங்க கல்யாணத்துக்கு சம்மதிச்சிடு வீங்களா?"

காதம்பரி வெறியுடன் மேஜையில் ஓங்கி ஒரு குத்து விட்டாள் அவளுடைய முகம் ரத்தமாகச் சிவந்திருந்தது.

"அதுக்காகக் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்க மாட்டேன். ஆனா, இத்தனை கருத்து வேறுபாடு எனக்கு வந்திருக்காதே... அப்பாவை இப்படியெல்லாம் மனக் கஷ்டப்படுத்தியிருக்க மாட்டேன்... நீங்க வந்து ரகசியமா ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லியிருந்தா அப்பாவோட கல்யாணமே நடந்திருக்காதே காளிதாஸ், நீங்களும் அப்பா கூடச் சேர்ந்து உண்மையை மூடி மறைச்சு அநியாயம் பண்ணிட்டீங்களே... இப்ப நான் என்ன செய்வேன், என்ன பண்ணுவேன்... சொல் லுங்க..."

காதம்பரி பொருமிப் புலம்பினாள். எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். தலையில் படார் படாரென்று அறைந்து கொண்டாள். ஓடிப்போய் அப்பாவின் மடியில்

தலை வைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. 'என் அப்பாதான் அவர், எனக்கு மட்டும்தான் அவர்,' காதம்பரிக்குப் பெருமிதமாக இருந்தது. தன்னுடைய ஆனந்த வாழ்க்கைதான் அவரின் உண்மையான நோக்கம். காதம்பரிக்குத் தலைதெறிக்கக் கடல் ஓரத்தில் ஓட வேண்டும் போலிருந்தது. கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டாள்.

"யப்பா! கடவுள் காப்பாத்தினார் என்னை... கொஞ்ச நாளா வாழ்க்கைலே நம்பிக்கையே இல்லாம எப்படிப் பயந்து நடுங்கிட்டேன்...இனிமே கவலைப்பட எதுவுமேயில்லே. அப்பா நல்லபடியாக வீட்டுக்கு வரட்டும்—நான் என்ன பண்றேன்னு பாருங்க...!"

காதம்பரியின் கண்களில் கர்வமும் குறும்பும் மின்னின. அவளின் தனித்துவமான ஆளுமை நிகரற்று ஒளிர்ந்தது.

"இனிமே உங்க சின்னம்மாவிடம் இருந்த வெறுப்பு, பொறாமையெல்லாம் கூட உங்ககிட்டே இல்லாம போயிடும்னு எதிர்பார்க்கலாமா?"

"ஊஹூம்...அவங்களை இனிமே நான் கடுகளவுகூட நெனைச்சுப் பார்க்கத் தேவையில்லை காளிதாஸ்... எங்க வீட்ல எத்தனை செடி கொடிகள் இஷ்டத்துக்கு வளர்ந்து கெடக்கு... அது மாதிரி அவங்களும் இருந்துட்டுப் போகலாம்! அவங்களை நான் பொருட்படுத்தவே மாட்டேன்."

காளிதாஸ் உணர்ச்சிவசப்பட்டான். சட்டெனக் காதம்பரியை நோக்கிக் கையை நீட்டினான்.

"என்ன திடீர்னு கையை நீட்டறீங்க?"

"என்னமோ உங்க கையைக் குலுக்கணும் போல இருக்கு... ப்ளீஸ்!"



காதம்பரி சிறிது நாணத்துடன் தன் கரத்தை நீட்டினாள். காளிதாஸ் அவளின் கரத்தைப் பற்றிக் குலுக்கினான். அந்தக் கைகுலுக்கல் அவர்கள் இருவருக்குள்ளும் ஒரு புதிய உறவுக்கான பாலமாக நீண்டது.

"காதம்பரி, அப்பா உடம்பு குணமாகி வந்ததும் அவரை நான் என்ன கேட்கப் போறேன் தெரியுமா?"

"என்ன கேட்கப் போறீங்களாம்?"

"சார், உங்க பொண்ணு இனிமே உங்களுக்குப் பொண்ணு கிடையாது. எனக்குத்தான் காதம்பரி இனிமே பொண்ணு. அதனால் உங்க பொண்ணை எனக்கே குடுத்திடுங்கனு கேட்கப் போறேன்..."

காளிதாஸின் இந்த அன்பு வீச்சைக் காதம்பரி என்ற மென்மையான பெண்ணால் தாங்க முடியவில்லை. அறுந்த கொடியென அவளின் உடல் காளிதாஸின்மேல் சாய்ந்தது. அன்புடன் அவளை அள்ளிக்கொண்ட காளிதாஸ் உரிமையுடன் காதம்பரியின் நெற்றியில் மென்மையாக முத்தமிட்ட போது டெலிபோன் ஒலித்தது.

காதம்பரியை விலக்கி விட்டுக் காளிதாஸ் வேகமாகப் போய் ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ...!"— வசந்தாவின் அண்ணன் சகாதேவன் பேசினான்.

"சொல்லுங்க."

"காதம்பரி பக்கத்துல இருக்குதா?"

"ஆமா."

"பத்து நிமிஷத்துக்கு முன்னாடி மறுபடியும் சீரியஸ் ஹார்ட் அட்டாக் ஏற்பட்டுப் பெரியவர் இறந்து போயிட்டாரு!"

# 18

ஹாலின் மத்தியில் தரையில் கிடந்தாள் காதம்பரி. அவளின் கூந்தல், கற்றை கற்றையாக விரிந்து கிடந்தது. கண்ணீர் வற்றிவிட்ட கண்கள் வீங்கி வெறிச்சோடிப் போயிருந்தன. அவளின் பார்வை எங்கும் அற்ற சூனியத்தில் செருகிக் கொண்டிருந்தது. இடுகாட்டில் ராஜரத்னத்தின் உடல் தகனம் செய்யப்பட்டு, காரியங்கள் முடிந்து உறவினர்கள் பலரும் விடு திரும்பியிருந்தார்கள். இறுதிக் காரியங்களைச் செய்த சிவராஜ், வெளி வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். எதிர்பார்த்த ஒரு சித்திரம் முற்றிலும் கலைந்துவிட்ட திகைப்பு நீங்காவல், காளிதான் தோட்டத்திலேயே நின்றான். காதம்பரியை நெருங்கக் கூட அவனுக்கு அச்சமாக இருந்தது. அவளின் வருங்காலம் எத்தகையதாக இருக்கும் என்பதை அவனால் அநுமானிக்கவே முடியவில்லை. அனைத்துமே தகர்ந்து விட்டாற் போல் இருந்தது. வசந்தாவை நினைத்த போது அவனால் கண்ணீரை அடக்க முடியவில்லை. இதெல்லாம் தண்டனையா? ஜென்மம் ஜென்மமாய் தொடரும் வினையா? இந்த இரண்டு பெண்களையும் யார் தாங்கி நிற்பது? நினைக்க நினைக்க மனம் கலங்கியது.

அப்போது வசந்தாவின் அண்ணன் சகாதேவன், காளிதாஸை நோக்கி வந்தான்.

''காளிதாஸ், வாரீங்களா மெயின் ரோடு வரைக்கும் போயிட்டு வரலாம்.''

''ஓயெஸ்!''

இருவரும் சிறிது தூரம் பேசாமல் நடந்தார்கள்.

''அங்கேயே நிக்கறத்துக்கு மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு...''



''என்ன பண்ணப் போறீங்க...?''

''என்ன பண்றது? எல்லாம் எங்களோட தலைவிதி. ஏதோ இத்தனை வருஷம் கழிச்சாவது அவளுக்குக் கல்யாணம் ஆச்சேன்னு கொஞ்சம் சந்தோஷமா இருந்தோம். பொறுக்கலை கடவுளுக்கு...''

''அவங்களுக்குக் கல்யாணமாகாமலே இருந்திருந்தால் கூடப் பரவாயில்லேன்னு தோணுது...''

''ரெண்டரை மாசத்துல எல்லாம் முடிஞ்சு போச்சு.''

''எங்கே குமாரசாமியைக் காணோம்!''

''நேத்திக்கு அவரோட வீட்டுக்குத் தகவல் கொடுத்தப்பவே மணி நாலு... டில்லி போயிருக்காராம்... போன் பண்ணிச் சொல்லியிருக்காங்க... ஃப்ளைட்ல டிக்கெட் கெடைச்சு வரணுமே...''

''யார் வந்து இனி என்ன செய்ய முடியும்?''

''உங்க தங்கச்சி எப்படி இருக்காங்க சார்?''

''அவருக்கு ஹார்ட் அட்டாக்னு நியூஸ் கிடைச்ச நிமிஷத்திலேருந்து இந்த நிமிஷம் வரைக்கும் வசந்தா வாய் திறந்து ஒரு வார்த்தை பேசலை... அப்படியே இடி விழுந்த மாதிரி பேதலிச்சுப் போயிருக்கு...''

''கடவுள்னு ஒருத்தன் இருக்கானான்னே எனக்கு சந்தேகமா இருக்கு.''

அப்போது ராஜரத்னத்தின் அலுவலகச் சிப்பந்தி வேகமாக வந்தார்.

''காளிதாஸ் சார், உங்களைப் பத்மாவதி அம்மா கூப்பிடறாங்க...''

''இதோ வந்துட்டேன்.''

காளிதாஸ் வேகமாகச் சென்றான். பத்மாவதி வெளி வராந்தாவிலேயே நின்று கொண்டிருந்தாள்.

"என்னங்க...?"

"காதம்பரி உங்களைக் கூப்பிட்டா..."

காளிதாஸ் வீட்டுக்குள் விரைந்தான். எழுந்திருக்காமல் காதம்பரி அப்படியேதான் தரையில் கிடந்தாள். மீண்டும் அவள் கண்களில் நீர் தேங்கியிருந்தது. அவளருகில் மண்டியிட்டு உட்கார்ந்த காளிதாஸின் கண்களும் கலங்கின. அவனை ஏறிட்டு நோக்கிய காதம்பரியின் கண்களிலிருந்து நீர் உதிர்ந்தது. உரிமையுடன் அவள் கண்ணீரைத் துடைத்து, கலைந்த கூந்தலை ஒதுக்கி விட்டான். காதம்பரியின் கண்களின் ஏதோ சொல்ல விரும்பும் பாவனை தெரிந்தது.

"என்னம்மா வேணும்!"

"சாவித்திரிக்கு விஷயத்தைச் சொல்லி அனுப்பிச்சிங்களா?"—காதம்பரியின் குரல் மெலிதாக ஒலித்தது.

காளிதாஸுக்குச் சுருக்கென்றிருந்தது

"ஸாரி காதம்பரி! மறந்து போச்சு. இதோ சொல்லி அனுப்பறேன். சாவித்திரியோட அட்ரஸ் சொல்றீங்களா..."

"என் ரூம்ல ரேடியோ பக்கத்துல ஒரு நோட்புக் இருக்கும்... அதில் சாவித்திரியோட அட்ரஸ் இருக்கு!"

காளிதாஸ் அவளுடைய அறைக்குள் போய் சாவித்திரியின் முகவரியைத் தேடி எடுத்து வந்தான்.

"காளிதாஸ்!"

"என்னம்மா...?"

"நீங்க போக வேண்டாம். எங்க ஆபீஸ் ஆளுங்க யாரையாவது அனுப்பிட்டு— ப்ளீஸ்! நீங்க இங்கே வாங்க..."

"ஒரு நிமிஷம் இருங்க, வந்துட்டேன்"



காதம்பரி சொன்னபடி, அலுவலகச் சிப்பந்தி ஒருவரை அனுப்பிவிட்டுக் காளிதாஸ் வேகமாகத் திரும்பி வந்தான்.

"காதம்பரி, கொஞ்சம் எழுந்து பாத்ரூம் போய் முகத்தைக் கழுவிட்டு வர்றீங்களா?"

சில நிமிடங்கள் கழித்து அவள், கையைக் காளிதாஸை நோக்கி உயர்த்தினாள். எழுந்து கொள்ளக்கூட முடியாத, பலவீனத்துக்குள்ளாகிப் போயிருந்த அவளை, காளிதாஸ் தன் புஜங்களைத் தொட்டு எழுந்து கொள்ள உதவி செய்தான். நிற்கமுடியாமல் அவளுடைய உடல் தள்ளாடியது. பத்மாவதி வேகமாக வந்து அவளைத் தாங்கிக் கொண்டாள்.

"கொஞ்சமா காபி சாப்பிடறியா...?"

காதம்பரி 'சரி'யென்று தலையாட்டினாள்.

"வா. முதல்ல முகத்தைக் கழுவித் துடைச்சுவிடறேன்..."

"பார்த்துக் கூட்டிட்டுப் போங்க..."

காதம்பரி மெதுவாக, பத்மாவதியுடன் சிறிது தூரம் நடந்தவள், திரும்பி காளிதாஸைப் பார்த்தாள். பொருளறிந்து காளிதாஸ் அவள் அருகில் போனான்.

"காளிதாஸ், நீங்களும் என்னை விட்டுட்டுப் போயிட மாட்டீங்களே...?"

காதம்பரி இப்படிக் கேட்டதும், காளிதாஸுக்குத் துக்கம் நெஞ்சை அழுத்தியது.

"போகமாட்டேன் காதம்பரி... போய் நீங்க முகத்தையெல்லாம் கழுவிட்டு வாங்க...ரெண்டு பேரும் காபி சாப்பிடுவோம்..."

ஒரு நிமிஷம் மௌனமாக இருந்த பின், காதம்பரி சொன்னாள் : "இனிமே என்னை நீங்க வாங்க போங்க'னு சொல்ல வேண்டாம் காளிதாஸ்."

''நீங்க என்ன சொல்றீங்களோ, அப்படியே செய்யறேன் காதம்பரி.''

காதம்பரி பத்மாவதியுடன் மெதுவாக நடந்து பாத்ரூமுக்குப் போனாள். டைனிங் ஹாலில் காளிதாஸ் அவளுக்காகக் காத்திருந்தான் முகம் கழுவித் துடைத்தபடி வந்த காதம்பரியின் முகத்தில் லேசாகப் புத்துணர்ச்சி வந்திருந்தது. காளிதாஸ் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டவளிடம் டவலை வாங்கி, அவளின் முகத்தை நன்றாகத் துடைத்துவிட்டான். சில வாரங்களுக்குச் சமையல் வேலையைக் கவனித்துக் கொள்வதற்காக அமர்த்தப்பட்டிருந்த பெண்மணி, இருவருக்கும் காபி தந்தாள். சில விநாடிகள் காபியை மௌனமாக உறிஞ்சிக் கொண்டிருந்த காதம்பரி.

''தினமும் சாயங்காலம் அப்பா கூடத்தான் காபி சாப்பிடுவேன்...'' என்றாள்.

''இனிமே காளிதாஸ்கூடச் சேர்ந்து காபி சாப்பிடு!'' —பத்மாவதி ஆறுதலாகச் சொன்னாள்.

''காளிதாஸ் நான் ஒண்ணு சொல்வேன், செய்வீங்களா...?''

''சொல்லுங்க, செய்யறேன்...!''

''நான் எச்சில் பண்ணிய இந்த காப்பியை உங்களால் குடிக்க முடியுமா !''— எந்த உணர்ச்சியும் காட்டிக் கொள்ளாமல், காதம்பரி அவளுடைய காபிக்கோப்பையை அவனை நோக்கி நீட்டினாள். காளிதாஸ் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவளின் தன்மை ஒரு விசித்திர ஒளிச் சக்கரமாக அவன் எதிரில் சுழன்றது எல்லா இலக்கணத்துக்கும் அப்பாற்பட்ட நவீன ஓவியமாகக் காதம்பரியின் முகம் அவனுக்குத் தெரிந்தது. இந்த சோதனைக் கேள்வி அவளுள் இருக்கும் கர்வ

முள்ளின் கீறலா அல்லது அவளின் வேறொரு புறத்தின் மென்மையான விகசிப்பா என அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''ஸோ வாட்? தாங்க, குடிக்கிறேன்'' என்றான்.

காதம்பரி காபிக் கோப்பையைப் பின்வாங்கிக் கொண்டாள்.

''நீங்க என்ன சொல்றீங்கனு பார்க்கிறதுக்காகக் கேட்டேன்... ரொம்ப நாளைக்கு முன்னாடி எங்கப்பாவை இதே மாதிரி கேட்டதுக்கு, அவரும் உங்களை மாதிரியே தான் பதில் சொன்னாரு... அதான்'' – சொல்லிவிட்டு, காதம்பரி ஏதோ நினைவில் ஆழ்ந்தாள்.

''என்ன காதம்பரி பேசிட்டே இருந்தீங்க, சட்டுனு ஆஃப் ஆயிட்டீங்க...?''

''ஒண்ணுமில்லே, எங்கப்பாவோட ஆத்மா எங்கே போச்சோனு யோசிக்கிறேன்.''

காதம்பரியின் இந்த எதிர்பாராத பதிலில் சட்டென்று காளிதாஸும் யோசனையில் ஆழ்ந்தான்.

''காளிதாஸ், இவ்வளவு நாள்வரைக்கும் நான் சாவுனு சொன்னாலே பயந்து செத்திடுவேன். இப்ப என்னமோ திடீர்னு சாவு மேல ரொம்ப நெருக்கம் வந்திருக்கு... என்ன காரணம்னு தெரியலே...''

காளிதாஸ் பதில் சொல்லாமல் காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தான்

''இப்போ எனக்கு செத்துப் போகணும் போலிருக்கு...''

காளிதாஸ் அவளுடைய கையை ஆதரவுடன் பிடித்துக் கொண்டான்.

''செத்துப் போகணும்னு சொல்றது— இந்த மாதிரி ஹார்ட் அட்டாக் வந்தோ அல்லது வேறே ஏதாவது

நோய் வந்தோ, இல்லை தற்கொலை பண்ணியோ செத்துப் போறோமே— அதைச் சொல்லலை நான்...''

''அப்புறம்....?''

''உண்மையில் எல்லாவற்றிலிருந்தும் நான் பிரிஞ்சுடணும்...''

''உங்களோட எல்லா ஞாபகங்களில் இருந்துமா...?''

''ஆமாம்...''

''எல்லா கடந்த காலத்தில் இருந்துமா?''

''ஆமாம்...''

''உங்களால முடியுமா காதம்பரி அது?''

''எனக்கு முடியாதுனு தோணறதாலேதான்—நான் செத்துடணும்னு சொல்றேன்...''

''எல்லாருடைய பிரச்னையும் அதுதான்.''

''ஒரு ஸ்விட்ச்சை ஆஃப் பண்ற மாதிரி, எல்லாத்தையும் ஆஃப் பண்ணிடணும்... அப்படியொரு நிலைமை வந்தாத்தான் நான் பிழைச்சேன். இல்லேன்னா செத்தேன்!''— சொல்லும் போதே காதம்பரியின் கண்கள் கலங்கின.

''இன்னும் என்னால நம்ப முடியலை காளிதாஸ். என்னோட அப்பா நெஜமாகவே செத்துப் போயிட்டார். இந்த உலகத்தில அவர் இல்லவே இல்லேங்கிற உண்மையை என்னால் ஒப்புக்கவே முடியலை... சும்மா அப்பா வெளியூர் போயிருக்காங்க. கொஞ்சநாள் கழிச்சுத் திரும்பி வந்துடுவாங்கன்னு நானாக என் மனசுக்குள் அடிக்கடி நெனைச்சுக்கறேன். அப்படி நெனைச்சு என்னையே நான் ஏமாத்திக்கிறேன். ஏன்னா, எனக்கு வேற வழி தெரியலே...''



இருவருமே மௌனமாக இருந்தார்கள்.

''அத்தை, இனிமே இவரும் இங்கே நம் வீட்டிலதான் இருப்பார்'' என்றாள் காதம்பரி, சிறிது நேரம் கழித்து.

சரியென்று சொல்ல பத்மாவதிக்குத் தயக்கமாக இருந்தது. அவர்கள் இருவரின் உறவு முறை பற்றி அவளுக்கு எந்தக் கேள்விக்குறியும் இல்லை. இதுவரை தகப்பன் என்ற ஸ்தானத்தில் ராஜரத்னம் இருந்ததால், காதம்பரியின் எல்லா நடவடிக்கைகளுக்கும் அவரே பொறுப்பாக இருந்ததில் யாரும் எதுவும் பேசவோ, கேட்கவோ முடியாமல் இருந்தது. இனி நிலைமை வேறு. நெருங்கிய 'கார்டியன்' என்பதால், காதம்பரியின் எந்தச் செயலுக்கும் பொறுப்பேற்றுப் பதில் சொல்ல வேண்டியது தான்தான் என்ற நிலை ஏற்பட்டிருப்பதைப் பத்மாவதி மனத்துக்குள் கவனப்படுத்திக் கொண்டாள். ஆனால் உடனே காதம்பரியின் விருப்பத்துக்கு மறுப்பு தெரிவிக்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது. ஆயிரம்தான் இருந்தாலும் காளிதாஸ் ஓர் அந்நியன் என்றுதான், உறவும் சமூகமும் கூறும்...

''என்ன அத்தை, ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்க?''

''உன் இஷ்டத்துக்குக் குறுக்கே யாராவது, ஏதாவது சொல்ல முடியுமாடா? ஆனா, இவர் இங்கே வந்து இருந்தா நாலு பேர் என்னைத்தான் கேப்பாங்க... அதான் யோசிக்கிறேன்...''

''கேக்கறவங்களை என்னை வந்து கேட்கச் சொல்லுங்க! நான் அவங்களுக்குப் பதில் சொல்லிக்கறேன். என்னோட சந்தோஷத்துக்குத்தான் நான் வாழ முடியும். பிறத்தியார் சந்தோஷத்துக்கெல்லாம் என்னால் வாழ முடியாது...''

காளிதாஸுக்கு மனத்துக்குள் வியப்பாக இருந்தது. அடியோடு நசுங்கிப் போகிற அளவுக்கு அவளின் மனம் அடி வாங்கியிருக்கும்போது கூட, காதம்பரியின் ஆளுமையின் அதிகாரம் முழு வீச்சுடன்தான் இயங்குகிறது. ஒரு வேளை இப்படிக்கூட இருக்கலாம். அவள் மனத்தின் மென்மையான பக்கம் அடி வாங்க வாங்கத்தான் மனத்தின் அதிகாரப் பக்கம் வீங்கிப் புடைக்கிறது...

''நான் தாய் தகப்பன் இல்லாத பெண் என்கிறது மட்டும்தான் என் சொந்தக்காரங்களுக்குத் தெரியும். ஆனா, இன்னும் என்னென்ன பயங்கர கஷ்டமெல்லாம் எனக்கு இருக்குனு வேற யாருக்கும் தெரியாது. அது எனக்கு மட்டும் தான் தெரியும். அதனாலே தயவு செஞ்சு யாரும் என்னோட இஷ்டத்துக்கும் மாறா நடந்துக்க வேண்டாம்... அதை என்னால் தாங்கிக்க முடியாது. அந்த அளவுக்கு நான் உடைஞ்சு போயிட்டேன்...''

—கண்ணில் துளித்த நீரைக் காதம்பரி துடைத்துக் கொண்டது போலவே, காளிதாஸும் தன்னுடைய கண்களைத் துடைத்துக் கொண்டான். சில விநாடிகளுக்குக் காதம்பரியின் மனம் அம்பின் முனை என வெகு தூரத்துக்குப் பின்னோக்கிச் சூட்சுமமாக விரைந்து சுழன்று மீண்டது.

அப்போது சாவித்திரி வீட்டுக்கு செய்தியைச் சொல்லப் போன சிப்பந்தி திரும்பி வந்தார்.

''சொல்லிட்டீங்களா. அந்தப் பொண்ணு இருந்ததா வீட்ல...?''—காளிதாஸ் கேட்டான்.

''இல்லை சார்... அந்தப் பொண்ணோட அப்பா தான் இருந்தார். அந்தப் பொண்ணை நேத்துலேருந்து காணோமாம் சார்...நம்ம காதம்பரியைப் பார்த்துக் கேக்கறதுக்காக அந்தப் பெண்ணோட அண்ணன் கிளம்பிக் கிட்டிருந்தார்... சரியா நானும் அங்கே போய்ச் சேர்ந்தேன்.''



காளிதாஸ் திகைப்புடன் காதம்பரியைப் பார்த்தான். அவளின் உதடுகளில் ஒரு சோகப் புன்னகை நெளிந்தது

''காணோமா சாவித்திரியை... வெல்! அன்னிக்குச் சொன்ன மாதிரியே டில்லிக்கு ஓடிட்டாப் போல... ஓடட்டும், நல்லா ஓடட்டும். அப்பதான் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தற தகப்பன்களுக்கெல்லாம் புத்தி வரும். ஆனா காளிதாஸ், சாவித்திரி நம்பிப் போறவனும் அவளை ஏமாத்தி நடுத்தெருவில் நிற்க வெச்சிடக்கூடாது. அதான் என்னோட ஒரே பயம்...''

''சாவித்திரிக்கு நல்லதே நடக்கும் காதம்பரி... பயப் படாதீங்க...''

# 19

தனக்கு வேண்டிய சில பொருட்களைச் சேகரித்துப் போவதற்காக, காளிதாஸ் தன்னுடைய வீட்டுக்கு ஒரு வாரம் கழித்து வந்திருந்தான்.

''அவங்க வீட்லேயே போய் இருக்கறதெல்லாம் வேண்டாம் சாமி... பெரிய பணக்காரங்க வீட்டு விவகாரம். பின்னாடி ஏதாவது பொல்லாப்பாயிடும், சொன்னா கேளு'' என்றாள் அவனுடைய அம்மா.

''இல்லேம்மா! இந்த நிமிஷம் அந்தப் பெண்ணோட வாழ்க்கைதான் எனக்கு முக்கியம். இப்ப நான் அவ இஷ்டப்படி நடக்கலேன்னா அவளுக்கு என்ன ஆகும்னு என்னாலேயே சொல்ல முடியாது.''

''அப்பா செத்துப் போனதையே அந்தப் பொண்ணு தாங்கி நின்னுருக்கே!''

''என்னைத்தான் இறுக்கிப் பிடிச்சிட்டு நிக்குதும்மா. நான் மட்டும் இல்லேன்னா இந்நேரம் தூள் தூளா நொறுங்கி விழுந்திருக்கும்.''

''எத்தனை நாள்தான் நீ தாங்கி நிற்பே சாமி?''

''யாரையாவது அது கல்யாணம் செய்துக்கற நிலைமை வர வரைக்கும்...''

''அவ அப்பாவாலேயே அவளுக்குக் கல்யாணம் செஞ்சு வைக்க முடியலையேப்பா!''

''இப்ப நிலைமை வேறேம்மா. அப்பா இல்லாம இந்த உலகத்திலே வாழ முடியுங்கிற நம்பிக்கை இன்னிக்கு அவளுக்கு வந்திருக்கிற மாதிரி, ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்க முடியுங்கிற நம்பிக்கையும் ஒரு நாள் கண்டிப்பா வரும். அது வந்தாச்சன்னா அந்த வீட்டுல எனக்கு ஒரு நிமிஷம்கூட வேலை இடையாது...''

அப்போது காளிதாஸைத் தேடி அவசரமாக சிவராஜ் வந்தான்.

''அப்பாடி! உங்க வீட்டைத் தேடிக் கண்டுபிடிக்கறத்துக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு!''

''ஈவினிங் நான் திரும்பி வந்துடறதாத்தானே சொல்லிட்டு வந்தேன். அதுக்குள்ளே என்ன அவசரம்?''

''உங்க கூடத் தனியா சில விஷயங்க பேசணும் காளிதாஸ்...''

''வாங்க, மாடிக்குப் போயிடலம்.''

இருவரும் மாடியறைக்குப் போனார்கள்.

''காளிதாஸ், நேத்திக்கு நீங்க இந்தப் பக்கம் வந்ததும் எங்க மாமாவோட ஃப்ரெண்ட் குமாரசாமி வந்தார். பெரியவர்னுகூடப் பார்க்காம காதம்பரி அவரை வீட்டுக்குள் வரக்கூடாதுனு சொல்லிட்டார்!''



காளிதாஸுக்குக் காரணம் புரிந்தது. என்ன அதிதமான பெண் இவள். எதையும் அவளால் மறக்க முடியவில்லை. இன்னமும் பகையும் பழிவாங்கும் உணர்வும்...

சிவராஜ் தொடர்ந்தான்: ''அது மட்டுமில்லை, அந்த வசந்தாவும் சீக்கிரமே இந்தவீட்டைவிட்டுப்போயிடணும்னு நிடும்னு இன்னிக்கிக் காலையிலே சொல்லிட்டா வீட்டுல உடனே பெரிய ரகளை. இன்னிவரைக்கும் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசாத அந்த வசந்தா 'ஓ'ன்னு கதறி அழ. அவங்க அண்ணன் சகாதேவன் பயங்கரமா காதம்பரியோடு சண்டை போட... பதிலுக்கு அவ ஆங்காரம் பிடிச்சுக் கூச்சல் போட வீட்டில இருக்க முடியலை அதான் உங்களைப் பார்க்கறதுக்கு ஓடி வந்தேன். என்னதான் இருந்தாலும் அவளுக்கு இந்தத் திமிர் கூடாது காளிதாஸ்.''

காளிதாஸ் ஒரு நிமிஷத்தில் நம்பிக்கைகளை இழந்துவிட்டான். தன்னைப் பிடித்துக் கொண்டு அவள் எழுந்து நிற்பதெல்லாம் வேறொரு வீழ்ச்சிக்கான ஆவேசம்தானா என்று யோசித்தான்.

''அவளைப் பத்தி யோசிச்சா நமக்கே பைத்தியம் பிடிச்சிடும்'' என்றான் சிவராஜ்.

''சரி, இப்ப நீங்க என்னை என்ன பண்ணச் சொல்றீங்க சிவராஜ்?''

''அவ சொல்றாங்கிறதுக்காக காதம்பரியோட வீட்டிலேயே நீங்களும் தங்கிக்கிறதா தயவுசெஞ்சு கமிட் பண்ணிக்க வேண்டாம்!''

''இதைச் சொல்றதுக்குத்தான் வந்தீங்களா?''

''இதை அவள் எதிரில் பேச முடியாதே...''

''இல்லை மிஸ்டர் சிவராஜ் காதம்பரி இஷ்டப்படற வரைக்கும் அவங்க வீட்டிலேயே நானும் தங்கிக்

இறதா ஏற்கெனவே முடிவு பண்ணியாச்சு. ஸாரி! இனிமே நான் அந்த முடிவிலிருந்து பின்வாங்கறதா இல்லை.''

''நாளைக்கு இதனால் எந்தப் பிரச்னை வந்தாலும் நாங்க எந்தப் பொறுப்பும் ஏத்துக்கமாட்டோம்.''

''பரவாயில்லை. எந்தப் பிரச்னை வந்தாலும் நான் பார்த்துக்குவேன்...''

''எனக்கு உங்க ரெண்டு பேரோட உறவே புரியலை காளிதாஸ். நீங்களும் காதம்பரியும் ஒருத்தரையொருத்தர் லவ் பண்றதா இருந்தா இப்படி நடக்கறதுல நான் ஆச்சரியப் பட்டிருக்கமாட்டேன்!''

''அந்த அளவுக்கு உலகம் 'கரப்ட்' ஆகிப் போயிருக்கு!''—காளிதாஸ் முகம் சிவக்கப் பதில் சொன்னான்.

சிவராஜ் முகமும் சிவந்தது. காளிதாஸ் ஏதோ அமானுஷ்ய நாடகம் ஆடுவது போல் தோன்றியது அவனுக்கு.

''நீங்களும் இந்த உலகத்தில்தான் வாழ்ந்திட்டிருக்கீங்க... அதை மறந்திட வேண்டாம்.''

''சேற்றில் கிடந்தாலும் தாமரை தாமரைதான் என்கிறதை நீங்களும் மறந்திட வேண்டாம்.''

''இன்னும் நூறு தடவை நீங்க சொன்னாலும்—எனக்கு இது புரியலேன்னு தான் சொல்வேன்.''

''புரியலேன்னா விட்டுருங்க.''

''ஸாரி! அப்படி விட்டுட முடியாது. காதம்பரி எங்க வீட்டுப் பெண்.''

இந்தச் சொல் காளிதாஸைக் கூர்மையாகத் தாக்கியது. ஆத்திரத்துடன் சிவராஜ் படிகளில் இறங்கிப் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனின்



நினைவில் காதம்பரியின் முகம் வந்து போனது. அவனுள் எழும்பியிருக்கும் நூதன உலகம் நிசப்தமாய்ச் சுவாசித்தது. ஒரு நிராதரவான ஏக்கம் மன விளிம்பில் தண்ணீர்த் துளி போல் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தத் துளியைத் துக்கமான தாகத்துடன் தனக்குள்ளே சேமித்துக் கொண்டான்.

காளிதாஸ் கண்களை மூடியவாறு அறையிலேயே நின்றான். மரபு சார்ந்த உலகம் காதம்பரிக்கும் அவனுக்கும் இடையே இருக்கும் உறவுக்கெதிராக வரிந்து கட்டுவது தெரிந்தது. இப்போது என்ன செய்யலாமென்று யோசித்தான். சட்டென வசந்தாவின் நினைவு குறுக்கிட்டது. வசந்தாவை ஏன் காதம்பரி வீட்டை விட்டு வெளியேறச் சொல்லவேண்டும்? இன்னும் எதற்காகப் பகை கொண்ட யுத்தம்? சில கோணங்களில் பனியாகக் குளிர்ந்தவளாக இருந்தாலும், காதம்பரியின் மனோபாவத்தில் வேறொரு தூரத்தில் ஒரு தணல் ஏன் பற்றியெரிந்து கொண்டிருக்கிறது?

உடனே உடை மாற்றிக் கொண்டு, காளிதாஸ் கொட்டிவாக்கம் கிளம்பி விட்டான்.

''குட் ஈவினிங் காதம்பரி!''

''என்னை நீங்க என்ன கேட்க வந்திருக்கீங்கன்னு தெரியுது காளிதாஸ். ஆனா ஒண்ணு. மத்தவங்கல்லாம் நினைக்கிற மாதிரி நீங்களும் என்னைப்பெரிய ராட்சஸின்னு நினைச்சிடலையே?''

''அப்படி நெனைச்சிருந்தா இப்ப உங்க முன்னாடி வந்து நின்னுட்டிருக்க மாட்டேன்...!''

''ஒரு நிமிஷம்... இனிமே என்னை வாங்க போங்கனு சொல்லவேண்டாம்னு நான் சொல்லியிருக்கேனே...''

''ஸாரி! சட்டுனு அப்படி என்னால மாத்திக்க முடியாது தானாக அது வரும்போது வந்திடும். நோ ப்ராப்ளம்.''

''வசந்தாவை இந்த வீட்டைவிட்டு ஏன் போகச் சொல்றேன்னுதானே கேட்கப் போறீங்க...?''

''தப்பில்லையா—அப்படிச் சொல்றது?''

''இல்லேனு தோன்றதாலேதான் சொன்னேன். தப்பா காளிதாஸ்?''

''மனிதாபிமான அடிப்படையில் பார்த்தா தப்புத்தாம்மா...''

''இந்த நிமிஷமே அந்த அம்மா வீட்டை விட்டு வெளியேறிடணும்னு நான் சொன்னா அது மனிதாபிமானம் இல்லாத விஷயம். நான் அப்படி அவங்களை உடனே போகச் சொலலலையே...!''

''இன்னிக்குப் போயிடணும்னு சொன்னா என்ன, இல்லை இன்னும் நாலு மாசம் கழிச்சுப் போயிடணும்னு சொன்னா என்ன ?''

''அப்படியில்லைங்க காளிதாஸ், இனிமே இந்த வீட்டிலே இருந்து அவங்க என்ன பண்ணப் போறாங்கங்கிறதுதான் என்னோட கேள்வி.''

''அதை அவங்கதான் யோசிக்கணும்.''

''இது என்னோட வீடுங்கிறதை மறந்துட்டுப் பேசறீங்க நீங்க.''

''வசந்தா உங்க அப்பாவோட மனைவிங்கிறதை நீங்கதான் மறந்துபோய்ப் பேசறீங்க.''

''மூனே மூனு மாத மனைவி !''

''மூனே நாள் வாழ்ந்தாலும் மனைவி தான்.''

''மூனு மாசம்கூட ஆத்மார்த்த மனைவி கிடையாது. அப்பா ஆடின நாடகம்தானே அந்தக் கல்யாணம். அதை எப்படி நான் தாம்பத்தியம்னு ஒப்புக்க முடியும். சொல்லுங்க...?'' காளிதாஸ் யோசித்தான்.

''என்னடா இப்படி இருக்காளேனு யோசிக்கிறீங்களா?''

''இல்லை, ஏன் இப்படி இருக்கீங்கனு யோசிக்கிறேன்.''

சட்டெனக் காதம்பரியின் மனம் பின்னோக்கி வெகு தூரம் சூட்சுமமாகச் சுழன்று சென்று மீண்டது. பாம்பின் சீற்றம் போல், அவளிடமிருந்து வெப்பம் மிகுந்த மூச்சு வெளிப்பட்டது.

''அதை நான் சொல்ல வேண்டிய நாள் நெருங்கிடுச்சு காளிதாஸ். நிஜமா நெருங்கிடுச்சு. ஆனா, அதை நான் சொல்றதுக்கு முன்னாடி என்னைச் சுத்தி சில விஷயங்கள் தெளிவாக வேண்டியிருக்கு. அதனாலே இன்னும் கொஞ்ச நாளைக்கு நான் என்ன சொன்னாலும் விளையாட்டுக்குக்கூட மாட்டேன்னு சொல்லிடாதீங்க, தயவு செஞ்சு என் இஷ்டப்படியே நடந்துக்குங்க...''

காளிதாஸ் மௌனமா நின்றான்.

''நான் யாரையாவது கல்யாணம் பண்ணிக்கணும் என்கிறதுக்காகத்தானே அப்பா வசந்தாவைக் கல்யாணம் செய்தாங்க?''

''ஆமாம்...''

''அப்பா ஆசைப்பட்ட அந்தக் காரியத்தை நான் செய்ய வேண்டாமா?''

பனிச்சென்று முகத்தில் பன்னீர் தெறித்தாற் போலிருந்தது காளிதாஸுக்கு. அவனுடைய கண்களும் காதம்பரியின் கண்களும் மின்னலெனச் சந்தித்துக் கொண்டன.

''நெஜமாவா சொல்றீங்க காதம்பரி?''

''எங்க அப்பா மேல சத்தியமா சொல்றேன்.''

''நெஜமாவே என்னோட சந்தோஷத்தைக் காட்றத்துக்கு வார்த்தைகள் கிடையாது காதம்பரி. யப்பா! உங்க அப்பா இறந்து போனதும் நான் எப்படிப் பயந்து போனேன் தெரியுமா...?''

''எதுக்குப் பயம்...?''

''நீங்க எப்படி அதைத் தாங்கிக்கப் போறீங்கனு தான்... தூள் தூளா உடைஞ்சு நொறுங்கிப் போயிடுவீங்கனு எதிர்பார்த்தேன்.''

''ஜம்னு எழுந்து நின்னுட்டேன் இல்லை?''—காதம்பரி பெருமிதத்துடன் கேட்டாள்.

''எப்படி உங்களால இப்படி எழுந்து நிற்க முடிஞ்சது?''

''இதுக்குப் பதிலா— நீங்க ஒரு சமயம் ஜே. கிருஷ்ணமூர்த்தி சொன்ன ஓர் அற்புதமான வரியைத்தான் சொல்லணும்.''

''எந்த வரி...?''

''Water cannot find what water is......''

''இப்படியெல்லாம் பேசற அருமையான பெண், வசந்தாவை இந்த வீட்டை விட்டு வெளியேறச் சொல்றது அவசியம்தானா?''

''என்ன பண்றது? அந்தப் பெண்ணுக்குச் சில பலவீனங்களும் இருக்கே...''

''மாத்திக்க முடியாதபடி சில பிரச்னைகள் இருக்கு அந்தப் பெண்ணுக்கு...''

''பிரச்னை என்னன்னு தெரிஞ்சா உதவி பண்ணலாமே...''

''வசந்தாவை இந்த வீட்டை விட்டு அப்புறப்படுத்தறதும் ஒரு உதவிதான! அவங்களை நான் ஒண்ணும் சும்மா அப்புறப்படுத்தலை. எங்கப்பாவோட பணத்தை மூணு பாகமா பிரிச்சு அதிலே ஒரு பங்கை அவங்ககிட்டே கொடுத்துத்தான் அப்புறப்படுத்தச் சொல்றேன்.''

''உடனே வசந்தா இந்த வீட்டைவிட்டு வெளியேறிடணும்னு சொல்றீங்களா?''

''அப்பதான் என்னோட கல்யாணம் நடக்கிறதைப் பத்திச் சீக்கிரமா நான் நடவடிக்கை எடுக்க முடியும்! என்னோட வீட்டுக்குள்ளே எனக்குப் பிடிக்காத ஒருத்தர் என் கண் முன்னாடி நடமாடறதைக்கூட என்னால் தாங்கிக்க முடியாது. கல்யாணம் செய்துக்கிட்டா, வாழ்க்கை எனக்கு முழுக்க முழுக்க இனிமையா இருக்கணும். வசந்தா இந்த வீட்டிலே இருக்கிற வரைக்கும் அந்த இனிமை எனக்குக் கிடைக்காது.''

''இப்ப நான் என்ன செய்யணும்?'' காளிதாஸ் பெருமூச்சு விட்டபடி கேட்டான்.

''என் சார்பாப் பேசி, எப்படியாவது அவங்களை இந்த வீட்டைவிட்டு அனுப்பிடணும்.''

''முயன்று பார்க்கிறேன். ஆனா, வற்புறுத்த மாட்டேன்.''

''இன்னொரு விஷயம் காளிதாஸ்...''

''சொல்லுங்க...''

''உங்களையும் எங்க வீட்டிலே வந்து இருக்கச் சொன்னேன்— அதைக் கொஞ்ச நாளைக்கு ஒத்திப் போடலாம்னு பார்க்கிறேன்!''

காளிதாஸுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது.

''என்னம்மா, திடீர்னு திட்டத்தை மாத்திட்டீங்க!'' என்றான்.

''எங்க உறவுக்காரங்க எல்லாருமே அதுக்கு ரொம்ப ரொம்ப ஷார்ப்பா ரீயாக்ட் பண்றாங்க அதனால கொஞ்ச நாளைக்கு நீங்க உங்க வீட்டிலேயே இருங்க. எப்போ நீங்க இங்கே வந்துடலாம்னு எனக்குத் தோணுதோ, அப்போ கூப்பிடறேன், வந்திடுங்க. ஏன்னா என்னோட வாழ்க்கையில ஒரு அபூர்வமான பங்கு உங்களுக்கு இருக்கு. சரியா?''

''காதம்பரி சொன்னா சரிதான். ஆனா, ஒண்ணு. வசந்தா இந்த வீட்டை விட்டுப் போயாச்சுன்னா, கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னீங்களே—அந்த வார்த்தையை மறந்திடமாட்டீங்களே?''

''கையை நீட்டுங்க!''

காளிதாஸ் கையை நீட்டினான். காதம்பரி அவனுடைய கைமேல் தன் கையை வைத்துச் சொன்னாள் ;

''சத்தியமா சொன்ன வார்த்தை அது. அதை மறக்கவும் மாட்டேன். ஒரு எழுத்தைக் கூட மாற்றவும் மாட்டேன்... போதுமா...?''

''போதும்...''

காதம்பரி காளிதாஸின் கையை உரிமையோடும், அன்போடும் இறுகப் பிடித்துக் கொண்டாள்.

## 20

தனது வீட்டின் மாடி அறையில், சிந்னையில் ஆழ்ந்தபடி காளிதாஸ் படுத்திருந்தான். காதம்பரி திருமணம் செய்து கொள்ளும் மனமாற்றத்துக்கு ஆளாகியிருக்கிறாள் என்பதை முழுமையாக அவனால் எதிர்பார்க்க முடியவில்லை. 'தன் அப்பாவைத் தவிர, வேறு எந்த ஆடவனோடும் சேர்ந்து வாழ்வதென்பது தன்னால் முடியவே



முடியாத் காரியம் என்பதை மிகக் கவனமாக மனதில் உறைய வைத்திருக்கும் காதம்பரியின் அந்தச் சிலிர்ப்பு, எப்படித் திடீரெனக் கரைந்து போகும்?'— இந்தக் கேள்விக்குத் துல்லியமான பதில் தெரியாவிட்டாலும்கூட, அவன் வாசித்துக் கொண்டிருக்கிற காதம்பரி என்ற நாவலின் இறுதி அத்தியாயங்களைக் காண இருப்பது போன்ற ஆவல் மனதில் அரும்பி நின்றது. நாவல் நூதனமானதோ இல்லையோ, காதம்பரி என்ற கதா பாத்திரம் மிக மிக நூதனமானது!

மனக்கண்ணில் காதம்பரியைக் கொண்டு வந்தான் காளிதாஸ். அவளில் ஓர் இறுகிய முடிச்சு நெகிழ்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அது விரைவில் காட்சியாக இருப்பதை அவனால் ஊகிக்க முடிந்தது. அந்த உச்சகட்ட காட்சிக்குமுன் காதம்பரிக்கு அரங்கம் சுத்தமாக்கப்பட வேண்டும். தேவையில்லாத கதாபாத்திரங்கள் அப்புறப் படுத்தப்பட வேண்டும்...! மென்மையாக வசந்தாவை அப்புறப்படுத்தும் தீர்மானத்துடன் காளிதாஸ் கொட்டிவாக்கம் புறப்பட்டான்.

வீட்டின் தோட்டத்தில் பத்மாவதி மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தாள்.

''வாங்க காளிதாஸ்.''

''காதம்பரி இருக்காங்களா!''

''காலையிலேயே வெளியில் போனா. இன்னும் வரக் காணோம்.''

''ஆபீஸ்ல இருக்காங்களோ என்னவோ?''

''போன்ல கேட்டேன். கலையில் அரை மணி நேரம் மட்டும் இருந்துட்டுப் போயிட்டாளாம். சரி, உங்களைப் பார்க்கிறதுக்குப் போயிருப்பான்னு நினைச்சேன்.''

''எங்க வீட்டுக்கு வரலையே...''

''தினசரி இப்படித்தான் எங்கேயோ போறா. எங்கேனு தெரியலை.''

''சிவராஜ் இருக்காரா?''

''நாலு நாள்ல மறுபடியும் ஷூட்டிங் ஆரம்பிக்குதே. அதனாலே போயிட்டான். நான் ஏதோ இனிமேலாவது என் பிள்ளைகூடப் போய் இருக்கலாம்னு பார்த்தேன். எத்தனை நாளைக்கு நான் இவளையே பார்த்திட்டு இருக்கிறது? சும்மா இருக்காம கடைசி நேரத்திலே எங்க அண்ணன் ஒரு கல்யாணத்தை வேற பண்ணி இன்னொரு பொண்ணையும் நிர்க்கதியா விட்டுட்டுப் போயிட்டார். அந்தப் பொண்ணை இனிமே யார் காப்பாத்தறது? காதம்பரிக்கு அந்தப் பொண்ணைக் கண்டாலே பிடிக்கலே...''

''அவங்க இருக்காங்களா உள்ளே...?''

''மாடியில இருக்காங்க. இப்பதான் அவங்க அண்ணன் வந்தார். ரெண்டு பேரும் பேசிட்டிருக்காங்க.''

''அவங்களைப் பார்த்துப் பேசிட்டு வரேன்.''

—காளிதாஸ் மாடியேறிப் போனான். அறைக்குள் வசந்தாவும் அவளின் அண்ணன் சகாதேவனும் எதுவும் பேசிக் கொள்ளாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். காளிதாஸைக் கண்டதும் வசந்தா சட்டென எழுந்து நின்றாள்.

''பரவாயில்லை, பரவாயில்லை. உட்காருங்க நீங்க. இதோ, நானும் உட்காரப் போறேன்'' என்று சொல்லியபடி, காளிதாஸ் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். சில விநாடிகள் கழித்து வசந்தா மெதுவாகக் கட்டிலின் முனையில் உட்கார்ந்து கொண்டாள். யாரும் பேசிக் கொள்ள முன்வராததால், அறையில் மௌனம் நிலவியது. காளிதாஸ் தலை குனிந்திருந்த வசந்தாவின் கழுத்தைப் பார்த்தான். சில மாதங்களுக்கு



முன்பு பலர் பார்க்க சுப வேளையில் அணிவிக்கப்பட்ட தாலி காணாமல் போயிருந்தது. நடுஜாமத்தில் தாலி அகற்றப்பட்டு, அதைப் பாலில் போடப்படும் கணம், கணவனை இழந்த பெண்ணின் மனநிலை எப்படி இருக்கும் என காளிதாஸ் எண்ணிப் பார்த்தான். நினைக்கும்போதே உணர்வுகள் படபடத்து நடுங்கின.

மிகச் சிறு காலம் தன்னுடைய மனைவியுடன் வாழ்ந்த தருணங்கள் சடசடவென்று காளிதாஸின் ஞாபகத்தில் சிறகடித்தன. மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வேளையில், ஒரு நாள் அவனுடைய மனைவி, 'நான் செத்துப் போனதும் நீங்க வேறொரு திருமணம் செய்துகொள்ள வேண்டும்' என்று பிடிவாதமாகக் கேட்டுக் கொண்டதை நினைத்துப் பார்த்தான். பெண்ணின் விநோத குணம் இது. உயிருடன் இருக்கும் வரையில் தன் கணவன் தன்னைத் தவிர இன்னொரு பெண்ணை மனத்தால் நினைப்பதைக்கூட எவளும் விரும்புவதில்லை. அவளே, தனக்கு மரணம் நிச்சயமாகும்போது தன் கணவனை இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்படி தானே வலிய முன்வந்து சொல்கிறாள்...

''உங்க ஃப்ரெண்ட் காதம்பரி இங்கே இல்லை போலிருக்கே?''—சகாதேவனின் கேள்வியில், காளிதாஸின் நினைவு இழை சட்டென அறுந்து கொண்டது.

''வெளியே போயிருக்காங்களாம். எங்கேனு தெரியலை.''

''பயங்கரமான பொண்ணுங்க அது. பெரிய பணக்காரர் வீட்டுல பிறந்திட்டதாலே பிரச்னை இல்லை. உங்களை மாதிரி இல்லாதா வீட்டுல பிறந்திருந்தா, அதோட குணத்துக்குப் படாத பாடு பட்டுடும்...''

''... இப்பவும் மனசுக்குள் அது படாத பாடுதான் பட்டுகிட்டிருக்கு.''

''ஆனாலும், அந்தப் பொண்ணு என்ன சொன்னாலும் நாலு பேர் பயந்து போய் அது முன்னால கையைக் கட்டிக் கிட்டு நிக்கறது, அது பெரிய பணக்காரர் வீட்டுப் பெண் என்கிறதாலேதான்...''

''ஸாரி, எனக்கு அந்த மாதிரி ஏழை—பணக்காரன் என்கிற பார்வையெல்லாம் கிடையாது.''

''எல்லாரும் உங்களைப் போலவே இருந்திடுவாங் களா...?''

''அது வாஸ்தவம்.''

''என் தங்கச்சி இந்த வீட்டுல இருக்கக் கூடாதுன்னு அந்தப் பொண்ணு சொல்லுது. மனசில் கொஞ்சமாவது மனுஷத்தன்மை இருந்தா அப்படிச் சொல்லுமா?''

''தப்புதான்... அதுக்கு என்ன காரணம் சொல் றாங்க...?''

''என்ன காரணம் சொன்னா எங்களுக்கு என்ன சார்? என் தங்கச்சிக்கு இந்த வீட்டுல இருக்கறதுக்கு உரிமை இல்லையா?''

''உரிமை இல்லேன்னு காதம்பரி சொல்ல முடியாது. ஆனா, அவங்க அந்த அர்த்தத்துல சொல்லியிருக்க மாட்டாங்கனு நினைக்கிறேன்.''

வசந்தா முதல் முறையாகக் குறுக்கிட்டுச் சொன்னாள், ''அந்தப் பொண்ணு ஒவ்வொருத்தர்கிட்டேயும் ஒவ்வொரு மாதிரி பேசுங்க...''

''படிச்ச பொண்ணாச்சே, நல்லா வக்கணையா பேசுது...''—என்று சகாதேவன் இகழ்ச்சியுடன் சொன் னான்.

சிறிது நேரத்துக்கு அங்கு மௌனம் நிலவியது. பின், காளிதாஸ் கேட்டான்:

''நீங்க என்ன பண்றதா இருக்கீங்க...?''



''என் தங்கச்சிதான் சொல்லணும். நான் கூட 'இதை யெல்லாம் ஒரு கனவு மாதிரி மறந்திட்டு நம்ம வீட்டுக்கே வந்திடும்மா, சாகறவரைக்கும் நான் உனக்குக் கஞ்சி ஊத்தறேன்'னு சொல்றேன், அது ஒண்ணுமே பதில் சொல்லமாட்டேங்குது.''

''கஞ்சி வெறும் வயித்துக்குத்தானே... அவங்களோட மனசுக்கு எதை ஊத்துவீங்க?''

—காளிதாஸ் இதைக் கேட்டதும், வசந்தாவிடம் ஒரு விம்மல் பலமாக எழுந்து அமுங்கியது. கண்களில் நீர் பொங்கப் பார்த்தது. பல்லைக் கடித்தபடி அழுகையை இறுக்கிக் கொண்டாள்.

''நானும் அண்ணன்கிட்டே அதைத் தாங்க சொல் றேன். உரிமையோ, பணமோ கேட்டு நான் இந்த வீட்லே இருக்கணும்னு சொல்லலை. அந்தப் பொண்ணு எப்படி இந்த வீட்டைத் தன்னோட வீடா நினைக்குதோ, அதே மாதிரிதான் நானும் இந்த வீட்டை என்னோட வீடா நினைக்கிறேன். நான் மட்டும் இந்த வீட்டைவிட்டு வெளியே போயிடணும்னு சொல்றது என்ன நியாயம்? நீங்க சொல்லுங்க. இந்த வீட்டை விட்டு எங்கே போவேன் நான்...?''

''அதுக்காக வேண்டாத விருந்தாளி மாதிரி எத்தனை நாளம்மா இந்த வீட்டிலே இருப்பே?''—சகாதேவன் கேட்டான்.

''செத்தாவது போவேனே தவிர, இந்த வீட்டைவிட்டு வெளியேற மாட்டேன் அண்ணா...''

இப்போது காளிதாஸ் குறுக்கிட்டான்;

''அப்படி இல்லீங்க. நடக்கக்கூடாதது, நடந்து போயிடுச்சு. அதுக்காகக் கொஞ்சம்கூட மனசால உறவே இல்லாத ஒரு பெண் கூட நீங்க இந்த வீட்டில இருக்கிறதைவிட, உங்க அண்ணன் வீட்டில போய் அவ

ரோட குழந்தைகளோட இருந்தா கொஞ்சம் நிம்மதியாகவும், ஆறுதலாகவும் இருக்கும். நல்லா யோசிச்சுப் பாருங்க.''

வசந்தா பதில் சொல்லவில்லை என்றாலும், அவளின் உள்மனம் எதையோ சொல்ல முடியாமல் தவிப்பது தெரிந்தது.

''உங்க மனசில எது இருந்தாலும் பரவாயில்லை, வெளிப்படையா சொல்லுங்க.''

''எங்கே போனாலும் எனக்கு இனிமே நிம்மதி வராதுங்க. நிம்மதிக்காக இந்த வீட்ல நான் இருக்கப் போறேன்னு சொல்லலை. மறுபடியும் எங்க அண்ணன் வீட்டுக்குப் போய், அங்கெல்லாம் குடித்தனம் இருக்கிறவங்க முகத்தில் என்னாலே இனிமே முழிக்கவே முடியாது.''

சட்டென காளிதாஸுக்கு வசந்தாவின் ஓர் அந்தரங்க இழை பிடிபட்டது. சில நிமிடங்கள் முகத்தை மூடியபடி வசந்தா அழுதாள். அவள் அழுவதைப்பார்த்தசகாதேவனும் அழுதான். சிறிது நேரம் கழித்துக் கண்களைத் துடைத்துக் கொண்ட வசந்தா, மனத்தை முழுக்கவும் திறந்து கொட்டி விடுகிற நெகிழ்ந்த உறுதியுடன் காளிதாஸைப் உற்றுப் பார்த்துச் சொன்னாள்.

''முப்பத்திரண்டு வயசு வரைக்கும் கல்யாணம் ஆகாம பிறந்த வீட்டில் இருக்கிற மாதிரியான கொடுமை ஒரு பெண்ணுக்கு வேற எதுவும் கிடையாதுங்க. அதுவும் ஏழை டீச்சரா வாழறது அதைவிடக் கொடுமை! அந்தக் கொடுமையை நெருப்பை விழுங்கற மாதிரி விழுங்கிட்டு வாழ்ந்தவ நான். என்கூட வேலை பார்த்தவங்கள்லாம் எனக்காக அனுதாபப்படுவாங்க. பக்கத்துக் குடித்தனக் காரங்கள்லாம் எனக்காகக் கோயிலுக்குப் போய் கடவுளை வேண்டிப்பாங்க. அதையெல்லாம் நினைக்க நினைக்க எனக்கு அவமானமா இருக்கும். கோவமா



வரும் எனக்குக் கல்யாணம் ஆக வழியில்லேயேன்னுகூட நான் அவ்வளவா வேதனைப்பட்டதில்லை. இன்னும் உனக்குக் கல்யாணமாகலையா?'னு யாராவது கேக்கறப்ப தான், அதைத் தாங்க முடியாம என் மனசு அவஸ்தைப் படும். கிணத்தில் குதிச்சிடலாம் போல இருக்கும். ஆனா, அவஸ்தைப்பட்டுப் பட்டுக் கொஞ்சம் கொஞ்சமா என் மனசே மரத்துப் போயிடுச்சு. கல்யாணம் என்கிறதையே மறந்திட்டு ஒரு மெஷின் மாதிரி வாழ்ந்துக்கிட்டிருந்தேன். அப்பதான் திடீர்னு குமாரசாமி மாமா மூலம் இந்த சம்பந்தம் வந்தது. முதல்ல நான் மாட்டேன்னுதான் சொன்னேன். பெரிய பணக்காரரைக் கல்யாணம் பண்ணிக்க நெஜமாவே எனக்குப் பயமாத்தான் இருந்தது. அதுவும் முதல் முதலாகா தம்பரி எங்க வீட்டுக்கு வந்தப்பவே எனக்கு ரொம்பவும் ஒரு மாதிரி ஆயிடுச்சு. என்னமோ அப்பவே எனக்கும் இந்தப் பெண்ணுக்கும் சரிப்பட்டு வராதுன்னு தோணிச்சு. பணக்கார ஆம்பளைங்களைப் பார்த்தாக்கூட நான் பயப்பட மாட்டேன். ஆனா, பணக்கார பொம்பளைங்களைப் பார்த்தாலே பயந்து நடுங்குவேன். ஆனாலும் எப்படியோ என் கல்யாணம் முடிஞ்சது. எனக்கும் கடைசியில் கல்யாணம் ஆயிடுச்சுன்னு மட்டுமில்லை; ஒரே நாள்ல பெரிய பணக்காரியா ஆயிட்டோம்னு மனசுக்குள் ரொம்ப சந்தோஷப்பட்டேன். காரையும் பங்களாவையும் பார்த்தா யாருக்குத்தான் சந்தோஷமா இருக்காது?

கல்யாணமான அப்புறம் வாரத்துல ஒரு நாள் கார்ல அண்ணன் வீட்டுக்குப் போய் வந்தப்பல்லாம் ரொம்ப பெருமையா இருந்தது எனக்கு. ஆனா, என் கூட வேலை பார்த்தவங்களுக்கும் எங்க பக்கத்து குடித்தனக்காரர்களுக்கும் நான் பெரிய பணக்காரரைக் கல்யாணம் செய்து கொண்டதில் என்மேல் ரொம்ப பொறாமைன்னு அப்பத்தான் தெரிஞ்சது. இது எனக்குப் பெரிய அதிர்ச்சியா இருந்தது. அவங்களோட பொறாமையைப் பார்த்தபிறகு

தான் எனக்குள்ளேயும் செருக்கு வந்தது. அவங்க எல்லாரை யும் ஜெயிச்சிட்ட மாதிரி இருந்தது. இப்ப எப்படி அவங்க எல்லார் முன்னாடி போய் மறுபடியும் நிப்பேன்? மறுபடி யும் அவங்ககிட்டே தோத்துப் போயிட்ட மாதிரி இருக்கு. அதனால,செத்தாலும்இந்த விட்டுக்குள்ளேயே சாவோம்னு இருக்கு. மத்தபடி எனக்கு எந்த உரிமையும் தெரியாது, சட்டமும் தெரியாது.

''ஒரு பொம்பளையோட உண்மையான சொத்து—அவளோட புருஷன்தான். புருஷன் இருந்தாத்தான் மத்த சொத்துகளுக்கும் மதிப்பு இருக்கும். இப்ப இத்தனை சொத்தும் சுகமும் இருந்து எனக்கு என்ன மதிப்பு இருக்கு? அந்த மதிப்பு இல்லாமத்தான் அவங்களுக்குப் பிறந்த பொண்ணே என்னை வீட்டைவிட்டுப் போகச் சொல்லுது. இந்தப் பெண்ணே இப்படி இருந்தா, மத்தவங்க எப்படி இருப்பாங்கனு தெரியாதா? இப்ப சொல்லுங்க நீங்க, நான் எப்படி மறுபடியும் பிச்சைக்காரக் கோலத்துல எங்க அண்ணன் வீட்லே போய்க் கிடக்க முடியும்?''

வசந்தாவின் கண்களிலிருந்து நீர் வெள்ளமாக வடிந்தது. காளிதாஸ் சிரமப்பட்டுக் கண்ணீரை மறைத் துக் கொண்டான்.

''எனக்குக் கல்யாணமாகாமல் இருந்தப்ப கூட மனசில் ஏதோவொரு மூலையில் என்னிக்காவது எனக்கும் கல்யாண மாகி ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்காமல் போகாது என்கிற நம்பிக்கை துளி ஒட்டியிருந்தது. ஆனா, இப்ப எல்லாமே பாழாப் போயிடுத்தே...''

வசந்தா சொன்னது உண்மைதான். காளிதாஸ் நிசப்த மாக யோசித்துக் கொண்டே இருந்தான். ஒரு வெடி அவன் அறிவில் வெடித்தது. அவனுள் மௌனமான வெடிச்சரமாக அது வெடித்துக் கொண்டே இருந்ததில்— வசந்தாவின்



வாழ்க்கை ஏன் பாழாக வேண்டும். இல்லை, இல்லவே இல்லை. பாழாகிவிட்டதாக நினைக்கத் தேவையில்லை என்ற பதில் ஊற்று நீராகப் பீரிட்டித்தது. அந்தக் கருணை ஊற்றின் கசிவில் காளிதாஸே உணர்வுகள் குளிர்ந்து கண் களை மூடிக் கொண்டான். பல நிமிஷங்கள் கழித்துக் கண்களைத் திறந்தான்.

''வசந்தா''—கருணையுடன் மெல்லிய குரலில் அழைத் தான். சட்டென அச்சூழலில் புதியதோர் அருளின் விகசிப்பை உணர்ந்த வசந்தாவும் சகாதேவனும், காளி தாஸின் முகத்தை எறிட்டுப் பார்த்தார்கள்.

''வாழ்க்கை நிரந்தரமா பாழாகி விட்டதுன்னு ஏன் சொல்றீங்க?''

இதற்குப் பதில் சொல்லாமல் வசந்தா காளிதாஸையே பார்த்தாள்.

''நான் சொல்றேன், ஒரு விபத்துல பட்ட காயத்தினால அப்படித் தோணுது...''

வசந்தா திகைப்புடன் விழித்தாள்.

''அந்தக் காயத்தைக் குணப்படுத்த மருந்தே இல்லையா என்ன?''

''என்ன சொல்றீங்க காளிதாஸ்...?''—சகாதேவன் அதிர்ச்சியுடன் கேட்டான்.

காளிதாஸ் உறுதியுடன் வசந்தாவைப் பார்த்தவாறே பதில் சொன்னான்:

''உங்க தங்கச்சி வசந்தாவைக் கல்யாணம் செய்து கிட்டு நான் அவங்களுக்கு வாழ்க்கை தரேன். நான் அவங் களைக் காப்பாத்தறேன்...

15384
3173307

# 21

மிகப் புதிய அனுமன் தன் நெஞ்சைக் கிழித்து மிகப் புதிய ராமச்சந்திரமூர்த்தியைத் சரிசனம் காட்டுகிறாற் போன்ற திக்பிரமையில் திகைத்து நின்றுவிட்டாள் வசந்தா. அவளுள் பல நீரூற்றுகள் கண் திறந்தன. புது வெள்ளம் கண்டவர்களாக மூவருமே பிரமித்து நின்றார்கள்.

காளிதாஸ் பின் சொன்னான் :

''ராஜரத்னம் இறந்து ஒரே ஒரு மாதத்துல நான் இப்படிக் கேட்டுட்டேன்னு பதறிடாதிங்க சகாதேவன்...! கல்யாணம் என்கிற வைபவத்தை நாம் உடனே நடத்திட வேண்டாம். அதை வசந்தா மட்டுமில்லே... அவங்க நிலையில இருக்கிற எந்தப் பெண்ணாலயுமே நினைச்சுப் பார்க்கவோ, தாங்கிக்கவோ முடியாது. ஆனா, கல்யாண நம்பிக்கையை இந்த நிமிஷமே இவங்களோட மனசிலே விதைச்சுடுவோம். அந்த நம்பிக்கை இவங்களோட மனசிலே முதல்ல நல்லா முளைச்சு வளரட்டும்... மற்ற விஷயங்களை அப்புறம் பார்த்துப்போம்...''

புடவைத் தலைப்பால் வாயை இறுக மூடியும் வசந்தாவிடம் எழுந்த உரத்த விம்மல் காளிதாஸைக் குலுக்கியது.

''ஸாரி! நான் எதுவும் அபசாரமாகவோ அவசரப்பட்டோ பேசறதா நினைச்சுட வேண்டாம். நிஜமாகவே வசந்தாவுக்கு நான் வாழ்க்கை தர்றதுக்கு விரும்பறேன். தயவுபண்ணி வேறே மாதிரி எதுவும் நினைச்சுட வேண்டாம்...''

உணர்வு மேலிட்டு சகாதேவன், காளிதாஸின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டான். எத்தனை கட்டுப்படுத்தி



யும் அவனின் கைகள் வெட வெடவென்று நடுங்கின. கண்களில் நீர் நிறைந்தது.

''உணர்ச்சி வசப்படாதிங்க சகாதேவன்...உங்க தங்கையைப் பயப்படாம, எதைப் பத்தியும் கொஞ்சமும் தயங்காம கல்யாணத்துக்கு ஒப்புக்கச் சொல்லுங்க. நாளைக்கே நீங்க எங்க வீட்டுக்கு வாங்க. எங்க அம்மாவையும் இது விஷயமா உங்ககிட்டே உறுதி சொல்லச் சொல்றேன். ஒரு வருஷம் கழிச்சு சிம்பிளா கல்யாணத்தை வெச்சுப்போம். அதுவரைக்கும் வசந்தா உங்க வீட்டுல இருக்கட்டும். என்ன சொல்றீங்க...?''

''நான் என்ன சொல்றதுன்னே தெரியலை காளிதாஸ் சார். உடம்பே சிலிர்க்குது எனக்கு. ஏதோ கனவு காண்ற மாதிரி இருக்கு. என்ன சொல்றோம்னு உணர்ந்துதான் சொல்றீங்களா ?''

''நல்லா உணர்ந்துதான் சொல்றேன். உங்க தங்கையை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்.''

சகாதேவனின் கூப்பிய கரங்கள் அவனின் சிரசுக்கு மேல் உயர்ந்தன.

மனம் தாளாமல் வசந்தா, அண்ணனின் மார்பில் கண்களில் நீர் உதிரச் சாய்ந்து விட்டாள். சகாதேவன் ஆதரவுடன் அவளின் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான். கண்ணீரைத் துடைத்து விட்டாள். சற்று நேரத்துக்கு யாருமே பேசவில்லை. பின் காளிதாஸ் கேட்டான் :

''சகாதேவன், உங்க தங்கையோட மௌனத்தை நான் சம்மதம்னு எடுத்துக்கலாமா...?''

''என்னம்மா சொல்றே நீ ?''—சகாதேவன் கனிவுடன் கேட்டான்.

வசந்தா மவுனமாகவே நின்றாள்.

''என்னம்மா...சொல்லு ?''

''வேண்டாம் சகாதேவன்... திரும்பத் திரும்ப அவங்களைக் கேட்டா ரொம்ப இம்சையா இருக்கும். நீங்க இப்படி உட்காருங்க. நாம ரெண்டு பேரும் சில விஷயங்களைப் பத்திப் பேசிப்போம்...''

காளிதாஸ் நாற்காலியில் அமர்ந்து கொள்ள, சகாதேவனும் அவனுக்கெதிரில் வேறொரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். வசந்தா கண்ணீரைத் துடைத்தபடி சிறிது தள்ளி நின்றாள்.

''சகாதேவன், இனிமேலும் உங்க தங்கை இந்த வீட்டிலே இருக்கணும்னு சொல்லமாட்டீங்களே...?''

''நீங்களே சொல்லுங்க...''

''ரெண்டு மூணு நாள் கழிச்சு வசந்தாவை உங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடுங்க...''

''நாளைக்கே அழைச்சிட்டுப் போயிடறேன்.''

''காதம்பரிகிட்டே நீங்க வேறே எதுவும் சொல்ல வேண்டாம். ஜஸ்ட் போறோம்னு மட்டும் சொல்லிடுங்க, போதும்.''

''அதைக்கூடச் சொல்லணுமா...?''

''சொல்லிடுங்க. அதனாலென்னா... வீண் பகைமை உணர்ச்சி வேண்டாம். கல்யாணத்தின்போது அந்தப் பெண்ணையும் நான் கூப்பிட்டாகணுமே!''

''இனிமே எங்களுக்கு இந்தக் குடும்பத்தோட எந்த சம்பந்தமும் கிடையாது. அவங்களோட காசு பணம் எதிலும் ஒரு பைசாகூட வேண்டாம் எங்களுக்கு. கல்யாணத்துக்கு ராஜரத்னம் கொடுத்த அத்தனை நகைகளையும் ஒப்படைச்சிடறோம். பத்மாவதி அம்மாளை எல்லாத்தையும் சரிபார்த்து வாங்கிக்கச் சொல்லுங்க...''

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். உங்க தங்கையை மட்டும் தைரியமா இருக்கச் சொல்லுங்க. கல்யாணத்துக்கு நான் ஒரு வருஷ டயம் கொடுத்தது— அவங்களோட மனசில் ஏற்பட்டிருக்கிற அதிர்ச்சிகள் மாறி சுமுகமான நிலைக்கு வரட்டும் என்கிறதுக்காகத்தான்.''



''ஏழேழு ஜென்மத்துக்கும் எங்க குடும்பம் உங்களுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கும்''—குரல் தழும்பச் சொன்னான் சகாதேவன்.

''அவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் வேண்டாம் சகாதேவன்.''

''நான் என்னிக்கு வந்து உங்க அம்மாவைப் பார்க்கலாம்...?''

''நாளைக்கே வாங்க, நான் இன்னிக்கு இரவே அம்மாகிட்டே சொல்லிடறேன்.''

''அம்மா எதுவும் சொல்லிட மாட்டாங்களே?''—சகாதேவன் தயக்கத்துடன் கேட்டான்.

''நான் சொல்லக்கூடாது எங்க அம்மாவைப்பத்தி... நீங்க வந்து பார்த்துப் பேசிட்டு அப்புறம் சொல்லுங்க.''

காளிதாஸ் கனிவுடன் வசந்தாவைப் பார்த்தான். அவனை நிமிர்ந்து பார்க்கத் திராணியற்று அவளின் பார்வை தாழ்ந்திருந்தது. கற்பனையில்கூட எண்ணியிராத காட்சி மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் வாழ்க்கை நாடகத்தின் கதையோட்டத்தைக் காணக் காண வியப்பாக இருந்தது காளிதாஸுக்கு.

''அப்போ நான் கிளம்பட்டுமா சகாதேவன், கீழே காதம்பரி வந்துட்ட சத்தம் கேக்குது. அவங்ககிட்டே நாளைக்கே நீங்க வசந்தாவை அழைச்சிட்டுப் போயிடப் போறதைச் சொல்லிடறேன். நீங்க நாளைக்கு எங்க வீட்டுக்கு வாங்க...''

''நீங்களும் ஒரு நாள் எங்க வீட்டுக்கு வாங்க.''

"கண்டிப்பா வரேன்."

"என் சம்சாரத்துக்கிட்டே மட்டும் நான் உண்மையைச் சொல்லிடறேன்."

"ஆனா, வேற யாருக்கும் இப்ப தெரியவேண்டாம்."

"நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படியே நடந்துக்கறோம்."

"அப்போ நான் கிளம்பட்டுமா...?"

"சரிங்க சார்."

"வரேங்க வசந்தா."

காளிதாஸை நிமிர்ந்தே பாராமல் வசந்தாவின் தலை 'சரி' என்று லேசாக அசைந்தது.

காளிதாஸ் வேகமாகக் கீழே இறங்கி வந்தான். அவனுடைய வருகைக்காகத் தன்னுடைய அறையில் படபடப்புடன் காத்திருந்தாள் காதம்பரி.

"என்ன, ரொம்ப நேரம் பேசிட்டிருந்தீங்க போலிருக்கே...?"—காதம்பரி சிறிது கேலியான தொனியில் கேட்டாள்.

"ரொம்ப சிக்கலான விஷயமில்லையா, அதான்!"

"என்ன சொல்றாங்க அந்த அம்மா?"

"என்ன சொல்லியிருப்பாங்கனு நீங்களே சொல்லுங்க பார்க்கலாம்...?"

"இதானே வேண்டாங்கிறது...கேட்டா டைரக்டா பதில் சொல்லுங்களேன்."

"உங்ககூடப் பழகிப் பழகி எனக்கும் உங்களை மாதிரியே பேச வருது காதம்பரி."

"பழி என் மேலேயா? வெல்! இப்போ நான் கேட்டதுக்கான பதிலைச் சொல்லுங்க."



"பயப்படாதீங்க... உங்க இஷ்டப்படிதான் நடக்கப் போகுது."

"இந்த வீட்டைவிட்டுப் போயிடறதா சொல்லிட்டாங்களா?"—காதம்பரி பரபரப்புடன் கேட்டாள்.

"நாளைக்குக் காலையிலேயே கிளம்பிடுவாங்க."

சிறு குழந்தைக்கு உரிய பரவசம் காதம்பரியின் கண்களில் மின்னியது.

"காளிதாஸ் இஸ் ரியலி க்ரேட்!"

"முழுசையும் கேட்டுட்டு அப்புறம் சொல்லுங்க யார் க்ரேட்னு. வசந்தா உங்க அப்பாவோட பணம் எதிலும் பைசாக்கூடப் பங்கு கேக்கலை."

"நெஜமாவா...?"

"கல்யாணத்தின்போது உங்க அப்பா கொடுத்த அத்தனை நகைகளையும் உங்ககிட்டேயே திருப்பிக் குடுத்துடறாங்க..."

"நான் நகைகளையெல்லாம் கேக்கலையே..."

"உங்க அப்பாவே இல்லாம போனப்புறம் அவரோட நகைகளும் பணமும் எதுக்கு அவங்களுக்கு? தேவையில்லேனு சொல்லிட்டாங்க."

கண்களில் கசிந்துவிட்ட நீரை மறைப்பதற்காகக் காதம்பரி அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கைகளைக் கட்டியவாறு காளிதாஸ் காதம்பரியின் முதுகைப் பார்த்தபடி மௌனமாக நின்றான். அவளிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கும் கல்யாண ரகசியம் அவனுள் வருத்தத்தை மூளச் செய்தது. மனத்தை இரும்பாக்கிக் கொண்டு கேட்டான்:

"சொன்னதையும் சொல்லிட்டு இப்போ ஏன் அழணும்?"

''அதுக்காக...? நான் அழவே கூடாதா?''

''குழந்தையையும் கிள்ளிவிட்டுட்டுத் தொட்டிலையும் ஆட்டணும்னு சொன்னா யார் நம்புவாங்க...?''

''நம்பாதவங்களைப் பத்தி எனக்குக் கவலையில்லை. நீங்க போய் அவங்ககிட்டே சொல்லுங்க, நகை எதையும் திருப்பித் தரவேண்டாம்னு. எங்கப்பாவோட பணத்தில் அவங்களுக்குச் சரியா எவ்வளவு ஷேர் இருக்கோ, அதைத் தட்டாம வாங்கிக்கச் சொல்லுங்க. நான் எங்க ஆடிட்டர் கிட்டேகூடப் பேசிட்டேன்.''

''இனி அதைப் பத்தியெல்லாம் பேசிப் பிரயோஜனம் கிடையாது காதம்பரி... அவங்க தெளிவா முடிவு பண்ணி யாச்சு. நாளைக்குக் காலையில் வசந்தா தன்னோட துணிமணிகளை மட்டும் எடுத்துட்டுக் கிளம்பிடுவாங்க.''

''எப்படி அவங்க மனசை ஒரே நாள்ல மாத்திட் டீங்க?''

''அதான் சொல்லிட்டீங்களே— காளிதாஸ் இஸ் க்ரேட்னு.''

''கடைசியில் நான்தான் பொல்லாதவளா போயிட் டேன்!''

''தெரியும். உடனே இப்படிப் பேசிடுவீங்க.''

''சரி, அவங்க இஷ்டப்படியே போகட்டும். எனக்கும் அவங்களுக்கும் இனிமே என்ன இருக்கு?''

''இப்போ சந்தோஷம்தானா?''

''அப்படி நினைக்கணும்னு தோணிச்சுன்னா நினைச்சுக் குங்க. ஆனா, ஒரு விஷயம்... இதுல எனக்கு உண்மையிலே சந்தோஷம் கிடையாது...அவ்வளவுதான்...''

''ஓகே! அப்போ நான் கிளம்பறேன். ஆமா— நீங்க எங்கே போனீங்க? காலையிலேயே புறப்பட்டுப் போனதா உங்க அத்தை சொன்னாங்களே?''

''எங்கேயோ போனேன். அது என்னத்துக்கு உங்களுக்கு?''

''சரி, அது இருக்கட்டும். நீங்க என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருக்கீங்க. மறந்துடாதீங்க.''

''என்ன வார்த்தை?''

''வசந்தா இந்த வீட்டை விட்டு வெளியேறினாத்தான் உங்களோட கல்யாணத்தைப் பத்திச் சீக்கிரமா நடவடிக்கை எடுக்க முடியும்னு சொன்னீங்களே...''

''அது விஷயமாத்தான் அடிக்கடி வெளியில் போயிட்டு வரேன்!''

''ரொம்ப சஸ்பென்ஸாத்தான் இருக்கு.''

''இருக்கட்டுமே— உங்க கதைகளில் வர்ற சஸ்பென்ஸ் மாதிரி''—காதம்பரி கண்களைச் சிமிட்டியபடியே சொன்னான்.

''அப்புறம் ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். நேத்திக்கு டில்லியிலிருந்து சாவித்திரி லெட்டர் போட்டு ருக்கா.''

''சந்தோஷமா இருக்காங்களா?''

''சந்தோஷமா இருக்காளாம், கல்யாணமெல்லாம் முடிஞ்சிடுச்சாம்.''

''பரவாயில்லை. இனிமே உங்க கல்யாண நியூஸ் தான் சாவித்திரிக்குப் போகணும்.''

''சீக்கிரமே அனுப்பிடலாம்!''

''கேக்கறத்துக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு காதம்பரி. உங்களோட இந்த மாத்றத்தைப் பார்த்துச் சந்தோஷப்பட உங்க அப்பா இல்லையேனு வருத்தமா இருக்கு.''

''ஸோ வாட்? எனக்குச் சரியான பக்க பலமாத்தான் நீங்க இருக்கீங்களே... அப்புறம் எதுக்கு வருத்தப் படணும்?''

''அப்பா, அப்பானு உயிரைவிட்ட பெண்தானான்னு இப்போ எனக்குச் சந்தேகமா இருக்கு.''

''உண்மைதான், இப்போ நான் அந்தச் காதம்பரி இல்லைதான்.''

காளிதாஸ் பரிவுடன் காதம்பரியின் முகத்தைக் கை களில் ஏந்தி, அவளின் நெற்றியில் வாஞ்சையுடன் முத்த மிட்டான்.

''காளிதாஸ், வர்ற ஆகஸ்ட் எட்டாம் தேதிதானே உங்க பிறந்த நாள்?''

''ஆமாம்.''

''இன்னும் பதினெட்டு நாள் இருக்கு. உங்களுக்குப் பிறந்த நாள் பிரஸெண்ட் பண்ண அழகா ரெண்டு ஷர்ட்டும் ஒரு அருமையான ஸீக்கோ வாட்ச்சும் வாங்கி வெச்சிருக்கேன்.''

''காட்டுங்களேன் பார்க்கலாம்!''

''முடியாது. உங்க பர்த் டே அன்னிக்குத்தான் இனிமே உங்களைப் பாரப்பேன். அன்னிக்கு எடுத்துட்டு வரேன். பார்த்துக்குங்க. அதுக்கு முன்னாடி ஒரு விஷயம்... உங்க பர்த் டே அன்னிக்கு நான் வந்து உங்களைப் பார்க் கறதுக்கு முன்னாடி இங்கே நீங்க வரவேண்டாம்!''

''இன்னும் பதினெட்டு நாள் இருக்கே காதம்பரி?''

''நான் ரொம்ப பிஸி. அதான் சொல்றேன்.''

''நீங்க சொன்னா சரி.''



''இன்னொரு விஷயம். உங்க பர்த்டே அன்னிக்குக் கிடைக்கிற மாதிரி உங்களுக்கு ஒரு முக்கியமான லெட்டர் வரும்.''

''அன்னிக்கு நேரில்தான் வர்றீங்களே. அப்புறம் என்னத்துக்கு லெட்டர்?''

''உஸ்... அவசரக்குடுக்கை! லெட்டர் எழுதப் போறது நானில்லை. வேறே ஒரு முக்கியமான நபர்!''

''போச்சுடா! எத்தனை சஸ்பென்ஸ்.''

''பயப்படாதீங்க. இதுதான் கடைசி சஸ்பென்ஸ்!''

''ஓகே. குட்நைட்!''

''இருங்க, கார்ல உங்களை ட்ராப் பண்ணிடறேன்.''

''வேணாம் காதம்பரி... இன்னிக்கு நான் பயங்கரமான எனெர்ஜியோட இருக்கேன். அதனாலே இங்கிருந்து வீட்டுக்கு நடந்தே போகப் போறேன்.''

''அப்போ கிளம்புங்க!''

''வெரி குட்நைட்.''

கொட்டிவாக்கத்தின் இருண்ட வானிலையில் வீடு நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினான் காளிதாஸ்.

## 22

தொடர்ந்து பல நாட்களுக்குக் காளிதாஸ் பிரமிப் பிலேயே மூழ்கிப் போயிருந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் அவனுக்கும் வசந்தாவுக்கும் இடையே என்ன உறவு மாற்றம் ஏற்பட்டு விட்டது! எப்படிக் கதியற்று நின்ற பெண்ணின் மலர்க்கரம் பிடிக்கும் திருப்பம் நிகழ்ந்து விட்டது விஷயத்தை அவன் அம்மாவிடம் அன்று

சொன்ன நிமிஷமே வசந்தாவைப் பார்க்கக் கிளம்பிவிட்ட அம்மாவை வீட்டில் நிறுத்தி வைக்கக் காளிதாஸ் பட்ட பாடு...

"என்னை விடு சாமி... என் மகன் கட்டிக்கப் போற வளை நான் போய் இப்பவே பார்த்தாகணும்..."

"வேண்டாம்மா... இப்ப போக வேண்டாம். இன்னும் கொஞ்ச நாளைக்கு இது யாருக்குமே தெரியக் கூடாது..."

"கண்ணால பார்த்துட்டு வந்துடறேனய்யா. என்னைத் தடுக்காதே... நான் யார்கிட்டேயும் மூச்சுவிட மாட்டேன்..."

வசந்தாவின் அண்ணன் சகாதேவன் வந்து பேசி விட்டுச் சென்ற பின், அம்மாவை நான்கு நாட்களுக்கு மேல் அவனால் தடுத்து நிறுத்தி வைக்க முடியவில்லை. முன்பின் தெரியாத மேற்கு மாம்பலத்துக்கு அவளாகப் போய்த் தெருவை விசாரித்து, வீட்டைக் கேட்டு வசந்தாவைப் போய்ப் பார்த்து வந்து விட்டாள்.

"யார்கிட்டேயும் இப்ப சொல்லிடாதீங்கம்மா..."

"சொல்லமாட்டேன் சாமி, சொல்லமாட்டேன். எனக்கென்ன சொல்லணும்னு? என் புள்ளை, குடியும் குடித்தனமுமா இருக்கிறதைப் பார்த்துட்டா இந்த ஆயுசு போதும் எனக்கு. கட்டிப் போட்ட பசு மாதிரி இருப்பாயா அவ. முகத்தைப் பார்த்தாலே தெரியுது. இன்னும் நாலு காசு சம்பாரிச்சு அந்தப் புள்ளையை நல்லபடியா வெச்சுக்க. அந்தப் பொண்ணு காதம்பரி எப்படி சாமி இருக்கு இப்ப?"

"நல்லாயிருக்கும்மா குணமெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் மாறியிருக்கு."

"மாறிடும்ய்யா. பொம்பளைப் புள்ளைங்களுக்கு ஒரு குறிப்பிட்ட வயசு வந்ததும் எல்லா குணமும் மாறிப்



போயிடும். என்ன குத்தம் செஞ்சாலும் புருஷன் தான் உசத்தியா இருப்பான். அப்புறம்! நீ வசந்தாவைக் கல்யாணம் செய்துக்கப் போறது காதம்பரிக்குத் தெரியுமாய்யா...!"

"தெரியாதும்மா... இப்ப தெரியவும் கூடாது. அது ஒரு மாதிரியான பொண்ணு... சீக்கிரம் அது கல்யாணம் செய்துக்கப் போறதா சொல்லியிருக்கு. அப்படிச் செய்துட்ட அப்புறம் என்னிக்காவது திடீர்னு முடிவு செய்த மாதிரி சொல்வேன். அப்பகூட அதுக்கு அதிர்ச்சியாகத் தான் இருக்கும்... ஏதாவது கன்னாபின்னான்னு பேசிடும்!"

"அது பிறந்த நேரம் அப்படி வாயாடுது!"

காளிதாஸ் ஒவ்வொரு சம்பவமாக நினைத்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு நாளையும் கழித்தான். அவனுடைய பிறந்த நாளாகப் பொழுது விடிந்த ஆகஸ்ட் 8-ம் தேதி காலை தபாலிலே காதம்பரி குறிப்பிட்ட முக்கியமான கடிதம் வந்தது. அது மனோதத்துவ டாக்டர் தேஜஸ்வினி எழுதிய கடிதம்!

'டியர் மிஸ்டர் காளிதாஸ்.

இக்கடிதம் காதம்பரி பற்றிய மிக மிக அந்தரங்கமான விஷயத்தை உள்ளடக்கியது. எனவே, இது உங்களின் பிரத்தியேகப் பார்வைக்கு மட்டும்தான்.

காதம்பரியின் மனம் மலரினும் மென்மையானது' சின்னஞ்சிறு நெருடலைக்கூட அவளின் மனத்தால் தாங்க முடியாது. இவளைப் போல் மனம் உள்ளவர்கள் எதற்கும் உடனே சுருங்கிப் போய் விடுவார்கள். ஆனால், காதம்பரி சீறுகொண்டெழுவாள். அவளுடைய மென்மை சிறைப் பட்டு விடுவதாலேயே அவள் சமுத்திர அலைபோல் பொங்குவாள். அப்படிப் பொங்கினால்தான் அவளால்

தணிய முடியும்! பிறந்த கணம் தொட்டு, காதம்பரி' என்ற பெண்ணின் அடிப்படை சுபாவம் இதுதான். இந்தச் சுபாவம் காலத்தின் மலர்ச்சியாகத்தான் மாறுபட முடியுமே தவிர, நிர்ப்பந்தங்களால் உருவேற்ற முடியாது. உக்கிரத்தைத் தணிய வைக்க முடியும். தணிய வைத்திருக்கிறேன்.

இந்தக் கடுமையும் உக்கிரமும் அவளுடைய சுபாவத்தில் அவளின் பதினோராவது வயதில் வந்து ஒட்டிக் கொண்டது தான். அவளுடைய பதினோராவது வயதில் அப்படி என்ன நடந்தது? அது நடந்தபின் அவளுள் என்ன மனமூர்க்கமெல்லாம் மூண்டது? சுருக்கமாகவும் மிகச் சரியாகவும் அவற்றை விவரிக்கிறேன்—படியுங்கள்.

—அப்போது காதம்பரிக்குப் பதினோரு வயது. அடையாறில் இருந்த பூர்வீக வீட்டில் அப்போது அவர்கள் வசித்து வந்தார்கள். அத்தையும் அவர் மகன் சிவராஜும் கூடவே வாழ்ந்த காலம். அந்த வயதில் காதம்பரி அரும்பாகவும் இல்லை, முழுமையான மலராகவும் இல்லை ஆயினும் செல்வந்தர்களின் வீட்டு அதிபுஷ்டியான உணவு வகைகளால், காதம்பரியின் உடலில் மட்டும் வயதுக்கு மேற்பட்ட செழிப்பு ஏற்பட்டிருந்தது. அந்தச் செழிப்பு அவர்களுடைய வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த சிவராஜின் நண்பனான சக்திவேல் என்ற இளைஞனின் மனத்தில் விகாரத்தைத் தோன்றச் செய்திருக்கிறது. கபடமில்லாத சிறுமியாக இருந்த காதம்பரியை, குழந்தை என்ற சகஜபாவனை காட்டிக் கொண்டு அவன் தனியாக இருந்த சமயங்களில் அவளை இறுகத் தழுவிச் சுகம் கண்டிருக்கிறான். அதன் விகற்பத்தைக் காதம்பரி அறிந்திருக்கவில்லை.

ஒரு நாள் அவளை வீட்டின் மொட்டை மாடிக்கு விளையாடுவதற்கென்ற சாக்கில் அழைத்துப் போயிருக்கிறான். எப்போதும் போல் அவளைத் தழுவித் தழுவி



உச்சி முகர்ந்தவன், அவளை இறுகப் பற்றியவாறு சரேலென்று தன் உடைகளைக் களைந்து ஆணுடலின் அகோரமான கூற்றை அவளுக்குக் காட்ட விழைந்திருக்கிறான். அந்தப் பயங்கரமான அதிர்ச்சியில் காதம்பரி அலறி விட்டதும், சட்டென்று தன் கையால் காதம்பரியின் வாயை, கத்த முடியாமல் அடைத்துக் கொண்டான். பின், இந்தச் சம்பவத்தை அவள் யாரிடமும் சொல்லக் கூடாது, சொன்னால் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேனென்று அவளைப் பலமுறை எச்சரித்துவிட்டுப் போய் விட்டான்.

சில மணி நேரங்களுக்குக் காதம்பரி அந்த இடத்தில அப்படியே ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய மனமும் உடம்பும் நடுங்கிக் கொண்டிருந்தன. இந்தச் சம்பவம் நடந்து பல நாட்களாகியும் காதம்பரியின் மனமும் உடம்பும் சகஜ நிலைக்கு மீளவில்லை. அடிக்கடி அந்தச் சம்பவம் அவளுடைய மனத்தில் ஆபாசச் சித்திரமாகக் குமட்டிக் கொண்டேயிருந்தது. இடையிடையே யாரிடமாவது அவள் நடந்ததைச் சொல்லிவிட்டாளா என்பதை அறிகின்ற நோக்கத்துடன், சக்திவேல் அவள் வீட்டுக்கு வந்து வந்து நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அவனைக் கண்டபோதெல்லாம் காதம்பரியின் பெண்ணுடல் கூறுகள் அதிர்ந்து ஜில்லிட்டுப் போயின. நாளடைவில், இந்த அநுபவம் அவளின் உடம்பு பூராவும் ஊசி வெள்ளம் எனப் பரவியது. இது ஆண் பெண் அந்தரங்க உடற் கூறுகளே ஓர் அருவருப்பான பண்டங்களாக, அது சம்மந்தமான செயல்கள் எல்லாம் ஆபாச நடவடிக்கைகளாகக் காணும் ஒரு தீவிர மனநிலைக்குக் காதம்பரியைக் கலக்கியிருந்தது. இதுவே நாளாவட்டத்தில் அவளுடைய இறுக்கத்துக்குக் காரணமாகி விட்டது.

இந்த சம்பவத்தைக் காதம்பரி யாரிடமும் சொல்லவே இல்லை. கறை போல் ஒட்டிவிட்ட இந்த அசுத்தத்தை

யாருக்கும் காட்டுவதற்கு அவளுடைய உணர்ச்சிகள் கூசின. அந்த அசுத்தத்தைத் தனக்குள்ளேயே ஒளித்து வைத்துக் கொள்ளவும் மனம் வெறுத்தது. கூச்சம் கொண்ட மனப் பகுதி, பூ மாதிரி மென்மை கொண்டிருந்தது. வெறுப்புக் கொண்ட மனப்பகுதி முள்போலக் கூர்மையாகச் சிலிர்த்திருந்தது.

அதனால் அவளின் விருப்பத்தை மீறி நடக்கும் எந்த விஷயத்தை எதிர்நோக்கும் போதும், காதம்பரியின் முள்தளம் வெகுவாக இயங்குகிற நிலை ஏற்பட்டது. அந்த விபத்துக்குப்பின், இளைஞர்கள் மேலேயே அந்த முள்தளம் முழு மூச்சுடன் இயங்கியது. ஏனெனில்,விபத்தை நிகழ்த்திய சக்திவேல் இளைஞன்—அதுவும் ஜீன்ஸ் அணிந்த துஷ்ட இளைஞன் !

பொதுவாகவே தன்னுடைய அப்பாவிடம் அதிகம் ஒட்டுதல் கொண்டிருந்த காதம்பரி, அந்த விபத்து நிகழ்ந்த பின், அவளுள் ஏற்பட்டிருந்த பாதுகாப்பின்மையின் உணர்வில் தன்னுடைய அப்பாவை மேலும் இறுகப் பிடித்துக் கொண்டாள்.

எல்லா அப்பாக்களையும் போல ராஜரத்னமும் காதம்பரியின் பதினெட்டாவது வயதில் அவளுக்குத் திருமணம் செய்து வைப்பது பற்றிப் பேச்சை ஆரம்பித்த போது, அதற்குச் சம்மதம் தெரிவிக்க முடியாமல் அவளுடைய மனத்தின் வெகு தூரத்தில் பொதிந்து போயிருந்த அந்த ஆபாசச் சம்பவம் காதம்பரின் உணர்வுகளில் கம்பளிப்புழுவாகக் குறுக்கிட்டது. கம்பளிப்புழுவை மறைக்கத் தனக்குக் கல்யாணத்தில் விருப்பமில்லை என்று பொய் சொன்னாள். சாகும்வரை தான் கல்யாணமே செய்து கொள்ளாமல் தன்னுடைய அப்பாவோடேயே, தன்னுடைய வீட்டிலேயே வாழப் போவதாக ராஜரத்னத்திடமும் மற்றவர்களிடமும் சொன்னாள்.



இந்தக் காலகட்டத்தில்தான் உங்களின் எழுத்துக்கள் மூலம் வெகுவாகக் காதம்பரி ஈர்க்கப்படத் துவங்கினாள். அந்த ஈர்ப்பின் முகுதியால் உங்களைச் சந்திக்க விரும்பினாள். ஆனாலும், நீங்கள் ஓர் இளைஞராக இருப்பீர்களோ என்ற பயத்தில் உங்களைச் சந்திக்கவும் பயந்தாள். ஆனால், உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளில் ஊசலாடிக் கொண்டிருந்த பயத்துளி பட்டென உதிர்ந்தது. காரணம்— நீங்கள் இளைஞர் இல்லை! அதிலும், நீங்கள் அவளைவிடக் கிட்டத்தட்ட இருபது வயது மூத்தவராக இருந்தது காதம்பரிக்கு எதிர்பாராத ஆறுதலையும் இதத்தையும் தந்தது. உங்களில் இன்னொரு விஷயமும் அவளுக்கு மென்மையான நட்புக்கு உரியதாக இருந்தது. அந்த விஷயம்— ராஜரத்னத்தைப் போலவே நீங்களும் மனைவியை இழந்தவர்! எதிர்பாராமல் கிடைத்த இந்த இழைகளைக் காதம்பரி இறுகப் பிடித்துக் கொண்டாள்.

யாரால் தனக்கு முழுப் பாதுகாப்பு கிடைக்கிறது என்று காதம்பரி நம்பி வந்தாளோ, அந்த ராஜரத்னம் மறுமணம் புரியத் தீர்மானித்தபோது, காதம்பரி மிகப் பலத்த அதிர்ச்சிக்கு ஆளானாள். அப்பாவுக்கும் தனக்கும் இடையே ஒரு பெண்மணி வாழ வந்ததைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பயந்தாள்; வேதனைப்பட்டாள்; ஆத்திரப்பட்டாள்... அதன் விளைவு? காதம்பரியின் உணர்வு வெள்ளம் காளிதாஸ் என்ற வடிகாலின் பக்கம் முழுமையாகப் பாயத் துவங்கியது!

அந்தப் பாய்ச்சலால்தான் அப்பாவிடம்கூடத் திறந்து சொல்லியிராத தன் இறுக்கத்தைப் பற்றி அவள் உங்களிடம் கோடி காட்டியது. அவளால் கோடி காட்டத்தான் முடிந்ததே தவிர கோடிட்டுக் காட்ட முடியவில்லை! அதனால், உங்களிடமும் முழு உண்மையையும் காதம்பரியால் உரித்துக் காட்ட இயலவில்லை. ஆனால், என்றைக்காவது தன்னுள் உறைந்து கிடக்கும் அந்த விபத்தை

உங்களிடம் சொல்லிவிட வேண்டும் என்ற ஏக்கம் காதம்பரியின் மனத்தில் முளைத்துத் துளிர்த்துத் தழைத்தது. அந்த ஏக்கத்தைக் காதல் என இனம் காணும் கல்மிஷம், காதம்பரியின் அறிவில் பொதிந்திருக்கவில்லை! வாழ்க்கையின் பாதுகாப்புக்கு அப்பாவுக்கு நிகரான, அப்பாவுக்கும அந்நியோன்யம் மிக்க ஆடவன் காதம்பரிக்குத் தேவையாக இருந்தான். அந்த ஆடவனை அவள் காளிதாஸ் என்ற எழுத்தாள நண்பனிடம் கண்டாள்!

மானசீகமாக மனத்தில் அப்பாவை இழக்கத் துவங்கியதும், மேலும்மேலும் காளிதாஸ் என்ற நண்பனிடம் தன் உறவைப் பலப்படுத்திக் கொள்ள அவளின் மனம் அவசரப்பட்டது. காளிதாஸ் முழுக்க முழுக்கத் தன்னுடைய விருப்பப்படி தான் நடக்க வேண்டுமென அந்த மனம் ஆசைப்பட்டது. அந்த ஆசைதான் காதம்பரியின் தனிப் பண்பு. அந்த அவளின் தனிப் பண்புக்கேற்ப காளிதாஸ் என்ற நண்பன் முழுக்க முழுக்க இணங்கித் தணிந்து நடந்து கொண்டால், தன்னையும் முழுக்க முழுக்க அவனுக்கு அர்ப்பணித்துவிடக் காதம்பரி தயாராகி விட்டாள்.

அந்த அர்ப்பணிப்புக்குக் குறுக்கே அவளின் இறுக்கம் தடைக்கல்லாக இருந்ததை அகற்ற ஒரு மனோதத்துவ நிபுணர்தான் உதவி செய்ய முடியும் என முடிவு செய்து உங்கள் மூலம் என்னைச் சந்தித்து ஆலோசனை பெற வந்தாள். ஆனால், ஆலோசனை முழுமை பெற முடியாமல் அன்று திடீரென ராஜரத்னத்துக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு, நீங்கள் வந்து அழைத்துச் சென்று விட்டீர்கள்.

அன்று இரவுதான்— ராஜரத்னம் இறந்து போவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்பு— உங்களின் நெருக்கத்திலும் தொடலிலும்கூடக் காதம்பரி எதிர்பார்த்துப் பயந்த ஊசி வெள்ளச் சிலிர்ப்பு அவளுடைய உடம்பில் பெருகவே இல்லை. தனக்குத்தானே அதை அவள்



ஊர்ஜிதம் செய்து கொள்ள, காளிதாஸின் தோள்களை இறுகப் பிணைத்துப் பார்த்தாள். காளிதாஸும், அன்புடன் அவளை அள்ளியபடி அவளின் நெற்றியில் முத்தமிட்டான். காதம்பரி நெகிழ்ந்து காளிதாஸின் மார்பில் கிடந்தாள். ஆண்களிடம் தனக்குத் தோன்றும் ஒருவிதமான இறுக்கம் தன்னை விட்டு விலகியது போல் இருந்தது!

அது மட்டுமல்ல; அன்றுதான் முதன்முதலாகப் பாலுணர்வின் ஆரம்பப் புறச் சுக உணர்வைக் காதம்பரி ரகசியமாக உடற்பூர்வமாக அனுபவித்தாள். அத்தனை வருஷம் அவள் மனத்தில் கிடந்த ஒரு கசடு அவளை அறியாமல் விலகிக் கொண்டிருந்தது.

அந்த மிக முக்கியமான இரவில்தான் காதம்பரியின் அப்பா காலமானார். ஒரு விதத்தில் இது யாரும் எதிர்பாராமல் காலம் ஏற்படுத்தித் தந்த திருப்பம் தான். இந்தத் திருப்பத்தில் ராஜரத்னம் என்ற பந்தத்திலிருந்து காளிதாஸ் என்ற பந்தத்துக்குத் தன்னை முழுமையாகப் பெயர்ச்சி செய்து கொண்டாள் காதம்பரி. அந்தப் பெயர்ச்சியை நடைமுறையில் செயல்படுத்தும் முன், தன்னுடைய ஞாபகத்தில் அவ்வப்போது குறுக்கிடும் தன் பதினோராம் வயது அவமதிப்பை முற்றிலும் அகற்றிவிட தொடர்ந்து என்னைச் சந்தித்துத் தேவையான எல்லா சிகிச்சைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டாள். இன்னும் சிறிது காலத்துக்கு மட்டும் மன அழுத்தங்களைக் குறைக்கச் சில மாத்திரைகளை அவள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் போதுமானது. வேறு பிரச்னைகள் எதுவும் இல்லை. இப்போது அவள் ஓர் ஆடவனை நேசிக்கும் பெண், இச்சிக்கும் பெண். அவனை ஈர்த்து அவனிடம் தன்னை அர்ப்பணிக்க வேட்கை கொண்டிருக்கும் இளம் பெண். இதற்கெல்லாம் அவள் எந்தச் சமூக மரபுகளுமின்றித் தேர்ந்தெடுத்திருக்கும் ஆடவன், எழுத்தாளன் காளிதாஸ்!

டியர் மிஸ்டர் காளிதாஸ்! காதம்பரியை மகளாகச் சுவீகரிக்கக் கசிந்து உருகும் உங்களின் எண்ணம், ஆழமான அன்பின் பரவசம்தான் அன்றி வேறெதும் இல்லை. உண்மையில் அவள் உங்கள் மகளுமில்லை. நீங்கள் அவளின் அப்பாவும் இல்லை. 'மகளே' என்ற கனிவு, பாசத்தின் அழகுமிது உச்சம் அல்லது எழுத்தாளனுக்கே உரித்தான இலக்கிய நயம்! தெளிவாக யோசித்துப் பாருங்கள். அன்புக்குப் பாத்திரமான ஓர் இளம் பெண்ணை மகளாகப் பார்க்கும் உங்களுக்கு அதே அன்புக்குரிய இளம் பையனைப் பார்த்தால் மகன் என்று சொல்லத் தோன்றுகிறதா?! தோன்றி இருக்காதே!

நான் சொல்ல வந்த விஷயம் முடிந்தது. இன்றே காதம்பரியும் வந்து உங்களைச் சந்திப்பாள். உங்களைப் போன்ற எல்லா வகையிலும் மனமுதிர்ச்சி பெற்ற மனிதனுடன்தான் காதம்பரியால் வாழ முடியும். தயங்காமல் அவளை ஏற்றுக் கொள்ளுங்கள்.

திருமண அழைப்பிதழ் அனுப்ப மறந்து விடாதீர்கள்—உங்களுக்கு என்னுடைய அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!

என்றைக்கும் அன்புடன்,
தேஜஸ்வினி

## 23

டாக்டர் தேஜஸ்வினியின் கடிதத்தைப் படித்தவுடன் சுற்றிலும் சமுத்திரம் பொங்கிச் சூழ்ந்து கொண்டாற் போல் இருந்தது. அசுர வேகத்தில் அதிர அதிரச் சீறி வரும் வாகனத்தின் நேர் முன்னிலையில் நிற்கிறாற்போல் விதிர் விதிர்த்துப் போனான் காளிதாஸ். உடம்பெல்லாம் வியர்வை கொப்பளித்தது. கை கால்கள் நடுங்கின. எந்தத்



திசையில் இருந்து என்ன நிகழப் போகிறது என்பதை அநுமானிக்கவே முடியாமல், கண்ணுக்குத் தெரியாத கடவுளை எண்ணித் தலைவணங்கி, தரையில் மண்டியிட்டு விட்டான். அவன் கண்களிலிருந்து உதிர்ந்த நீர் திட்டுத்திட்டாகத் தரையில் தேங்கியது. அப்போது கீழே கார் வந்து நிற்கும் சத்தமும், கதவைத் திறந்து மூடுவதும் கேட்டன. காளிதாஸ் விருட்டென எழுந்து கண்களைத் துடைத்து விட்டு மிக விறைப்புடன் செயற்கையாக நின்றான். புயல் வீடு தேடி வந்துவிட்டது; இனி அதன் உக்கிரம் தான்...

கீழே அம்மாவின் குரல் கேட்டது! "வா தாயி, வா... தம்பி சொல்லிச்சு— இன்னிக்கு நீ வருவேன்னு... நல்லா இருக்கியாடா? அப்பா போயி மூணுவரை மாசம் ஆயிப் போச்சு. மனசு ஒண்ணும் கலங்கிப் போயிடலையேம்மா?..."

"நான்தான் எதிர்லேயே நிக்கறேனே... கலங்கிப் போயிருக்கேனா, இல்லையானு பார்த்தாலே தெரியலே...?"

"மனசைப் பார்க்கறதுக்கு எனக்குப் புத்தி ஏதும்மா ஆனா, நீ உடைஞ்சு விழுந்திடாம எழுந்திருச்சு நின்னுட்டதா தம்பி சொல்லிச்சு."

"யாரைப் பிடிச்சுக்கிட்டு எழுந்து நின்னேன்னு உங்க வீட்டுத் தம்பி சொல்லலையா...?!"

—காதம்பரியின் இந்தக் குரல் கேட்டு மாடியில் காளிதாஸின் மனம் பொருமியது.

"உங்க வீட்டுத் தம்பி மாடியில் இருக்காங்களா, வெளியே போயிருக்காங்களா?..."

"தம்பி மாடியில்தான் இருக்கும்மா..."

''அவருக்குப் பிறந்த நாள் பரிசா ரிஸ்ட் வாட்ச்சும் ரெண்டு ஷர்ட்டுகளும் வாங்கிட்டு வந்திருக்கேன். போய் அவர்கிட்டே குடுத்திட்டு வந்திடறேன்.''

''கொஞ்சம் இருடா. அவன் பிறந்த நாளுக்குன்னு பால் பாயசம் செய்தேன் ஒரு கிளாஸ் தரேன். சாப்பிட்டுட்டு அவன் கூடப் போய்ப் பேசிட்டு இரு.''

''அவருக்கும் ஒரு க்ளாஸ் தாங்க... போய் நானும் அவர்கூடச் சேர்ந்து சாப்பிடறேன் ''

''உன் பிரியம்.''

தோளில் தொங்கிய ஜோல்னாப் பையை முதுகுப் பக்கம் ஒதுக்கி விட்டுக் கொண்டு இரண்டு கைகளில் பாயசம் நிரம்பிய தம்ளர்களுடன் காதம்பரி மாடிப்படிகளில் ஏறினான். அவன் மாடியேறி வரும் ஓசை கேட்டு, காளிதாஸ் ஜன்னல்புறம் நகர்ந்து வெளியில் பார்ப்பது போல் நின்று கொண்டான். அவனுடைய மார்பு வேகமாக அடித்தது.

''குட்மார்னிங் காட்ஃபாதர் !''

புயல்காற்றின் வீச்சே காளிதாஸின் பிடரியை உலுக்கியது. கலவரத்துடன் திரும்பிப் பார்த்தான்.

''மனம் கனிந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள்— பால் பாயசத்துடன் !'' என்றபடி தம்ளரை நீட்டிய காதம்பரியின் முகத்தை அவனால் பார்க்கக்கூட முடியவில்லை. அவனைக் காணவே கண்கள் கூசின. அவனுடைய முகத்தில் இறுகிய பாவனை நொடிப் பொழுதில் காதம்பரிக்குத் தெரிந்து போயிற்று சில விநாடிகள் அவனையே உற்றுப் பார்த்தான்.

''ஏன், என்னவோ போல இருக்கீங்க ?'' என்றான்.

காளிதாஸ் பதில் சொல்லவில்லை. மௌனமாக நின்றான். அவனின் மௌனம் காதம்பரிக்கு விகற்பமாக இருந்தது. சிறிது நேரம் அவனும் மௌனமாக நின்றான். பாயச தம்ளர்களை மேஜையில் வைத்தான்.

''டாக்டர் தேஜஸ்விவி என்னைப் பத்தி எழுதின லெட்டர் கிடைச்சுதா?''—குரலில் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் கேட்டான்.

''கிடைச்சது.''

காளிதாஸின் இயலாமை இந்த ஒற்றை வார்த்தையிலேயே ஒலித்தது.

''அதைப் படிச்சுட்டுத்தான் ஒரு மாதிரி இருக்கீங்களா?''

புயலின் தாக்கம் மிக அருகாமையில் வீசியது. காளிதாஸ் காதம்பரியை எதிட்டுப் பார்த்தாலே தவிர, பதில் சொல்லவில்லை.

''ஓ...சம்திங் ராங்...''—காதம்பரி முணுமுணுத்தான்.

சிறிது நேரம் அவர்களிடையே இம்சை மிகுந்த மௌனம் நிலவியது.

''இந்தப் பால் பாயசத்தை இப்ப நான் சாப்பிடப் போறேனா, இல்லையானு தெரியலை.''

—சொல்லிவிட்டு, காதம்பரி உதடுகளை இறுகக் கடித்துக் கொண்டான். காளிதாஸ் வெளியில் பார்த்தபடி நின்றான்.

''கொஞ்சம் என்னைப் பாருங்க'' என்றான்.

பார்த்தான்.

''தேஜஸ்வினி எழுதியிருக்கும் நம் கல்யாண விஷயத்துல உங்களுக்கு இஷ்டமில்லையா...?''

காளிதாஸ் மௌனமாகவே நின்றான். அவனின் எதிர்பாராத இந்நிலை, அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''சொல்லுங்க காளிதாஸ் இஷ்டமில்லையா உங்களுக்கு...?''

மௌனம்.

காதம்பரியின் மனத்தில் மெலிதாகச் சினம் மூண்டது.

''ஏன் உங்களுக்கு இஷ்டமில்லேனு தெரிஞ்சுக்கலாமா நான்...?''

மௌனம்.

''ஸாரி உங்களுக்கு இஷ்டமிருக்கோ இல்லையோ—உங்களைத் தவிர வேற யாரையும் என்னால் நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது.''

மௌனம்.

''இப்படி ஒண்ணுமே பேசாம நின்னா எனக்குப் பிடிக்காது! பதில் சொல்லணும் எனக்கு.''

மௌனம்.

''ஏன் இஷ்டமில்லை; காரணமென்ன...? நம்ம வயசு வித்தியாசம் உங்க மனசுக்கு ஏதோ ஒரு மாதிரியா இருக்கா...?''

''நோ நோ...''

''அதுவும் இல்லேன்னா வேறென்ன...? நான் கொஞ்சம் ஈகோ உள்ள ரொம்ப டஃப்பான பெண்...அந்த மாதிரி ஏதாவது நெனைச்சு மனசில் இஷ்டமில்லாம இருக்கா...!''

''அப்படியெல்லாம் உங்களை நான் நினைச்சதே கிடையாது''

''அப்ப சந்தோஷமா நாம ரெண்டு பேரும் கல்யாணம் செய்துக்கலாமே...நான் விரும்பற நல்ல வாழ்க்கையை எனக்கு நீங்க தரலாமே...''

இனியும் உண்மையை மறைப்பது சாத்தியமில்லை.



''ஸாரி காதம்பரி...! வேற ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கிறதா நான் ஏற்கெனவே 'கமிட்' பண்ணிட்டேன்.''

—சொல்லிவிட்டு, காளிதாஸ் தலையைக் குனிந்து கொண்டான். கண்ணாடிப் பாளங்கள் உடம்பெல்லாம் பாய்ந்து ஏறினாற்போல் காதம்பரி விதிர்விதிர்த்து விட்டாள். காளிதாஸுக்கும் அவளுக்கும் இடையே இறுக இணைந்திருக்கும் உறவின் இழை அறுந்து கொள்வது போல் அதிர்ந்தது.

''ஓ!''

காளிதாஸ் அவளை நிமிர்ந்தே பார்க்கவில்லை. கடல் ஆழத்து இறுக்கமும் நிசப்தமும் அந்த அறையைச் சூழ்ந்திருந்தன பறிகொடுத்துவிட்ட ஏக்கத்தில் காதம்பரி அவனையே பார்த்தாள். ஏமாற்றமும் துக்கமும் அவளின் நெஞ்சை அழுத்தின. அவன் படர்வதற்காக ஓடோடி வந்த படலில் வேறொரு கொடி படர்வதா? ஆவேசத்தில் காதம்பரி தன்னையும் மீறி மேஜையில் ஓங்கி ஒரு குத்து விட்டாள்.

''ஆனால் காதம்பரி எந்தப் பெண்ணை நான் கல்யாணம் செய்து கொண்டாலும் எனக்கு உங்ககிட்டே இருக்கிற உறவோ, அன்போ கடுகளவுகூடக் குறையாது.''—காளிதாஸ் சற்றுக் காதம்பரியை நெருங்கி வந்து சொன்னான்.

காதம்பரி இதற்குச் சட்டென பதில் சொன்னாள், ''ஒரு குழந்தை என்ன கேட்குதோ அதைத் தராம, சும்மா வேற எதையோ கொடுத்து அதை ஏமாத்தற மாதிரி இருக்கு நீங்க சொல்றது.''

மறுபடியும் அவர்களிடையே மௌனம் நிலவியது. சிறிது நேரம் கழித்துக் காதம்பரி கேட்டாள்;

''அப்ப என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முடியாத நிலையில் இருக்கீங்க...?''

''ஸாரி காதம்பரி, அந்தப் பெண்ணுக்கு நான் ப்ராமிஸ் பண்ணிட்டேன்.''

''ஓ...ப்ராமிஸ் பண்ணிட்டாத்தான் அதை உங்களால் மாத்திக்க முடியாதே! வெறி...இனி உங்ககிட்டே பேசிட்டு நிற்கிறதில் பிரயோஜனம் கிடையாதுனு நினைக்கிறேன். இனிமே எனக்கு இருக்கும் ஒரே வழி—உங்களுக்கு குட்பை சொல்லிடறதுதான்...''—காதம்பரியின் கண்கள் கலங்கிச் சிவந்தன.

''ப்ளீஸ், அதுக்காக இப்படியெல்லாம் பேசாதீங்க காதம்பரி.''

''வேற எப்படிப் பேசச் சொல்றீங்க?''

''எனக்கு உங்களைப் பார்க்காமலோ, பேசாமலோ இருக்க முடியாது. குட்பை சொல்லி என்னைத் தண்டிக்கப் பார்க்காதீங்க.''

''நீங்க மட்டும் என்னை இப்படி. அநியாயமா தண்டிக்கலாமா...?''

''இப்படியொரு மாற்றம் உங்க மனசில் ஏற்படும்னு நான் கற்பனைகூடப் பண்ணிப் பார்த்தது இல்லையே...''

''உடனே பழியை என் தலையில் போட்டுடுங்க! என்ன மாதிரியான எரியும் பிரச்னையை மனசில் வெச்சி எரிஞ்சிருக்கேன் தெரியுமா நான்...? அந்தத் தீயை அணைச்சிட்டு வர்றதுக்குள்ளே என் தலையில் வேற ஒரு தீயை வெச்சிட்டீங்களே காளிதாஸ். எவ்வளவு ஆசையா ஓடி வந்தேன் காளிதாஸ். என்னை அப்படியே சுருட்டி உங்களோட உடம்புக்குள் பத்திரமா ஒளிச்சு வெச்சுடணும்னு நெனைச்சி வேகமா வந்தேன். ஆனா, நீங்க வேற ஒருத்தியை எனக்குத் தெரியாம மறைச்சு வெச்சிருக்கீங்க. யார் காளிதாஸ் அந்தப் பெண்...?''

''ஸாரி...இப்ப நான் அதை வெளியில் சொல்றதா யில்லை.''

''பரவாயில்லை. சொல்லுங்க...''

''என்னை வற்புறுத்தாதீங்க காதம்பரி.''

''நீங்க கல்யாணம் செய்துக்கப் போற பெண் யார்னு கூட நான் தெரிஞ்சுக்கக் கூடாதா...?''

''நீங்க மனசு மாறி வேற ஒரு பையனைக் கல்யாணம் பண்ணிட்டு வந்து கேளுங்க.. சொல்றேன்.''

''எல்லாம் பழிக்குப் பழி வாங்கற மாதிரியான பேச்சாலே இருக்கு... வசந்தாவை எங்க வீட்டைவிட்டுப் போகச் சொல்லுங்க— அதுக்கப்புறம் நான் கல்யாணம் செய்துக்கறேன்னு சொன்ன மாதிரியே இப்ப நீங்க பேசறீங்க... தயவு செய்து சொல்லுங்க... நீங்க கல்யாணம் செய்து கொள்ளப்போற பெண் யார்னு எனக்குத் தெரிஞ்சாகணும்.''

இதற்குப் பதிலே சொல்லப் போவதில்லை என்பது போன்ற இறுக்கமான பாவனையில் காளிதாஸ் கைகளை மார்பில் கட்டியபடி நின்றான்.

காதம்பரிக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பெண் யாரென்று ஏன் சொல்ல மறுக்கிறான்...? அப்படியென்ன ரகசியம்? அப்படியென்ன மர்மம்...? எனக்கு அவள் யார் என்று ஏன் தெரியக்கூடாது...? எனக்குத் தெரிந்த பெண்ணோ அவள்... அவளின் அறிவு வினா தொடுத்தது. யோசித்தது. சந்தேகப்பட்டது. ஒரு விநாடி திகைத்தது. சடசடவென சில கணக்குகளைக் கூட்டியது, கழித்தது. நெருப்புப் பொறியாக விடை தெரிந்தது! திப்பரப்பாக அவளின் கண்கள் விரிந்தன. கோரமான புழுவென அவளின் உதடுகள் நெளிந்தன.

''ஓ...! அவ்வளவு பெரிய சதி நடந்திருக்கா? அதுதான் வீட்டைவிட்டுப் போகவே மாட்டேன்னு சொல்லிட்டிருந்த 'அந்தம்மா', நீங்க போய் வாழ்க்கை தரேன்னு சொன்னதும் மறுநாளே வீட்டைவிட்டுப் போயிடுச்சா?

வெல்! எனக்குத் தெரியாமலேயே எங்க வீட்டுக்குள்ளேயே இவ்வளவு பெரிய நாடகம் நடந்திருக்கு. ஸாரி. வெரி வெரி ஸாரி...! இதை மட்டும் என்னால் தாங்கவே முடியாது காளிதாஸ். வேறே எந்தப் பெண்கிட்டே தோத்துப் போனாலும் போவேனே தவிர, அந்த வசந்தாகிட்டே மட்டும் என்னால் தோத்துப் போக முடியவே முடியாது! ப்ளீஸ்! என்னை விட்டுடாதீங்க காளிதாஸ். தயவு பண்ணி விட்டுடாதீங்க. நான் அவளை வெறுக்கிறேன் காளிதாஸ். அந்த வசந்தாவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாத்தணும்னு நெனைக்காதீங்க நோ... நோ... ப்ளீஸ்! நான் உங்களைக் காதலிக்கிறேன் காளிதாஸ் ஐ லவ் யூ வித் ஆல் மை ஹார்ட். நீங்க இல்லாம என்னால் வாழவே முடியாது. போங்க, போய் அந்த வசந்தாகிட்டே சொல்லிடுங்க... உங்களுக்கு நான்தான் முக்கியம். என்னுடைய வாழ்க்கைதான் முக்கியம். என்னைத்தான் நீங்க கல்யாணம் பண்ணிக்கணும். என்னை விட்டுட்டு வசந்தாவைப் பண்ணிக்கிறதுக்கு உங்களை நான் விடவே மாட்டேன்!''

''ப்ளீஸ், அப்படியெல்லாம் சொல்லாதீங்க காதம்பரி. அப்படி உங்களை இழந்துடாதீங்க. நான் சொல்றதைக் கேளுங்க. உங்களுக்கு ஏற்ற நல்ல பையனா பார்த்து நான் கல்யாணம் செய்து வைக்கிறேன.''

—காளிதாஸ், காதம்பரியின் கைகளைப் பிடித்துக் கெஞ்சினான்.

''நான்சென்ஸ்! என்னால் முடியாதுங்க. வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முடியவே முடியாது. போங்க... போய் முடியாதுன்னு சொல்லிட்டு வந்திடுங்க.''

''ஸாரி, அது மட்டும் இனிமே என்னால் முடியாது. கொடுத்த வாக்கை மீறி இந்த ஜென்மத்தில் நான் நடக்க மாட்டேன்.''

''நான் சொன்னா எது வேணும்னாலும் செய்வேன்னு சொல்லிருக்கீங்க.''

''காதம்பரி, நான் விஷம் குடிச்சுச் சாகணும்னு சொல்லுங்க. இந்த நிமிஷமே சாகறேன்.''

''நீங்க வசந்தாவைக் கல்யாணம் பண்ணிக்கிறதும், என்னை விட்டுச் செத்துப் போறதும் ஒண்ணுதான் எனக்கு!''

''இப்படிப் பேசினா நான் என்ன பதில் சொல்ல முடியும்...?''

''நான் சொன்னதை உங்களால் செய்ய முடியாது. அப்படித்தானே?''— வீறிட்டாள் காதம்பரி,

காளிதாஸ் பேசாமல் நின்றான். காதம்பரி ஆத்திரத்துடன் மீண்டும் மேஜை மீது ஓங்கி ஒரு குத்து விட்டாள். அவள் முகமெல்லாம் வியர்த்து ரத்தமாகச் சிவந்திருந்தது. வெகுதூரம் ஓடி வந்தவள் போல் மூச்சு வாங்கியதில் நெஞ்சு உயர்ந்து உயர்ந்து தணிந்தது.

கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுத்தமாகத் துடைத்தாள் வாட்சில் மணி பார்த்தாள்.

''லுக், மணி இப்ப பன்னிரண்டு. நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது... நாளைக்கு மத்தியானம் இதே பன்னிரண்டு மணிக்கு நீங்க அந்த வசந்தாவைப் பார்த்து 'ஸாரி' சொல்லிட்டு வந்தாகணும். அப்படி நீங்க வரலேன்னா, காதம்பரி அவ அப்பா இருக்கிற இடத்துக்குப் போயிட்டா என்கிற செய்திதான் வரும் உங்களுக்கு. என்னை நீங்க வாழ வைக்கப் போறீங்களா என்கிறதை நீங்கள் முடிவு பண்ணிக்குங்க... நான் வரேன்...''

படிகளில் வேகமாக இறங்கும் முன் காதம்பரி சில விநாடிகள் தயங்கினாள். பிறந்த நாள் பரிசாகக் காளிதாஸுக்கு ஜோல்னாப் பையில் கொண்டு வந்திருந்த ரிஸ்ட் வாட்ச்சும் ஷர்ட்டுகளும் ஞாபகம் வந்தன. அவனை ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அவற்றைக்

கொடுப்பதற்கு மனம் வரவில்லை. மடமடவெனப் படிகளில் இறங்கி மறைந்தாள். கீழே காரின் கதவு பலத்த சத்தத்துடன் மூடும் சத்தம் கேட்டது.

ஒரு சமுத்திரம் வந்து போனாற் போலிருந்தது. காளிதாஸ் அசையாத பாறையாக நின்று கொண்டிருந்தான். சொன்னதைச் செய்தே காட்டுபவள் காதம்பரி என்பது நன்றாகவே காளிதாஸ் உணர்ந்திருந்தான். ஆனாலும், வசந்தாவைத் திருமணம் புரிவதென்ற முடிவிலிருந்து நூலிழை கூட அவனுடைய மனம் பின் வாங்கவில்லை. வார்த்தை மாற முடியாத சத்திய ஸ்தூபமாக உறைந்து நின்றான்.

## 24

தன்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லிக் கொள்ளாமல் காதம்பரி வேகமாக காரில் ஏறிச் செல்வதைப் பார்த்த காளிதாஸின் அம்மா, சிறிது நேரம் திகைப்புடன் நின்றுவிட்டு வேகமாக மாடிப்படி ஏறிப் போனாள், மேஜைமீது இரண்டு தம்ளர்களிலும் பால் பாயசம் அப்படியே இருந்தது. காளிதாஸ் எதுவும் பேசாமல் அம்மாவையே பார்த்தான்.

"தம்பி, என்னய்யா நடந்தது...? ஏன் அந்தப் பொண்ணு ஒண்ணுமே பேசாம போகுது... கோவிச்சுக் கிட்டியா அதை...?"

"நான் அதைக் கோவிச்சுப்பேனாம்மா? அது கோவிச்சுக்கிட்டு அப்படி வேகமா ஓடுது."

"இப்பத்தானே சிரிச்சுக்கிட்டே மாடி ஏறி வந்தது... அதுக்குள்ளே என்ன கோபம்?"

காளிதாஸ் பெருமூச்சுடன் கண்களை மூடிக் கொண்டான்.



"இப்போ என்னை எதுவும் கேக்காதீங்கம்மா. எனக்கே தெரியலை—என் வாழ்க்கையில என்ன நடக்குதுன்னு... நீங்க கீழே போங்க. ரெண்டு மூணு நாள் கழிச்சு சில விஷயங்கள் தெளிவானதும் நானே சொல்றேன்..."

பாயச தம்ளர்களை எடுத்துக்கொண்டு அவனின் அம்மா ஏதேதோ முணங்கியபடி கீழே இறங்கிச் சென்றாள்.

காளிதாஸ் அறைக்குள் உலாவிக் கொண்டே இருந்தான். திடீரென வாழ்வில் இருள் சூழ்ந்து கொண்டாற் போலிருந்தது. வாழ்வு செல்லப் போகும் திசையே புரியவில்லை. வசந்தாவைப் புறக்கணித்து,காதம்பரியை ஏற்கும் அதர்மத்தை மேற்கொள்வது அவனால் இயலாது. ஆனால், காதம்பரியின் விபரீத முடிவுகளையும் கண்டு கொண்டிருக்க முடியாது. காளிதாஸ் பிரமையுடன் யோசித்துக்கொண்டே இருந்தான். இருள் சூழலில் எதுவுமே புலனாகவில்லை. அறிவு முற்றிலுமாக ஸ்தம்பித்துப் போயிருந்தது. பல மணி நேரங்கள் அனைத்தையும் மறந்த பிரக்ஞையற்ற நிலையில் சமைந்து போயிருந்தவனை, வசந்தாவின் அண்ணன் சகாதேவனின் குரல்தான் கலைத்தது.

"காளிதாஸ் சார், காளிதாஸ் சார்..."

"ஓ...! வாங்க. என்ன திடீர்னு... எதுவும் விசேஷமா...?"

"ரொம்ப முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்லலாம்னு வந்திருக்கேன்..."—சகாதேவன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

"சொல்லுங்க சகாதேவன்."

"என் தங்கச்சியை நீங்க மன்னிக்கணும்."

"என்னன்னு விஷயத்தைச் சொல்லுங்க."

"என் தங்கச்சி உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிற நிலைமையில இல்லீங்க..."

வானிலையில் எங்கோ ஓர் இடி உதிர்ந்தாற் போலிருந்தது. மற்றுமொரு கடல் பொங்கி வருவதாகத் தெரிந்தது. காளிதாஸின் அடிவயிறு ஒரு முறை உள்நோக்கிச் சுருண்டது. அதிர்ந்த உணர்வுகளை இறுகப் பற்றியபடி கேட்டான்.

"என்னங்க ஆச்சு திடீர்னு...?"

"கொஞ்ச நாளாகவே வசந்தாவுக்குச் சந்தேகமா இருந்திருக்கு. நேத்திக்குத்தான் அது உறுதியாச்சு, என் தங்கச்சிக்குக் குழந்தை உண்டாயிருக்கு!"

கடல் அலை முகத்தில் பாய்ந்து சிதறியது!

"குழந்தை உண்டாயிருக்கிறது உறுதியான நிமிஷமே— என் தங்கச்சியோட மனசு மாறிடுச்சுங்க. நானும் நேற்று பூராவும் அதுகிட்டே உட்கார்ந்து பேசி நல்லா யோசிச்சுப் பார்க்கச் சொல்லிப்புட்டேன். ஆனா அவளால மறுபடியும் கல்யாணம் செய்துக்கறது என்கிறதைப் பத்தி நெனைக்கவே முடியலீங்க... அதுதான் உங்ககிட்டே விஷயத்தைச் சொல்லி, தன்னை அது மன்னிச்சிட சொல்லிச்சு...இனி கஷ்டமோ நஷ்டமோ அவளையும் அவளுக்குப் பிறக்கப் போற பிள்ளையையும் காப்பாத்தற பொறுப்பைக் கடவுள் என்கிட்டேயே கொடுத்திட்டார். அவ கல்யாணத்தின் போது ராஜரத்னம் கொடுத்த இருபதாயிரம் ரூபாயில் நான் ஆரம்பித்த சின்ன பிஸினஸ் சுமாரா நடக்குதுங்க. அதை வெச்சி நாங்க பிழைச்சுப்போம்..."

ஒரு கடல் வந்து அழித்து விட்டுப் போன அனைத்தையும் வேறொரு கடல் வந்து முழுமையாக நிர்மாணித்து விட்டது. அத்தனை மேகமும் கலைந்து இருள் நீங்கியது. உலகம் உயிர் பெற்றது. இனி சிந்துவதற்குக் கண்ணீர் இல்லை என்ற நிலையில், காளிதாஸ் எழுந்து நின்றான். வாட்சில் மணி பார்த்தான்... நான்கு. அவனுடைய உணர்வுகளின் எதிரில் காதம்பரி மட்டும்தான் நின்றாள். காதம்பரி மகளா, மனைவியா என்றெல்லாம் அவன் சிந்திக்கவில்லை. நாளை, ஊர் அவளை மனைவியென்று முத்திரை குத்தலாம். ஏதோவொரு கழிவிரக்கத்தின் இக்கட்டான நிலைக்கு அவள் மகள் என மனோதத்துவம் விண்டுரைக்கலாம். காதம்பரி என்ற உண்மைக்கு அவையெல்லாம் வெறும் வியாக்கியானங்கள். வியாக்கியானம் பெரிதில்லை. பிரதானம் உண்மையே...

காதம்பரி என்னும் உண்மையை நோக்கிக் கொட்டிவாக்கம் விரைய காளிதாஸுக்கு எந்த வாகனங்களும் போதுமானதாக இல்லை. சிறிது தூரம் வேகமாக ஓடினான். சிறிது தூரம் வேகமாக நடந்தான். மறுபடியும் ஓடினான். மறுபடியும் நடந்தான்...

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவிலைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தவன் சிறிது களைப்புடன் நெடுஞ்சாலையின் ஓரத்தில், தூரத்துக் கடலைப் பார்த்தபடி நின்று இளைப்பாறினான். அப்போது பரிச்சயமில்லாத புத்தம் புதிய சாக்லேட் வண்ண கார் ஒன்று அவனை ஒட்டி வந்து நின்றது. காரின் அத்தனை கரிய கண்ணாடிகளும் உயர்த்தப்பட்டிருந்ததால் காருக்குள் இருப்பது யார் எனக் காண முடியாமல் காளிதாஸ் சற்று மலைத்து நின்றான். சட்டென இடது முன்புறக் கண்ணாடி இறங்கியது. நெருப்புத் தணல் போல் காதம்பரி தெரிந்தாள். உணர்வு மேலீட்டில் இருவரும் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். திரண்டு எழும்பிய உணர்ச்சியை விழுங்கிக் கொண்டே காதம்பரி காரிலிருந்து இறங்கினாள்.

"அதுக்குள்ளே இப்படி அவசரமா ஓடி வர்ற அளவுக்கு அப்படி என்ன நடந்திருச்சு?"— காதம்பரி அவளுக்கே உரித்தான பாணியில் கேட்டவாறே காரின் கதவைச் சாத்தினாள். காளிதாஸுக்குப் பதில் சொல்ல நா எழவில்லை.

"சாகப்போறதில் இருந்து என்னைக் காப்பாத்திடணும் என்கிறதுக்காகத்தான் ஓடி வந்திருக்கீங்கன்னா—

வந்த பாதையிலேயே நீங்க திரும்பி ஓடலாம்!''—பந்து விச்சாகத் தெறித்த வார்த்தைகளை, காளிதாஸ் உறுதி யான கருணையுடன் தாங்கிக் கொண்டான்.

''காரை 'லாக்' பண்ணிட்டு வாங்க. அலை வரைக்கும் நடந்துக்கிட்டே உங்களுக்குப் பதில் சொல்றேன்'' என்றான்.

சில விநாடிகள் செருக்குடன் யோசித்துவிட்டு, காதம்பரி காரைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு மணலில் நடந்தாள். காளிதாஸும் அவளைப் பின் தொடர்ந்தான்.

''உங்களைச் சாவிலிருந்து காப்பாத்தறதுக்கு மட்டும்னா இப்படி நான் ஓடி வந்திருக்கமாட்டேன்... எங்க அம்மாவை அனுப்பியிருப்பேன்.''

''அப்படின்னா இப்ப சொல்லுங்க... இந்தக் காளிதாஸ் காதம்பரிக்கா... இல்லே, வசந்தாவுக்கா...?''

''கடவுள் காதம்பரி பக்கம்தான் இருக்கார்.''

''கடவுளைப் பத்தி எனக்குக் கவலை கிடையாது. எனக்குத் தெரியவேண்டியது காளிதாஸ் யார் பக்கம் என்றுதான்...''

''கடவுளே காதம்பரி பக்கம் இருக்கும்போது, காளிதாஸ் மட்டும் யார் பக்கம் இருந்திட முடியும்...?''

'தாங்க் காட்' என நெஞ்சு முணுமுணுக்க, காதம்பரி நின்று காளிதாஸைத் திரும்பிப் பார்த்தாள். பாறையாக இறுகிப் போயிருந்த நெஞ்சு, பனியாக உருகிவிடும் போலிருந்தது. எனினும், உடனடியாகக் கரைந்து போக இன்னும் அறிவு பதமாகியிருக்கவில்லை. எச்சரிக்கையுடன் தன்னைச் சற்று இறுக்கிக் கொண்டாள்.

''இதை மத்தியானம் பன்னிரண்டு மணிக்கே சொல்லியிருக்கலாம் இல்லையா?''

''பன்னிரண்டு மணிக்கு அப்புறம்தானே கடவுள் வந்து சொன்னார்—தான் காதம்பரி பக்கம்னு...!''

''கடவுள் எந்த உருவத்தில் வந்து சொன்னாரோ...?!''—காதம்பரி சற்று இகழ்ச்சியான தொனியில் கேட்டாள்,

''எந்த உருவத்தில் வந்து சொன்னார்னு சொன்னா தாங்கிப்பீங்களா காதம்பரி?''

''ஒன்பது வருஷம் நெஞ்சில் நெருப்பையே சுமந்திருக்கேன்.''

சில விநாடிகள் காளிதாஸ் நெகிழ்வுடன் காதம்பரியையே பார்த்தான்.

''வசந்தாவின் வயிற்றில் வளரும் உங்க அப்பாவின் வாரிசு உருவத்தில் வந்து கடவுள் சொன்னார்னு சொன்னா நம்புவீங்களா காதம்பரி...?''

காதம்பரி ஒன்றும் விளங்காமல் மலங்க மலங்க விழித்தாள். காளிதாஸ் நடந்தவற்றைச் சுருக்கமாக விவரித்தான். அவ்வளவுதான்... காதம்பரியின் நெஞ்சு பனிப் பொதியாகி, பொலபொலவென உருகியது. முழுமையாகத் தன்னை இழந்து நண்பன் காளிதாஸின் மார்பில் உதிர்ந்து விட்டாள். பனிக் கரைசல் உஷ்ணமான நீராக அவளின் கண்களின் வழியே கொட்டியது. காளிதாஸ் காதம்பரியை உவகையுடன் தழுவிக்கொண்டான். மாலைச் சூரியனின் தகதகப்பு அவர்கள் இருவரின் மேலும் பொன் முலாம் இட்டிருந்தது. தென் திசைக் காற்று அவர்களைச் சுற்றிலும் வியாபித்திருந்தது உணர்ச்சி நெரிசல் தணிந்ததும் தன்னை விலக்கிக் கொண்ட காதம்பரி,காளிதாஸைப் பார்த்துக் காதலுடன் புன்னகை செய்தாள்.

''கடைசியில் எங்க அப்பாதான் என்னைக் காப்பாத்தி இருக்கார்'' என்றாள் உவகையுடன்.

''உங்க கடவுள் அவர்தானே — அதனால்தான் காப்பாத்தி இருக்கார்...வாங்க, வீட்டுக்குப் போவோம்...''

காதம்பரி கண்ணீரைத் துடைத்தாள். ''எங்க வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி, முதல்ல வேற ஒரு வீட்டுக்குப் போய் வந்துடலாம்!''

''எங்க வீட்டுக்குப் பேககணுமா காதம்பரி...?''

''இல்லே, மேற்கு மாம்பலத்துல அவங்க வீட்டுக்கு!''

''மேற்கு மாம்பலமா, எதுக்கு...?''— காளிதாஸ் திகைப்புடன் கேட்டான்.

''எங்க சின்னம்மாவைப் போய்ப் பார்த்துட்டு வந்துடலாம்.''

சிறிது நேரம் இருவரும் மனம் நெகிழ நின்றார்கள். பின், காதம்பரி குரல் அடைக்கச் சொன்னாள்: ''இது என்னோட திருத்த முடியாத காரெக்டர், யாரையாவது எதிலாவது ஜெயிக்கணும்னு நினைச்சிட்டா, அவங்களைக் கஷ்டப்பட்டு ஜெயிச்சிடுவேன், ஆனா, அப்படி ஜெயிச்சிட்ட அப்புறம்—என்கிட்டே தோற்றுப் போனவங்க மேல் எனக்கு ரொம்ப பரிதாபமும் பாசமும் வரும்...!''

காளிதாஸ், காதம்பரியின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டான்.

''இனிமே நான் செய்யவேண்டியது—எங்க சின்னம்மாவை எங்க வீட்டுக்கே அழைச்சிட்டு வந்துடறதுதான்... எப்போ எங்க அப்பாவோட வாரிசு அவங்க வயிற்றில் வளர ஆரம்பிச்சுடுச்சோ—அப்பவே அவங்களை அழைச்சிட்டு வந்துடறது தர்மம் மட்டுமில்லை...அதுதான் எங்க அப்பாவுக்கு நான் காட்டுகிற நன்றிக்கடன்கூட, இல்லையா காளிதாஸ்?''

''நிச்சயமா.''

''வாங்க போகலாம்.''

அந்தப் புத்தம் புதிதான கார் சென்னை நோக்கித் திரும்பி, வசந்தா வீடு இருக்கும் மேற்கு மாம்பலம் திசையில் விரைந்தது... □

15 3.8 4
317307